RR. No. 971/55/75

# தீபம்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

—பாரதி

## இந்த மலரில்...

இதழ் : 97 பிரமாதீச—சித்திரை—ஏப்ரல் 1973

ஜெயகாந்தன்,
பொன்முடி
நீல. பத்மநாபன்
சக்திக்கனல்
செல்வபாரதி
இளம்பாரதி
ஞானக்கூத்தன்
வல்லிக்கண்ணன்
ஸ்ரீஅன்னதா சங்கர் ராய்
—சு. கிருஷ்ணமூர்த்தி
நா. காமராசன்
சோமலெ
இந்திரா பார்த்தசாரதி
கி. சந்திரசேகரன்
ஆ. மாதவன்
அகிலன்
சூடாமணி
கே. எஸ். சீனிவாசன்
மு. மேத்தா
ஏ. எஸ். ராமன்
—ப. சுந்தரேசன்
ந. சிதம்பர சுப்ரமணியம்
கே. ஆர். ஸ்ரீனிவாஸ அய்யங்கார்



தீபத்தில் வெளியாகும் கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே. ஆனால் அதே சமயத்தில் அவை அவற்றைப் படைத்த இலக்கியச் சிற்பிகளின் பொறுப்பு என்கிற கம்பீரமான பலத்தைச் சார்ந்து நிற்பவையாகும்.

20868
600 008

# 9வது ஆண்டு

இந்த இதழிலிருந்து தீபத்திற்கு ஒன்பதாவது வயது பிறக்கிறது. முதலில் 'பிரமாதீச' ஆண்டில் தமிழ் இலக்கிய நண்பர்களுக்கு அவர்கள் வேண்டும் நல்லன எல்லாம் நடக்கட்டும் என்று அன்போடு வாழ்த்துக் கூறுகிறோம். சென்ற மாத இதழில் 'தீபம் சாதித்தது—இனி மேல் சாதிக்க வேண்டியது'—பற்றி ஒவ்வொரு வாசகரும் தங்கள் கருத்துக்களை எழுதுமாறு வேண்டியிருந்தோம். மிகப்பலர் தங்கள் கருத்துக்களை எழுதியிருப்பதோடு தீபம் வளர்ச்சிக்கான பயனுள்ள பல யோசனைகளையும் கூறியிருக்கிறார்கள். அச்சிடு பொருள்களின் விலை ஏற்றத்தாலும் மின்சாரப் பற்றாக்குறையினாலும், தீபத்துக்கு நேர்ந்துள்ள சிரமங்களைக் குறைக்க உதவிய—உதவும் அருமை நண்பர்களுக்கு எப்போதும் நாங்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தீபம் கடந்த எட்டாண்டுகளாய் ஒரு பத்திரிகையாக நடந்து வருகிறது என்று சொல்வதைவிடக் கண்ணியமானதோர் இலக்கிய இயக்கமாக நடந்து வருகிறது என்றே சொல்லி விடலாம். இந்த இயக்கம் தொடர்ந்து நடக்க அனைவருடைய ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம். இலக்கியப் பிரச்னைகளை விட்டு விட்டு இலக்கியப் படைப்பாளிகளுக்குள் சிண்டு முடிந்துவிடுவது, குழுச்சண்டைகளுக்கு முனைந்து நிற்பது, இலக்கிய வம்புகளை வளர்ப்பது, போன்ற காரியங்களை இந்தப் பத்திரிகையில் நாங்கள் செய்வதில்லை. 1965 ஏப்ரலில் தீபம் முதல் இதழ் வந்தபின்பே அடுத்தடுத்த ஆண்டுகளில் பல இலக்கிய மாத இதழ்கள் தமிழில் வெளிவரலாயின. அவற்றில் சில இதழ்கள் தீபம் தொடங்கிய பணிகளுக்கு உறுதுணையாயிருந்து ஒத்துழைப்பதையும் நாங்கள் அறிவோம். வேறு சில இலக்கிய நோக்கில் நம்மிலிருந்து வேறுபட்டாலும் தங்களாலியன்ற பணிகளைச் செய்து வருகின்றன, அவற்றையும் நாங்கள் உணர்ந்து பாராட்டுகிறோம்.

ஆண்டுகள் எட்டாகியும் பிரபல பத்திரிகைகளைப் படிக்கும் வாசகர்களில் நாலில் ஒரு பங்கைக்கூட இலக்கியத் தரமான பத்திரிகைகளில் கவனம் செலுத்தும்படி செய்ய இன்னும் அரிய முயற்சியே செய்ய வேண்டியிருக்கிறது. பொருளாதார ரீதியாக ஊதியம் தராத போனாலும்—ஒரு பிடிவாதத்தோடு இதைச்செய்ய 'தீபம்' உறுதிபூண்டுள்ளது. தீபத்தின் கொள்கை வாசகமாகிய மகாகவி பாரதியின் 'எண்ணியமுடிதல் வேண்டும்'—என்ற பாடலில் மூன்றாவது அடியில்வரும் திண்ணிய நெஞ்சத்தோடு இந்தக் காரியத்தைத் தொடர்கிறோம். இதே திண்ணிய நெஞ்சத்தோடு வாசகர்களும் தீபத்தை ஆதரிக்க வேண்டுகிறோம்.

## புதுக்கவிதைப் போராட்டம்

1973ம் ஆண்டில் தொடக்கத்தில் சிறு சிறு புதுக்கவிதைப் புத்தகங்கள் நிறைய வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில் புதுக்கவிதைகளைப் பற்றி ஆராய்வதன் பொருத்தத்தை உணர்ந்தோ என்னவோ அன்பர் 'சக்திக்கனல்' இம்மலரில் அவைகளைப் பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரையை மிகவும் விரிவாக எழுதியுள்ளார். இக்கட்டுரையில் காணப்படும் கருத்துக்களில் வேறு பார்வைகள் யாருக்கேனும் இருந்தால் அவர்கள் தங்கள் பார்வையை எழுதி அனுப்பலாம். இக்கட்டுரை தவிரப் பேராசிரியர் கே. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்காரின் 'சுதந்திர பாரதத்தில் இலக்கியப் போக்கு' என்ற கட்டுரையின் முதற்பகுதியும், 'கலையின் உள்ளுறை சாரம்' பற்றிய அன்னதா சங்கர்ராயின் கட்டுரையும், ராஜாஜி அவர்களின் இலக்கியப்பணி பற்றி இரு கட்டுரைகளும் இல்லஸ்டிரேடட் வீக்லியின் முன்னாள் ஆசிரியர் ஏ. எஸ். ராமனின் 'தென்னிந்திய நாகரிகப் பிரபை'—பற்றிய கட்டுரையும் இந்திரா பார்த்தசாரதியின் கட்டுரையும், அகிலன், ஜெயகாந்தன், வல்லிக்கண்ணன் ஆகியோரின் தொடர் கட்டுரைகளும் இம் மலரைச் சிறப்பிக்கின்றன. பொன்முடியின் குறுநாவல் முதற்பகுதியும், நீல. பத்மநாபன், ஆ. மாதவன், ஆர். சூடாமணி, கே. எஸ். சீனிவாசன், ந. சிதம்பர சுப்பிரமணியன் ஆகியோர் சிறு கதைகளும், செல்வபாரதி, ஞானக்கூத்தன், நா. காமராசன், மு. மேத்தா ஆகியோர் கவிதைகளும் மலருக்கு இன்பம் சேர்க்கின்றன. தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் தீபம் அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும் இம்மலரை வழங்குகிறோம்.

நா. பார்த்தசாரதி

m211, 6552E
N72-97

# சம்பந்தமில்லாத விஷயங்கள்

## ஜெயகாந்தன்

### 4

கார்ல் மார்க்சை ஓர் ஆன்மிகவாதி என்று நான் சொல்லுகிறேன். ஆன்மிகம் என்பதற்கு அதன் எதிர்மறையாளர்கள் சொல்லுகிற அர்த்தங்களை முற்றாக நான் மறுக்கிறேன் என்பதே இதற்குப் பொருள்.

எவனொருவன் தனது வாழ்க்கைக்கு அப்பால் ஒரு லட்சியத்தைக் குறிவைத்து, மனித நேய அடிப்படையில் மனுஷகுல வாழ்க்கையைப் பற்றிப் பொறுப்போடு சிந்தித்துச் செயலாற்றி தனது சுய வாழ்க்கையைப் பணயம் வைத்து, லௌகிகலாபங்களை எல்லாம் மறுத்து அதன் பொருட்டு விளைகின்ற துன்பங்களைக்கூட எதிர்பார்த்து அதனை எதிர்கொண்டு ஏற்றுக் கொள்ளுகிறானோ அவனே ஆன்மிகவாதி. இந்த இலக்கணம் மார்க்சுக்கு மிகுதியும் முழுக்கவும் பொருந்துகிறது.

அப்படிப்பட்ட மகான்கள் தம்மை ஆஸ்திகன் என்றோ நாஸ்திகன் என்றோ அழைத்துக் கொள்வது காலதேச வர்த்தமானங்களின் விளைவேயாகும்.

மேலை நாடுகளில் மதங்களைப் பரப்பியவர்களும், மடாலயங்களை நிறுவியவர்களும், மாபெரும் சர்ச்சுகளை நிர்மாணித்தவர்களும் சமூக மனிதன் மீது பகைமை கொண்டிருந்தார்கள். அவர்களில் பலர் தனிமனிதர்கள் என்ற முறையில் சந்நியாசிகளாக இருந்தும் மனிதனின் கதிமோட்சத்துக்கு ஒவ்வொரு மனிதனின் ஆன்மிக உள்ளுணர்வை வளர்த்தார்கள். எனினும் அதற்குத் தடையாக எழுந்த சமூக சக்திகளின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்கும் மார்க்கத்தை நடைமுறையில் கைக்கொள்ள இயலவில்லை. அந்த மகான்களையும் மேற்கத்திய சுரண்டல் சமூகம் தனது 'மனுஷப் பகைமை' நாகரிகத்துக்கே பயன்படுத்திக் கொண்டது. மதத்தின் பேரால் போலி ஆன்மிகவாதிகள்—செயலற்ற ஆன்மிகப் புலவர்கள் அங்கு பெருகி மக்களை மயக்குகிற மாய்மாலம் வளர்த்தனர். மக்களின் வாழ்க்கையை அவர்கள் நாசப்படுத்தினார்கள். அவர்கள் கோயில்களைக் கட்டினார்களேயொழிய தங்களது சகோதர மனிதஜீவன்களின்பால் அவர்கள் அன்பற்ற பகைவர்களாய் நடந்து கொண்டார்கள்.

ருஷ்யாவை ஆண்ட ஜார் பரம்பரையினர் மதத்தைச் சார்ந்திருந்தார்களேயொழிய மதத்தின் நோக்கங்களைச் சார்ந்திருக்கவில்லை. நவீன ஐரோப்பிய சமூகத்தில் மதம் என்பது ஒரு முக்கியமான சுரண்டல் கருவியாய்த் திகழ்ந்தது. கோடானுகோடி மனித சமூகத்தின் மகிழ்ச்சியைச் சூறையாடி அவர்களை என்றென்றும் அடிமைப் படுகுழியில் ஆழ்த்தி வைப்பதற்கு அங்கே மதம் ஒரு அபினிமாதிரி செயல்பட்டது. மார்க்சும், லெனினும் இந்த மதங்களை எதிர்த்து அறிவாயுதம் ஏந்தி போரிட்டது உண்மையெனினும் அவர்கள் கடவுளர்களைப் பழித்தார்களில்லை. மனித கலாச்சாரங்களை வெறுத்தார்களில்லை. மனித நேயங்களை மறுத்தார்களில்லை.

நவீன சமூகத்தின் ஒரு சுரண்டல் கருவியாக ஒரு சைத்தான் கூட்டம் மதத்தையே பயன்படுத்தியபொழுது மனித நேயத்தில் செழுமையான சித்தாந்தம் படைத்த அந்தச் சரித்திர நாயகர்கள் ஆண்டவனுக்குப் பிரீதியான காரியத்தைச் செய்தார்கள். எனவே மாபெரும் கோயில்களைக் கட்டிய ஜார் அல்ல அந்தக் கோயில்கள் சைத்தான்களின் குடியிருப்பாக மாறியபொழுது அந்தக் கோயில்களையே மக்களின் நலன் பொருட்டு இடித்துத் தகர்த்த லெனினும் அவரது கூட்டாளிகளுமே ஆன்மிகவாதிகளாவர்.

ஆன்மிகம் என்பது நம்பிக்கையற்று தன்னலம் கருதி செயல்படுகிறபொழுது அது பொய் வேஷம் ஆகிப் போகும். ஆன்மிகத்தின் பொருளை இந்தியா உலகுக்குக் கற்றுக் கொடுக்கும். ஒரு நல்ல இந்தியன் ஐரோப்பிய அகராதி

With the best compliments from:

V. RAJAGOPALAN
PAPER MERCHANTS
7, Stringers Street,
MADRAS-1.

Phone: 23488

யைப் பார்த்து ஆன்மிகத்துக்குப் பொருள் புரிந்துகொள்ளமாட்டான்.

அப்படிப் புரிந்துகொள்ளும் பட்சத்தில் அவர்கள் 'நீட்ஷே' போன்று கிருஸ்துவின் பகைவர்களாகி விடுவர். மார்க்சோ, லெனினோ கிருஸ்துவைப் பகைத்தவர்களில்லை. கிருஸ்துவின் பேரால் மனித விரோதப் போக்குக் கொண்ட மதங்களையே அவர்கள் எதிர்த்தார்கள். கிருஸ்துவைக் கொன்றவர்கள்கூட மத நம்பிக்கைக் கொண்டவர்கள்தான். ஆனால் அவர்கள் கடவுளுக்குப் பிரியமானவர்கள் அல்ல. கிருஸ்துவின் பெருமையே அவரது மனித நேயம் தான். காலங்களையும், தேசங்களையும் கடந்து இந்த ஆன்மிகம் பல மகான்களை நமக்கு அடையாளம் காட்டுகிறது. இந்த அடையாளம் ஒரு இந்தியனின் கண்களுக்கு மிகப் பிரகாசமாகத் தென்படுகிறது.

நவீன இந்தியன் தனது கலாசார வேர்களை அறுத்துக் கொண்டவன் அல்ல. நவீன யுகத்தின் பொருள்முதல்வாதக் கருத்துக்களும், நவீன உற்பத்தி முறை வாழ்க்கையும் அவனால் அப்படியே அங்கீகரிக்கப்பட வேண்டியது காலத்தின் விதி. அதே பொழுதில் இன்றைய நவீன ஐரோப்பாவிலும், நமது புராதன இந்தியாவிலும் மனித வாழ்க்கைக்கு அடிப்படையாக மனித நேயமெனும் ஆன்மிகம் ஐரோப்பாவில் ஏற்படுகின்ற புதிய வேதங்களிலிருந்தும், அந்த வேதங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய சமூக வாழ்க்கைகளிலிருந்தும் தரிசனம் தருவதை ஒரு இந்தியன் புரிந்துகொள்ளுவான்.

கம்யூனிஸ்ட் அறிக்கையே நவீன மனித குலத்துக்கு ஐரோப்பா வழங்கிய புதிய வேதம். அது கிருஸ்துவ மார்க்கம் போலவோ, இஸ்லாமிய மார்க்கம் போலவோ அல்லாமல் ஹிந்து மதத்துக்கு இணையான ஆனால் மிகவும் இளமை பொருந்திய செயல் திறனுடைய ஐரோப்பாவின் புதிய மதமாக முகிழ்த்ததே கம்யூனிசம்.

கம்யூனிசம்தான் ஹிந்து மதம்போல் தனி மனித நலன்களை உள்ளடக்கிய சமூகம் சார்ந்த ஒரு வாழ்க்கை நெறியாகும்.

ஐரோப்பிய நவீன வாழ்க்கைக்கும், கிருஸ்துவ மார்க்கத்துக்கும் எந்த விதமான நேரடித் தொடர்பும் கிடையாது. சமூகத்தின் தன்மை எப்படியிருந்த போதிலும் அதற்கு உட்பட்டு வாழ்கிற மனிதர்கள் சமூகத்திற்கும், தற்கால வாழ்க்கைக்கும் முற்றிலும் சம்பந்தமற்ற மறு உலக வாழ்க்கைக்குத் தம்மைத் தயார் படுத்திக் கொள்ள ஒவ்வொரு மனிதனின் உள்ளுணர்வுக்கும் நம்பிக்கை தருகிற நெறிமுறையாகவே கிருஸ்துவ மார்க்கம் உலகெங்கினும் இன்று வரை வாழ்ந்து வருகிறது. அது ஐரோப்பாவின் வாழ்நெறியல்ல.

ஹிந்து தர்மப்படி ஆன்மிகம் என்பது மனித குலம் தழுவிய ஒரு பார்வையே தவிர தனி மனிதனின் மனச் சாந்தி விவகாரம் அல்ல. அது மனிதனைச் சமூக மனிதனாகவே பார்க்கிறது. சமூக நலனுக்குக் குந்தகம் விளைவிக்கிற எந்தத் தனிமனிதப் போக்கையும் அது ஒரு பாவமாகக் கருதுகிறது. இன்றைய ஐரோப்பிய சோஷலிச சமூகங்களில் அது குற்றமெனக் கருதப்படுகிறது. அந்தக் காரியங்கள் ஹிந்து சமூக வாழ்க்கையில் பாவமென்று தள்ளப்பட்டவையாகும்.

ஹிந்து சமயம் மனிதன் சம்பந்தப்பட்ட, சமூகம் சம்பந்தப்பட்ட எதையும் தள்ளி வைப்பதில்லை. அது மட்டுமின்றி அவற்றின் மீது ஆட்சி செலுத்துவதே அதன் நோக்கம்.

தற்கால நவீன யந்திர சாதனங்கள் தொழில் நுணுக்க முன்னேற்றங்கள் முதலியன தவிர்ந்த—அடிப்படையான மனிதநேய கலா

ாரம் என்பது புராதன இந்திய சமுதாயத்தின் வாழ்நெறியாக விளங்கியதென்பது வரலாறு.

இப்படிப்பட்டதோர் அஸ்திவாரத்தில் ஐரோப்பிய சமுதாயம் சோஷலிச சமுதாயம் அமைக்கப்படுவதற்கு முன்னால் எப்போதும் இருந்ததில்லை.

முதலாளித்துவத்தின் வளர்ச்சியினாலேயே, நவீன உற்பத்தி முறை உறவுகளினாலேயே இந்தச் 'சமூக ஆன்மிகப் பார்வை'—கம்யூனிச சித்தாந்தமாக அங்கே உருவாகி அது செயலாகவும் ஆக்கப்பட்டு வருகிறது.

ஆனால் ஐரோப்பாவில் மனித நேயத்தின் அடிப்படையில் சமுதாயங்கள் அமைவதற்கு ஒரு ஸ்தூல காரணமாக இருந்த அதே நவீன உற்பத்தி முறை உறவுகளும், யந்திரங்களும் இந்தியாவில் புகுந்தபொழுது ஐரோப்பாவில் இருந்த மனித நேயச் சீரழிவுகளை இங்கே கொணர்ந்தது. எனவேதான் மகாத்மா காந்தியடிகள் நவீன உற்பத்திச் சாதனங்களின் வருகையை மூர்த்தண்யமாய் எதிர்த்தார்.

உலகெங்கிலும் பரவிவிட்ட நவீன உற்பத்தி முறைகளைத் தவிர்ப்பது நடைமுறை வாழ்க்கையில் இந்தியாவுக்குச் சாத்தியமற்றது என்பதை அனுபவம் நமக்கு நிரூபித்திருக்கிறது.

யந்திர நாகரிகத்தைப் புகழ்ந்து பாடிய கார்ல் மார்க்சும், அதனைக் கண்டு அஞ்சி இந்தியா ஒதுங்க வேண்டும் என்று உபதேசித்த காந்திஜியும் தமது மக்களின் மீது கொண்ட அன்பினாலேயே, மனித நேயத்தினாலேயே அவ்விதம் கூறினார்கள்.

லோகாயதமும், ஆன்மிகமும் இருவேறு முரண்பட்ட தத்துவங்கள் அல்ல. அவை


★ 'கல்யாண்' டீலக்ஸ் மற்றும் ஏர்க்கண்டிஷண்ட் ரெஸ்டாரெண்டுகள் & அறைகள்

★ மாடிப் பூங்கா

★ பார்ட்டிகளுக்கான சிறப்புக் கூடம்

★ கோயில்கள், மகாபலிபுரம் பார்க்க எமது டூரிஸ்ட் டாக்சி

காஞ்சிபுரத்தின்
வசதி மிகுந்த
நவீன ஹோட்டல்



ஸ்ரீ
ராமா லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்
போர்டிங் & லாட்ஜிங்
டீலக்ஸ் மற்றும்
ஏர்கண்டிஷண்ட்
போன்: 395

இரண்டும் ஒன்றையொன்று சார்ந்த, ஒன்றிற்கு மற்ருென்று அர்த்தம் கொடுக்கக் கூடிய, பிரித்தால் இரண்டும் பொருள் திரிந்து முற்ருக அழிந்துபோகிற ஒன்றின் இரண்டு தன்மைகளேயாகும்.

இசையும், இசைக் கருவியும், இசையைக் கேட்கிற செவியும் எப்படி ஒன்ருேடொன்று சம்பந்தப்பட்டதோ அதுபோல.

எப்படி ஓர் இசைக்கருவி மட்டும் சங்கீதம் ஆகாதோ அப்படித்தான் ஆன்மிகம் அற்ற லோகாயதம். ஒரு இசைக்கருவி சங்கீதத்தின் வடிவம் அல்ல. ஆனுல் அந்தக் கருவிகள் இல்லாமல் சங்கீதமும் இல்லே. அவை இரண்டு மட்டும் போதுமா? சங்கீதம் என்பது கேட்கப்படுவது. எனவே மனிதச் செவிகள் அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தன அல்லவா?

லோகாயதம் = இசைக்கருவி; ஆன்மிகம் = இசை; சமூக வாழ்க்கை = மனிதச் செவி என்று புரிந்து கொள்வது ஒரு இந்தியனுக்கு இன்றியமையாததாகிறது.

ஐரோப்பாவில் கருவி தயாராகி அதை இசைக்கவும் கேட்கவுமான பயிற்சியும் பழக்கமும் ஏற்பட்டுவிட்டது சோஷலிசத்தின் மூலம் தெரிகிறது. இந்தியாவுக்கு அந்த இசையில் பயிற்சியும் பழக்கமும் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது. பழைய கருவிகள் சிதிலமடைந்திருக்கின்றன. புதிய கருவியைப் பெற்று நமது பழைய இசையை உலகெலாம் வியக்க நாம் இசைக்க வேண்டுவதே விதி.

அதனுல்தான் லெனினேப் பற்றியும், போல்ஷ்விக் கட்சி பற்றியும், ரஷ்யப் புரட்சி பற்றியும் மிகுதியும் தெரிந்து வைத்திருந்த மகாகவி பாரதி,

'மகாளி பராசக்தி கடைக்கண் வைத்தாளங்கே' என்று பாடுகிருன். நவீன தொழிலாளி வர்க்கத்தின் புரட்சியைத் திரித்துக் கூறுகிற நோக்கத்தில் அவன் அவ்விதம் சித்திரித்தான் என்று விமர்சிப்பது பேதைமையாகும். அவன் ஓர் இந்தியன் என்பதாலும் அந்தப் புரட்சி இங்கு ஏற்படக் கார்த்திருந்தவன் என்பதாலும் இரண்டையும் தொடர்புபடுத்தித் தொடர்பு காணும் நோக்கத்தாலேயே தனது மக்களிடம் அவர்கள் பாஷையில் (அந்தப் பாஷையே சத்தியம்) அவன் பேசினுன்.

அப்படித்தான் நானும் கார்ல் மார்க்ஸ் ஓர் ஆன்மிகவாதி என்று கூறுகிறேன். ஸ்ரீ கிருஷ்ணனின் அவதாரம் என்று சொல்லுவேன்.

என்னேயும் எனது கலாசாரத்தையும் எனது பாஷையையும் உதறிவிட்டு நான் யாரையும் புரிந்துகொள்ளவும் முடியாது. அதனுல் பயனும் ஏற்படாது. ★

சிறந்த 'பிளாக்'குகள் தயாரிக்க எங்களே அணுகவும்

MARY PROCESS

BLOCK MAKERS

Line, Half-tone & Colour Blocks

6, Nallathambi Chetty Street,
MOUNT ROAD, MADRAS-2.

With best compliments from :

N. S. R. & CO,

Weighing Scales Manufacturers
and
Repairers.

32, North Mathappa Street,
KUMBAKONAM

Phone : 674.

BRANCHES :

SIRKALI, MAYURAM.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கைக்காரர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் !




★★
★★

## The Lakshmi Chemical Industries,

(Prop: K. M. SWAMY)

Mfrs. REFINED SALTPETRE & ALLIED CHEMICALS

Govt. Approved N.P.K. Mixed Fertilisers, Merchants & Commission Agents.

Grams: LAKCHEM

Telephones: Office: 33345, Factory: 33375, Res: 25675

23/261 Rangai Gowder Street,
COIMBATORE-1.



எல்லோரும் விரும்புவது

## ஐடெக்ஸ்

பிந்தி ஸ்பெஷல்




ARAVIND LABORATORIES
P. B. 1415., MADRAS-17

# வேகம்

எங்கள் ஊர் எம். எல். ஏ.
ஏழு மாதத்தில்
எட்டுத்தடவை
கட்சி மாறினர்
மின்னல் வேகம்
என்ன வேகம்!
இன்னும் எழுபது
கட்சி இருந்தால்
காட்டி இருப்பார்...
என்ன தேசம்
இந்தத் தேசம்!

—மீரா.

# ஜப்தி

நாடாளுமன்ற
உறுப்பினர்கள்
தொலைபேசி பாக்கி
ஒருலட்சத்துக்குமேல்
கேள்வி ஒன்றுமில்லை!!
நாட்டுக்கு உழைக்கும்
உழவன் நான்
தீர்வை பாக்கி
ஒன்பது ரூபாய்
ஜப்தி—
என் கதவு.

—கொ. ச. பலராமன்

(வானம்பாடி கவிதாமண்டல வெளியீடான 'நீ' கவிதைத் தொகுப்பிலிருந்து)

# டாக்டர்கள்

என்றேனும்
ஒருநாள்
நின்றுவிடும்
மூச்சை
தவணை முறையில்
நீட்டி நிறுத்தும்
தரகு வியாபாரிகள்

—இராம. சுப்பையா

(புதுமலர்கள்இலக்கியவட்ட வெளியீடான 'அலைகள்' மினி கவிதைத் தொகுப்பிலிருந்து.)

# பயம்

இந்திரன் வந்தான்
'கல்'லானேன்
இராமன் வந்தான்
'பெண்'ணானேன்
இன்னுமந்தச்
சினமுனிவந்து
ராமனுன்னைத்
தொட்டானென்று
மறுபடி சபித்தால்...?

—சுப்பு. அரங்கநாதன்

(உதயம் கவிதைத் தொகுப்பிலிருந்து)

# குருடர் பள்ளியில் கொடியேற்றம்

விழியுள்ள கனவான்
விழாக் கொடியேற்ற
வெறும் கைதட்டலுடன்
வெள்ளி விழாவன்று
களித்தனர், சுற்றிநின்ற
கண்ணற்றவர்.

—கலாப்ரியா.

('வெள்ளம்' கவிதைத் தொகுப்பிலிருந்து)

# திட்டமற்ற...

வானம் கட்டுப்பாடற்று,
பெற்றுத் திரியவிட்ட
மேகங்கள்
பொல்லா வாண்டுகள்
நினைத்த இடத்தில்
கவலையற்று
நின்ற தலையில் பெய்துவிட்டு
மூலைக்கொன்றாய்
மறையுதுகள்
வெள்ளை வால்கள்!

—எஸ். வைதீஸ்வரன்

★

இது என் பேப்பர்
ரெயிலில் செல்கையில்
அடுத்தவர் தோள்மேல்
அரைமேய்ந்ததில்லை
விரைந்து விழுங்கும்
இரவல் ஷீட் அல்ல
கைக்குள் வைத்து
மடித்துப் படிப்பேன்
மேஜையில் போட்டு
விரித்துப் படிப்பேன்
பகலிலும் படிப்பேன்
இரவிலும் படிப்பேன்
படிக்காமல்கூட
தூக்கி எறிவேன்
இது என் பேப்பர்.

—நீலமணி

(இலக்கியச் சங்க வெளியீடு புள்ளியிலிருந்து)

# கிறுக்கல்

பட்டேல் நீட்டிய
துப்பாக்கி முனையில்
ஐந்நூற்று இருபத்துநாலு
சமஸ்தான மன்னர்களும்
செத்தே போய்விட்டார்கள்
என்றிருந்தேன்
என்ன மடத்தனம்!?
பேப்பரைப் பார்க்கிறேன்
பாராளுமன்ற உறுப்பினர்கள்
அதே ஐந்நூற்று
இருபத்துநாலு!
இடமாற்றம்தானா?

— கோபு இரவிச்சந்திரன்

(பிஇஎல் தமிழ் இன்பம் மலரிலிருந்து)

விரைவாக -
வேகமாக -
ஏ. பி. டி.
பார்சல்
சர்வீஸ் வேலை செய்கிறது.



விரைவுக்கு
அனுமன்

கம்பர் சொன்னார் :

"எண்ணுக்கும்
அளவிலாத
அறிவினோர்
இருந்து நோக்கும்
கண்ணுக்கும்
கருதும்
தெய்வ மனத்துக்கும்
கடியன் ஆனான்"

எண்ணத்தைவிட -
அளவற்ற ஞானச் செல்வர்களின் யோகக்
காட்சியைவிட -
தேவர்களின் மனத்தைவிட
வேகமாகப் பாய்ந்து சென்றான் அனுமன்

ஏ. பி. டி. பார்சல் சர்வீஸ்,

226, டாக்டர் நஞ்சப்பா ரோடு,
தபால் பெட்டி எண். 1414.
கோயம்புத்தூர்-18.

# ஓர் உண்மையும் இரண்டு கேள்விகளும்

## 'பொன்முடி'

சென்னையிலிருந்து குறுக்கு வழியாகத் திருச்சி, மதுரை திருவனந்தபுரம் செல்லும் மெயில் மூன்ருவது பிளாட்பாரத்திலிருந்து புறப்படுவதற்கு இன்னும் பதினைந்தே நிமிடங்கள்தான் இருந்தன. பிளாட்பாரம் கலகலப்பாகவும் பரபரப்பாகவும் இருந்தது. குரல்கள், சிரிப்புக்கள், விடைபெறுதல்கள், சந்தித்துக் கொள்ளுதல்கள், என்று மொழிகளும், உணர்ச்சிகளுமாக எங்கும் ஒரு வேகம். பிரயாணப் படுகிறவர்களிடமும் வேகம், வழியனுப்புகிறவர்களிடமும் வேகம். வேகத்தையும், பரபரப்பையும், அவசரத்தையும், ஓரிடத்தில் ஒரு நேரத்தில் உருவகப்படுத்திக் காட்டினல் அது இப்படித்தான் இருக்கும் என்பதுபோல் அப்போது அந்த பிளாட்பாரம் இருந்தது. இரயில் விரைவதற்குமுன் மனிதர்கள் இங்கும் அங்குமாக விரைந்து கொண்டிருந்தார்கள். நிதானம் போலத் தோன்றும் அவசரங்கள். அவசரங்களைப் போல் தோன்றும் நிதானங்கள். முடித்துக் கொண்டு போவது போல் தோன்றும் ஆரம்பங்கள். ஆரம்பிப்பது போல் தோன்றும் முடிவுகள்.

குறுநாவல்



"என்ன அண்ணுச்சி, ரொம்பத் தூரமா? பார்த்து நாளாச்சே?"

"இல்லே, தென்காசி வரைக்கும் போறேன். நாளண்ணைக்குத் திரும்பியாவணும்..."

பதில் சொன்னவருடைய கருத்தில் சென்னையிலிருந்து தென்காசி வரை உள்ள தூரம் ஒரு தூரமாகவே படவில்லை போலிருக்கிறது. கேட்டவரும் தூரத்தின் மிகுதியையோ, குறைவையோ அளவெடுப்பதற்காக அதைக் கேட்டதாகத் தெரியவில்லை. ஏதோ ஓர் அர்த்தத்தில் எந்த வார்த்தைகளாலோ கேட்கப்படும் கேள்விகளுக்கு எல்லாம் கேள்வியோ, பதிலோ முக்கியமல்ல, கேட்கிறவரும், கேட்கப்படுகிறவரும்தான் முக்கியம். அவர்களின் அறிமுகந்தான் முக்கியம். வினு விடை அல்ல.

"ஐஸ்லேகூட வைக்கலே; வெறும் கோல்ட்ஸ்பாட்டுக்கே அறுபத்தஞ்சு காசா? கொள்ளையடிக்கிறீங்களேப்பா?..."—என்று பிரயாணி ஒருவர் சோடா கலர் விற்பனையாளனிடம் கடுமையான விலை விமர்சனம் செய்து கொண்டிருந்தார். விற்பவன் இதற்குப் பதிலே சொல்லாமல் சிரித்தான். மாலைத்தினசரியை வாங்கிப் பிளாட்பாரத்தில் நின்றபடியே அவசர அவசரமாகப் படித்துக் கொண்டிருந்தார்கள் சிலர். வாங்கும்போதே படிப்பதற்காக என்றில்லாமல் இரயிலுக்குள் குறுக்கே விரித்துப்படுப்பதற்காக என்றே வாங்கி மடித்து வைத்துக் கொண்டிருந்தார்கள் சிலர். முதல் நோக்கத்தைவிட இரண்டாவது நோக்கத்துக்குப்பொருத்தமான தினசரிதான் அது. இரயில் புறப்பட ஐந்து நிமிஷம் இருக்கும் போதும்தான் கதாசிரியர் 'சண்டமாருதன்' பிளாட்பாரத்துக்கு வந்து சேர்ந்திருந்தார். போர்ட்டர் வைத்துத் தூக்க அவசியமில்லாத—எந்த நிலையிலும் ஒருகையால் தானே தூக்கிக் கொள்ள முடிந்த ஒரு சிறிய சூட்கேஸ் அவர் கையில் இருந்தது. இரண்டடுக்குப் படுக்கை வசதி கொண்ட 2 டயர் ஸ்லீப்பர் கோச்சின் வெளியே ஒட்டப்பட்டிருந்த பிரயாணிகள் பட்டியலில் தம் பெயரையும்,

படுக்கை வரிசை எண்களில் தமக்குரிய எண்ணையும் அவசர அவசரமாகத் தேடினார் அவர். முதலில் தேடிய இரண்டடுக்குப் படுக்கைப் பெட்டியில் அவர் பெயர் இல்லை. அது மதுரை வரை செல்லும் பெட்டி. அவர் குற்றாலத்துக்காகத் தென்காசிவரை போவதால் செங்'கோட்டைப் பெட்டியில் தேடியிருக்க வேண்டும் என்பது சிறிது தாமதமாகத்தான் அவருக்கே நினைவு வந்தது. செங்கோட்டைக்கான இரண்டடுக்குத் தூங்கும் வசதிப்பெட்டியின் வெளியே ஒட்டப்பட்டிருந்த பட்டியலில் டைப் செய்த 'கார்பன் காப்பி' மிக மிக மங்கலாக இருந்தது. தென்னிந்திய ரயில்வே தொடங்கிய காலத்தில் வாங்கிய 'முதல் கார்பன்' இன்னும் உபயோகத்தில் இருந்ததுபோல் தோன்றியது. ஒருவழியாக அந்தப்பட்டியலில் தம் பெயரையும் எண்ணையும் சிரமப்பட்டுக் கண்டுபிடித்து மேல் மூச்சுக் கீழ்மூச்சு வாங்க ஏறி உள்ளே அமர்ந்து விட்டார் சண்டமாருதன். நேரம் ஆகிவிட்டது. ஆனால் இரயில் தான் இன்னும் புறப்படவில்லை. புறப்பட வேண்டிய நேரமும் ஆகி மேலும் ஐந்து நிமிஷமும் கூட ஆகிவிட்டது. பிரயாணி குறித்த நேரத்துக்கு வந்து விட்டால் இரயில் தாமதமாகப் புறப்படுவதும், பிரயாணி தாமதமாக வந்தால் இரயில் குறித்த நேரத்துக்குப் புறப்பட்டுப் போய் விடுவதும் இந்திய ரயில்வேயில் ஒரு நெடுங்காலத் தத்துவமாகவே இருந்தது. இரயில்களையும், பிரயாணங்களையும், ரிஸர்வேஷன்களையும், தாமதங்களையும் பற்றி ஒரு பெரிய புத்தகமே எழுதுகிற அளவுக்குநிறைந்த அநுபவங்கள் எழுத்தாளர் 'சண்டமாருத'னுக்கு இருந்தன. அதை ஒரு நகைச்சுவைப் புத்தகமாகவும் எழுதலாம். சோகப் புத்தகமாகவும் எழுதலாம். சுவாரஸ்யக் களஞ்சியமாகவும் எழுதலாம். அநுபவங்களுக்காகவும், மனித குணசித்திரங்களை ஊடாடி இரசிப்பதற்காகவுமே அவர் மூன்றும் வகுப்பில் பயணம் செய்வதை ஒரு வழக்கமாகக்கொண்டிருந்தார். பிரயாணத்தின்போது அவரால் நிறையச் சிந்திக்க முடியும். ஓரிடத்தில் உட்கார்ந்து மேஜை, நாற்காலி, மின்விசிறி, எல்லாம் போட்டுக்கொண்டு திட்டமிட்டுச் சிந்திப்பதை விட, வேகமாக ஓடும் இரயிலில், பஸ்ஸில்,

With the best compliments from

**MOUNT METTUR PHARMACEUTICALS LIMITED**

(Manufacturers of Ethical Medicines)

Factory and Administrative Office:

Tiruvanmiyur, Madras-41.

Telephone: *73170/74401/74888*

Grams: PHARMLAB

DEPOT:

ERANAKULAM

Phone: *31105*

—Deepam, Annual Number 1973

பறக்கும் விமானத்தில் நிதானமாகவும், ஒரு சீராகவும் ஆழ்ந்து சிந்திக்கப் பழகியிருந்தார் அவர். பிரயாணம் என்று புறப்பட்டபின்போ, புறப்பட்டுப் போய்த் தங்கிய இடத்திலோ, நியூஸ் பேப்பர்கள் படிப்பது, டெலிபோன்கள் பேசுவது, கேட்பது, இவைகளை அவர் செய்வதில்லை. தெரிந்த மனிதர்கள், குசலப்பிரச்னங்கள், 'ஆட்டோகிராப் வேட்டைகள்' இவற்றிலிருந்து தப்பிய தனிமையில் இருக்கச் சென்னையில் அவருக்கு நேரமே கிடைக்காது. தனிமையை நாடி அவரே ஓடும் இடங்களிலும் தனிமை கிடைக்காமல் இப்படித் தொல்லைகள் அவரைச் சூழ்வது உண்டு.

''எங்கள் கல்லூரித் தமிழ்ப்பேரவையில் பேச வாருங்கள்.''

''எங்கள் இலக்கிய இதழுக்கு ஒரு பேட்டி அளியுங்கள்...''

''எங்கள் மன்றம் நடத்தும் பட்டிமன்றத்துக்கு நடுவராக இருந்து தீர்ப்பளியுங்கள். நீங்கள்தான் அதற்கு நடுவராக இருக்க வேண்டும் என்பது எங்கள் ஆசை.''

''உங்களைச் சந்தித்துத் தனியே என் வாழ்க்கைப் பிரச்னைகளைப் பற்றிப் பேச வேண்டும். எப்போது சந்திக்கலாம்?''

இப்படி மனிதர்களையும், கூட்டங்களையும் சந்திக்கிற வெளிச்சத்திலிருந்து தப்பி ஓடி எங்காவது தனிமையை நாட வேண்டிய நிலையில் காடாறுமாதம் போன்ற பிரயாணங்களை அவர் மேற்கொள்வது உண்டு. இப்போது மேற்கொண்டிருக்கும் இந்தக் குற்றாலப் பயணமும் கூட அப்படிப்பட்டதுதான். இரயிலில் சிந்தனையைத் தடை செய்வதுபோல் அருகே வந்து அமர்ந்து கொண்டு தொண தொணக்கத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை என்பது அவருக்கு நிம்மதியை அளித்தது. ஆனால் அதுவும் நிச்சயமில்லை. அவருக்கு முகம் தெரியாதவர்களிலே யாராவது அவரை முகம் தெரிந்து வைத்திருந்து இன்னும் சிறிது நேரத்தில் பேச வரலாம். எந்தப் பிரச்னையைப் பற்றியாவது அவருடைய கருத்தைக் கேட்க வரலாம். 'இன்ன பத்திரிகையில் நீங்கள் எழுதிய இன்ன கதை நன்றாயிருந்தது' என்று வியக்க வரலாம். 'நன்றாயில்லை' என்று குறை கூற வரலாம். 'இன்ன கூட்டத்தில் நீங்கள் பேசிய இன்ன பேச்சு எனக்கு மிகவும் பிடித்தது' என்று புகழ வரலாம். அல்லது, 'அந்தக் கூட்டத்தில் நீங்கள் அன்று பேசியது என் நண்பர்களுக்கும் எனக்கும் கட்டோடு பிடிக்கவில்லை' என்று விமர்சிக்க வரலாம். பொது மனிதன் எந்த இடத்திலும் புகழையோ, பழியையோ சந்திக்கத் தயாராயிருக்க வேண்டும். சில புகழ்களும் வம்பாக இருக்கும். சில பழிகளும் வம்பாக இருக்கும். அவற்றோடு வந்து நிற்பவர்களும் பெரிய வம்பர்களாக இருப்பார்கள். ஏதோ பேசியாக வேண்டும் என்பதற்காகவே வந்து சந்திப்பவர்கள் எதையாவது பேசுவார்கள். சம்பந்தம் உள்ளதையும் பேசுவார்கள், சம்பந்தம் இல்லாததையும் பேசுவார்கள். அவர் எழுதிய கதைகள், கட்டுரைகள், கவிதைகளுக்காக அவரைப் புகழ்ந்தவர்களும் உண்டு. ஞாபகமறதியால் யாரோ எழுதியவற்றை அவர் எழுதியவையாகக் கற்பித்துக் கொண்டு அவரைப் புகழ்ந்து 'அவர் அவற்றை எல்லாம் தான் எழுதவில்லை' என்று மறுத்தவுடன் அசடு வழிய நின்றவர்களும் உண்டு. 'பேசாத பேர்கள் எல்லாம் நல்லவர்களே' என்பதுபோல் 'புகழாதவர்கள் எல்லாருமே நல்லவர்கள்' என்று அவருக்குப் பல சமயங்களில் தோன்றியிருக்கிறது. நடுவே முன்வைத்துப் பேசுவதற்காக எந்தப் பொது விஷயமும் (காமன் சப்ஜெக்ட்) இருவருக்கும் இடையே இல்லாத இரண்டு பேர் சந்தித்துக் கொள்வதைப்போல் பாவம் வேறெதுவும் இருக்க முடியாது என்பதை அவர் பலமுறை அநுபவபூர்வமாக உணர்ந்திருந்தார். மனிதர்களில் இரண்டே இரண்டு வகையைச் சேர்ந்தவர்கள்தான் இருந்தார்கள். ஒன்று அளவுகடந்து விரும்பிப் புகழ்கிறவர்கள். இரண்டு அளவு கடந்து வெறுத்து ஒதுக்குகிறவர்கள். விருப்பு வெறுப்புக்கள் அடங்கியவர்கள், அவற்றுக்கு அப்பாற்பட்டவர்கள் அபூர்வமாகவே தென்பட்டார்கள். மனம் பக்குவப்படாத, முதிர்ச்சியடையாத சிறுபிள்ளைத்தனமான இரசிகர்களை எதிர்கொள்ளும் போதெல்லாம் அவருக்கு வேதனையாயிருந்திருக்கிறது. சிறு பிள்ளைத்தனமான வீரவணக்கப் புகழ்மாலைகள், சிறு பிள்ளைத்தனமான வெறியோடு கூடிய குற்றச்சாட்டுக்கள், இவைகள் இரண்டுமே அவருக்கு அருவருப்பை அளித்திருக்கின்றன. இரண்டின் முன்னுலுமே அவர் கூசியிருக்கிருர். இரண்டுமே அவருக்குச் சலிப்பை அளித்திருக்கின்றன. புகழ்ந்து கொள்கிறவர்களைவிட அதிகமான எண்ணிக்கையில் புகழ்கிறவர்களைச் சந்திக்கும் போதெல்லாம், 'யாரையாவது சந்தித்துப் புகழ்ந்துகொண்டே இருக்காவிட்டால் இவர்களுக்கு மண்டை வெடித்துவிடுமோ? பிறரைப் புகழ்ந்துகொண்டிருப்பதே இவர்களை ஒரு நோயாகத் தொற்றிக்கொண்டிருக்கிறதோ?'' என்று அவர் நினைப்பதுண்டு; வியப்பதுண்டு.

அந்த ரயில் அன்று பத்து நிமிஷத்துக்கு மேல் தாமதமாகத்தான் எழும்பூரிலிருந்து புறப்பட்டது. யாரோ ஒரு மந்திரி—அந்த ரயிலில் பிரயாணம் செய்ய இருந்தவர்—தாமதமாக வந்து இரயிலேறியதால் இரயில் அவருக்காகக் காத்திருக்க நேர்ந்துவிட்டதாம். மந்திரிகளைக்

கேட்டால், ''நாங்கள் மக்களின் சேவகர்கள். மக்களுக்காகக் கைகட்டிக் காத்து நிற்கிறோம்'' என்று வாய் இனிக்கக் கேட்பவர்கள் செவி இனிக்கப் பேசிவிடுகிறார்கள். ஆனால் உண்மையில் அல்லது நடைமுறையில் மக்கள், இரயில்கள், விமானங்கள் எல்லாரும், எல்லாமும், மந்திரிகளுக்காகத்தான் இன்னும் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது.

இரயில் தாம்பரத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது டிககெட் பரிசோதிப்பவர் வந்தார். 'சண்டமாருதன்' டிக்கெட்டை எடுத்து நீட்டினார். ''அதிருக்கட்டும் சார்! இப்ப அவசரம் ஒண்ணுமில்லே. செங்கல்பட்டு வர்ரத்துக்குள்ளே பார்த்து முடிச்சால் போதும். முதல்லே ஒரு ஆட்டோகிராப் போட்டுக் கொடுங்க. சும்மா வெறும் கையெழுத்து மட்டும் போட்டு நீட்டிப்பிடாதிங்க...ஏதாவது எழுதிக் கையெழுத்துப் போடணும்...ப்ளீஸ்'' என்று அந்த டிக்கெட் பரிசோதகர் கெஞ்சினார்.

''நீங்க இத்தனை டிக்கெட்டிலே கையெழுத்துப் போடறீங்களே; ஒவ்வொரு டிக்கெட்லியும் ஏதாவது எழுதித்தான் கையெழுத்துப் போடறீங்களோ?''

''இல்லே! ஆனா உங்க டிக்கெட்லே மட்டும் வேணு 'இந்தப் பிரயாணி ஒரு வி.ஐ.பி.'ன்னு எழுதிக் கையெழுத்துப் போட்டுத் தரேன்...''

''என்னைவிடப் பெரிய வி.ஐ.பி. ஒருத்தர் இந்த இரயில்லே போறார்...அவருக்காக இர்யிலே கால் மணி நேரம் தாமசமாப் புறப்பட்டிருக்கு...அவர் டிக்கெட்லே வேணு அப்படி எழுதிக் கையெழுத்துப் போடுங்க...சரியாயிருக்கும்...''

''எனக்கு அவர் கம்பார்ட்மெண்ட்லே வேலே இல்லே. இருந்தாலும் நான் நீங்க சொல்ற மாதிரி அவர் டிக்கட்டிலே எழுதிக் கையெழுந்துப் போடறது சந்தேகம்...''

''நடைமுறை அப்பிடித்தானே இருக்கு! நம்ம நாட்டிலே அரசியல்வாதிகள்தானே இப்ப எல்லா இடத்திலேயும் வி.ஐ.பி.? மற்ற துறைகளிலே எத்தனை திறமைசாலி இருந்தாலும் அவங்களை யார் வி.ஐ.பி.யா மதிக்கிறாங்க...?'' பேசியபடியே ஆட்டோகிராப்பை எழுதிக் கொடுத்தார் சண்டமாருதன். சிரித்தபடி அதை வாங்கிக்கொண்டே, ''எனக்கு நீங்க தான் சார் இந்த இரயிலிலேயே பெரிய வி.ஐ.பி. இதிலே பிரயாணம் செய்கிற வேறே யாரையும் உங்களைவிடப் பெரிய வி.ஐ.பி.யாக நான் நினைக்கல்லே...''

''இரயில்வேக்காரர்களின் நோக்கில் பார்த்தால்கூட ஒரு பெரிய வி.ஐ.பி. மூன்றும் வகுப்புப் பிரயாணியாக இருக்க முடியாதே?''

''நேற்றும், இன்றும், நாளையும், என்றும் இந்தியாவின் மிகப் பெரிய வி.ஐ.பி.யாகிய


வாடிக்கைக்காரர்களுக்கும்
நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

**Pandyan Studio**

போட்டோகிராபர்கள்

29, பைகிராப்ட்ஸ் சாலை,
திருவல்லிக்கேணி :: சென்னை-5.

நிறுவியது : 1957.
தொலைபேசி எண் : 83325

மகாத்மா காந்தியே மூன்றும் வகுப்பில்தான் பிரயாணம் செய்தார் சார்!''

''உங்கள் இரயில் பெட்டிகளில் மூன்றும் வகுப்பு என்கிற வசதிக் குறைவான பகுதிக்கு இன்னும் மீதமிருக்கிற ஒரே பெருமை இது மட்டும்தான்...''

''இரயில் பெட்டிக்கு மட்டுமில்லே. இந்தியாவுக்கே மீதம் இருக்கிற பெருமை அது ஒன்றுதான் சார்!'' என்று சொல்லியபடியே அடுத்த பகுதியில் டிக்கட்டுகளைச் சரிபார்க்கப் போய்ச் சேர்ந்தார் அந்தப் பரிசோதகர்.

மேலே 'பெர்த்'தில் படுக்கையை விரித்து ஒழுங்கு செய்துவிட்டு மறுபடி கீழே இறங்கித் தம் இடத்தில் உட்கார்ந்தார் எழுத்தாளர் சண்டமாருதன்.

முன்னிரவு ஏழு மணிக்குமேல் புறப்படுகிற இடத்தில் புறப்பட்டு அதிகாலை ஏழரை மணிக்குள் போய்ச் சேருகிற இடத்திற்குப் போய்விடுகிற இரயில் பயணம் மிகவும் சுகமான வகையைச் சேர்ந்தது என்பது சண்டமாருதனின் கருத்து. ஆனால் இன்று தான் போகிற பயணம் விடிந்த பின்னும் நண்பகல் வரை தொடரக் கூடியது என்பது நினைவு வந்ததுமே அவருக்குச் சலிப்பாயிருந்தது. பகல் நேரத்தில் ஏறக்குறைய அரை நாள் வரை இரயிலில் வீணாகி விடும் என்று நினைத்தபோதே அந்த அரைநாள் களைப்பையும் அப்போதே சுமக்கத் தொடங்கி விட்டதுபோல் உணர்ந்தார் அவர். அந்த மெயில் விடிந்த சிறிது நேரத்திற்கெல்லாம் மதுரைக்குப் போகும். அப்புறம் மதுரையிலிருந்து தென்காசி வரை போக நடுப்பகல் ஆகிவிடும். மனம் மலர்ச்சியாக இருக்கும் காலை நேரம் முழுவதும் பிரயாணத்தில் போய்விடுமே என்ற கவலை ஒருபுறம் இருந்தாலும் இரு மருங்கும் தென்படும் காட்சிகளில் மனத்தைச் செலுத்திச் சிந்திக்கலாம் என்ற ஆறுதலும் அவருக்கு இருந்தது.

செங்கற்பட்டில் இரயில் நின்றதும் இறங்கி ஒரு பால் குடித்துவிட்டுப் படுக்கலாம் என்று நினைத்தார் அவர். இரயில் பிரயாணத்தில் சென்னையைவிட்டுத் தெற்கே எந்த ஊருக்காவது வெளியேறும்போதோ அல்லது தெற்கே எந்த ஊரிலிருந்தாவது சென்னைக்கு வரும் போதோ செங்கல்பட்டு என்பது ஓர் எல்லை. பிரயாணத்துக்குத் திருஷ்டி கழிப்பது போல் அங்கே இறங்கி ஒரு காபியோ, பாலோ குடித்து விட வேண்டும். ''மனித உடலின் ஜீரண சக்திக்கு ஒரு பலப்பரீட்சை 'மாதிரி எவ்வளவு மோசமான விஷயங்களையும் ஜீரணித்துவிட முடியும் என்பதற்கு ஒரு முன் ஆரம்பம் மாதிரி இந்தக் காபியையோ, பாலையோ நீங்கள் குடித்தாக வேண்டும்'' என்று எழுத்தாளர் சண்டமாருதன் பல சமயங்களில் பல நண்பர்களிடம் வேடிக்கையாகச் சொல்லியிருக்கிறார்.

''எனக்குத் தெரிஞ்சு கொஞ்சம் மோசம் அதிகம் மோசம் என்று ஏற்றத் தாழ்வுகளே இல்லாமல் நிரந்தரமாய் ஒரே தரத்துக்கு மோசமாக இருக்கிற விஷயம் செங்கல்பட்டு காபிதான். தரக்குறைவிலே தரத்தைக் காப்பாத்தறாங்க அவங்க. மோசமா இருக்கிறதிலே ஒரு கன்ஸிஸ்டன்ஸியோட மோசமா இருக்காங்க அவங்க. இது புரியாமே அவங்களைக் கோபிச்சுக்கிட்டுப் பிரயோசனம் இல்லே''— என்று செங்கல்பட்டு காபியின் தரக்குறைவிற்குச் சமாதானம் சொல்வார் எழுத்தாளர் சண்டமாருதன்.

தாம்பரம் கடந்ததும் நடுநடுவே இரண்டு மூன்று 'காஷன் டிரைவ்' வேறு வந்துவிட்டதால் 'செங்கல்பட்' போய்ச்சேரும்போது இரவு ஒன்பது மணி ஐம்பது நிமிஷம் ஆகியிருந்தது. பிளாட்பாரத்தில் இறங்கிப் பாலைத் தேடிக் கண்டுபிடித்து வாங்குகிறபோது, ''சார்! நான் சில்லறை கொடுக்கிறேன். நீங்க சும்மாஇருங்க'' என்று பால் கடைத் தள்ளுவண்டி அருகே எதிர் கொண்டார் ஓர் இரசிகர். அவருக்கும் எழுத்தாளர் சண்டமாருதனுக்கும் நடுவே மூன்றாவது மனிதர் பார்த்தால் கைகலப்பு நடக்கிறதோ என்று நினைக்கத் தகுந்த அளவு பால்காரனுக்குச் சில்லறை கொடுப்பதில் நீயா நானா போட்டி மூண்டது.

''நான் உங்க இரசிகர் சார்! நான் வாங்கிக் கொடுத்து நீங்க சாப்பிடக் கூடாதா?''

''அதையே கொஞ்சம் மாற்றி வச்சுக்கலாமே?...எழுத்தாளர் வாங்கிக் கொடுத்து இரசிகர் சாப்பிட்டதாக இருக்கட்டுமே!''

''நான்தானே இரயிலிலேயிருந்து இறங்கி வர்ரப்போ உங்களை முதல்லே பார்த்தேன்!''

''நான் உங்களை முதல்லே பார்க்கலேங்கிறது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''என்ன இருந்தாலும் இரசிகனோட ஆர்வத்துக்கு நீங்கதான் விட்டுக் கொடுக்கணும். இதுக்கு நீங்க பணம் கொடுக்கப்பிடாது! நான் தான் கொடுப்பேன்...''

மனம் மிகவும் பக்குவப்பட்டவர்களால் சிறுபிள்ளைத்தனமான பிடிவாதம் அல்லது முரண்டுகளைப் புரிகிறவர்களுக்கு முன் எதிர்த்து

நிற்க முடியாமல், 'சரி! அவர்கள் நினைப்பது போல்தான் செய்துவிட்டுப் போகட்டுமே' என்று சலிப்போடு விட்டுக்கொடுக்கத்தான் முடியும். அப்போதும் எழுத்தாளர் சண்ட மாருதன் அப்படித்தான் செய்ய நேர்ந்தது. ஆனால் எதிர்பாராத கோணத்தில் இரசிகர் தோற்றார். இரசிகரிடம் இருந்த ஐந்து ரூபாய் நோட்டுக்கு பிளாட்பாரத்துப் பால் கடைக் காரன் 'சில்லறை இல்லை' என்று மறுத்துவிட்டான். பச்சை விளக்கும் போட்டாயிற்று. இரயில் புறப்பட மிகச்சில விநாடிகள்கூட இல்லை. கையில் நிறையச் சில்லறை மாற்றி வைத்துக் கொள்ளாமல் செய்யும் இரயில் பிரயாணத்தில் நிறைய நஷ்டங்கள் வரும் என்பதை அநுபவபூர்வமாகப் புரிந்து கொண்டிருந்த எழுத்தாளர் சண்டமாருதன் சிரித்துக் கொண்டே பர்ஸைத் திறந்து இரசிகர் குடித்த பாலுக்கும் சேர்த்துச் சில்லறையை எண்ணிக் கொடுத்தார்.

''விழுப்புரத்திலே இந்தச் சில்லறையை மாற்றிக் கொண்டுவந்து தருவேன். ஆட்சேபணை இல்லாம வாங்கிக்கணும் நீங்க...''

''விழுப்புரம் வர்ரதுக்குள்ளே நான் 'பெர்த்'லே மேலே ஏறித் தூங்கிப் போயிடுவேன். தயவு செய்து சில்லறை தர்ரத்துக்காக நீங்க என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பி 'டிஸ்டர்ப்' பண்ணக் கூடாது.''

''அதெப்படி சார்? நான் சொன்ன வார்த்தையைக் காப்பாத்தணுமில்லையா? இல்லேன்னா எனக்கு நிம்மதியாத் தூக்கம் வராதே சார்!''

இருவரும் அவரவர்கள் கம்பார்ட்மென்டிற்கு ஓடிப்போய் நகரத் தொடங்கி இருந்த இரயிலில் அவசர அவசரமாகத் தொற்றிக் கொண்டார்கள். அங்கே சண்டமாருதன் தம்முடைய 'ஸீட்'டுக்குப் போய்ச் சேர்ந்தபோது ஒருவர் தயாராக அவரை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

''சார்! வாங்க... நானும் இதே 2 டயர் ஸ்லீப்பர்லேதான் வரேன். இப்பத்தான் என் 'வொய்ஃப்' சொன்னா... நான் உங்களை நேரே பார்த்ததில்லே. அவ ஏதோ கூட்டத்திலே நீங்க பேசறப்பப் பார்த்தாளாம். உங்களைப் பார்த்தவுடனே அடையாளமாச் சொல்லிட்டா, 'எழுத்தாளர் சண்டமாருதன் இந்த இரயில்லே நம்மோட டிராவல் பண்றார்'னு.

''உங்களைப் பார்த்ததிலே ரொம்ப சந்தோஷம்... எதுவரை போறீங்க? குடும்பத்தோட பிரயாணம் போல இருக்கு...''

''திருச்சிவரை போறோம் சார்! ரொம்ப வேண்டிய குடும்பத்திலே ஒரு கல்யாணம். தட்ட முடியலே. வநதே ஆகவேண்டியிருக்கு. வர்ரதாலேயும் சிரமம். குடும்பத்தோட ஒரு பிரயாணம்னு வந்து திரும்பினோம்னா எப்பிடியும் இருநூறு, முன்னூறு ரூபாய் செலவாகி விடுகிறது. அப்புறம் ஆறுமாத பட்ஜெட்டில் துண்டு விழுகிறது...''


WITH BEST COMPLIMENTS FROM

**SELECT EMPORIUM**

Stationers, Book Sellers & General Merchants
Authorised Dealers of Government Text Books

**828, Rangai Gowder Street, COIMBATORE-1.**

PHONE: 33676

# முதுமை

முதியவர்கள், எதையும் தீர்மானிக்க முடியாதவர்கள்; ஒரு காரியத்தில் அளவுக்குக் குறைவான தீவிரத்தைக் காட்டுகிறவர்கள்; எந்த ஒரு விஷயத்தைப்பற்றியும் நிச்சயமாகத் தெரியும் என்று சொல்லாதவர்கள்; எதிலும் ஒருவித வெடுவெடுப்பும் சந்தேகமும் கொள்கிறவர்கள்; சோர்ந்த மனமுடையவர்கள்; இருப்பதை இழந்துவிடக் கூடாதென்று நினைக்கிறவர்கள்; எதிலும் அச்சமுடையவர்கள்; கௌரவத்தைக்காட்டிலும் பணத்தையே பெரிதாகக் கருதுகிறவர்கள்; கூச்சமுடையவர்கள்; அதிக நம்பிக்கையில்லாதவர்கள். பழைய நினைவுகளைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருப்பதில் திருப்தியடைகிறவர்கள்; தீவிரமாகக் கோபங் கொள்கிறவர்கள். ஆனால் அந்தக் கோபத்தைச் செயலில் காட்ட முடியாதவர்கள்; எதிலும் பற்றுக் கொள்ளாதவர்கள்; எப்பொழுதும் ஏதோ ஒரு குறை சொல்லிக் கொண்டிருப்பவர்கள்.

—அரிஸ்டாட்டில்

''துண்டு மட்டும் என்ன? வேஷ்டியேகூட விழும்'' என்றார் எதிர்வரிசையில் உட்கார்ந்திருந்த மற்றொரு பிரயாணி. ஓர் இணையற்ற நகைச்சுவை வாக்கியத்தை உதிர்த்துவிட்ட பெருமிதம் அவர் முகத்தில் தெரிந்தது. எழுத்தாளர் 'சண்டமாருதன்' தூங்குவதற்காக மேலே ஏறிப் படுக்க விரும்பினார். சுற்றி இருந்த மனிதர்கள் தங்களுக்குத்தூக்கம் வராததாலோ என்னவோ அவரைச் சுற்றி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒருவர் கேட்டார்:-

''எழுத்தாளர் 'ஆவி' ஏன் சார் இப்படிப் போய் விட்டார்? மந்திரிகளையும், கவர்மெண்டையும் இந்திரன் சந்திரனெல்லாம் எழுத ஆரம்பிச்சிருக்காரே...''

''இந்திரன், சந்திரன்னு எழுதற உரிமை அவருக்கு இல்லேன்னு நீங்க எப்படி மறுக்க முடியும்? இந்திரன் சந்திரன்கிற பட்டங்களை எப்பவும் யாருக்காவது கொடுத்துக்கிட்டிருக்கிறது அவர் வழக்கம்தானே? புதிதாக என்ன தவறு செய்து விட்டார் அவர்?''

''தவறு ஒண்ணுமில்லே! எப்ப எப்ப யார் யாரு ஆட்சியிலே இருக்காங்களோ அவங்களை எல்லாம் இந்திரன் சந்திரன்கிறரு... இன்னிக்கொருத்தனைச் சொல்றரு... நாளைக்கொருத்தனைச் சொல்வாரு...''

''அதில் தப்பென்ன? ஒரு சரியான 'புரோக்கர்' எப்போது எந்தப் பொருளுக்குத் தரகு வேலை பார்க்கிறரோ அப்போது அந்தப் பொருளைக் கொஞ்சம் புகழ்ந்துதானே ஆக வேண்டும்? தொழில் நியாயம் அதுதானே?''

''நீங்க அவரை 'புரோக்கர்' என்கிறீர்களா? ஆசிரியர் என்கிறீர்களா?''

''நான் எதுவும் சொல்லவில்லை. நீங்கள் என்னிடம் கேட்டதைத்தான் விளக்கினேன். அவ்வளவுதான். விளக்கத்துக்காக வரும் உவமையை நீங்கள் விபரீதமாக அர்த்தப்படுத்திக் கொண்டால் அதற்கு நான் என்ன செய்வது?''

''உங்களுக்கு அவரைப் பிடிக்குமா சார்?''

''பிடிக்குமா, பிடிக்காதா, என்பது பிரச்னையில்லை. எனக்கு அறவே பிடிக்காத செங்கல்பட்டு இரயில்வே பிளாட்பாரம் காபியையோ பாலையோ நான் குடிக்காமல் தவிர்க்கவா முடிகிறது?''

''நெஸஸ்ஸரி ஈவில்ஸ்னு சொல்லலாமா?''

''சொல்லக்கூடாது! அந்த அர்த்தம் இதற்குப் பொருந்தவே பொருந்தாது.''

''சரி! சார் கொட்டாவி விடறர். தூக்கம் வருது போலிருக்கு...''

''ஏன் உங்களுக்கெல்லாம் தூக்கம் வரலியா?''

''பெர்த் கிடைக்கலே சார்...'' தூங்குவதற்கு 'பெர்த்' கிடைக்காதவர்கள்தான் பேசுவதற்குப் பிரச்னைகளைத் தேடிக் கொண்டு வந்து எதிரே அமர்ந்திருக்கிறர்கள் என்ற பேருண்மை அப்போதுதான் எழுத்தாளர் சண்டமாருதனுக்குப் புரிந்தது. காலதாமதமாகப் புரிந்து கொண்ட உண்மைக்கு அஞ்சலி செய்துவிட்டு மேலே ஏறித் தூங்கப்போனார் அவர். இரயில் விரைந்து செல்லத் தொடங்கியிருந்தது.

(அடுத்த இதழில் முடியும்)



# காகித மலர்கள்

'ஆதவன்'

## 17

பத்மினி தேநீர் தயாரித்த பிறகு, அவளிடமிருந்து தன் கோப்பைத் தேநீரை வாங்கிக் கொண்டு அவன் வராந்தாவுக்கு வந்தான். ஞாயிற்றுக்கிழமை காலை. அப்பா வழக்கம் போல கிளப்புக்குப் போயிருந்தார். பத்ரி நண்பர்களுடன் கிரிக்கெட் ஆடப்போய் விட்டான். செல்லப்பாவுக்கு, அர்த்தமற்ற செய்கைகளில் பொழுதை விரயமாக்கும் அவர்கள் இருவர் மீதும் அனுதாபமாக இருந்தது. உலகத்திலுள்ள எல்லார் மீதும் அவனுக்கு அனுதாபமாக இருந்தது. சாலையில் செல்லும் தோட்டி, பழைய பேப்பர் வாங்குகிறவன், காய்கறிக்காரன், மற்றப் பாதசாரிகள், வாகனங்களைச் செலுத்துபவர்கள், குழந்தைகள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள்...

பாவங்கள், எல்லாரும் பாவங்கள்.

அவன் தேநீரைக் குடித்து முடித்தான். கோப்பையைத் தரையில் வைத்துவிட்டு, நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்தான். பிறகு திடீரென்று நாற்காலியிலிருந்து எழுந்து, தரையில் சப்பளமிட்டு உட்கார்ந்தான். காலித் தேநீர்க் கோப்பையை பார்வையில் படாமல் தள்ளி வைத்தான். அந்தத் தேநீர், நாற்காலி, இவையெல்லாம் சமூக அமைப்புடன் அவனைப் பந்தப்படுத்துபவை. இவற்றிலிருந்து அவன் விடுதலை பெற வேண்டும். அவன் குனிந்து தான் போட்டுக் கொண்டிருந்த ஸ்வெட்டரைப் பார்த்தான். பிறகு அதையும் கழட்டியெறிந்தான். சட்டை, பனியன் எல்லாவற்றையும் கழட்டினான். அப்பாடா! விடுதலை! விடுதலை!

குளிர்காற்று அவன் திறந்த மார்பைத் தாக்கியது. ஊறுகாயின் காரத்தைப் போல அந்தக் குளிரின் உறைப்பு அவனுக்கு ஒரு இதமான துன்பத்தைக் கொடுத்தது. எதிரே, அவன் கழற்றிப் போட்ட ஸ்வெட்டர் இருந்தது. ஸ்வெட்டரே இல்லாதவர்களெல்லாம் இந்தக் குளிரில் என்ன செய்வார்கள்? நேற்று மாலை அவன் கனாட் பிளேஸ் அருகே புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த அடுக்கு மாடிக் கட்டிடம் ஒன்றின் வழியாக நடந்து வரும்போது, அந்தக் கட்டிடத்தை எழுப்புவதில் ஈடுபட்டிருந்த ராஜஸ்தானி கூலியாட்கள் நடைபாதைமேல் ரொட்டி பண்ணிச் சாப்பிடுவதைப் பார்த்திருந்தான். அவர்கள் சாக்கு மாதிரி எதையோ போர்த்திக் கொண்டிருந்தார்கள். அதில் நிச்சயம் குளிர் அடங்காது. குழந்தை ஒன்று தரையில் விளையாடிக்கொண்டிருந்தது. அதன் காலில் பூட்ஸ் இல்லை. ஆனால் அவர்கள் சந்தோஷமாக இருப்பது போலத்தான் பட்டது; அந்தக் கணத்தில், அவன் அவர்களைப் பார்த்தபோது, அவர்கள் ஏதோ பாடிக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு அவர்களைப் பார்த்துப் பொறுமையாக இருந்தது.

அவர்களுக்கு கிரிக்கெட் ஸ்கோரைப் பற்றியோ, ஹேர் ஸ்டைலைப் பற்றியோ கால் சராய் மோஸ்தரைப் பற்றியோ கவலையில்லை. அவன் தலை மயிரினூடே கைகளை விட்டு அளைந்தான். மிக நீளமாக வளர்ந்திருந்தது; பல விதங்களில் அசௌகரியமாக இருந்தது. குளித்தால் துவட்டிக்கொள்ள நேரமாயிற்று, தலை வாரிக் கொள்ள நேரமாயிற்று. சட்டைக்காலர்களில் வண்டி வண்டியாக எண்ணெய் இறங்கியது. ஆனால் சென்ற பத்து நாட்களாக யோசித்தும் முடிவெட்டிக் கொள்வதா அல்லது இப்

படியே வளரவிடுவதா என்பது பற்றி அவனால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. புது மோஸ்தரில் கால்சராய் ஒன்று தைக்கக் கொடுத்திருந்தான். அதை வாங்குவதற்குத் தையல் கடைக்குப் போகவும் தைரியம் வரவில்லை. உண்மையில் அந்தத் தையல்காரனின் முகத்தில் முழிக்கவே கூச்சமாயிருந்தது.

துணியைத் தைக்கக் கொடுத்த பிறகு தொடர்ந்து மூன்று நாட்கள் மீண்டும் மீண்டும் அவன் கடைக்குச் சென்று பாண்ட் எப்படித் தைக்கப்பட வேண்டுமென்பது பற்றி ஒன்றுக்கொன்று முரணான விருப்பங்களை அவன் தெரிவித்திருந்தான். இவன் போனவுடனேயே தையல்காரன் நிச்சயம் ஒரு ஏளனமான பார்வையை வீசுவான். அதை அவனால் தாங்கிக் கொள்ள முடியாது. சே, இனிமேல் இந்தத் தையல்காரனிடம் போகக் கூடாது. இப்படி எவ்வளவு தையல்காரன்கள் மாற்றியாகிவிட்டது! குப்பென்று குளிர்காற்று வீசியது...எதிரே அவன் கழற்றியெறிந்த ஸ்வெட்டர். அவன் கண்களை இறுக மூடிக்கொண்டான்......

'டேய், செல்லப்பா!'

செல்லப்பா கண்களைத் திறந்து பார்த்தான். எதிரே ரமணி நின்றிருந்தான்.

'உக்காரு' என்று ரமணிக்கு நாற்காலியைச் சுட்டிக்காட்டிவிட்டு செல்லப்பா தான் கழற்றியெறிந்தவற்றை அவசரமாக மீண்டும் அணிந்து கொண்டான்.

'என்ன, யோகாசனப் பயிற்சியா?' என்றான் ரமணி.

'ஆமாம்' என்றான் செல்லப்பா.

'உனக்கு இதிலே சிரத்தை உண்டுன்னு எனக்கு இவ்வளவு நாளாத் தெரியாதே!'

'இப்ப தெரிஞ்சுக்கோ.'

ரமணி திறந்திருந்த வாசல் கதவு வழியே வீட்டினுள் பார்வையைச் செலுத்தினான். செல்லப்பா அவன் பார்வையின் இலக்கைப் பரீட்சித்தான். பத்மினி நாற்காலியில் அமர்ந்து தலைமயிரிலிருந்து ஊக்குகளை ஒவ்வொன்றாக உருவியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தாள். குளிக்கப் போகிறாள் போலும்.

'உங்க மன்னியா?'

'ஆமாம்.'

'ரொம்ப ப்யூட்டிஃபுல்லா இருக்காடா'.

'தாங்க்ஸ்'

'உங்கண்ணாவுக்கு நல்ல டேஸ்ட் இருக்கு.'

'......'

'என்ன, பேசாமல் இருக்கே!'

'நீ சொன்னது காதிலே விழுந்தது.'

'வேறெங்கேயாவது விழுந்துடுத்தோன்னு நினைச்சேன்.'

'ஹி ஹி ஹி'

ரமணி நாற்காலிக் கைகளில் தாளம் போடத் தொடங்கினான். செல்லப்பாவின் தன்னம்பிக்கையான தோரணை அவனுக்கு உற்சாகமளிக்கவில்லை போலும். அவனுடைய 'குருநாதர்' பிம்பம் சேதமடைகிறது...

'அப்புறம்—வேறென்ன நியூஸ்?' என்றான் ரமணி.

'நீதான் சொல்லணும்—நீதானே நியூஸ் பேப்பர் ஆபீஸிலே வேலையாயிருக்கே.'

'உன்னைப் பத்தின நியூஸைக் கேக்கிறேன்.'

'புதுசா ஒண்ணுமில்லே'

'பழசெல்லாம் எப்படியிருக்கு?'

'இருக்கு.'

'சீக்கிரமா ஏதாவது பண்ணேண்டா?'

'என்ன பண்றது?'

'உருப்படியா, உங்கண்ணாவை மாதிரி, இப்ப அடுத்ததாக உன்னுடைய 'டர்ன்' தானே?'

செல்லப்பா சலிப்புடன் ரமணியைப் பார்த்தான். 'ரமணி'

'உம்?'

'கொஞ்சம் குறைச்சலா சமத்து வழியறயா? எங்க வீடெல்லாம் முழுகிப் போயிடும் போலிருக்கு."

ரமணியின் முகத்தில் பெரிய பாராட்டுப் பெற்றவன் போலத் திருப்தியும் பெருமிதமும் தோன்றின. 'வெளியிலே போகலாமா?' என்ருன்.

'எங்கே?'

'சும்மா ஒரு ரவுண்டு...இன்னிக்கு குடியரசு தின ஊர்வலத்துக்கு ஒத்திகை...பார்த்துட்டு வரலாமா?'

செல்லப்பா ஒருகணம் பேசாமலிருந்தான். அந்த சமயத்தில் அவன் மிக இலேசாகவும் ரம்மியமாகவும் உணர்ந்தான். குழந்தையைப் போலப் பரிசுத்தமாக உணர்ந்தான். ரமணியுடன் சென்ருல் அந்த உணர்வுகள் நிச்சயம் பாழாகிவிடுமென்று தோன்றியது. ஆனல் வேறு வழியில்லை. ரமணியுடன் இங்கேயேஉட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாலும் அவை பாழாய்த் தான் போகும். மேலும் ரமணி பச்சை பச்சையாகப் பேசத் தொடங்குவான்; அது யார் காதிலாவது விழுந்து வைக்கலாம்...... செல்லப்பாவுக்குத் தான் தப்பித்துக் கொள்ள விரும்புவது ரமணியிடமிருந்தா அல்லது தன்னிடமிருந்தே தானு என்று புரியவில்லை.

'சரி...ஷூ போட்டுக் கொண்டு வருகிறேன்' என்று அவன் உள்ளே சென்ருன்.

அவன் ஷூ அணிந்து வெளியே வந்தபோது அம்மா வராந்தாவில் நின்றிருந்தாள். ரமணியிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். அவன் வேலை பார்த்த தினசரியில் நாடக விமரிசனம் யார் எழுதுகிருர்கள் என்று அவள் கேட்டுக் கொண்டிருந்தாள். ரமணி பதில் சொன்ன மாதிரியிலிருந்து, அந்த விமரிசனம் எழுதுகிறவர் அவனுக்கு மிகவும் பரிச்சயமான வர்போல, அவனுடன் தினசரி சிற்றுண்டியும் காபியும், அருந்துகிறவர் போலத்தோன்றியது. பல சமயங்களில் ரமணியிடமே அபிப்பிராயம் கேட்டு அதை அப்படியே அவர் எழுதியிருக்கிருராம். கணக்கு வழக்கில்லாமல் பல நாடகங்கள் பார்த்துப் பார்த்து அவருக்குச் சுய புத்தியோ நிர்ணயமோ இல்லாமல் போய் விட்டது, என்ருன் ரமணி.

மேலும் இந்த விமரிசனம் எழுதுகிறவன் களெல்லாம் என்ன, மிகச் சின்ன ஆட்கள், செல்வாக்கில்லாத பேர்வழிகள். ரமணிக்கு ஆசிரியர் குழுவில் முக்கியமான பேர்வழிகளுடனெல்லாம் நெருங்கிய தொடர்புண்டு. குறிப்பிட்ட ஒரு கலைஞனுக்கோ அல்லது சிருஷ்டிக்கோ முக்கியத்துவம் அளிக்கப்படுவதும் அளிக்கப்படாததும் இவர்கள் கையில்தான் இருக்கிறது. விமரிசகன் ஒருவரைத் தாக்கி எழுதினுல்கூட, அதற்கு நேர்மாருன கருத்துக் களைத் தெரிவிக்கும் கடிதங்களை நிறையப் பிரசுரித்து, நாடகாசிரியர், நடிகர்கள் ஆகியோருடைய புகைப்படங்கள், பேட்டிகள் முதலியவற்றை வெளியிட்டு, விமரிசகனுடைய குரலுக்கு மதிப்பேயில்லாமல் போகச் செய்யும் திறன் இவர்களுக்கு உண்டு.

செல்லப்பாவுக்கு போர்அடித்தது. 'கிளம்பலாமா?' என்ருன். ரமணி மனதேயில்லாமல், செல்லப்பாவின் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினுன்.

'உங்க அம்மா நடிக்கிற புது நாடகம் ஒண்ணு வரப்போறது போலிருக்கு!' என்ருன் ரமணி, அவர்கள் வீட்டை விட்டுச் சிறிதுதூரம் வந்த பிறகு.

''ஆமாம்'' என்ருன் செல்லப்பா. ''பொங்கலன்றைக்கு ஸ்டேஜ் பண்றதா இருந்தது... ஆனல் அதுக்குள்ளே எங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லாமல் ஆயிடுத்து...இனிமேல் அடுத்த மாசந்தான்.''

ரமணி சென்ற வருடம் செல்லப்பாவின் அம்மா நடித்திருந்த நாடகம் ஒன்றை நினைவு கூர்ந்து, அது இன்னமும் தனக்கு மறக்கவில்லை என்ருன். அதுவும் மாமியோட நடிப்பு...! செல்லப்பாவுக்குச் சங்கடமாயிருந்தது. ரமணி தன் தாயைப் பற்றி இவ்வளவு உரியையாகப் பேசாமலிருக்கலாமென்று தோன்றியது. நல்லவேளையாக சம்பாஷணையின் தடம் அம்மா நடித்த நாடகத்தை விட்டுப்பொதுவாக நாடகங்களைப் பற்றியதாக மாறியது. சற்றுநேரம் இது ஆசுவாசமளிப்பதாக இருந்தது. ஆனல் இதுவும் சற்று நேரம்தான். ரமணி நாடகங்களைப் பற்றிய தன் சொற்ப அறிவின் பின்னணியில், நாடக மறுமலர்ச்சி பற்றி ஏதேதோ உளறத் தொடங்கினுன். செல்லப்பாவுக்குத் தலையை வலித்தது. அவனிடம் இப்ஸன் பற்றியோ டென்னெஸ்ஸி வில்லியம்ஸ் பற்றியோ, எட்வர்ட் ஆல்பி பற்றியோ பிரெக்ட் பற்றியோ பேசி தான் அறிந்திருந்த நாடகச் சொத்துகளை, பரவசங்களை, அவனும் அறியச் செய்வதோ மிக அசாத்தியமானதாகவும் அனுவசியமானதாகவும் தோன்றியது. அவனுக்கு ரமணியிடம் அனுதாபம் ஏற்பட்டது.

தான் அவனைத் தன் பலவீனமான தருணங்களில் ஓர் ஆசிரயமாக, சதை வேட்கைகளை மனம் திறந்து பரிமாறிக் கொள்ளும் ஒரு வடிகாலாக, கிளர்ச்சியூட்டும் ஒரு போதைப் பொருளாக, கிட்டத்தட்ட ஒரு தாசியைப் போலத்தான் கருதி வந்திருக்கிருேமென்பது அவனுக்குத் தெரிந்தது. செல்லப்பாவின்

அம்மா தன்னை மதித்துப் பேசியது ரமணியை ஒரு புது மனிதன் போல உணரச் செய்துள்ளது போலும்; அவன் ஒரு பெரிய இன்டெலெக்சுவல் பிம்பம் ஒன்றை அணிய முயலுகிறான்...அவர்களிருவருக்கும் இடையேயுள்ள நட்பை இல்லாத ஒரு உயரத்துக்கு உயர்த்த முயலுகிறான்... பாவம்! செல்லப்பாவுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அவனைப் பார்த்துப் பரிதாபமாக இருந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு தன் மேலேயே வெறுப்பும் ஏற்பட்டது. சீ! நான் ஒரு கயவன். ஒரு சுயநலப் பேய். காரியவாதி...திடீரென்று ரமணியின் தோள் மீது அவன் கை போட்டுக் கொண்டான். ரமணி ஆச்சரியத்துடன் செல்லப்பாவின் முகத்தைத் திரும்பிப் பார்த்தான்.

"நீ ரொம்ப நல்லவன்டா" என்றான் செல்லப்பா.

இருவரும் கைகோத்துக் கொண்டு, ஒத்திகை நடக்கும் இடத்தை அடைந்தார்கள். முப்படையைச் சேர்ந்த வீரர்களின் கால் நடை அணிவகுப்பு, பிறகு டாங்குகள், நுட்பமான யந்திரத் துப்பாக்கிகள், விமானம் சுடும் துப்பாக்கிகள், வேறு பல யுத்த தளவாடங்கள், தொடர்பு சாதனங்கள், வாகனங்கள் எல்லாமே எவ்வளவு நேர்த்தியாக இருந்தது, அழகாக இருந்தது.

உன்னதமாக இருந்தது; அவர்களுடைய நட்பைப் போலவே.

பிறகு என். ஸி. ஸி. ஆண்கள். என். ஸி. ஸி. பெண்கள். பெண்கள், பெண்கள்.

ரமணி செல்லப்பாவின் கையைப் பிடித்து ஒரு அழுத்து அழுத்தினான்.

பிறகு பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர்...

"இதுதான் நன்னாயிருக்கு" என்றான் ரமணி.

ஆம்; அது மிக நன்றாயிருந்தது. மிகச் சிறிய வகுப்புகளிலிருந்து மிகப் பெரிய வகுப்புகளில் படிக்கிறவர்கள் வரை, அந்தந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் தனித் தனிக் குழுக்களாக அணி வகுத்துச் சென்றார்கள். செல்லப்பாவுக்குப் பூரிப்பாகவும் நிறைவாகவும் இருந்தது—முக்கியமாக, சிறுமியர் அணிகளைப் பார்க்கும்போது. எத்தனை பிராயங்களில், அளவுகளில், அமைப்புகளில், நிறங்களில், வடிவங்களில்! அவனுக்கு அவர்களைவிட்டுப் பார்வையை எடுக்க மனம் வரவில்லை. பேதைமை முழுதும் இல்லாமலும், முழுதும் விலகாமலும் இருந்த அவர்களிடம் ஒரு தன்னுணர்வற்ற துருதுருப்பும் கவர்ச்சியும் இருந்தது.

தரையில் ஊர்வலம் முடிந்த பிறகு, வானத்தில் விமானங்களின் அணிவகுப்பு. நாலு நாலாக, ஆறு ஆறாக, எட்டு எட்டாக......

விர்! விர்! விர்!

என்ன ஓசை! என்ன வேகம்! அழகிய முத்தாய்ப்பு; கிளர்ச்சியின் உச்சநிலை. கிளைமாக்ஸ்!

கூட்டம் கலையத் தொடங்கியது. இப்போது மக்கள் திரளிடையேயிருந்த நிறங்களை அவர்கள் கண்கள் துரத்தின. மறுபடி கை கோத்துக்கொண்டு இந்தியா கேட் புல்வெளியில் மெதுவாக நடந்தார்கள்.

போட்டிங் கிளப் அருகேயிருந்த திறந்த வெளி ரெஸ்டாரண்டில்போய் இருவரும் அமர்ந்தார்கள். அருகே ஒரு டிரான்ஸிஸ்டரில் கிரிக்கெட் காமெண்டரி கேட்டுக் கொண்டிருந்தது. ரமணி அதை உன்னிப்பாகக் கவனிக்க தொடங்கினான். செல்லப்பா கலைந்து போய்க்கொண்டிருந்த கூட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். உலகம் மிக அழகானதாகத் தோன்றியது. வெய்யில் அழகாக இருந்தது. ஆகாயம், மரங்கள், ஏரி, சாலை, புல்வெளி, மனிதர்கள், கட்டிடங்கள், நிழல்கள் எல்லாமே அழகாக இருந்தன. அசைபவை, அசையாதவை, உயிருள்ளவை, உயிரில்லாதவை, எல்லாவற்றையும் அணைத்துக்கொள்ள வேண்டும்போல் இருந்தது. புரள வேண்டும் போல, கூத்தாட வேண்டும் போல இருந்தது. கூச்சலிட வேண்டும் போல, கடகடவெனச் சிரிக்க வேண்டும்போல இருந்தது. அடுத்த கணத்தை முகாலோபனம் செய்யாமல் இந்த அழகிய கணத்தில், உணர்வுகளின் உச்சகட்டத்தில், இறந்துவிட வேண்டும் போலிருந்தது. இன்னொரு நாள், இன்னொரு நேரம், இவை எதுவுமே அவனைக் கிளர்ந்தெழச் செய்யாமல் போகலாம். வேறெதுவுமேகூட. அந்த ஒரு நாள் வரை அவன் பயணம் நீடிக்காமலிருந்தால் நல்லது.

வெயிட்டர் சமோஸா கொண்டு வந்தான். அதுவும் அழகாய்த்தானிருந்தது. அழகிய நிறம், எடை, வடிவம். அதைக் கடிக்கும் போதும் மெல்லும்போதும் ஏற்பட்ட ஓசை அழகாயிருந்தது; மணம் அழகாயிருந்தது; ருசி அழகாயிருந்தது. சமோஸாவுக்குத் தொட்டுக் கொள்வதற்காக விட்டிருந்த புளித் தண்ணீரின் மிச்சம் வெள்ளையான பிளேட்டில் தங்கியிருந்தது அழகாயிருந்தது......செல்லப்பா அந்தப் புளித் தண்ணீரை விரலால் தொட்டு, நாக்கில் வைத்துக் கொண்டான். இஸ்ஸ்! இதுவும் ஒரு

அழகுதான். இன்னொரு விரல், இன்னொரு விரல், இன்னொரு விரல்......

''சாந்தா எப்படியிருக்கா?'' என்றான் ரமணி.

செல்லப்பாவின் அழகிய உலகம் திடீரென்று சரியப் போவது போலிருந்தது; இருளடையப் போவது போலிருந்தது; சுக்கல் சுக்கலாகச் சிதையப்போவது போலிருந்தது. ஆனால் அவன் சமாளித்துக் கொண்டான். விரல் நுனியில் மலையைத் தழுவி நின்று கோகுலத்தைக் காத்த கிருஷ்ணரைப் போலச் சாதனை புரிந்து தன் உலகத்தைக் காக்க முடிவு செய்தான். விரல்களைத் தொடர்ந்து அனுயாசமாக நக்கியவாறு, ''இருக்கா...ஷீ இஸ் ஃபைன்'' என்றான்.

''பார்த்தியா, எங்கேயாவது?''

''உம்...''

''எங்கே பார்த்தே?''

''டிஸ்கோத்தேக்குப் போயிருந்தேன் அவளோடு'' என்று செல்லப்பா தண்ணீர் டம்ளரை எடுத்து, மடக் மடக்கென்று சினிமாக் கதாநாயகன் மதுவை விட்டுக் கொள்வது போல வாயில் விட்டுக் கொண்டான்.

''என்ன, என்ன, மறுபடி சொல்லு?''

செல்லப்பா மறுபடி சொன்னான்.

''என்னாலே நம்பவே முடியலையே!''

''எனக்கு அதிலே ஒண்ணும் நஷ்டமில்லையே!''

ரமணி சில விநாடிகள் பேசவில்லை. அவன் கண் முன்பு ஒரு புதிய செல்லப்பா உருப்பெறத் தொடங்குவது போலிருந்தது. ஒரு புதிய மனிதன். ஒரு புதிய பிம்பம்!

''என்னிக்குப் போயிருந்தே?''

''போன வாரமோ, அதுக்கு முந்தின வாரமோ, சரியா ஞாபகமில்லை...இரு, சொல்றேன். ஆமாம், போன வாரந்தான் சாந்தாவோட. அதுக்கு முந்தின வாரம் கூட வந்தது அவளில்லை.''

''வேறே யாரு?''

''யாரோ, உனக்கென்ன?''

ரமணி செல்லப்பாவின் முகத்தை ஆராய்ந்தான். பெண்களைப் பற்றிய கூச்சத்தைச் செல்லப்பா இழந்திருப்பானோ, இல்லையோ, ஆனால் பொய் சொல்வதிலுள்ள கூச்சத்தை நிச்சயம் இழந்திருப்பான். ஆனால் அதை எப்படி ருசிப்படுத்திக் கொள்வது?

''எந்த டிஸ்கோத்தேக்குப் போயிருந்தே?''

''அதுதான், ரீகல் பக்கத்திலே இருக்கே!''

''ஸெல்லரா?''

''ஆமாம்.''

அங்கு என்ன சாப்பிட்டான், என்ன சார்ஜ் கொடுத்தான், எந்த மாதிரியான இசை இருந்தது, விளக்கமைப்பு எப்படி இருந்தது, நடனமாடினானா இல்லையா என்று ரமணி செல்லப்பாவைக் கேள்விகளால் துளைத்தான். செல்லப்பா டக்டக்கென்று எல்லாவற்றுக்கும் சரியாகப் பதில் சொன்னான்.

ரமணி சற்று நேரங்கழித்து, தோல்வியை ஒப்புக் கொண்டவன் போல மௌனமானான். அவன் முகத்தில் பெரும் ஏமாற்றமும், இழப்புணர்ச்சியும் தெரிந்தது.

செல்லப்பாவுக்குத் தன் தம்பியின் மீது நன்றியுணர்வு ஏற்பட்டது. ஸெல்லருக்குள் எப்படியிருக்குமென்று அவன்தான் சொல்லியிருந்தான். பொய் சொன்னதற்காக அவனுக்கு மனத்தினுள் இலேசான உறுத்தல் ஏற்படத்தான் செய்தது. அதே சமயம் தன் அழகிய உலகத்தைக் காப்பாற்ற முடிந்தது குறித்துப் பெருமையும் நிம்மதியும் ஏற்பட்டது. ரமணி இனி தன்னைச் சிறுபிள்ளைபோல நினைக்க முடியாது...திடீரென்று ரமணியின் மீது தான் பெற்ற வெற்றியை மென்மேலும் ஸ்திரப்படுத்த வேண்டுமென்ற ஒரு வெறி அவனுக்கு ஏற்பட்டது.

''சாந்தாவுக்கு என் ஹேர் ஸ்டைல் ரொம்பப் பிடிச்சிருக்காம்...'' என்று தொடங்கினான். டிஸ்கோதேயில் சாந்தாவுடன் உட்கார்ந்திருந்த செல்லப்பா மெல்லமெல்ல ரமணியின் முன்னால் உருப்பெறத் தொடங்கினான். இந்தக் கற்பனைச் செல்லப்பா ரமணியை ஆதிக்கமற்றவனாய், பலமற்றவனாய், உணரச் செய்தான்; ஆனால் நிஜமான செல்லப்பாவை மிகவும் வசீகரித்தான், அவனுக்கு ஆசுவாசமும் ஆதரவும் அளித்தான். இனி அவனுடைய அழகிய உலகம் சிதையப் போவதில்லை. அவனுடைய 'இன்பம் துய்க்கும் இளவரசன்' பிம்பம் கலையப் போவதில்லை. ரமணியின் காரணமாகக் கூட.

(தொடரும்)

# உயிர்

## நீல. பத்மநாபன்

தூளியில் கிடக்கும் குழந்தை 'வீல் வீல்' என்று கத்துவதைக் கேட்டும், எழுந்து சென்று அதை எடுக்க முடியாத அசதியில் அவள் கிடந்தாள். கைகால்களும் உடம்பும் எல்லாம் ஜீவனை இழந்துவிட்டதுபோல் ஒரு அசக்த நிலைமை...இமைகளுக்குத்தான் என்ன கனம்...!

இன்னும் பதினாறு நாள் ஆயுள்கூட் திகையாத பச்சிளம் குழந்தை...அது விடாமல் கத்துவதைக் கேட்டால் நீ என்னைத் தூக்கிக் கொள்ளும் வரை ஓய்ந்திருக்க மாட்டேன் என்று தன்னிடம் நேருக்கு நேர் சமர் தொடுப்பது போலிருக்கிறது.

மாலை ஏழு மணி சுமாருக்கு பால் கொடுத்தது. இப்போ நடுநிசி கழிந்திருக்கும்...பாவம்! வயிறு பசித்துத்தான் இப்படிக் கதறியழுகிறது! தன் ஜம்பர் நனைவதை அவளால் உணர முடிகிறது. ஆனாலும், கையும் கால்களும் ஒத்துழைக்காமல் எப்படி எழுந்துபோய் குழந்தையை எடுப்பது...! ஒருவித மயக்கத்தில்தான் ஆழ்ந்து போய்க்கொண்டிருப்பது போலிருக்கிறது. தன் அம்மாவையும் காணவில்லை. அழுது அரற்றும் குழந்தையைத் தூளியிலிருந்து எடுத்து தன் பக்கத்தில் கொண்டு வந்து படுக்க வைத்தால் போதுமாக இருந்தது. இவள் எங்கே போய்க் கிடக்கிருள்...!

கண்களைத் திறக்க இயலாமல் 'அம்மா... அம்மா...' என்று களைத்த குரலில் ஓரிரு தடவை எப்படியோ கத்திப் பார்த்தாள் அவள். அவள் அழைப்புக்கு சுவரில் இருந்த கடிகாரம் இரண்டு முறை அடித்துக் குரல் கொடுத்தது, அவ்வளவுதான்.

விழிகளை எப்படியோ சிரமப்பட்டு திறந்த போது கரும் கும்மென்றிருந்த வானம் ஜன்னல் வழி தென்பட்டது. அங்கங்கே கண் சிமிட்டும் நட்சத்திரங்களும்! கழுத்தைத் திருப்பி நடுக் கூடத்துக் கதவைப் பார்த்தபோது, அது சாத்தியிருப்பது விடிவிளக்கு ஒளியில் தென்படுகிறது.

குழந்தை அழுது அழுது களைத்துப் போய் விட்டது போலிருந்தது. இப்போது லேசாகச் சிணுங்கிக் கொண்டுக் கிடந்தது. அவளுக்கு மயக்கம் சரியாக தெளியவில்லை. இருந்தும் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். தலை கிறுகிறுவென்று சுற்றிக் கொண்டு வந்தது. தன் உடம்பிலிருந்து ஜீவன் முழுதும் வடிந்து போய்விட்டது போல் ஒரு அசதி...எழுந்து மூன்று நான்கடி வைத்தால்தான் தூளியின் பக்கத்தில் செல்ல முடியும். எழுந்துநின்றால் விழுந்துவிடுவோமோ என்று பயமாக இருந்தது. சுவரில் சாய்ந்தவாறு அப்படியே உட்கார்ந்தபோது சிறிது ஆசுவாசமாக இருந்தது. கொல்லையில் நின்ற பவழ மல்லிகையின் மணத்தைச் சுமந்தவாறு ஓடிவந்த காற்று முகத்தில் ஸ்பரிசிக்க சிறிது சிறிதாகத் தலையின் கிறுக்கம் குறைந்து கொண்டு வருவதுபோல் தோன்றியது.

இப்போது மாடியில் குழாயிலிருந்து தண்ணீர் சடசடவென்று விழும் ஓசை கேட்கிறது. மாடியில்தான் அண்ணாவும், அண்ணியும், அவர்கள் குழந்தைகளும் படுத்துக் கொள்வார்கள். நேற்று காலையில் அண்ணி கூறியது இப்போது லேசாக ஞாபகம் வருகிறது.

'ஏண்டி ருக்கூ! எண்ணைக்கும் ராத்திரி பூரா இப்படிக் குழந்தையை அழப் போடுறே? நேத்தைக்கு ராத்திரியும் நானும் உங்க அண்ணாவும் தூங்கவே இல்லை...' குழந்தைக்கு மருந்து எண்ணெயால் உச்சி வைத்தவாறு அண்ணி இப்படிக் கேட்டபோது, ருக்குவுக்குத் துக்கம் துக்கமாக வந்தது.

'உம்...என்ன அண்ணி செய்ய! இந்த இழவுடுத்த பிராந்தியை வேண்டாமுண்ணு சொன்னு அம்மா விட்டாத்தானே! அதுவும் கூட ஒரு சொட்டு தண்ணீர் சேர்க்காமல் ராத்திரி படுக்கும்போது அம்மா குடிக்க வச்சுவிடுருள்...அந்தக் குடிச்சூட்டு கிடந்தால், குழந்தை அழுதா மட்டுமில்லே, வீடே தீப்பற்றி எரிஞ்சாலும்கூட எனக்குத் தெரியமாட்டேங்குது.

நினைவு தவறி செத்துக் கிடப்பதுபோல் கிடக்கு றேன்...' என்றாள் ருக்கு.

பரணையிலிருந்து ஏதோ பாத்திரத்தை எடுத்துக் கொண்டிருந்த அம்மா, 'ஆமா...... அதுவும் வேண்டாம்...தலைச்சன் பேறு...பிரசவ ரட்சைக்கு ராத்திரி ஒரு நேரமாவது ஒரு மடக்கு இதைக் குடிக்காட்டி நீ எப்படி திரா ணியா இருந்து குடும்பம் நடத்தி குப்பைக் கொட்ட போறே? அந்தக் காலத்தில் ஒவ் வொரு பிரசவத்துக்கும் நான் எத்தனை புட்டி குடிச்சிருக்கேன் தெரியுமா...?' என்றாள் வீராப் புடன்.

அதுதான் உடம்பில் தெரியுதே என்று அம்மாவைக் கேட்காதவாறு ருக்கு தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டாள்.

'அவதான் அதைக் குடிச்சு மயங்கிக் கிடக் காண்ணு தெரியுமே...நீங்களாவது அழுகிற குழந்தையை எடுக்கப்படாதா? ராத்திரி பூரா வீல்வீல்ண்ணு இப்படியா குழந்தையை அழப் போடுவது?' என்று அண்ணி அம்மாவிடம் கேட்டாள் உரிமையோடு.

'ஆமா...ராத்திரி நீதானே அடிக்கடி மாடி யிலிருந்து கீழே இறங்கி வந்து அழுகிற குழந் தையை எடுக்கிறே! நேத்தைக்கு அசதியில் கொஞ்சம் கண்ணசந்துட்டேன்...கடைசியில் குழந்தை அழுவதைக் கேட்டு நான் அல்லாமல் எந்த உருவம் வந்து எடுத்தது?' என்று எரிச்ச லுடன் கூறிவிட்டு அம்மா விடுவிடுவென்று அடுக்களைக்குள் புகுந்துவிட்டாள்.

'ருக்கு...எதுக்கும் இப்படி ராத்திரி குழந் தையை அழப் போடாதே...அது புள்ளைக்குத் தோஷமுண்ணு சொல்லுவா...'

தான் அசடு வழிய விழிப்பதைக் கண்டு, அங்கே இங்கே பார்த்துவிட்டு தன் செவியில் அண்ணி குசுகுசுத்தாள்: 'ராத்திரி நேரம் பக் கத்து வீடுகளில்—பக்கத்து வீடுகளில் மட்டு மென்ன, நம்ம வீட்டிலும்தான், இங்கே நானும் உன் அண்ணுவும் இருக்கிறோம்; உங்க அப்பா அம்மா இருக்கிறாங்க—இப்படி புருஷன் பெண்டாட்டிகள் சேர்ந்து 'படுக்கிற' நேரம்... அந்தச் சமயத்தில் பச்சைப் புள்ளை வாய்மூடா மல் அழுதால், அந்த அழுகை வழி அதன் ஜீவ னும் 'அங்கே' போய் அடைந்து விடுமுண்ணு சொல்லு சொல்லுவா...அது புள்ளைக்க ஆயு சுக்கு கெடுதல் இல்லையா...அதுதான் சொல் றேன்...'

இப்போது குழந்தை மறுபடியும் அழ ஆரம்பித்துவிட்டது. சுவரில் சாய்ந்து உட் கார்ந்திருந்த ருக்கு சுதாரித்துக்கொண்டு எழுந் தாள். முடியாதிருந்தும் மெல்ல அடிவைத்து தூளியின் அருகில் சென்றாள். குனிந்து குழந் தையைக் கையில் எடுத்தாள். கட்டிலுக்குத் திரும்பி வருவதற்கிடையில் நடுக் கூடத்துக் கதவை மெல்ல அவள் கை தள்ளிப் பார்த்த போது, அது உள்ளிருந்து தாள் போட்டிருப் பது புலப்பட்டது. அப்பா அங்கேதான் படுத் திருப்பது வழக்கம்...

கட்டிலில் வந்து உட்கார்ந்துகொண்டு குழந்தையை மடியில் கிடத்தி, பாலூட்டிக் கொண்டிருக்கும்போது, கூடத்துக் கதவு மெல் லத் திறக்கும் ஓசை கேட்டது. உடுத்தியிருந்த பதினாறு முழப் புடவையைச் சரி செய்தவாறு வரும் அம்மாவின் வாட்டசாட்டமான உடம்பு தென்படுகிறது.

'பரவாயில்லே...அம்மா...புள்ளையை நான் எடுத்தாச்சு...நீ போய்ப் படுத்துக்கோ...' என் றாள் ருக்கு அர்த்தபுஷ்டியுடன் சிரித்தவாறு! ★

# தீர்மானமும் பல்லவியும்!

வீணை வித்வான் எஸ். பாலசந்தரோடு அயல்நாடு சென்று கலைநிகழ்ச்சிகள் புரிந்து மீண்டதை முன்னிட்டு, மிருதங்கக் கலைஞர் குருவாயூர் துரைக்கு, சென்னை தியாகராயநகரில் பாராட்டு விழா நடந்தது. சங்கீத வித்துவான் சந்தியாவந்த னம் ஸ்ரீநிவாஸ ராவ் தலைமை தாங்கினார்.

பலருடைய பாராட்டுரைக்குப் பின் துரை நன்றியுரை கூறத் தொடங்கி னார்: ''எனக்குப் பேசத் தெரியாது. பலரும் மிகச் சிறப்பாகப் பேசிய இடத்தில் நன்றியுரை கூறுவது இன்றியமையாதது. மிருதங்கத்தில் 'தீர்மானம்' வைப்பது போல் என்னையும் பேசச் சொல்கிறார்கள். 'தீர்மானம்' வைக்க இடம் புரியாமல் திண்டாடுகிறேன். எனவே, எல்லாரும் இதையே சரியான 'தீர்மான'மாகக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

கைதட்டல், சிரிப்பொலிகளின் இடையே ஸ்ரீநிவாஸ ராவ் எழுந்தார். '''தீர்மான'த்திற்குப் பின் 'பல்லவி'யைத் தொடர வேண்டியது பாடகரின் வேலை அல்லவா?'' என்று தம் பேச்சைத் தொடர்ந்தார்.

அவையில் அடங்கியிருந்த ஆரவாரம் மறுபிறப்பு எடுத்தது. —எல்லார்வி

# புதுக் கவிதைப் போராட்டம்

**சக்திக்கனல்**

சமீபத்தில் வெளியான ஒரு ஆங்கில வாணிக சஞ்சிகையில் ஒரு சிறு துணுக்குக் காணப்பட்டது. "Equality before law is not always so. If a poet writes a bad cheque, they put him jail in U S. A and Canada). But if a banker writes a bad poem nothing happens..." என்பது அது. இந்த வரிகளைப் படித்தபோதுதான் நமது புதுக் கவிதைகளின் போர்முரசும் என் காதுகளில் ஒலித்தது. மரபுக் கவிஞர்களை மலங்க மலங்க விழிக்க வைத்து விட்டு, இலக்கிய இதழ்கள் புதுக் கவிதைகளுக்கு ஏராளமான இடந்தரும் இந்தச்சூழலில் நடுநிலையான சில கருத்துக்களை இரு தரப்பாருக்கும் அவசரமாகச் சொல்லித் தீரவேண்டிய அவசியத்தால்தான் இந்தக் கட்டுரையை எழுத நேர்ந்தது. காலத்துக்குக் காலம் கருத்துக்கள் மாறுபடுகின்றன. நடையுடை பாவனைகள் மாறுபடுகின்றன; வாழ்க்கைப் போக்கும் சிந்தனைப் போக்கும் மாறுபடுகின்றன. இந்தக் கால கட்டத்தில் தமிழ்க் கவிதையும் மாறுதலை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

'எப்படி வேண்டுமானாலும் எழுதலாம்' என்ற ஆனந்த சுதந்திரம்—யாருக்கும் கிடைக்காத சுதந்திரம்—நமது கவிஞர்களுக்குக் கிடைத்ததுதான் தாமதம்! மடமடவென்று ஒருபெரிய கூட்டமே புதுக்கவிதைகளை வரைந்து தள்ள ஆரம்பித்து விட்டது!

இந்தப் புதுக்கவிதை வேகம் மரபுக் கவிதைகளை அசைத்துப் பார்த்தது. நீண்ட காலமாக மரபில் காலூன்றிய கவிஞர்களும்கூட இந்த வேகத்துக்கு முன் ஈடுகொடுக்க முடியாமல் சற்று திகைப்படைந்தனர். இந்தப் புதுக் கவிதைக்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் குரல்கள் பல கிளம்பலாயின. ஆதரவு தேடுபவர்கள் சொன்ன காரணங்கள் சில ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகவும் தர்க்க ரீதியானவையாகவும் இருந்தன. புதுக்கவிதையில் எளிமையும் தெளிவும் இருப்பதாகவும், அது புதிய கருத்துக்களைச் சிரமமின்றிச் சொல்ல வசதியும் ஆற்றலும் தருவதாகவும், மன உணர்வுகளின் தெளிவான படப்பிடிப்பை முழுமையாக இதில் கூற முடிவதாகவும் இவர்கள் கூறலாயினர். மற்றும் சில நுணுக்கமான நளினங்களையும் மேலை நாட்டின் சில புதிய போக்குகளையும், புதுக்கவிதை மூலமே நன்கு வெளிப்படுத்த முடியும் என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருந்தது.

எதிர்ப்பாளர்களின் கைகளுக்கு எதுகை மோனை கிடைத்தது. விட்டெறிந்தார்கள். 'கத்துவதில்கூட இசையுண்டு; அதனால் கழுதை பாடகனாகிவிடுமா?' என்று கர்ஜித்தார்கள். கவிச்சாபம் கொடுத்தார்கள். பண்டித சிகாமணிகள் போட்ட யாப்புக்கூப்பாடு நாடெங்கும் கேட்டது. இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறது. (தீபத்தில் வெளிவரும் 'இவர்கள் என்ன நினைக்கிறார்கள்' பேட்டிகளே இதற்குச் சான்று. சேவற்கொடியை உயர்த்திக் கொண்டிருப்பவர்-இன்னும் வெளுத்துப் போய்விட்ட தமிழ்க் கொடியை உயர்த்திப் பிடித்தபடி வீரவிழி விழித்துக் கொண்டிருக்கும் தமிழ்ப் பேராசிரியர்களையே சந்தித்துச் சந்தித்து அலுத்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டுப் புதிய தலைமுறையினரின் எண்ணங்களைப் புரிந்து கொள்ள முயன்றால் நல்லதென்று தோன்றுகிறது).

எதுகை மோனைக் கல்லெறியோ, கர்ஜனையோ, கவிச்சாபமோ, யாப்புக் கூப்பாடோ, அபாய அறிவிப்போ, எச்சரிக்கையோ புதுக் கவியாளரை எதுவுமே செய்ய இயலவில்லை.

அவர்கள் பாட்டுக்கு 'ஜம்' மென்று தமிழின் தலையெழுத்தைத் தங்கள் கையெழுத்துக்களால் தீர்மானித்துக் கொண்டிருந்தார்கள். 'தளை'யை வெட்டி நாய்க்குப் போட்டு விட்டுத் தலைக்கனத்தோடு தம்பட்டமடிக்கப் புறப்பட்டார்கள். இது சம்பந்தமாக நீதிமன்றத்தில் ரிட் போடவோ, தடை செய்யவோ ஒருவருக்கொருவர் பள்ளிக்கூடம் வைத்துப் பாடம் நடத்தவோ இடமில்லாத காரணத்தால் பரஸ்பரம் ஏடுகளில் ஒருவரையொருவர் தாக்கி ஆத்ம திருப்தி கொண்டனர்.

வேகமான புதுக்கவிதைப் படையெடுப்பில் நேர்ந்த சில விபரீதங்களையும் நாம் குறிப்பிட்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

டாக வேண்டும். மரபு தெரியாதவர்கள் மட மடவென்று கையையும் காலையும் ஒடிப்பது போல வரிகளை ஒடித்துப் போட்டனர். இயல்பான கவித்துவம் இல்லாதவர்களும் தங்களைக் 'கவிகள்' என்று அழைத்துக் கொள்ள ஆசைப்பட்டவர்களும் இதை ஒரு நல்ல அருமையான சந்தர்ப்பமாகக் கருதி தங்கள் சரக்குகளை விரித்து வைத்துக் கடை பரப்பினர். சிலர் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து இங்கு பத்துப் பேர் அங்கு பத்துப் பேராக சுயபுராண விளம்பரங்களை வெளியிடலாயினர். பத்திரிகை என்ற பெயரில் 'தாங்கள் எழுதுவதுதான் கவிதை தங்கள் அறிவு(?)தான் அதற்கு அளவுகோல்—அதைப்படிப்பதுதான் வாசகன் தலைவிதி' என்ற நல்ல குறிக்கோளோடு மாதம் ஒரு 'கேட்லாக்' தயார் செய்தனர். அதில் எழுதப்படுபவை புரியவில்லை என்று சொன்னவர்கட்கு 'புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லை' என்று இந்த 'அறிவு ஜீவிகள்' கேலிக்கணை தொடுத்தனர். இன்னும் சிலரோ ஆங்கிலத்திலும் கவிதை வடிக்கப் பேனவும், கையும், அசட்டுத்தனமுமாக நின்றனர். இவர்களைப் பகைத்தால் தங்கட்குக் கவிதாஞானம் இல்லாமல் போய் விட்டதாகக் கருதி விடுவார்களோ அவர்கள் சாம்ராஜ்யத்தில் சர்டிபிகேட் கிடைக்காமல் போய் விடுமோ என்று பயந்த சிலரோ இந்தக் கேட்லாக்குகளை வைத்துக் கொண்டு இது அல்லவா கவிதை என்று பாராட்டவும் தொடங்கினர்.

பாரதியின் வசன கவிதை ஆரம்பகாலத்தில் ஒரு பக்தனின் பிரார்த்தனையாக, எளிமையின் இசைக்குரலாக, மெல்லிய இதழ்களாக வடிவெடுத்த காலம் மறைந்து, கவிதையைப் பற்றி நினைக்க அருகதையற்றவர்களும்கூட இப்போது—இங்கே புரட்சிக்கவிஞர்களாகிப் 'புலிப் பாய்ச்சல்' காட்டுவதைப் பார்க்கிறோம்.

வாழ்ந்த குடும்பத் தலைவனைக் கொன்ற கொலைகாரன், செத்தவன் மனைவி ஒப்பாரி பாடுவதையும் கேலி செய்தானும். அதுபோல மரபுக் கவிஞர்களைக் கேலி செய்வது ஒன்றே புதுக்கவிதைப் படைப்பாளிகளின் தலையாய கடமையாயிற்று. மரபில் எழுதுபவர்களை நையாண்டி செய்வதும் வளர்ந்தது. அதே சமயத்தில் மரபில் எழுதி வரும் சில 'மாகவி'களும் தங்கள் புறநானூற்று முறங்களைத் தூக்கிக் கொண்டு 'புதுக்கவிதைப் படைப்பாளிகளைப் 'புடைக்க'ப் புறப்பட்டார்கள். ஆரோக்கியமான (?) தமிழ் இலக்கியச் சுழலுக்கு ஓர் அழகான குஸ்தி மேடை கிடைத்தது. பலமே இல்லாத சில 'பயில்வான்'களும்கூட ஒவ்வொரு பத்திரிகையிலும் உடற்பயிற்சி செய்தார்கள். இந்தக் கவிவாணர்களின் குழாயடிச் சண்டைகளைக் காண்பதற்குக் கட்டணம் செலுத்துவதாக நினைத்துக் கொண்டு, சிலர் சில பத்திரிகைகளுக்குச் சந்தா செலுத்தினர். வசீகரமான வசவுகள் நம் 'தரமான' தமிழ் வாசகர்களின் ஆத்மாவுக்கு அபிஷேகம் செய்தன.

மரபா, புதிதா என்று சண்டை பிடித்து மண்டையை உடைத்துக் கொண்டார்களே தவிர அது கவிதையா இல்லையா என்று கவனிப்பதிலும் கணிப்பதிலும் இந்த இரு சாராரும் அக்கறை காட்டவில்லை! விருப்பு வெறுப்புகளின் துருவங்களில் போய்த் தொத்திக்கொண்டவர்களால் தங்கச்சூரியனின் ஒளிரேகைகளைத் தரிசிக்க முடியவில்லை.

இயல்பான கவிதை ஆற்றல் என்பது எது? இயல்பான கவிதை ஆற்றல் படைத்தவன் கவிதைக்கு வார்த்தைகளையோ கருத்துக்களையோ தேடி அலைவதில்லை. அவன் உள்ளத்தில் கருத்து நடமாடிக் கொண்டிருக்கிறது. அவன் உணர்வுகளில் 'ரிதம்' நடனமாடிக் கொண்டிருக்கிறது. தேங்கிக் கிடக்கும் மின்சாரம் பட்டனைத் தட்டியவுடன் பிரகாசிப்பதைப் போல ஓசையின் ஒழுங்கோடு கருத்தின் கம்பீரத்தோடு கவிதை பீறிட்டு வெளிப்படுகிறது. இந்தக் கம்பீரத்தை, பாரதியார், பாரதிதாசன் ஆகியோருடைய பெரும்பான்மையான கவிதைகளிலும், கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், சுரதா ஆகியோரது ஒரு சில கவிதைகளிலும் காணலாம். இன்றைய புதிய தலைமுறைக் கவிஞர்களில், சிற்பி, புவியரசு, அப்துல் ரகுமான், மீரா, மு. மேத்தா தமிழன்பன் ஆகியோர் மரபில் அத்தகைய வெற்றியினை ஓரளவு பெற்றிருக்கிறார்கள். மரபுக் கவிதைகளை எழுதியவர்களும்கூட புதுக்கவிதையில் சோதனை முயற்சிகளை மேற்கொண்டதும், இம்முயற்சியில் என் போன்றவர்களும் ஈடுபாடு கொண்டதும் சமீப கால நிகழ்ச்சிகள்.

இனி இன்றைய புதுக்கவிதைகளின் சில பொதுப் பண்புகளைப் பற்றிப் பார்ப்போம். விகடன், குமுதம், தினமணி கதிர் போன்ற பத்திரிக்கைகளில் கட்டம் கட்டி நகைச் சுவை, அல்லது செய்தித் துணுக்குகள் ('Box matter') போடுவது போல வருபவை ஒருவகை. கீழே வருபவை அவ்வகைத் துணுக்குகளுக்கான சில உதாரணங்கள்:

எண்ணக் கயிற்றால்
இதயம்—
தூக்கிலிடப்பட்டது!
(ரமணன்-ஞானரதம்)



சக்திக்கனல்

பூமியெனும் காதலி
மழையெனும் 'Shower'ல்
குளிப்பது கண்டு
வானமெனும் காதலன்
மின்னலே 'Flash light' ஆக
'க்ளிக்' என்றேஒரு 'Snap' எடுத்தான்.

(குமாரி சி. கே. ரதிதேவி -ஞானரதம்)

சிலரது
சில பிரார்த்தனைகள்
ஆமென்னுடன் முடிகின்றன.
என் எல்லாப்
பிரார்த்தனைகளும்
சசியுடன் முடிகின்றன.

(கலாப்ரியா -தொடுவானம்)

கருக்கிருட்டுக் கர்ப்பக் கிருகத்து
கல்லுச் சாமிக்கு
கற்பூரம் ஏற்றி
கொஞ்சம்—
வெளிச்சம் காட்டினேன்.

(ஜெயராதா-கணையாழி)

இந்தக் கவிதைகளின் 'Purpose' என்னவென்று தெரியாவிட்டாலும் சொல்ல வந்த கருத்தைக் கொஞ்சம் மெருகூட்டிச் சொல்ல இவை முயற்சி செய்கின்றன என்பது உண்மை. குழப்பமற்ற தெளிவான விளக்கங்களாக இவை இருப்பதும் மகிழ்ச்சிக்குரியதே. இவை ஏதோ 'Statements of facts' மாதிரி இருப்பதைத் தவிர கருப்பொருள் என்னவென்பதைக் காட்டுவனவாக இல்லை.

ரமணனின் கவிதை ஏதோ தத்துவத்தைக் கூறுவதுபோல நடிக்கிறது. இத்தகைய நடிப்புக் காட்டும் கவிதைகள் ஏராளமாய் வருகின்றன. (இதில் 'ஸ்பெஷலிஸ்ட்' ஞானக்கூத்தன்). மனிதர்களின் நடிப்பே தோற்று விடுகிறபோது— இந்த வெறும் வார்த்தைகளின் நடிப்பில் ஏமாறும் அளவுக்கு வாசகர்கள் அனைவரும் ஏமாளிகளல்ல.

ரதிதேவியின் கவிதைகளில் ஓர் அழகான கற்பனை, கண் சிமிட்டுகிறது. ஆனால் அந்த அழகான கற்பனைப் பெண்ணை நிர்வாணமாக நிறுத்திவைத்துவிட்டு ஆங்கிலச்சவுக்கால்அவளை ஓங்கி ஓங்கி அடிக்கும்போது வாசகனுக்கு வலிக்கிறது.

இப்படிப்பட்ட மணிப்பிரவாள நடையைக் கையாள்வதே 'புதுமோஸ்தர்' என்று சிலர் நினைப்பது பைத்தியக்காரத்தனமானது மட்டுமல்ல-பரிதாபகரமானதும்கூட! (இந்த வகையில் பரந்தாமனும், நா. காமராசனும் நம் அனுதாபத்துக்குரியவர்கள். பரந்தாமனாவது வடமொழிச் சவுக்குமட்டுமே வாங்கிவைத்திருக்கிறார். நா. காமராசனோ 'பன்மொழி'ச் சவுக்கை வைத்துக்கொண்டு பயமுறுத்தப் பார்க்கிறார்.) சென்ஸார் செய்யப்படவேண்டிய செக்ஸ் ஜோக்குகளை எழுதிவிட்டுக் கவிதையென்று திறந்துகாட்டும் மனப்பான்மையும் அதிகரித்து வருகிறது.

அவள் உள்பாவாடையில்
என் இன்ஷியல்கள்
வண்ணான் போட்ட
உரிமைப் பட்டயம்!...

(நீலமணி -கசடதபற)

காபரேக் காரியைக்
கட்டிக் கொண்டேன்
மியூஸிக் இன்றி
அவிழ்க்க மறுக்கிறாள்...

(நீலமணி -கசடதபற)

ஆத்மாவையே கேவலப்படுத்தும் அசிங்கங்களையே பாடி 'நிரோத்'தையும்கூடக் கவிப்பொருளாக்கி மகிழும் 'சித்தர்'களும் 'கூத்தர்'களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எதையும் ஏறுக்குமாறாக எழுதுவதே புதுமை என்று நினைப்பது சிலருக்கு இயல்பாகப் போய்விட்டது. கந்தகமலை மேல் நெருப்பைக் கொட்டுவதுபோல பங்களாதேஷில் கற்பைப் பறிகொடுத்த அபலைப்பெண்களைக் கேலிசெய்து மனிதப் பண்பாடற்ற தனது மனதை வெளிப்படுத்தும் கேவலமான அருவருக்கத்தக்க ஒரு பாடலைப் பாருங்கள். இதில் ஓர் அங்கதம் பிறப்பது உண்மைதான். அந்த அங்கதத்திற்காக மனிதாபிமானத்தையே அரை நிர்வாணமாக்கி அலங்கோலப்படுத்துவதா?

எங்கள் பிள்ளைகளை
இவர்கள் வயிற்றில்
வளரத் தந்த
நாங்களா பாவிகள்
எங்கள்மேல் வழக்கேன்
வங்க பிதாவே?...

(நீலமணி -கசடதபற)

வாழ்க்கையை ஏறுமாருகவும், தாறுமாருகவும் பார்த்தே பழக்கப்பட்டு விட்டவர்களின் விழிக்கோணல்களுக்கு இது ஒரு சின்ன எடுத்துக்காட்டுத்தான். இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

இந்தத் துணுக்கு வகைக் கவிதைகளிலும் மின்னல் கீற்றுப் போல ஒன்றிரண்டு நல்ல கவிதைகள் அவ்வப்போது தென்படுவதும் உண்டு. கலாப்ரியா, கல்யாண்ஜி, நீலமணி, பாலகுமாரன், மகாகணபதி, லதாபாரதி, பிறையொளி ஆகியோர் அத்தகைய துணுக்குகள் ஒரு சிலவற்றை உதிர்த்திருக்கிருர்கள். ஆனுல் இந்த வகைக் கவிதைகள் எழுதி வருபவர்களில் நெஞ்சில் இடம் பெறக்கூடிய கவிஞர் கங்கைகொண்டான்தான்.

'நான் ஏழை என்பதற்கு
இன்னும் ஒரு
எடுத்துக்காட்டு
என் தலையிலிருப்பவை
இரும்புச் சரிகைகள்
வெள்ளியல்ல!'

(ப: கங்கைகொண்டான் -கசடதபற)

'நாங்கள் நெருப்புக் கோழிகள்
எங்கள் மீது
சாம்பலைத் தூவாதீர்கள்'...

(ப. கங்கைகொண்டான் -வானம்பாடி)

என்ற அவரது வரிகளைப் பலமுறை எண்ணி எண்ணி நான் மகிழ்ந்ததுண்டு.

கங்கைகொண்டானுக்கு அடுத்தாற்போல் கல்யாண்ஜியின் கவிதைகள் பாராட்டுப் பெறுகின்றன. அவருடைய 'கூண்டுக்கிளிக்குப் பிறந்த குஞ்சுக்கிளிக்கு எப்படி-ஏன் வளர்ந்தன சிறகுகள்?' என்ற கவிதை அருமையான கவிதை.

துணுக்குகளுக்கு அடுத்தபடி இடம்பெறுபவை


THIRU AROORAN SUGARS LIMITED,
Vadapathimangalam,
TANJORE DISTRICT,
(TAMIL NADU).

★

Manufacturers of:

BEST QUALITY
WHITE CRYSTAL SUGARS

★

REGISTERED OFFICE:
17/4, Nungambakkam High Road,
2nd Floor. P. B. No. 3328,
MADRAS-600034.

★

TELE | PHONE: 86001/3 Lines | GRAMS: 'FINESUGAR' | MADRAS.

விடுகதைக் கவிதைகள். போட்டவர்களுக்கும் சேர்த்துப் புரியாமல் போய்விடுகிற விடுகதைக் கவிதைகளும் உண்டு. இவற்றைப் புதுக்கவிதைகள் என்று அழைப்பதைவிடப் 'புதிர்க்கவிதைகள்' என்று அழைப்பது மிகவும் பொருந்தும். இத்தகைய புரியாத புதிர்க் கவிதைகளைப் படைப்பதில் தனித்தன்மை வாய்ந்தவர் ஞானக்கூத்தன். எழுதியதை எழுதியபடியே அச்சிட்டு வாசகனைப்பற்றி எவ்விதக் கவலையும் கொள்ளாமல் இருந்துவிடுவது—இவர் தனிச் சிறப்பு. இவரது 'எட்டுக் கவிதைகள்' முட்டி மோதிய வரலாறு இலக்கிய அன்பர்கள் நினைவில் இன்னும் இருக்கிறது.

ஆற்காட்டுச் சீமையிலே
மலையெல்லாம் விரல்போல
அந்தவிரல் மோதிரத்தை
யார் திருடிப் போனுர்கள்?...

(ஞானக்கூத்தன் -கசடதபற)

என்று கேட்கும் வினவில் ஏதோ தத்துவம் இருப்பதாகச் சிலர் சொல்கிறுர்கள். அதைக் கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர். மற்றும் தென்னை மரத்தடியில் சிறுநீர் கழித்தவன் மீது தேங்காய் விழுவதும் காயம் பட்ட மனிதனைப் பற்றிக் கவலைப்படக்கூடாதென்ற பிடிவாதத்தோடு பாடாத கவிஞர் அந்தத் தேங்காயின் எழிலைப் பாடுவதும் யாரும் இது வரை எந்தக் கவிஞனும் சாதிக்காத சாதனை. தான் குருடனக, முடவனக, நொண்டியாக, பைத்தியமாக இல்லையே என்று குறைபட்டுக் கொள்ளும் கவிஞன் சமுதாயத்தின் தலைசிறந்த சோம்பேறித்தனத்தை வரவேற்பதாகவும், இடக்கரடக்கல் எதுவுமின்றி அசிங்கமான சொற்களையெல்லாம் தேடிப் பிடித்துக் கவிதையாக்கி மற்றவர்கள் கவனத்தைக் கவருவதாகவும் எனக்குத் தோன்றுகிறது. 'அம்மாவின் பொய்கள்' போன்ற மறக்க முடியாத நல்ல கவிதையைப் படைத்த இந்த ஞானக்கூத்தன் ஏன் அசிங்கத்தையே பாடி மகிழ்கிறுர் என்பது தான் எனக்குப் புரியவில்லை. மனநோயின் வேகம் கவிதையை விரசமாக்குகிறதோ? இத்தகைய கவிக்கூத்து நடத்திவரும் இந்த ஞானக்கூத்தனுக்கும் அவருடைய சக கூத்தர்களுக்கும் ஞான குருமார்கள் தமிழகத்தில் இல்லை என்பதும், அன்னிய தேசங்களிலிருக்கும் அவர்களுடைய 'அஞ்ஞாத வாசங்களும்' முடிந்துபோய் விட்டன என்பதும் ஆங்கில ஞானம் உடையவர்கள் அறிந்த ரகசியம்.

விடுகதைக் கவிதைகளை விட்டால் அடுத்து வருபவை பிரச்சாரக் கவிதைகள். இந்தப் பிரச்சாரக் கவிதைகளில் வீசும் அரசியல் வாடை கவிஞனின் சத்திய தரிசனத்தைப் பாழாக்கி விடுவதென்னவோ உண்மைதான். ஆனல் பிரச்சாரமில்லாத எந்தக் கலையாலும் பிரயோஜனமில்லை. கவிதை ஒரு அற்புதமான ஆயுதம். பாரதி, பாரதிதாசன், ஜீவா, பட்டுக்கோட்டை போன்ற எல்லோருமே இந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி வந்துள்ளனர். காந்திக் கதை பாடும் கொத்தமங்கலம் சுப்புகூட இதற்கு விதிவிலக்கல்ல. ஆனல் வெறும் நெருப்பு, அக்கினி, அடி, உடை என்று எழுதுவதால் மட்டும் பிரச்சார நோக்கம் நிறைவேறிவிடாது. ஓர் அரசியல் கட்சியின் கொள்கை அறிக்கை, தேர்தல் சுவரொட்டி, மேடை முழக்கம் இவற்றிலிருக்கும் பிரச்சாரத்திற்கும் ஒரு கவிதையிலிருக்கும் பிரச்சாரத்திற்குமுள்ளவேறுபாட்டைநம்கவிஞர்கள் உணரவேண்டும். கட்சியின் பிரச்சாரம், அக்கட்சியில் ஈடுபாடில்லாதவர்களை எரிச்சலடைய வைக்கும். கவிஞனின் பிரச்சாரமோ-எதிர்த்தரப்பினரைக் கூட ரசிக்கவைக்கும்; உணர வைக்கும்; ஒப்புக்கொள்ள வைக்கும். வெறும் சவடாலாக வெளிப்படாமல் வெறும் "Matter of fact" ஆகத் தோற்றமளிக்காமல் கலையாக வெளிப்படும்போதுதான் ஒரு கவிஞனின் பிரச்சாரத்திற்கு முழுமையான வெற்றி கிட்டும். ஏ. ஜி. நவபாரதி, பரணன், பிரபஞ்சகவி, அக்கினிபுத்திரன், குவேரா, தமிழவன் முதலியோர் இதை உணர வேண்டும்.

இன்று கண்ணை மூடிக்கொண்டு பழமையைத் தாக்கித் தகர்ப்பதும், புதுமையென்று தாம் நினைப்பதைப் போற்றிப் புகழ்வதும், புதுக்கவிதைகளின் பொது முழக்கங்களாகி வெடிக்கின்றன. இந்த அக்கினி வெடிகள் மேலெழும்போது கலையுணர்வுகளும் கவிதை அம்சங்களும் தலைதூக்க முடியாமல் போய்விடுகின்றன.

"மூடிய சமாதிக் குழிகளைக் கிளறிக்
கிளறி
புழுத்துப் போன பழைய பிணங்களின்
செல்லரித்த புகழைப் பாடிப் பாடி
வயிற்றை வளர்க்கும்
கற்றுச் சொல்லியே!...

(அக்கினிபுத்திரன்-தாமரை)

இதில் பழைய தமிழாசிரியரைச் சாடும் 'வெடிகுண்டு' வெடித்தாலும் "Constructive theme" இதில் நிறைவுறவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. கற்றுச்சொல்லியும் ஒரு மனிதனே. அவனும் இந்த நாட்டின் 'சுரண்டப்படும்' பாட்டாளி வர்க்கத்தின் ஒரு அங்கமே என்பதை அக்கினிபுத்திரன் மறந்துவிட்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. இவருடைய பல கவிதைகளில் 'அக்கினி'யும், 'நெருப்பு'ம் ஏராளமாக வந்து விழுகின்றன. நான்கு கவி

# அக்கினிக் கனவுகள் !

அக்கினிக் கனவுகள் விளைந்திடு மண்ணில்
ஆன்மப் பொழுது நான்!—மனம்
சிக்கிடும் ஆசையின் விரிப்புக் கிளையினில்
சிவப்பு விழுது நான்!

சத்திய தீபத்தின் சந்நிதி கூட்டிடும்
சரித்திர வெளிச்சம் நான்!—வளரும்
நித்தியப் பொய்மை நாட்டியக் கனவை
நிர்மூலம் செய்பவன் நான்!

கட்டிய கோட்டையில் காலங்கள் ஏற்றிடும்
கற்பூர தீபம் நான்!—வான
நெட்டைக் கனவுகள் வளர்த்திடு நெஞ்சினை
நித்தமும் பாடுபவன் நான்!

மந்திரச் சொல்லினில் மயக்கந் தெளித்திடும்
மதுர வார்த்தை நான்!—தேவ
இந்திர வில்லினில் வர்ணம் குழைத்திடும்
இன்னிசைப் பாடகன் நான்!

வித்தைகள் விளைந்திடு மானுட பூமியில்
வேர்விடும் சத்தியம் நான்!—ஈனச்
சொத்தைகள் அழிந்திட ஞானக் காட்டினில்
பூத்திடும் சொர்க்கம் நான்!

சிந்திடும் வியர்வைக் கடலினில் துள்ளும்
சிற்றலைப் படகு நான்!—இதயம்
நொந்திடும் ஏழையின் கண்ணீர்க் கதையை
எழுதிடும் கைவிரல் நான்!

தொட்டில் நிலவுகள் வளர்த்திடும்
அன்னையின்
தோழமைப் பாடல் நான்!—மன்மதக்
கட்டில் இரவுகள் படைத்திடும் கன்னியின்
காதல் தூதுவன் நான்!

மொட்டுகள் உறங்கிடும் பவளக் கொடியினில்
முத்துக்கள் பறிப்பவன் நான்!—ஞானச்
சிட்டுகள் பறந்திடும் வானில் கோடிச்
சிந்தனை வளர்ப்பவன் நான்!

ஞானக் கடலினில் முத்துக் குளித்திடும்
ஞாய ஊர்வலம் நான்!—அடி
வானப் பரப்பில் வண்ணந் தெளித்திடும்
வெளிச்சத் தோரணம் நான்!

ஊஞ்சல் கனவுகள் ஆடிக் களித்திடும்
ஊமை நிலவு நான்!—நெஞ்சில்
வாஞ்சைக் கனவுகள் வளர்த்திடும் மனிதனை
வாழ்த்தித் திரிபவன் நான்!

சத்திய அக்கினி நெருப்பு படைத்திடும்
சித்திரக் கனவு நான்!—ஞானம்
வித்திய பூமியில் பித்தன் வளர்த்திடும்
வித்தைக்கு அக்கினி நான்!

எண்ணச் சுமைகளை வளர்த்திடுந் தாயின்
இதயக் கனவு நான்!—ஈர
மண்ணில் வெற்றுக் கவலைகள் வடித்திடும்
மனிதனுக்(கு) அக்கினி நான்!

## கவிஞர் செல்வபாரதி

தைகளில் வரும் சொற்சேர்க்கைகளைப் புரட்டிப் பார்த்தாலே திரும்பத் திரும்ப ஒரே பாடலைப் படிப்பதுபோல இருக்கிறது. வெறும் திட்டல், வசவு, தாக்குதல் மட்டும் கவிதை ஆகிவிடாது. கவித்வம் இல்லாத தத்துவம் வெறும் கட்டுரையாகவே முடியும் என்பதையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

ஆனல் இதே கவிஞர் எழுதிய மற்றொரு கவிதை நல்ல பிரச்சாரக் கவிதையாக அமைந்துள்ளது. இருபத்தைந்தாண்டாகியும் நாட்டில் தீண்டாமை தாண்டவமாடுவதையும் ஆனல் தீண்டப்படாத சாதிப் பெண்ணின் இளம்பருவ மேனிமட்டும் எல்லாராலும் தீண்டப்படுவதையும்,

''சப்பும் நாக்குகளில்
துகிலுரியும் மனங்களில்
துடிக்கும் கரங்களில்
நான் நாளும் நாளும்
தீண்டப்படுகிறேன்......''

(அக்கினிபுத்திரன்—வண்ணங்கள்)

என்று கவிதைச்சிந்தனையோடு வெளியிடும்இவர்

அந்தக் கவிதைக்கு ஒரு பறைச்சியின் ''வெள்ளி விழாக் குறைச்சல்'' என்ற தலைப்பிட்டதில் 'குறைச்சல்' என்ற வார்த்தையானது—அந்தப் பெண்ணையும்' அவளுடைய உணர்வுகளையும் சிறப்பிப்பதாக இல்லை. கவிதையில் வார்த்தைகளை வெகு கவனமாகக் கையாள வேண்டும். ''மனிதனின் நாகரிகம் மொழி, மொழியின் நாகரிகம் கவிதை'' என்ற ரத்தினச்சுருக்கமாகச் சொல்லியிருக்கும் நா. பா.வின் வாசகங்களை நினைவிற் கொள்ள வேண்டும். அவரது இந்த வாசகங்களே ஓர் அழகிய கவிதையாக மலர்ந்திருப்பதையும் உணர வேண்டும். சொல்லாத வார்த்தைக்கு நீ எஜமான். சொல்லப்பட்ட வார்த்தை உனக்கு எஜமான்' என்ற ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. கவிதைக்கு வார்த்தைச் சிக்கனமும் நளினமும் லாவகமும் இன்றியமையாதன.

கவிஞர் சிற்பி தாமரையில் எழுதிய 'சிகரங்கள் பொடியாகும்' என்ற கவிதை இவ்வகையில் உயர்ந்து மேலோங்கி நிற்கும் கம்பீரமான படைப்பு. மரபுக் கவிஞனின் கவித்துவம் புதுக் கவிதையாகி கங்கைப் பிரவாகமாக வெளிப்பட்டு வானவில்லாக மிளிர்ந்து மின்னும் சிறந்த மனிதாபிமானப் பிரச்சாரக் கவிதை அது.

கை. திருநாவுக்கரசின் வானம்பாடி கவிதா மண்டலத்தால் பாராட்டப் பெற்றுப் பரிசு பெற்ற இந்திய சோவியத் நட்புறவுக் கவிதையான 'இங்குமொரு பூ மலரும்' என்ற கவிதை நாடோடிப் பாடலுக்குள்ள எழில் இசையோட்டம் மரபு வேர்ப்பிடித்து எல்லாமே தளிர்த்து நின்று பூத்துக் குலுங்குகின்றது. தாமரையில் வெளிவந்து வானம்பாடியில் மறுபிரசுரம் செய்யப்பட்ட பா. செயப்பிரகாசத்தின் 'மக்கள் கவிஞனுக்கு ஒருவிண்ணப்பம்' என்ற கவிதை இவ்வகையில் பிரச்சாரத்தைக் கலையாக்கிய மகத்துவம் மிக்க கவிதை.

விடிவெள்ளியின் பிரச்சாரக் கவிதைகளில் நளினம்மிக்க அழகுமிக்க தமிழ் விளையாடினாலும், சொற்சேர்க்கைகள் வானவில்லாகி நிமிர்ந்தாலும், எதிர்பார்த்த வெற்றியை இவை அவர்க்குப் பெற்றுத் தராததற்குக் காரணம்—கவிதைகளில் கருத்துத் தெளிவும் எளிமையும் இல்லாமையே! தண்ணீரால் வெறுக்கப்பட்ட தாகங்கள், வானத்தால் மறுதலிக்கப்பட்ட வைகறைகள்—பச்சைப் புல் நுனிப் பூகம்பங்கள், விரல்களின் வேள்விகள் என்றெல்லாம் மிக மிக அழகான வார்த்தைகளை நிறைய அமைத்தும், தெளிவு கிட்டாத காரணத்தால் இவரது கவிதைகள் நாம் எதிர்பார்த்த கவிஉணர்வைத் தரவில்லை. சொல்லும் பொருளும் இழையோடவிட்டு வார்த்தை ஜரிகைகளை தகுந்த இடத்தில் அமைப்பாராயின் விடிவெள்ளியின் கவிதை அற்புதமாக மலரும் என்பது என் கருத்து.

ஷேக்ஸ்பியர் காலத்தில் வாழ்ந்த பல கதாசிரியர்கள் உலகம் அழிவது போலவும், கடல்கள் கொந்தளிப்பதாகவும், பிரளயம் ஏற்படுவதாகவும் நிகழ்ச்சிகளை வைத்துக் கவிதைகளை அமைத்தனர். ஆனால் ஷேக்ஸ்பியர் தமது ஒத்தெல்லோ நாடகத்தில் ஒருசிறு கைகுட்டையை மட்டும் நழுவவிட்டார். அந்தக் கைக்குட்டையோ ஆங்கிலேயர் உள்ளங்களையெல்லாம் நெகிழ வைத்தது; அழ வைத்தது என்பதை நமது கவிஞர்கள் உணர வேண்டும்.

பிரச்சாரக் கவிதைகளில் வெற்றி பெற்றவர்களாக இன்குலாப், புவியரசு, கவிஜோதி ஆகிய மூவரைக் கூறலாம்.

இன்குலாப் கவிதைகளில் நூற்றுக்கு நூறு பிரச்சார வாடை வீசினாலும் சொல்லும் முறையில் கவிதைக்கே உரிய ஒரு நளினம் நடமாடுவதைப் பார்க்கலாம்.

ஏர்ப் பேனா பிடித்து வேர்வை மைதொட்டு
நிலத்தின் தாள்களில் நெல்லின் கவிதையை
வடிக்கும் கவிஞன் நான் ஓர் உழவன்
..........................
..........................

நான் காஷ்மீர்ப் பள்ளத் தாக்கில்
கனிமரங்களை வளர்த்துவிட்டு
சஹாராப் பாலைவனத்தில்
சஞ்சாரம் செய்கிறேன்!......

(இன்குலாப் கவிதைகள்)

பிர்லா மாளிகையில் வளர்ந்த
பெண்டு பிள்ளைகளோ—எங்கள்
குருதித் துளிகளினால்—வாசல்
கோலம் போடுகிறார்...

(வானம்பாடி)

போன்ற பல அழுத்தமான வரிகளைக் கொண்டு நெய்யப் பட்டவை, அவர் கவிதைகள். காலப் பந்தலில் அரும்பும் அவரது கண்ணீர் முத்துக்களின் ஒளிச் சிதறல்கள் பல இடங்களில் நம்மை பிரமிக்க வைக்கின்றன.

காந்தியின் படத்தை நாணயத்திலும், ரூபாய் நோட்டிலும் அச்சிட்டதைக் கண்டனம் செய்யும் கவிஞர் சேலம் தமிழ்நாடன் அந்தப்

பணம் மதுக்கடையிலும், லஞ்ச ஊழலிலும் வேசியின் வீட்டிலும் பயன்படுத்தப்படுவதைச் சுட்டிக் காட்டிவிட்டு,

''உங்கள் ஐம்பத்தாறு கோடிப்பேரைப் பார்க்கிலும்
அந்த ஒரு கோட்சே
எவ்வளவு நல்லவன்''...
(தமிழ்நாடன்-வானம்பாடி)

என்று காந்தியே கூறுவதுபோல எழுதும்போது கண்டனக் கணைகளைக்கூட கவிக்கணைகளாக வீசுகிறார்.

''பூமி நம்முடைய குருஷேத்திரம்'' என்று நேரடியாகப் போர்ப் பிரகடனம் செய்தாலும்-யுத்த களத்தில்கூடக் கவித்தேர் ஓட்ட முடியும் என்பதை மரபுக்கவிஞர் இளமுருகு காட்டுகிறார்.

★ பண்டைக் காலமாக பழனி சித்தர் வைத்தியசாலை உண்மையான முறையான நேர்மையான வைத்திய சேவை புரிகிறது !

# வாலிப-வயோதிக அன்பர்களே !

★ பழனி சித்தர் மருந்துகளே பாரில் உயர்ந்தது என்பது உலகம் அறிந்த உண்மை !

பிரபல பழனி

வைத்திய திலகம்



வைத்திய ராஜ்

Dr. S காளிமுத்து
RIMP. IND VVC. A.M.I H.

தங்களின் உடல் மிகவும் பலமில்லாமல் இளைத்து உடல் வலுவில்லாமல் குடும்ப வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் வயோதிகரைப் போல் களைப்பு மேலிட்டு வேலைகளைச் சரிவரச் செய்ய இயலாமை—இதனுல் கஷ்டப்படுகிறீர்களா? வாலிப வயதில் தெரிந்தும், தெரியாமலும் செய்கிற தவறுதல்களே, இப்போது உடல் கெட்டு பலகீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலகீனம், உடல்வலி, களைப்பு, தூக்கக்குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி, தாய் தந்தையரிடமும், மற்றவர்களிடமும் சொல்ல முடியாமல் மனவேதனையும், கஷ்டமும் அடைந்து, நிம்மதியில்லாமல் வாழ்கிறீர்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும் கவலைப்படவேண்டாம். இம்மாதிரியான வியாதியஸ்தர்கள் 76 வருட அனுபவம்பெற்ற நமது சாஸ்த்ரீய முறையான மிக உயர்தரம், உயர்தரம், முதல் தரம், 2-ந் தரம் எதுவாகிலும் சாப்பிட்டாலே எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் உடல்பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். எவ்விதமான பத்தியமும் இல்லை. ஆர்டரில் தேவைப்பட்ட மருந்தின் விலைகளை குறிப்பிட்டு எழுதவும். வி. பி. பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள். சென்னையிலும், பழனியிலும், கேம்புகளிலும் நேரில் பெறலாம். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. மருந்து உபயோகிக்கும்பொழுதே பலனைக் காணலாம். வி. பி. பி. செலவு இலவசம். வெறும் கடிதம் கவனிக்க இயலாது. சித்த வைத்திய மருந்துகளும், பழனி மருந்துகளும் நல்ல பலன் தரும் என்பதை அறியவும்.

ஒரு மாதம் சிகிச்சை மருந்துகள் :

**மிக உயர்தரம் ரூ. 90. உயர்தரம் ரூ. 42.**
**முதல்தரம் ரூ. 33. 2-ந் தரம் ரூ. 24.**

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி விலாசங்கள் கவனிக்கவும்.

கிளை : 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை. போன் ; 21448.

சென்னை கிளை ஆபீஸில் 1 முதல் 7 தேதி. மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்

GOVT REGD. T M NO. 204341 REGD 16443

வைத்தியதிலகம், வைத்தியராஜ் டாக்டர்

**எஸ். காளிமுத்து**

**பழனி சித்தர் வைத்தியசாலை (P) பழனி S. I.**

போன் : 316 (தியேட்டர் ஸ்ரீ ரங்கராஜா பக்கம்) தந்தி : சித்தர்

—Deepam, Annual Number 1973

## தீபம் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 10-00 |
| அரையாண்டு | ரூ. 5-00 |
| பர்மா, மலேயா, இலங்கை முதலிய வெளிநாடுகளுக்கு: | ரூ. 15-00 |

விபரங்களுக்கு:
'தீபம்' காரியாலயம்
த. பெ. எண்: 2766
6, நல்லதம்பி செட்டி தெரு.
மவுண்ட்ரோடு, சென்னை-600002.


கவிஜோதியின் பாடலோ·

''நாங்கள் சேற்றில்கால்
வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றில் கைவைக்கமுடியாது...

(தொடுவானம்)

என்று முழங்குகின்றது. பீரங்கி முழக்கம்கூடக் கவிதையாகவே பிறப்பெடுக்க முடியும் என்பதை இந்த வரிகள் நிரூபிக்கின்றன.

பிரச்சார நோக்கம் இல்லாவிட்டாலும் அரசியலை ஒரு பார்வையாளனுக நையாண்டி செய்யும் கவிதைகளும் தோன்றியுள்ளன. கல்வெட்டூர்க் கவிராயகேசரி, பாலா, (பாலசந்திரன்) இருவரும் இத்துறையில் குறிப்பிடத் தக்க கவிஞர்கள்.

'அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை
குடியானவன் வீட்டு அம்மியை
உடைத்து விட்டது.
உடைந்த அம்மியை எடுத்து
ஓரத்தில் போட்டுவிட்டு
கோழி முட்டையை
பலத்த போலீஸ் பாதுகாப்போடு
மியூஸியத்துக்குக் கொண்டு வந்தோம்...

(கல்வெட்டூர்க் கவிராயகேசரி -குடியரசு)

இதில் பழமொழி ஒன்று நிகழ்கால வரலாற்ருேடு இணைக்கப்பட்டு பக்குவமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. சிரிப்பையும் கோபத்தையும் சேர்த்து வரவழைக்கும் கவிதை இது.

அரசியல் தலைவர் ஒருவரின் பிறந்த நாளில் அனைவர்க்கும் இலவசமாகச் சாப்பாடு போடப்படும் என்று மைக் அறிவிக்கிறது. கூட்டம் முண்டியடித்துச்சண்டைபிடித்து இடம்பிடித்து உட்கார்ந்து சப்பணமிட்டுச் சாப்பிடத் தொடங்குகிறது. அப்போது ஒரு குரல் கேட்கிறது:

''ஒரு தலைவன் பிறக்காத
நாளும் ஒரு நாளா?
365 தலைவர் இல்லாத
நாடும் ஒரு நாடா?''

(பாலச்சந்திரன்—வானம்பாடி)

இந்தக் கவிதையில் அங்கதம் மிளிரக் கவிதையின் மெருகோடு ஒரு சமூக விமர்சனம் அமைகிறது. இதற்கு 'வறுமையே வெளியேறு' என்று தலைப்புக் கொடுத்திருப்பதின் மூலம்—தேசநிலையைச் சுட்டிக்காட்டி அதே கவிதையை அரசியல் விமர்சனமாக மாற்றும் அற்புதத்தை பாலா சாதித்துக் காட்டுகிருர்.

நான் ஒரு சோடாபாட்டில்
வயிற்று வலியை நான் தீர்ப்பதுண்டு
ஆனல் சிலவயிற் றெரிச்சல் காரர்கள்
என்னை எடுத்து
ஊர்வலம் போகும் ஊமை மக்கள்மீது
எறிந்தால்
நான் என்ன செய்வேன்?

(கல்வெட்டூர் கவிராய கேசரி—தீபம்)

இவை நாட்டு நடப்பைக் கூறும் ஏதோ அரசியல் ஏளனங்களாகச் சுவை தரலாமே யொழிய நிறைந்த பயனை இவற்ருல் விளைவித்து விட முடியாது.

கவிஞர் மு. மேத்தாவின் ''தேசப் பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி'' என்ற கவிதை ஆணித்தரமான சில கருத்துக்களை மிக மிகத் தெளிவாகச் சொல்கிறது. இதில் பிரசார நெடி எதுவும் இல்லை. ஆனல் சத்தியமாகப் பிரசாரம் எதுவும் இல்லையென்று சொல்ல முடியாது. வெட்டவெளிச்சமாக உண்மையைப் பளிச்சென்று சொல்லுவதில் மிகச் சாதாரணமான அலங்கார மின்னல் இல்லாத சின்ன வார்த்தைகளில் எப்படியோ இவர் நெஞ்சை நெகிழ வைத்து விடுகிருர். தத்துவமும் கவித்துவமும் சந்தித்துக்கொள்ளும்போது தரமான கவிதை—யாருடைய பிரவேசத்துக்காகவும் காத்திராமல் தனக்குத் தானே பிரசவம் பார்த்துக் கொள்கிறது.

தேசப் படத்திலுள்ள கோடுகள்
விடுதலைக்குப் போராடிய
வீரத் தியாகிகளின்
விலா எலும்புக்கூடுகள்
.....................

மயிலுக்குப் போர்வை தந்தவனின்
மரபிலே வந்தவர்கள்
எங்கள் மேனியில் கிடக்கும்
கந்தல் சட்டையையும்
கழற்றிக் கொண்டு போகிறார்கள்.
...........................

ராஜதானியில்
மலர்க்கிரீடம் சூட்டப்படுகிற போது
சேரிக் குழந்தைகளின்
சின்ன விழிச் செடியில்
உப்பு மலர்கள்
உதிர்ந்து விழுகின்றன!

(மு. மேத்தா—தீபம்)

என்பன போன்ற பல வரிகள் உண்மையில் புதுக்கவிதைக்கே மெருகூட்டி விளங்குகின்றன. மேத்தாவின் கவிதைகளும், கங்கைகொண்டான் கவிதைகளும் புதுக் கவிதைக்கே ஒரு இலக்கணம் வகுத்துத் தருவது போல நளினமாகவும், கச்சிதமாகவும், தெளிவாகவும் சொற்சிக்கனத்தோடும் இழையோடும் உவமைகளை எண்ணி எண்ணி மகிழும் வண்ணம் அமைந்திருக்கின்றன என்பதை நான் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

நளினமில்லாத பிரச்சார ஈட்டிகளை வைத்துக் கொண்டு சிலர் மிரட்டுவதைப் போலவே யுனிவர்சல் தீம் வைத்து எழுதுவதாகத் தங்களைக் கற்பனை செய்து கொண்டு எழுதுபவர்களும் உள்ளனர். இவர்களுக்குக் கவிதையும் தெரியாது. விஞ்ஞானமும் தெரியாது. விஞ்ஞானம் என்பது நூற்றுக்கு நூறு உண்மையான மாயாவாதமற்ற சங்கேதங்கள் சாம்யங்கள் மீது எழுப்பப்படுவது. அரூப் சிவராம் எழுதிய '$E=MC^2$' விஞ்ஞானமுமில்லை; கவிதையு


# TRICHY DISTILLERIES & CHEMICALS LTD.

17/4, Nungambakkam High Road,
2nd Floor. P. B. No. 3327,
MADRAS—600034.

★

Manufacturers of:

## INDUSTRIAL ALCOHOL
## &
## $CO^2$ GAS

★

Factory at:
**Senthannipuram, Tiruchirapalli-4.**

★

TELE | PHONE: 86001/3 Lines | GRAMS: 'FINESUGAR' | MADRAS.

—Deepam, Annual Number 1973

மில்லை. இதில் சிவன் வருகிறுன். நெஞ்சைத் தொட்டுக்காட்டுகிறுன். அசடு என்று மாணவர்கள் சிரிக்கின்றுர்கள். 'Speed-Velocity' இரண்டும் ஒன்றே எனக் கருதுமாறு ஒளியின் கதி என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. புதிய வார்த்தை ஜாலங்களை வைத்து மிகப் பெரிய உண்மையை, உலகளாவிய சிந்தனையை விளக்குவதுபோல நடிப்பது இக்கவிதை. மயக்க மூட்டும் வார்த்தை ஜாலங்களின் ஒலிநிற மாலை இந்தக் கவிதையில் மினுக்குவதைப் பார்க்கலாம்.

'கறுப்புக் குயில்கள்' என்ற கவிதையில் நீக்ரோ மக்களுக்காக நெஞ்சுருகும் கவிஞர் ரவீந்திரனின்,

'எங்கள் வேர்வைக் கேணிகளில் நனைந்த
காலணிச் சுவடுகள்
நிலவில் பதிகின்றன'...

(ரவீந்திரன்—சதங்கை)

என்ற வரிகள் நம் நினைவை உருக்குகின்றன.

சூயஸ் கால்வாய் பகுதியில் பொதுமக்கள் வாழும் பகுதியில் இஸ்ரேலிய விமானங்கள் குண்டுமழை பொழிந்ததால் வெளிப்புறச் சுவரில் மாட்டப்பட்ட சிலுவைக்கும் ஏசுவுக்கும் நேர்ந்த கதியைக் காட்டும் புகைப்படம் ஒன்றைப் பார்த்தபின் புவியரசு எழுதிய 'ஏலி ஏலி லாமா சபக் தானி' என்ற கவிதை யுனிவர்சல் தீம் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ள கவிதை.

ஏசுவே!
உன்னை இந்த கதிக்கு
உள்ளாக்கியவர் யார்!
அறுபட்டு
மின்சாரக் கம்பத்தில்
சிக்கித் துடிக்கும்
பட்டம் போல
உன்னை ஊசலாடச் செய்த
அந்தப் பாதகர்கள் யார்?...

என்ற வினவெழுப்பி அவர்களும் யூதர்கள் தானே. ரத்த சம்பந்தமுடையவர்களாயிற்றே என்று வருந்தி மனிதாபிமானத்தோடு பேசுகிறுர் கவிஞர்.

ஏசுவே!
தேவகுமாரா!
இறைவன்—உன் பரமபிதா
உன்னை ஏன் இப்படிக்
கை கழுவி விட்டான்?...

(புவியரசு—வானம்பாடி)

என்று கம்பீரமாக முடிக்கும் முடிவு நெஞ்சைத் தொடுவதாக அமைகிறது.

சேலம் கவிஞர் தமிழ்நாடன் அவரது சில கவிதைகளில் வெந்து கருகும் வியட்நாமியச் சோதரருக்கும் சோதரிமாருக்குமாய் வீரப்பண் பாடுகிறுர். வேதனையாழ் மீட்டுகிறுர். எகிப்து, இந்தியா, இஸ்ரேல், அமெரிக்கா, ரஷ்யா முதலிய பல நாடுகளைப் பற்றியும் 'அம்மா அம்மா' என்ற தலைப்பில் இவர் எழுதியுள்ள கவிதைகள் அருமையானவை.

யுனிவர்சல் தீம் எடுத்துக்கொண்டு சிறப்பான கவிதைகளை எழுதி வெற்றி பெற்றவர்களாக—புவியரசு, சேலம் தமிழ்நாடன் ஆகிய இருவரையும் கூறலாம்.

இனி, அண்மையில் 'புதுக்கவிதை'க்கு ஒரு பளபளப்பையும் பரபரப்பையும் உண்டாக்கிய இரண்டு கவிதைத் தொகுதிகளைப் பற்றிக் குறிப்பிடவேண்டும். 1. கவிஞர் மீராவின் கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள். 2. கவிஞர் நா. காமராசனின் கறுப்பு மலர்கள்.

மீரா-கற்பனை, உணர்ச்சி, கருத்து-இவற்றை முதலீடு செய்துவிட்டு வார்த்தைகளை வரவழைக்கிறுர். அழகான கவிதை இயல்பாகவே அமைந்துவிடுகிறது. நா. காமராசன் வெறும் வார்த்தைகளை மட்டும் (அதுவும் சொந்தமாக அல்ல) முதலீடு செய்து விட்டு கற்பனை, உணர்ச்சி கருத்து இவற்றையெல்லாம் வரவழைக்கப் பார்க்கிறுர். (இப்படி வெறும் வார்த்தைகளை மட்டும் கைவசம் வைத்துக் கொண்டு கவிதையைத் தேடிப் புறப்படுபவர்கள் அண்மைக்காலத்தில் அதிகரித்து வருகிறுர்கள்.

மீராவின் கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்—மிக அழகிய நளினமிக்கதொரு படைப்பு. ஆடை அணிமணிகளைக் கண்டபடி அள்ளிச் சுற்றிச் சுமந்துகொண்டு சேர்ந்து நிற்காமல் எளிமையையே ஒரு அலங்காரமாகக் கொண்டு இனிமை தருவது அது. கவிதையின் மிருதுத்தன்மை, புன்னகை, இவற்றோடு கோத்து வைத்த மல்லிகைச்சரம்.

அதற்கு நேர் எதிரிடையானது நா. காமராசனின் கறுப்பு மலர்கள். அழங்காரப் பூச்சுகளின் மினுமினுப்பு அதிகரிக்கும் போது செயற்கையாய் தெரிகிறது. மரபில் வந்து

தோற்றுப்போன 'சூரிய காந்தி'யைப் பற்றி யாரும் வாய்திறக்க முடியாதபடி இந்தக் கறுப்பு மலர்களுக்கு 'மௌஸ்' ஏற்பட்டதென்பது உண்மை. நா. காமராசனின் புதுக் கவிதைகளின் சிறப்புஅம்சமே—மயங்கவைக்கும் சில வார்த்தைப்பிரயோகங்கள்தான். அவற்றை மீண்டும் மீண்டும் திருப்பிப் போட்டு ஒரு 'ரிதம்' உண்டாக்குவது அவரது வெற்றி. ஆனால், அவரது வார்த்தைப் பிரயோகங்கள், கருத்துக்கள், பாணி இவற்றுக்காக அவரை நாம் பாராட்டத் தொடங்கினுல்—மலையாள, ஆங்கில, வடமொழி, உருது, பாரசீக இலக்கியம் தெரிந்தவர்கள் சண்டைக்கு வருவார்கள். முன்னெல்லாம் புரிகிற மாதிரி எழுதிய இவர், இப்போது முற்றிலும் புரியாதபடி எழுதத் தொடங்கியிருப்பதிலிருந்து—புலமை கூடியிருக்கிறதென்று அனுமானிக்க முடிகிறது.

''ஆடியிலே விதைத்தாலும்
அறுவடைகள் நடந்தாலும்
அரைவயிற்றுக் கஞ்சிக்கு
ஆலாய்ப் பறந்தபடி
தண்ணீர்க் குடம்சுமக்கும் என்
தாய்மாமன் கிராமம்''

(நா. காமராசன்—தீபம்)

என்றெல்லாம் அருமையாய் எழுதக்கூடிய அவர் எதற்காக இந்த இறக்குமதி வியாபாரத்தில் இடறி விழவேண்டும் என்பதைத்தான் அனுமானிக்க முடியவில்லை.

பெரும்பான்மையான புதுக்கவிஞர்களிடம் காணப்படும் பொதுவான குறைபாடுகள் இவை: புதுக்கவிதை உபாசகர்களில் பலர் பழமையெனும் நைந்துபோன கயிற்றில் ஊஞ்சலாடியபடி 'ராஜாராணி' வழிபாடு நடத்தும் பத்தாம் பசலிகள்! துஷ்யந்தன் சகுந்தலை பற்றிக் கீறல் விழுந்த கிராமபோன் ரிக்கார்டாகச் சுற்றி வருபவர்கள்; தற்காலச் செய்திகளைக் கூற விரும்பி, அதைத் தற்கால நிகழ்ச்சிகளோடு பொருத்திச் சொல்லக்கூடிய கவித்திறன் இன்மையால்—இந்திரன் பிடித்துத் தொங்கிய அகலிகையின் இடுப்பை இவர்களும் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பவர்கள்—வேறு சிலர் சமகால பிரக்ஞையோடே எழுதுவதாகச் சொல்லிக்கொண்டு, வெறும் வார்த்தைகளைச் சோளப் பொரியாக்கி இறைத்து உளறிக் கொட்டிக் கிளறி மூடுபவர்கள்; கவித்துவம் சிறிதுமின்றி குடுகுடுப்பைக்காரன் சட்டையை அணிந்து ஒட்டுப் பெட்டி முறையில் மகாகவிகளையும், மதுரகவிகளையும் உண்டாக்க முயலும் ''கிங் மேக்கர்கள்''. இவர்களுக்கெல்லாம் மேலாக சுலபமாக மலையாள-வடமொழி வார்த்தைகளின் மணிமந்திரசக்தியால் கவிதை 'மேஜிக்' நடத்தும் ஹிப்னுடிஸக் கலைஞர்கள், பாரசீகத்திலிருந்து பேரீச்சம்பழக் கொட்டைகளை மென்றபடி ஒட்டகத்தின்மீது உலா வந்து, கிண்டி குதிரைப் பந்தய மைதானத்திற்குள் நுழைந்து கவிராஜபவனி நடத்தக் கனுக் காண்பவர்கள்; ஆங்கிலச் சந்தையில் கைகுலுக்கி விட்டு வந்து மனித நாகரிகத்தின் ஆடைகளை அவிழ்த்துப் பார்க்கும் 'பால் உறவு' அதிமேதைகள்!

இத்தனை வகையருக்களையும் தாண்டிக் கொண்டு சென்றுல்தான் நல்ல புதுக்கவிதைகளை—தங்கச் சூரியனின் ஒளிரேகைகளை நாம் தரிசிக்க முடியும். அதுவும் விருப்பு வெறுப்புக்களின் துருவ முனைகளில் போய்த் 'தொத்தி'க் கொள்ளாதவர்களால் மட்டுமே முடியும்.

ஆமாம்...இத்தனை சிரமப்பட்டு இவ்வளவு இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகி அத்தகைய புதுக் கவிதைகளைத் தேடிப் பிடிக்க வேண்டிய அவசியம் என்ன? மரபின் மடியிலேயே படுத்துக் கொண்டு சுகமான நித்திரை செய்யலாமே—என்று நீங்கள் கேட்கலாம்.

உண்மைதான். மரபின் 'செல்ல அணைப்'புக்கு நம் சிந்தையைப் பறிகொடுத்துவிட்டு 'அக்கடா' என்று இருக்கலாம்தான். ஆனுல், சொற் புதிதாய் பொருள் புதிதாய் வளம் புதிதாய் ஜோதி மிக்க நவகவிதையாய்ப் படைத்தளிக்கச் சோதனை முயற்சிகளில் ஈடுபடுபவர்களை நாம் கேலி செய்ய முடியாது.

'புதுக் கவிதைக்கே உரிய சிந்தனைகளை மரபில் வெளியிட முடியாதா?' என்று கேட்கலாம். முடியலாம், அந்தச் சிந்தனையின் கனத்தையும் புதுமையையும் பொருத்து முடியாமலும் போகலாம். இருந்தாலும் இந்தத் துறையில் ஈடுபட்டவர்களும் வெற்றி பெற்றவர்களும் தமிழில் இல்லாமலில்லை.

பாரதியால் தொடக்கி வைக்கப்பட்டு, புதுமைப்பித்தன், கு. ப. ரா., ந. பிச்சமூர்த்தி சி. சு. செல்லப்பா ஆகியோரால் தொடரப்பட்ட புதுக் கவிதையின் இன்றைய நிலையை இப்படிப் பிரித்துத் தெரிந்து கொண்டால் வசதியாக இருக்கும்.

1. புதுக் கவிதைக்கே உரிய சிந்தனைகளை முதன் முதலாகவும், முழுமையாகவும் மரபில் சொல்லி வெற்றி பெற்றவர் கவிஞர் அப்துல் ரகுமான். அந்த வெற்றியை அடுத்துப் பெற்றவர்கள் மு. மேத்தா, இன்குலாப் ஆகியோர்.

## விலைவாசி

விற்போரின்—முதலிரவு
வாங்குவோரின்—வயிற்றெரிச்சல்
ஆள்வோரின்—அனுதைகள்
எதிர்த்தரப்பின்—ஏகவாரிகள்

—முருகன்

'கதம்பம்'
தொகுப்பிலிருந்து

2. முழுக்கப் புதுக் கவிதையாகவும் இல்லாமல் முழுமையாக மரபிலும் அமையாமல் இரண்டுக்குமிடையில் ஒரு பாலம் போலச் சோதனை செய்து பார்த்தவர்கள் சிற்பி, மணி வண்ணன், பரந்தாமன்.

3. முற்றிலும் புதுக் கவிதைக்கே உரியலாகவங்களோடு தத்தமக்கென்று ஒரு தனி பாணி வகுத்துக் கொண்டு, இன்றைய புதுக் கவிதைகளுக்கு மத்தியில் பயனுள்ள வகையில் வெற்றிகரமாக எழுதி வருபவர்கள்—புவியரசு, மீரா, நா. காமராசன், மு. மேத்தா, இன்குலாப், கங்கைகொண்டான் ஆகியோர்.

மேற்கண்ட பிரிவுகளில் எனக்கும் என் கவிதைகளுக்கும் எந்தப்பிரிவில் அல்லது பிரிவுகளில் இடம் உண்டு அல்லது இல்லை என்பதை வாசகர்களும் விமர்சகர்களும் தீர்மானிக்க வேண்டும். மேற்கண்ட கவிஞர்களில் யார் யாருக்கு 'நிரந்தரம்' உண்டு அல்லது இல்லை என்பதைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

''சீர், அடி — இப்படி மாறினுல்கூடச் சிதைந்துபோய்விடக் கூடிய—ஒன்றிரண்டு வார்த்தைகளால் நின்ருல் மட்டுமே பரிமளிக்கக்கூடிய—இங்கிதங்களும் நளினங்களும் எல்லா மொழிகளிலும் இருக்கத்தான் செய்கின்றன. இதய தாபங்களோடு அவற்றை வெளிப்படுத்த தடையாய் இருக்கக் கூடிய எந்த யாப்பின் மீதும் ஓர் உண்மையான கவிஞன் கோபம் கொள்ளாமலிருக்க முடியாது'' என்று என் அன்புக்குரிய கவிஞரொருவர் அடிக்கடி கூறுவார்.

வழி வழியாகப் பாடப்பட்டு வந்த முறையில்—மரபுக்கென்று ஒரு குறிப்பிட்ட எல்லை இயல்பாகவே அமைந்துவிட்டது. அதைத் தாண்டிச் சென்று இன்றைய மனித குலத்தின் புதிய பிரச்னைகளைச் சந்திக்கவும், அந்த எல்லையை மீறிச்சென்று வேகமாகச் சிந்திக்கவும் அம்மரபு தன்னையறியாமலே தடைக்கல்லாய் நிற்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. மானுடத்தைப் பாடும் புதிய யுகம் பிறந்திருக்கும் போது—மானுடத்தைப் பாட எளிய புதிய கவிதை பிறப்பெடுப்பது—ஒரு வசதிதானே! உள்ளடக்கம் மாறும்போது உருவத்தில் சில மாறுதல்கள் தவிர்க்க முடியாதவையாகின்றன. மலையாள வங்கமொழிகளின் வளர்ச்சியைக் கவனிக்கும்போது—தமிழின் பின்தங்கலுக்கான காரணம் ஆலமரம்போல் விழுதூன்றிய இந்த மரபுதானே என்று ஐயுற நேரிடுகிறது. மரபை மதித்துப் போற்றக்கூடியவர்களே அதை மீறியும் சோதனை செய்து பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

இறுதியாக—மரபு மட்டும்தான் கவிதையென்ருல்—இலக்கணம் தெரிந்த தமிழாசிரியர்கள் ஒவ்வொருவருமே மகாகவிகள்தான். வெறும் புதிதுமட்டும்தான் கவிதையென்ருல்—ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலுமாகப் புதிது புதிதாக செய்திகளைத் தாங்கிக் கொண்டு வெளிவரும் தினசரிகள் ஒவ்வொன்றுமே கவிதைத் தொகுதிகள்தான்.

மரபுக் கவிதையா, புதுக்கவிதையா என்று கவலைப்படுவதைவிட அது கவிதையா இல்லையா என்று கவனிப்பதிலும் கணிப்பதிலும் கருத்துச் செலுத்துவதே நல்லதென்றுதோன்றுகிறது. ஆரம்பத்தில் 'புதுக்காசு' என்று வந்து, தற்போது வெறுமனே 'காசு' என்று வழங்கும் நாணயத்தோடு அன்ருடம் புழங்கி வருகிறோம். அதேமாதிரி இப்போது வருகிற 'புதுக்கவிதை'யே நாளைய 'கவிதை'யாக மாறிவிடலாம். அதற்கென்று தனி இலக்கணம்கூட அமையலாம். அத்தகைய இலக்கணம் அமைக்கும் கவிதைகளை உருவாக்கவல்ல கவிஞர்களும் இங்கு இல்லாமலில்லை.

'காசுக்'கும் 'கவிதைக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. 'புதுக்காசு' வந்தபிறகு—பழைய காசுகளெல்லாம் 'செல்லாக்காசா'கி விட்டன. அதுபோல—புதுக்கவிதை வந்தபிறகு பழைய மரபுக் கவிதைகள் செல்லாமல் போய் விடப் போவதில்லை. புதியகவிதைகள் எல்லாமே செல்லுபடியாகப் போவதும் இல்லை.

காதல், வீரம், கடவுள், மொழி—இவற்றைச் சுற்றிச் சுற்றியே கனவு கண்டு கொண்டிருந்த கவிஞர்கள் இன்றைக்கு—புது யுகத்தின் சத்திய தரிசனத்தைத் தேடி பூபாளமிசைப்பதையும், மனிதனின் பிரச்னைகளைத் தொட்டுக் காட்டி, மானுடம் பாடும் வானம்பாடிகளாய் மாறிச்சிறகடிக்கும் மகத்துவத்தையும் வரவேற்காமலிருக்க முடியாது.

இந்தக் கட்டுரையை—இப்படி முடிப்பது பொருத்தமாக இருக்கும்:

''வலிமை யுள்ளதெல்லாம்
போராட வரட்டும்
தகுதி யுள்ளது வெற்றி
பெறட்டும்!''

★




# தகழியின் வாழ்க்கை நினைவுகள்

இளம்பாரதி

## 4. ஒரு விளக்கைச் சுற்றி சில ஆத்மாக்கள்

மாலை நேரங்களில் அப்பா சம்மணமிட்டு நேராக, விரைப்பாக உட்கார்ந்திருப்பார். கைகள் இரண்டும் கால் முட்டுகளில் இணைந்திருக்கும். கண்கள் சற்றே மூடியிருக்கும். யோகாப்பியாசத்தில் ஏதோ ஒருவகை ஆசனம் அது என்று பின்னர்தான் எனக்குத் தெரிய வந்தது. அவ்வாறு சிறிது நேரம் ஆடாமல் அசையாமல் இருந்த பின் அப்பா கண் திறப்பார். அப்போது எதிரில் நான் இருந்தாக வேண்டும்; அக்காவும் என்னுடன் இருந்தாக வேண்டும்.

ஏற்றி வைக்கப்பட்ட நிலைவிளக்கின் முன்பாகச் சம்மணமிட்டு உட்கார்ந்து நான் ராம ஜபம் செய்ய வேண்டும்; 'ராம ராம ராம ராம'—இவ்வாறாக இடைவெளி இல்லாமல் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்; தவிர்க்க முடியாது. அக்கா ஏதாவது துதி பாடிக் கொண்டிருப்பாள். நாங்கள் இருவரும் பயந்து பயந்துதான் வழிபாடு நடத்தினோம் என்று எனக்கு நினைவு. அம்மாவுக்குக் கொஞ்சம் சுதந்திரம் உண்டு. அவள் எந்த இடத்திலிருந்தும் துதி பாடலாம். முற்றத்தில் அங்குமிங்கும் நடந்துகொண்டேகூட 'நாராயணா, நாராயணா' என்று சொல்லுவாள். அப்பாவுக்கு அது சற்றும் பிடிக்காது. ராமஜபம் கழிந்த பின்பு அதைப் பற்றி வீட்டில் அப்பாவும் அம்மாவும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வார்கள். அசிரத்தையான அந்தப் பிரார்த்தனையினால் எந்தப் பயனுமில்லை என்பது அப்பாவின் அபிப்பிராயம். மனத்தில் எதையோ நினைத்துக் கொண்டு பெயருக்கு மட்டும் நாமம் ஜபிப்பது எதற்காகவென்று அப்பா கேட்பார். அம்மா விட்டுக் கொடுப்பதில்லை. அந்தச் சண்டை ஒரு சமயம் நிகழ்ந்தபோது அப்பா சொன்னார்:

''அந்த வயிற்றில் இருந்ததன் பலன் இந்தப் பயலுக்குக் கிடைக்கப்போவதில்லை. நாமம் ஜபிக்காமல் இருந்தால் அவன் தூங்கிவிடுவான்.''

அது உண்மையாகத்தான் இருந்தது. வழிபாடு செய்யாதிருந்தால் நான் தூங்கத் தொடங்கிவிடுவேன். கண்ணில் உறக்கம் எப்படித்தான் குடியேறுமோ, தெரியாது! அம்மாவின் வயிற்றில் பிறந்ததனால்தான் இவ்வாறு நிகழ்கிறதாவென்று அம்மாவிடம் கேட்க நினைப்பதுண்டு. அப்பா தொடர்ந்து தனக்குள் மருகிச் சொல்வார்:

''அட கஷ்டமே, இவனுடைய ஆத்மாவே இப்படிப் பாபம் செய்ததாகிவிட்டதே.''

பிரார்த்தனை செய்யும்போது யாருக்கு உறக்கம் வருகிறதோ அவர்கள் பாவிகள் என்பது அப்பாவின் நம்பிக்கை. எனவே நாமம் சொல்லும்போது தூங்க நேர்ந்ததனால் அப்பாவிடம் எத்தனையோ முறை உதை வாங்கியிருக்கிறேன். அந்தி நேரப் பொழுது வராமலே இருக்கக் கூடாதாவென்றுகூட நான் ஆசைப்பட்டதுண்டு.

இரவு உணவுக்குப் பின்னரான நிகழ்ச்சி மிகவும் சுவையானதாகும். அப்பா ராமாயணமோ அல்லது பாரதமோ அல்லது பாகவதமோ ஏதேனும் ஒன்றை வாசிப்பார். தெக்கன் கொச்சேரி பெரியம்மா, அரீப்புறத்துக் களத்து உண்ணூலியம்மாள் ஆகியவர்களும் அங்கு வருவதுண்டு. அப்பா வாசித்து, உரிய தான பொருள் சொல்வார். எனக்கு மிகவும் விருப்பமானது அவர் பாகவதம் சொல்வது தான். அதற்குக் காரணம் பாகவதத்தில் நல்ல கதைகள் நிறைய இருக்கின்றன என்பது தான் ஆகும். மனிதனின் உற்பத்தி முதல் எல்லாமே அதில் உண்டு. நான் உறங்காமல் கேட்டுக் கொண்டிருப்பேன். வாசித்துக் கொண்டிருக்கும்போது அந்தப் பெரியம்மாக்களில் யாராவது நடுவே எழுந்து போவார்கள். அப்போது அப்பா ஒரு முன்னறிவிப்புக் கொடுப்பார்:

''புராணம் வாசிக்கும்போது இடையில் எழுந்து போகிறவர்களுக்கு என்ன நடக்கும் தெரியுமா? அடுத்த ஜன்மத்தில் மலைப்பாம்பாகப் பிறப்பார்கள்!''

மலைப்பாம்பு! நீண்டு, தடித்து, அசைய முடியாது கிடக்கும் அந்தச் சோம்பேறிப் பிராணியாக மாற யாருக்குத்தான் விருப்பம் இருக்கும்? அரீப்புறத்துக் களத்துப் பெரியம்மா சலித்துக் கொள்வாள்:

''என்னப்பனே, எனக்கு அது மாதிரி நடந்திறக் கூடாதப்பனே!''

செய்யக் கூடாததைச் செய்தால் காட்டில் கல்லாக மாறியவர்களையும், மலைப்பாம்பாக மாறியவர்களையும், நூறு ஆண்டுகளாக சொந்த சரீரங்களையே தின்ன நேர்ந்தவர்களையும் பற்றிய கதைகளைக் கேட்டுக் கொண்டிருப்பேன். குற்றம் புரிந்தால் அதன் பலன் யாரையும் விடுவதில்லை; தெய்வம்கூட இந்த விஷயத்தில் தப்ப முடியாது; அப்படியிருக்க, சாதாரணமானவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

தெக்கன் கொச்சேரி பெரியம்மா தன்னுடைய வாழ்க்கையைக் கடைத்தேற்றிக் கொள்ளத்தான் புராணம் கேட்கும் வழக்கத்தைக் கடைப்பிடித்தாள். அவளுடைய சாமானிய அறிவிலிருந்து ஒரு கேள்வி வெடிகுண்டு போல் வெளிப்பட்டது.

''மலைப்பாம்பாகப் பிறக்கும் அந்தச் சமயங்களில் நாம் எந்த நாமத்தை ஜபிப்பது?''

''அது அடுத்த ஜன்மத்தில் தீர்மானிக்க வேண்டிய விஷயம். போன ஜன்மத்தில் செய்த பாபத்தைத்தான் நாம் இந்த ஜன்மத்தில் அனுபவிக்கிறோம்.''

அந்தப் பெரியம்மா தகழியில் தேவையான சொத்தில்லாத ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். தாய் வழியில் அவருக்கு ஏழெட்டுப் பேரே உறவினர். அந்தஸ்து எதுவும் இல்லை. காரணவன்மார் மூன்று பேர் உண்டு. அவர்கள் தகழியிலும் தலவடியிலும் இருந்த இரண்டு பெரிய குடும்பங்களில் பல வகையான வேலைகளைச் செய்து வந்தார்கள். எட்டோ பத்தோ 'பர' நிலம் குடும்பச் சொத்தாக இருந்தது. குடியிருந்த இடம் தகழி கோவிலைச் சேர்ந்ததாக இருந்தது. தாய் மாமன்மார்களின் மாதச் சம்பளமாகிய ஐந்து-ஆறு பர நெல்லைக் கொண்டுதான் குடும்பம் நடந்து கொண்டிருந்தது. பெரியம்மாவுக்கு இரண்டு குழந்தைகள். வெளியூரிலிருந்த அவளுடைய கணவர் அடிக்கடி வந்து போவார். அவரும் அதிக வசதி படைத்தவரல்ல. உடுக்க, எடுக்க அவர் எதுவும் தருவதில்லை. பின்னே எதற்காக கணவன் உறவு முறை என்று கேட்டால்—தாம்பத்திய உறவுக்காகத்தான் என்று பளிச்சென்று பதில் வரும். பெரியம்மா தீவிரமாகச் சிந்தித்துப் புலம்புவதுண்டு.

''நான் என்ன பாவம் செய்தேன், இந்த ஜன்மத்தில் இப்படிக் கஷ்டப்பட?''

அந்தப் பெரியம்மா மிகவும் அதிகமாகத்தான் கஷ்டப்பட்டாள். அந்த அளவு துன்பப்படும் மற்றொருவர் அக்கம்பக்கத்தில் யாரும் இல்லை. அவளுக்கிருந்த இரண்டு குழந்தைகளில் மூத்தது ஆண். அவன் எங்கேயோ போய்விட்டான்; திரும்பியே வரவில்லை; எங்கே போனானென்றும் தகவல் கிடைக்கவே இல்லை. இளையது பெண். அந்தச் சமயத்தில் அவள் கன்னிப் பருவத்திலிருந்தாள்.

அவ்வாறு முன் ஜன்மப் பாவங்களைக் குறித்து தெக்கன் கொச்சேரி பெரியம்மா எப்பொழுதும் மருகிக் கொண்டிருப்பாள் என்றாலும் அவளுக்கு மனத் திருப்தி உண்டு.

''அடுத்த ஜன்மத்தில் எனக்கு நல்லது கிடைக்கும், நிச்சயமாக. நான் இந்த ஜன்மத்தில் எந்தப் பாவமும் செய்யவில்லை.''

இற்றைக் கணக்கில் அவள் இறந்து பல ஆண்டுகளாகிவிட்டன. அந்த வாழ்க்கை முடிந்துவிட்டது. கணக்கெடுத்தால் பாபத்தின் அறிகுறி எதுவும் இல்லை. அந்த அளவு எச்சரிக்கையாக அவள் வாழ்ந்தாள். இன்று அவளை மறந்தாயிற்று. ஆனால் அவள் இவ்வாறு மறக்கப்படத் தக்கவளல்ல. அவள் மூலம் யாருக்கும் எந்தத் தீங்கும் நடந்ததில்லை.

அவளுடைய நம்பிக்கையைக் கொண்டு பார்த்தால், இன்று அவள் இங்கிலாந்து, எத்தியோப்பியா, ஆப்கானிஸ்தானம் முதலியன போன்ற ராஜாக்கள் உள்ள ராஜகுடும்பங்களிலோ அல்லது அமெரிக்காவில் உள்ள கோடீஸ்வரக் குடும்பத்திலோ பிறந்திருக்க வேண்டும். அவள் மிக அதிக அளவில் நாமம் ஜபித்தவள். நிச்சயமாக அடுத்துவரும் ஜன்மத்திற்காக வேண்டி அவள் நல்ல வாழ்க்கை வாழ்ந்து காட்டினுள்.

அரீப்புறத்துக் களத்துப் பெரியம்மா அப்படியல்ல. அவள் பாபத்தைக் குறித்தோ அல்லது அடுத்த ஜன்மத்தைக் குறித்தோ எதுவும் சிந்தித்ததில்லே. கதை கேட்பதற்காக மட்டுமே அவள் வந்தாள். கதை வழியான நல்லுரைகள் எதுவும் அவளுக்குத் தேவைப்படவில்லே. அவளுடைய வாழ்க்கைத் தரம் தெக்கன் கொச்சேரிப் பெரியம்மாவின் வாழ்க்கைத் தரத்துடன் ஒப்பிடும்போது அதிக வேறுபாடு கிடையாது. ஆனுலும் தகழியிலிருந்த நாயர்களில் மிகவும் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த குடும்பத்தில் ஒருத்தியாக அவள் இருந்தாள். அவள் படைத்த சோற்றை யாரும் உண்ணலாம்; கேவுல நோக்கு கிடையாது. அவ்வாறு உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருந்ததனுல் அவளுக்கு அந்தஸ்து இருந்தது. ஆனுல் குடும்ப வருமானம் மோசமாயிருந்தது. காரணவன்மார் கொடுக்கும் இரண்டு 'பர' நெல்லேக் கொண்டுதான் ஒருமாத வாழ்க்கையை நடத்தியாக வேண்டும். அவளுக்கு ஒரு மகன் இருந்தான். பரமேஸ்வரன் என்று பெயர். அவன் என் விளேயாட்டுத் தோழனுக இருந்தான். அவனுடைய அப்பாவின் பெயர் களத்தில் கிட்டும்மாவன். ஒரு மகனும் மனேவியும் கொண்டிருந்த கிட்டும்மாவனுக்குக் கவலே எதுவும் இல்லே. அப்பாவை அயலானுக நினேக்க வேண்டிய அவலநிலே பரமேஸ்வரனுக்கு இல்லே. ஓடையில் குளிக்கும்போதோ அல்லது பிற தோழர்களுடன் வம்பிடும்போதோ கிட்டும்மாவன் அவ்வழியே கடந்து செல்ல நேர்ந்தால் அவன் அதைப் பொருட்படுத்துவதுகூட இல்லே; கூச்சப்படுவதும் இல்லே. கிட்டும்மாவனும் இதைப்பற்றி அக்கறைப்பட்டதில்லே. கிட்டும்மாவன் முறைப்படி புடைவை எடுத்துக் கொடுத்து, திருமணம் செய்து அவ்வழி பிறந்தவனல்லவா பரமேஸ்வரன்—அதற்குரிய மரியாதை உண்டல்லவா?

அந்தத் தந்தை தனக்குரிய எல்லாச்செல்வமாகவும் கருதி பொன்னேப்போல் மகனே வளர்த்து வந்தார். ஆனுல் விதி அந்த ஏக புத்திரனே அபகரித்துக் கொண்டது. அந்த தினத்தை நான் அடிக்கடி நினேத்துப் பார்ப்பதுண்டு. ஒன்றை மகனேப் பறிகொடுத்த தாயின் துக்கத்தை நான் முதல் முறையாக அப்போது தான் கண்டேன். அன்று அவள் அழுது புலம்பியது இன்றும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. தாய் மகனேக் கூப்பிட்டுக் குரல் கொடுத்தாள். அந்தக் குரலின் தீரத்தை அறிந்தபோது, நிச்சயமாக அந்தக் குரலுக்குச் செவிமடுத்து மகன் பதில் குரல் கொடுப்பான் என்று எதிர்பார்த்தேன். கூப்பிட்ட குரலுக்கு பரமேஸ்வரன் ஏன் பதில் கொடுக்கவில்லே என்று எனக்குப் புரிந்தது. அந்தக் கூப்பிடு குரலுக்குப் பதில் கிடைக்கும் என்றுதான் இன்றும் எனக்குத் தோன்றுகிறது.

புராணங்களில் கூறப்படும் அரசர்கள், மகரிஷிகள் ஆகியோரின் பாரம்பரியவரிசையை அப்பா நன்கு அறிந்திருந்தார். அதைப் போலவே யுகாந்திரங்கள், மனுந்திரங்கள் ஆகியவை குறித்தும் விளக்கமாக விவரிப்பார். அக்ஷௌஹிணி போன்ற பழைய முறை சேனே அணிவகுப்பைப் பற்றியெல்லாம் அப்பா கூறுவார்.

## எங்கள் வீட்டு பீரோ!

எங்கள் வீட்டில் ஒரு பீரோ
ஒரு காலத்தில் வாங்கியது
வீட்டுக் குள்ளே வந்தவழி
எவ்வாறென்றும் தெரியாது.

பட்டுத் துணிகள் புத்தகங்கள்
உள்ளே வைத்துப் பூட்டியது
உயரம் நல்ல ஆளுயரம்
கனத்தைப் பார்த்தால் ஆனேக்கனம்.

வீட்டுக்குள்ளே இரண்டிடங்கள்
கூடம் மற்றும் தாழ்வாரம்
இரண்டில் ஒன்றை மாற்றிடமாய்
வைத்துக் கொள்ளும் பழம்பீரோ.

குப்பை அகற்றும் பொருட்டாக
ஆளே அழைத்துப் பேர்த்தெடுத்து
இன்னேரிடமாய் முற்றத்தில்
கொண்டு வைத்தால் அங்கிருந்து
வானேக் கொஞ்சம் பார்க்கிறது
காற்றில் கொஞ்சம் உணர்கிறது.

எடுக்கப் போனுல் கால்விரல்கள்
ரத்தம் கக்கக் கடிக்கிறது.

—ஞானக்கூத்தன்

புராணங்கள் மறைமுகமாக எடுத்துரைக்கும் தர்ம நீதிகளை முறை பிசகாமல் தீவிரமாக வாழ்க்கையில் பின்பற்ற வேண்டுமென்று அப்பா கட்டாயப்படுத்துவார். அவ்வாறே புண்ணிய, பாபங்களைக் குறித்தும் தனிப்பட்ட கருத்துகளுண்டு. பிராமண பக்தி, ராஜபக்தி, கடவுள் பக்தி—இவை எப்போதும் கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் என்பதே அவருடைய கருத்து.

''இப்போதைய பிராமணர்கள் தங்களுக்கு உரித்தான கடமைகளைச் செய்வதில்லை. அவர்கள் பாபிகளாகி விட்டார்கள். குளிப்பதில்லை, ஜபிப்பதில்லை—அதனுலேயே அழிந்தார்கள். ஆனுலும் அவர்களுக்கு பிராமணர்களாகப் பிறக்கும் பாக்கியம் கிட்டியிருக்கிறதல்லவா? அதற்காகத்தான் அவர்களுக்கு நாம் மதிப்புத் தருகிறோம்''—அப்பா இவ்வாறு அடிக்கடி சொல்வதுண்டு.

மங்கொம்பிலுள்ள ஏதோ ஒரு பட்டரின் பெயரில் விவசாயம் நடத்தி வந்த குஞ்யுண்டம்மாவன் ஒரு நாள் ஒரு கடிதத்துடன் வீட்டிற்கு வந்தார். நெடுங்காலமாக குஞ்யுண்டம்மாவன் கொடுக்கல் வாங்கல் நடத்தி வந்திருக்கிறுர். அதாவது ஒவ்வோர் ஆண்டும் கடன் வாங்கும் நெல்லையும் வட்டியுடன் மேட மாதத்தில் திருப்பிக் கொடுப்பார். மங்கொம்பில் எந்தப் பட்டரும் தான் பெற்றுக்கொள்ளும் நெல்லுக்கு ரசீது கொடுப்பதில்லை. ஆனுல் கொடுக்கும் நெல்லுக்கு முறைப்படி சத்தியப் பிரமாணம் வாங்கிக்கொள்ளலாம். குஞ்யுண்டம்மாவனின் கூற்றுப்படி பட்டரிடம் வாங்கிய நெல் முழுவதையும் திருப்பிக் கொடுத்தாயிற்று; அந்தப் பட்டர் கள்ளத்தனம் செய்கிறுர் என்பது அவரது முறையீடு.

அப்பா தீர்மானமாகக் கூறினுர்:

''பிராமணன் வைசியத் தொழில் செய்யக் கூடாது. அது அதர்மம். அந்தச் சாமியை விசாரிக்கிறேன்; உன்னுடைய முதலைத் திருப்பித் தரும்படிக் கேட்கிறேன். பிராமணனுடைய கோபம் பெரிய சாபமாக மாறும்.''

புராணக்கதை ஒன்றையும் இதற்கு அனுசரணையாகச் சொல்லிவிட்டு அப்பா தொடர்ந்தார். ''அதனுலே நீ நேரில் சாமியைக் கண்டு பேசிகணக்கு விவரம் கொடுக்குமாறு பணிந்து கேட்க வேண்டும். இல்லாவிட்டால் பிராமண சாபம் கிட்டும்.''

ஏதேதோ பேசிய பின்பும் வெள்ளார்க் கோணம் வயலைச் சேர்ந்த குஞ்யுண்டம்மாவினுடைய நெல் முழுதும் நேரடியாக அந்தப் பட்டருக்குச் சொந்தமாயிற்று. தகழியிலிருந்த பெரிய குடும்பங்களின் பொருட்களெல்லாம் இந்த முறையில்தான் பிராமண சாபத்தின் பெயரால் மங்கொம்பில் பட்டர்களின் உடைமையாயின என்று தோன்றுகிறது.

ஆனுல் ஒன்றைக் குறிப்பிட்டுக் கூற வேண்டும். அப்பா மங்கொம்பில் சாமியார் எவரிடத்தும் கடன்காரராக இருந்ததில்லை. எந்த இடத்திலும் அப்பா தகராறு வைத்துக் கொள்வதில்லை.

மலபாரில் நம்பூதிரி இனத்தவரை மாப்பிளமார் இனத்தவர்கள் தோலுரிய அடித்து நொறுக்குகிறுர்கள் என்ற செய்தி தகழியில் பரவியது. வீட்டில் அப்பாவும் அவருடைய நண்பர்களும் கூடி அந்த விவரம் பற்றிச் சர்ச்சை செய்ததைக் கேட்டிருக்கிறேன். அகப்பட்ட ஆட்களை மாப்பிளமார் பிடித்துக் கொண்டு போனுர்கள்; முதிர்ந்த நெல்லையும் மற்றும் விளைந்த நிலங்களையும் சுட்டெரித்தார்கள். நம்பூதிரிகளின் தலைகளில் (மகமதிய இனத்தைச் சுட்டும்) தொப்பிகளைப் பொருத்தினுர்கள். அப்பாவின் கருத்து கலியுகம் முடிந்துவிட்டது என்பதாகும். ஒரு புதிய யுகம் பிறக்கப் போகிறதாம்!

இதனிடையில் ஒரு வயோதிகப் பிராமணர் வீட்டிற்கு வந்தார். மலபாரிலிருந்து அவர் வந்திருந்தார். எப்படி அந்த ஒதுக்குப் புறமான தகழியை நோக்கி வந்தார் என்று மட்டும் தெரியவில்லை. ஒரு வேளை அப்பாவின் இளைய தம்பியான குஞ்சு குருப் மூலமாக விவரம் தெரிந்து வந்தாரோ என்னவோ? (இந்த குஞ்சு குருப்தான் பின்னர் பத்மஸ்ரீ பட்டம் பெற்றவர்) அந்நாட்களில் குஞ்சு குருப் மலபாரில்தான் இருந்து வந்தார்.

அந்தப் பிராமணரை உபசரித்துப் பணிவிடை புரிய நியமித்தது என்னைத்தான். புண்ணியம் சம்பாதிப்பதற்கு நல்ல வாய்ப்புக் கிட்டியது என்ற எண்ணம்தான் எனக்குத் தோன்றியது. அப்படித்தான் அப்பா அன்று என்னிடம் கூறியதாக நினைவு. நான் அன்று வரை கேள்விப் பட்டதும், படித்தறிந்ததும், நம்பிக்கை கொண்டிருந்ததும் அந்தப் போக்கிலான ஒரு தத்துவ சாஸ்திரமாகத்தான் இருந்தது. புராணங்களில் மகரிஷிகள் வரும்போது நல்லியல்பான அரசர்கள் எப்படி உபசரிப்பார்களோ அதே மாதிரித்தான் அப்பா அந்த நம்பூதிரியை உபசரித்தார்.

அந்தி நேரத்தில் அந்த நம்பூதிரி ஓடைக்குச் சென்று குளித்து, அங்கிருந்தபடியே தண்ணீரை வாரித் தெளித்து ஜபித்தார். பின்னர்

க்ரையில் வந்து நின்றுகொண்டு சிறிது நேரம் ஜபித்தார். அது முடிந்த பிறகு அந்தப் பிராம் மணருக்கு தோட்டத்திற்குப் போயாக வேண் டும். நான் அவரைக் கூட்டிக் கொண்டு தெற் குப் பக்கமாகப் போனேன். முன்னே நான் நடந்தேன்; பின்னே அவர் வந்துகொண்டிருந் தார்.

''ஐயோ, செத்தேன்; முடிஞ்சு போச்சு!''

பிராமணரின் அவலக் குரல் கேட்டு நான் திரும்பிப் பார்த்தேன். அவர் நின்ற நிலையில் துடித்துக் கொண்டிருந்ததை அந்த மங்கிய வெளிச்சத்தில் நான் பார்த்தேன்.

நடந்ததுதான் என்ன? அங்கே குப்பையும் கூளமுமாகச் சேர்த்துத் தீயிட்டுக் கொளுத்தி யிருக்கிறார்கள். அடிப்புறத்தில் தீக்கங்கு நீறு பூத்த நிலையில் கனன்று கொண்டிருந்திருக் கிறது. மேலோட்டமாக எதுவும் தெரியா திருந்தனுல் பிராமணர் அதில் கால் வைத்திருக் கிறார்.

அவருடைய அவலக் குரல் எனக்குச் சாப மாகத்தான் கேட்டது. நித்தமும் முறை தவ ருமல் நாமம் ஜபித்தும் புராண பாராயணம் கேட்டும் நான் சேகரித்து வைத்திருந்த புண் ணியம் முழுவதும் தகர்ந்து தரைமட்டமாகி விட்டதாக எனக்குத் தோன்றியது. இனி எது வும் மிஞ்சாது! ஒவ்வொரு நாளும் என்னுடைய பங்குக்குரிய புண்ணியம் சேர்ந்திருக்குமா என்று கணக்கிட்டுவிட்டு நிறைவான மனத் துடன்தான் தூங்கச் செல்வேன்.

அந்தப் புண்ணியக் கணக்கு முழுவதும் இன்றேடு தரை மட்டம்!

பெரிய கடவுள் பக்தராக இருந்தாலும் அப்பா கோவிலுக்குப் போவதில்லே. முன் பெல்லாம் அதிகாலையில் எழுந்து குளித்துவிட் டுக் கோவிலுக்குச் சென்று நிர்மலமான மனத் துடன் தொழுதுவிட்டு வருவது வழக்கம். எப் படி அந்த வழக்கம் விட்டுப்போயிற்று என்று நிச்சயமாகத் தெரியவில்லே. பிராமணர்களின் கர்ம அனுஷ்டானங்களில் உள்ள லோபமும் அன்றுட வாழ்க்கையில் உள்ள வேற்றுமை களும் கண்டு ஒரு வேளே கோவிலுக்குச் செல் வதை நிறுத்தியிருக்கலாம். இப்படிப்பட்டவர் கள் மூலம் பூஜை செய்வித்து கடவுள் அருளேப் பெற முடியாது என்றும் தோன்றியிருக்கலாம்; அல்லது கடவுளே ஆராதிப்பதற்கு விக்கிரகமே வேண்டாம் என்ற எண்ணத்தில் அப்பா கோவி லுக்குப் போவதைத் தவிர்த்திருக்கலாம்.

நியமத்தின்படியான அந்த வாழ்க்கையின் ஒரு தனிச் சிறப்பை நான் இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். அறுபது வயது முடிந்த பின் பும் அப்பா ஒரு மணி நெல்லோ அல்லது ஒரு தம்பிடிக் காசோ கடன் வாங்கியதில்லே; கடன் கொடுத்ததும் இல்லே. அன்றுடம் எல்லாக் கணக்கு வழக்குகளேயும் இருப்புக் கணக்குப் பார்த்துச் சரி செய்வார். முறைப்படி அவ ருக்கு 'அறுபதாம் கல்யாணம்' நடந்தது. அதன் பின்பும் இருபத்தெட்டு ஆண்டுகள் அதே முறையில் வாழ்ந்து காணபித்தார்.

(தொடரும்)

FOR ALL KINDS OF
PAPERS & BOARDS

Phone: 85890

Contact:

A. S. Annamalai Chettiar & Co.,
Paper Merchants & Stationers
36, Big Street, MADRAS-5.

Distributors for: ROHIT PULP and PAPER MILLS LTD.
GANGES PRINTING INK

—Deepam, Annual Number 1973

6

# புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

வல்லிக்கண்ணன்

பிச்சமூர்த்தி இயற்கையின் அழகுகளையும் தன்மைகளையும் நன்கு கண்டுணர்ந்தவர். வாழ்க்கையை விழிப்புடன் ஆராய்ந்தவர். இயற்கையும் வாழ்வும் கற்பிக்கும் பாடங்களை கவிதைக் கருத்துக்களாகத் தர முயன்றவர்.

அழகின் பக்தரான அவர் கூறுகிறார்:

வாழ்க்கையும் காவிரி
அதிலெங்கும் கிளிக்கூண்டு;
வார்த்தையே மணல்
ஓசையே ஜலம்
என் தீராத வேட்கையே
குவிக்கும் விரல்கள்.
பாட்டென்னும் கூண்டொன்று
அமைத்தேன்;
அழகென்னும் கிளியை அழைத்தேன்.
ஆறெங்கும் கிளிக்கூண்டு கட்டுவேன்
அழகினை அழைப்பேன் நான் எந்நாளும்.

வாழ்க்கையை, இயற்கை இனிமைகளை ரசித்து அனுபவிக்கும்படி தூண்டுபவை அவர் கவிதைகள்.

மனக்கிளியே! ஏங்கி விழாதே.
சந்நியாசியின் மலட்டு வார்த்தையை
ஏற்காதே.
உடல் பஞ்சரமல்ல.
புலன்கள் பஞ்சரத்தின் கம்பியல்ல—
வெளியும் ஒளியும் நுழையும் பலகணி,
தெய்வப் பேச்சு கேட்கும் காது.
தெய்வ லீலையைப் பார்!
அதோ வானத்துக் கோவைப் போல்
பரிதி தொங்குகிறான்!
மலரின் மூச்சிலிருந்து மாட்டின்
குமுறல்வரையில்,
குழலின் பேச்சிலிருந்து கடலின்
ஓலம்வரையில்,
நாதமே அசைகிறது;
குரல் கொடுக்கிறது.

மனமே! காய் கனிகளின் ரஸமே
தெவிட்டா அமுதம்.
மலர்களின் மணமே தெய்வ வாசனை.
ஸ்பர்சமே தெய்வத் தீண்டல்.
பார்வையே ஒளியின் அலை.
உலகின் ஒலிகளே பரத்தின் நாதம்.
மனமே! புலன்கள் தளையல்ல,
விடுதலைக் கால்வாய்.
அவைகளுக்கு சக்தி தந்தவன் ஈசன்—
அவனை அறிய,
ஆதி அழகில் மூழ்கி எழ,
கிளியே! ஈசனே ஊனாய், உருவாய்,
மலர்ந்திருக்கிறான்.
புலன்களொரு ஏணி.
ஏணியைத் தூற்றாதே!

('கிளிக்குஞ்சு')

வாழ்க்கை என்பதே போராட்டம்தான். அதில் சோனியாகி ஒடுங்கிப் போவதில் பயனில்லை; இன்பமுமில்லை. எதிர்த்து நின்று போராடவேண்டும். இயற்கையும் அதைத் தான் கற்றுத் தருகிறது. இந்தத் தத்துவத்தை பிக்ஷு 'ஒளியின் அழைப்பு' என்ற கவிதையில் விளக்குகிறார்.

பட்டப்பகலில் இரவைக் காட்டும் நிழல் கொண்ட பெரிய மரம். அதனடியில் ஒரு கமுகு.

'ரத்தம் செத்த, சோனிக் கமுகு.
சோனியாவானேன்?
அதான் வாழ்க்கைப் போர்!'

பெரு மரம், கபந்தன் தேவையோடு, சிறு மரத்தைச் சுரண்டுகிறது. ஏழைக் கமுகு தன் பங்கை—ஒளி, வெளி, காற்று, நீர் அவ்வளவையும்—பறி கொடுத்து நிற்கிறது. வாழ்க்கைப் போர் அது.

'கமுகு நோஞ்சலாகாமல் என்ன செய்யும்?
அதற்காகாக விதியென்று பேசி,
செங்குத்தாய் வளருமோ?
தியாகம் செய்தேனென்று
புண்யம்பேசுமோ?

அட பிதற்றலே!
விதியைப் போற்றினல் தமஸில்
உழலலாம்.
பிறந்த இடத்தில் வளர்வேனென்றால்
சாவை உண்ணலாம்.
ஆ! கமுகறியும் வளர்ச்சியின் மந்திரம்.

சோனிக் கமுகு குறுக்கே படர்கிறது. பிறவி இருளைத் துளைத்து, சூழ்வின் நிழலை வெறுத்து, முகமுயர்த்தி, விண்ணின்று வழியும் ஒளியமுதைத் தேடிப் போகிறது. அமிர்தத்தை நம்பி, ஒளியை வேண்டி, பெருமரத்துடன் போட்டியிடுகிறது. அதுவே வாழ்க்கைப்போர்.

'முண்டி மோதும் துணிவே இன்பம்.
உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி.'

நானும் ஒரு கமுகு, சோனிக் கமுகு!
சூழவும் எவ்வளவு பெரிய, பழைய,
முதிய இருட்டு!
பழமை என்ற பிரமையில்,
அரையொளியில்,
பொய்களின் பிணங்கள் எப்படி உயிருடன்
நடிக்கின்றன!

அறிவின் சுயேச்சையை
அமுக்குப் பிசாசுகள் எப்படி
சிறைப்படுத்தி விட்டன!

எப்படி சுவடிகளின் குவியல்
வசிக்கும் இடத்தைப் பறித்துக்
கொண்டன!

எலும்பு தெரியும் ஏழ்மை
எவ்வளவு ஏங்கி ஏங்கி அழுகிறது!
நோயின் புலிக்குரல் எப்படி
அஞ்ச வைக்கிறது!

உலகம் பொய், சாவு மெய்
என்ற எவ்வளவு சாஸ்திரீயப் புலம்பல்!
பின் சோனியாகாமல் என்னுவேன்?'

இருப்பினும், மனம் தேறுகிறது, சிறு கமுகின் போராட்டத்தைப் பார்த்து, உள்ளத்தில் தெம்பு பிறக்கிறது. உடனே—

'போர் என்ற சங்கு முழங்குகிறது.
அழகின் சிரிப்பு அண்டமாய்ப்
பிறந்திருக்கிறது;
அகண்ட ஒளி அனுதியாய்
மலர்ந்திருக்கிறது.
அழகும் அத்யாத்மமும் அழைக்கின்றன.
ஜீவா! விழியை உயர்த்து.
சூழ்வின் இருள் என்ன செய்யும்?
அமுதத்தை நம்பு,
ஒளியை நாடு.
கமுகு பெற்ற வெற்றி நமக்கும் கூடும்.
சூழ்வின் இருள் என்ன செய்யும்?'

இவ்வாறு நம்பிக்கை ஊட்டுகிறார் கவிஞர். மண்ணை மட்டுமல்ல, விண்ணையும் அளக்க முயல்வன அவரது கவிதைகள். கலைஞனின் பெருமிதத்தோடு அவர் சொல்லவில்லையா என்ன—

நாங்களோ கலைஞர்
ஆமைபோல் உணர்ச்சியின்
கிணற்றில் அமிழ்வோம்
முதுகோடு கொண்டு விதியை
எதிர்ப்போம்.
கீழுலகேடும் தயங்காது இறங்கி
ஜீவன்கள் லீலையில் கூசாது கலப்போம்;
அணிலைப் போல் கொம்பேறி
ஒளிக்கனி கடிப்போம்
சாலையின் மேலேறி
செம்மலர் உதிர்ப்போம்
மேலுலேகமும் படகோட்டிச் செல்வோம்!

('கொம்பும் கிணறும்')

இப்படி ஜீவன்களின் லீலையை, சக்தியின் பெருமையை, உஷையின் சிரிப்பை, இயற்கை அழகுகளைப் பாடுவது ஒன்றும் புதிய விஷயம் இல்லையே! கவி மரபு தானே என்று சொல்லலாம். ஆனல், பிக்ஷு அவற்றைக் குறிப்பிடும் போது ஒவ்வொன்றிலும் ஒரு புதுமை தெரிகிறது; தனி நயம் மலர்கிறது.

உதயம் பற்றி அவர் கூறுவது இது:

செம்பட்டுச் சல்லடம்
சொகுஸாக உடுத்தி
செம்மலர்க் கூடையை
இடுப்பில் இடுக்கி
சதங்கைகள் சிலம்ப
கீழ்வானில் முளைத்தாள்:
இரவென்னும் பெட்டியை
உஷை மெள்ளத் திறந்தாள்.
சூழிருள் சிறையுற்ற
கதிரவன் கிரணம்
தும்பைத் தெறித்த
மாடுபோல் பாய்ந்தது.

'இருளும் ஒளியும்' கவிதையில் இவ்விதம் ஒரு வர்ணனை காணக்கிடக்கிறது—

இருள் மலையின் மைக் குகையில்
ஒளிமாடு ஓலமிட

கதிர்க்கன்றின் சோக ஒலி
கடுஞ்சிறையில் கம்ம;
பரிதியெனும் பொன் பருந்து
பாய்ச்சலின்றிக் கிடக்க
ஒளியும் இருளும் கலந்துகூடி
நற்பாம்பும் சாரை போலும்
பின்னிக் காலம் ஓடலாச்சு.

இந்த விதமான இனிய வர்ணிப்புகள் பிச்சமூர்த்தி கவிதைகளில் நிறையவே உள்ளன. இயற்கையின் வளங்களை அழகாக வர்ணிக்கும் வெறும் கவிதைகள் அல்ல பிக்ஷுவின் படைப்புகள். இயற்கையையும் மனித வாழ்வையும் பொருத்திக் காட்டும் தத்துவ வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன ஒளியின்அழைப்பு, கிளிக்கூண்டு, கிளிக்குஞ்சு, காற்றூடி, பூக்காரி போன்றவை. காட்சி இனிமைகள் நயமான கவிதைகளாகப் பிறந்துள்ளன. மார்கழிப் பெருமை, மழைக்கூத்து போன்றவை இந்த ரகத்தவை.

சாதாரண விஷயத்தைக்கூட அருமையான கவிதையாக்கி விடுகிறது பிச்சமூர்த்தியின் ஆற்றல். மூலையிலே கிடந்த தாளையும், சாலையிலே கிடைத்த குச்சியையும், கூரையிலே கிடைத்த துணியையும், பானையிலே கண்ட சோற்றையும், கொண்டு, புத்துருவம் கொடுத்து புதுப்பட்டம் ஆக்கிவிடுகிற திறமையைப் போன்றது அவருடைய கவித்திறமை. காற்றூடி எனும் சிறு பொருளும் அவரது கவிதையில் உணர்ச்சியும் அழகும் பெறும் அற்புதச் சித்திரமாகி விடுகிறது.

மகுடி மேல் சீறிவரும்
நாகம் போல் ஆடிற்றடி.
மின்னலைப்போல் வெகுண்டு
முகிலிடையே எரிந்ததடி.
கத்தியைப் போல் சுருண்டு
வெளியெங்கும் சுழன்றதடி.
ராகுவைப் போல் எழுந்துஓடி
சூரியனைத் தீண்டிற்றடி.
குரங்கைப் போல் வாலடித்து
கர்ணம் பல போட்டதடி.
காலைப் புறுவைப் போல
புள்ளியாய் மறைந்ததடி!

இயற்கையின் பல்வேறு கோலங்களையும், லீலைகளையும் அவர் கண்டு ரசித்திருப்பதை அவரது கவிதைகள் அனைத்திலும் காணலாம். மழையின் கூத்தை கம்பீரமான வர்ணிப்பாக ந. பி. சித்திரித்திருப்பதை, முன்பே இத் தொடரில் நான் எடுத்தெழுதிய கவிதை விளக்கியிருக்கும். பூக்காரி கவிதையிலும் மழை நேரம் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு சோக சித்திரமாக.

அம் மழைநேரக் காட்சி மாபெரும் வாழ்க்கை உண்மை ஒன்றை சுட்டுவதற்காகவே காட்டப்படுகிறது.

வாழ்க்கை பலாத்கார மயம் ஆகிவிட்டது. போட்டி, பொறுமை, சண்டை சாவுதான் எங்கும் நடம் புரிகின்றன. அவற்றிடையே அன்பு, அகிம்சை என்கிற போதனை எடுபடுவதில்லை. வாழ்க்கைச் சந்தையிலே இத்தெய்வக் குரல் விலை போவதில்லை. மழை நேரத்தில் ஜாதி மல்லிகையைக் கூவி விற்பனை செய்ய முயலும் பூக்காரியின் பொங்கும் குரல் மதிப் பிழந்து போவது போல் தான் இதுவும்.

'சாரலின் கடுஞ் சினத்தில்
பூ மோகம் ஆடவில்லை,
பூக்காரி குரலினொடு
கூடிற்று மழையின் கண்ணீர்'

அதே மாதிரி 'ஊரெங்கும் விஷப்புகை, வானெங்கும் எஃகிறகு, தெருவெங்கும் பிண மலை, பீரங்கிக் குரல்' பேசுகிற உலகச் சூழ்நிலையில் அன்பும் அகிம்சையும் பேச முற்படும் 'ஆதிக்குரல்' அமுங்கி விடுகிறது.

எனினும் கவி நம்பிக்கையை இழந்துவிடவில்லை. ந. பி. யின் கவிக்குரல் நம்பிக்கை வறட்சியோடு தொனிப்பது அல்ல.

(உலகத்தார்) 'ருத்ரனின் வெறிக்கூத்தில்

கடுமோகம் கொண்டுவிட்டார்.

காமனை எரித்த ருத்ரன்
கண் சிமிட்டில் தணிந்து போவான்.
அன்பே சிவமாவான்
மங்கலமாய் மலர் தருவான்.
வேண்டுவோர் வாரீர்
வாங்குவோர் கூடீர்!'

என்ற குரல் மீண்டும் மீண்டும் ஒலிக்கும்படி செய்கிறார்; ஒலித்துக் கொண்டே இருக்கும் என்று உறுதி கூறுகிறார்:

'எஃகிறகின் உயரம், தெய்வக்குரல் ஏற வில்லை'. என்றாலும் என்ன!

'நெஞ்சுடையாக் கனவுத் தெய்வம்
கூவுதலைக் குறைக்கவில்லை.
அன்பே சிவமாவான்
மங்கலமாய் மலர்தருவான்...'

என்று நம்பிக்கை வெளிச்சம் தர முயன்றிருக்கிறார் கவிஞர்.

இன்பமும் துன்பமும் கலந்தது தான்

வாழ்க்கை. துன்பத்தில் சலிப்புற்ற மனம் இன்பத்துக்கு ஏங்குவது இயல்பு. அப்படி ஆசைப்பட்டு இன்பத்தை நாடுகிறபோது, அது துன்பத்தை எதிர்பாராத வகையில் அழைத்து வந்துவிடுகிறதே! இந்த உண்மையை வர்ணிக்கிறது 'எமனுக்கு அழைப்பா?' என்ற கவிதை.

வெப்பத்தில் வெம்பி வதங்கிய கவி ஈரத்திற்கேங்கி, வருணனை வேண்டினர்.

கருணை பிறந்தது;

மழை முகில் மிதந்தது.
நெஞ்சத்தில் குளுமையின்
ஊற்றுக்கண் வழிந்தது.
அனல்பட்ட அறையினில்
நளிர்முகம் கண்டது.

இன்பம்தான். கூடவே, எறும்புப் பட்டாளம் புகுந்தது. பாச்சைகளும் பல்லிகளும் வந்தன. ஈசல்கள் பறந்தன. பல்லிகள் ஈசல்களைப் பிடித்துத் தின்றன. கவியின் சிந்தனை விழித்துக் கொள்கிறது இப்போது—


தீபம் ஆசிரியர்

## நா. பார்த்தசாரதி அவர்களின் நூல்கள்

### நாவல்கள்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குறிஞ்சிமலர் | ரூ. | 10 00 | வெற்றி முழக்கம் | | அச்சில் |
| பொன்விலங்கு | | 12 50 | அறத்தின் குரல் | | ,, |
| பட்டுப்பூச்சி | | 3 00 | மனக்கண் | ரூ. | 3 50 |
| நெற்றிக்கண் | | 5 00 | கோபுர தீபம் | | 7 00 |
| கபாடபுரம் | | 4 00 | நெஞ்சக் கனல் | | 4 25 |
| மலைச்சிகரம் | | 1 50 | வஞ்சிமாநகரம் | | 3 00 |
| மணிபல்லவம் | | 15 00 | சமுதாய வீதி | | 5 75 |
| பாண்டிமாதேவி | | 12 00 | ஆத்மாவின் ராகங்கள் | | 4 00 |
| பிறந்தமண் | | 5 00 | நித்திலவல்லி | | 10 00 |
| நினைவின் நிழல்கள் | | 4 50 | மகாத்மாவைத் தேடி | | 3 25 |

### சிறுகதைத் தொகுதிகள்:

| | | | | |
|---|---|---|---|---|
| வலம்புரிச் சங்கு | 3 00 | இராஜகோபுரம் | ரூ. | 4 00 |
| மூவரை வென்ரூன் | அச்சில் | காலத்துக்கு வணக்கம் | | 3 00 |
| நெருப்புக் கனிகள் | ,, | கண்ணன் கதைகள் | | 4 00 |
| மங்கியதோர் நிலவினிலே | 3 50 | கங்கை இன்னும் வற்றிவிடவில்லை | | 3 00 |
| புதிய பாலம் | 2 00 | தூங்கும் நினைவுகள் | | 3 00 |
| வேனில் மலர்கள் | 3 50 | தேவதைகளும் சொற்களும் | | 3 00 |
| தகடூர் யாத்திரை | 4 00 | | | |

### கவிதை-கட்டுரை-ஆராய்ச்சி நூல்கள்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சொல்லின் செல்வம் | ரூ. | 5 00 | புதிய பார்வை | ரூ. | 3 00 |
| மொழியின் வழியே | | அச்சில் | மணிவண்ணன் கவிதைகள் | | 3 00 |
| கவிதைக் கலை | | ,, | கடற்கரை நினைவுகள் | | அச்சில் |
| நானூறில் நல்ல காட்சிகள் | | 1 00 | சிந்தனை மேடை | | ,, |

விவரங்களுக்கு :

## தமிழ்ப் புத்தகாலயம்,

576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5.

சித்தத்தில் தூண்டில்முள்
சுறுக்கென்று தைத்தது.
ஈரத்திற் கேங்கினால்
எமனுக்கு அழைப்பா!
இன்பத்தை நாடினால்
துன்பத்தின் அணைப்பா?

பிச்சமூர்த்தியின் இயற்கை வர்ணனைகளும், அவர் கையாளும் உவமைகளும் புதுமையாய் நயமாய் மிளிர்வன என்பதை அவரது சிறுகதைகளைப் படித்தவர்கள் உணர்ந்திருப்பர். இச் சிறப்புகளை அவருடைய கவிதைகளிலும் காண முடிகிறது.

'சித்திரைச் சூரியன்
செஞ்சூலம் பாய்ச்சலால்
ஆற்று மணல் வெள்ளம்
அனலாகக் காய்ந்தது.
பத்தரை மாற்றுச் சொர்ணப்
பொடி போல் ரவி
ஏற்ற மணல் காடு
அங்கங்கே மின்னிற்று.'
'மின்னல்கள் சிரித்து
மேகத்தைக் கொளுத்தின;
கூதலெனும் நாகம்
குடையோடு சீறிற்று.'

'பேணாது பொங்கிய கவிஞன் கனவைப் போல், எழில் மண்டித் தூங்கும் விரிசடை மரங்கள்...நாணாத பச்சைக் கை நீண்டு பரவல் போல் வாணப் பகைப்புல சித்திர மூங்கில்.'

'பல்லற்ற பாம்பைப் போல நெளிந்து வரும் நல் நெருப்பு...சூல்கொண்ட யானையைப் போல் அசைந்தாடும் அலைகள்.'

'காலையின் கதவுகள், கிழக்கில் திறக்கவும், ஒளியாற்றில், செம்மேக மாதுகள் குளித்தனர்'—இத்தகைய இனிய உவமைகளையும், உருவகங்களையும் பிக்ஷுவின் கவிதைகளில் மிகுதியாகவே காணலாம்.

மழைக்கால இனிமைகள், அழகுகள் பற்றிய பல ரகமான வர்ணனைகள் அவரது கவிதைகளில் உண்டு என்று குறிப்பிட்டிருக்கிறேன். 'வேட்கை' என்ற கவிதையில் இப்படி ஒரு படப்பிடிப்பு—

மழைநாளின் இருட்கால்
விளையாடும் வேளை
விந்தையாய் மரமெல்லாம்
வழியை மறித்தன.
மின்பாயும் வானமும்
வெளியு மெல்லாம்
காட்டேறி ஊர்வலத்தைக்
காட்டும் நேரம்.

ஒளி வேண்டும் என்று வேட்கை கொள்ளும் சில மனநிலைகளை அழகாகக் கூறும் கவிதையில் இவ் வர்ணனை வருகிறது.

'வாழ்க்கையின் துன்பங்கள், மங்கு பொன் மாலை; நாட்களின் நோய்கள், தெறித்தோடும் நேரம்'. செல்வரும், ஏழைகளும் சினிமா பார்ப்பதில் இன்புற்றிருக்கும் வேளை. திடீரென்று படம் அறுந்து போகிறது. அப்படி இருளடையும்போது மக்கள் தழல் வீசக் கூவுகிறார் 'அட, போடுங்கள் வெளிச்சம்! போடுங்கள் வெளிச்சம்!'

மழை இருட்டில், உழைப்பு முடிந்து, வீடு வரும் பெண்கள், புன்னிருளால் வழி விழுங்கப் பட்டிருப்பது கண்டு அல்லலுறுகிறார்கள். பாதையைப் பாம்புபோல் அறியும் கால்கள், அடிஅடியாய் முன்னேற, அவர்கள் வெருண்டு சொல்வது: 'நொடி நேரம் வெளிச்சம், வழி காட்ட வேண்டும்; வழிகாட்ட வேண்டும்.'

சீக்கின்றி காக்கைபோல் திரிந்து, எஃகைப் போல் தசையுடன் உழைத்து, கால் கஞ்சிக்கு வழிதேடி வாழ்ந்து வந்த ஏழை கண்ணொளி இழந்து குருடானான். கடவுளை எண்ணிக் கதறுகிறான்: 'கண் போன பின்னர் உயிர் மட்டும் எதற்கு? சுற்றத்தின் சுமையைத் தாங்க, ஒளி பின்னும் ஈவாய். அன்றேல் உயிரின்று கொள்வாய்.'

வெய்யிலின் செதில்கள் போல்
மான் புள்ளி காணுது.
வேலியில் சட்டை போல்
கொக்குகள் தோணுது,
ஒயில் நடை
போடுது வாலாட்டிக் குருவி.
சோலையை உருக்குது
கருங்குயில் வீணை.
மலைக்குகை மூலையில்
வாயைப் பிளக்குது.

இச் சூழலில், விலையற்ற ஒளியும், பருவத்தின் இனிப்பும், உள்ளத்தைத் தொட்டு உணர்வெழுப்பும் மலரும் பிறவும் அர்த்தமற்றனவாய் தோன்றுகின்றன பற்றற்ற யோகிக்கு. அவனுடைய வேட்கை 'அமுதொளி அடைவது என்றோ?' என்பதுதான்.

(தொடரும்)

கலை:

# உள்ளுறை ஸாரம்...!

வங்காளி மூலம் :
ஸ்ரீ அன்னதாசங்கர் ராய்
தமிழாக்கம் :
சு. கிருஷ்ணமூர்த்தி

வாழ்க்கை ஒரு பெருகியோடும் ஆறு. கலைஞர்களாகிய நாம் அந்த ஆற்றில் முழுகி அவரவருடைய குடத்தை நிரப்பிக் கொண்டு வீடு திரும்புகிறோம். வீடு வந்ததும் குடத்தைக் குப்புறக் கவிழ்த்து, ''இந்தா இதுதான் நாங்கள் கொண்டு வந்திருப்பது'' என்று சொல்லித் தண்ணீரை ஊற்றுகிறோம்.

இது பொய்யான பேச்சல்ல. நாம் உண்மையிலேயே ஆற்று நீரில் மூழ்கினோம்; உண்மையிலேயே அதைக் கொண்டு குடத்தை நிரப்பிக் கொண்டோம். ஆயினும் நாம் முழுகி, நம் குடங்களை நிரப்பிக்கொண்ட வாழ்வாகிய ஆறு உலகம் முழுமைக்கும் பொதுவானது. ஆகவே நாம் குடத்தில் கொண்டு வந்த தண்ணீராகிய ரஸம் உண்மையில் நம்முடையது அல்ல. 'நம்முடையது' என்று சொல்லக்கூடியது அந்தக் குடந்தான்; நம் இதயமாகிய குடம்.

கலைஞனின் இதயம் அவன் வாழ்க்கையில் பெறுகின்ற இனிப்பும் கசப்பும் புளிப்புமான பல தரப்பட்ட தெளிவற்ற அனுபவங்களால் நிரம்பியிருக்கிறது. அவன் தன்னுடைய இவ்வனுபவங்களைத்தான் எழுதுகோலாலோ தூரிகையாலோ இசைக் கருவியாலோ வெளிப்படுத்த விரும்புகிறான். வெளிப்படுத்த முடிந்தால் அவனது இதயத்தின் பாரம் குறையும். அப்போது அவனுடைய இதயத்தின் ரஸம் மற்றவர்களுக்கும் — எல்லோருக்கும் — உரியதாகிவிடும். கலைஞர் இவ்வாறு தன் இதயத்திலிருந்து வெளிப்படுத்தி மற்றவர்களின் இதயங்களில் பரப்பும் ரஸந்தான் வாழ்க்கையாகிய ஆற்றின் தண்ணீர். அதுதான் இதயத்தின் சத்தியம், வாழ்க்கையின் சத்தியம். இந்த சத்தியம் கலையின் மூலமாக வெளிப்படுத்தப்படும்போது அதைக் கலையின் சத்தியம் என்று அழைக்கிறோம். இவ்வாறுதான் சத்தியம் வாழ்க்கையிலிருந்து கலைஞனின் இதயங்களுக்கு யாத்திரை செய்கிறது. இந்த யாத்திரை முடியும் இடத்தில் கலை முழுமை பெறுகிறது.

'வாழ்க்கையின் சத்தியந்தான் கலையின் சத்தியமா?'—இந்தக் கேள்விக்கு 'ஆம்', 'இல்லை' இரண்டு பதில்களும் உண்டு. 'ஆம்' எப்படியென்றால் இவையிரண்டும் ஆரம்பத்தில் ஒன்றுதான். 'இல்லை' ஏனென்றால் இவையிரண்டுக்கும் இடையில் மனித இதயம் இருக்கிறது. இதயத்தில் புகுந்து வெளிப்படாதவரையில் வாழ்க்கையின் சத்தியம் கலையின் சத்தியமாக ஆக முடியாது. இதயம் சம்பந்தப்படாத சத்தியம் விஞ்ஞானத்தின் சத்தியமாகவோ தத்துவத்தின் சத்தியமாகவோ இருக்கலாம்; ஆனால் கலையின் சத்தியம் இதயத்தைச் சாராமல் இருக்க முடியாது. கோபிகை யமுனையிலிருந்து குடம் நிறையத் தண்ணீர் கொண்டு வருவதுபோல் கலைஞன் தன் இதயத்தை வாழ்க்கையின் ரஸத்தால் நிரப்பிக்கொண்டு வருகிறான். இதயமில்லாதவன் கலைஞனாக மாட்டான்.

கலைஞனின் இதயம் ஒரு தேன்கூடு. அதில் பல மலர்களின் தேன் கொண்டுவந்து சேகரிக்கப்படுகிறது. ஆனால் சேகரிக்கப்பட்ட தேனைப் பிறர் சுவைத்தால்தான் சேகரிக்கும் செய்கை கலையாக உயர முடியும். இதயமில்லாவிட்டால் கலைஞன் இல்லை. ஆனால் கலைஞனுக்கு இதயமிருந்தால் மட்டும் போதாது; தான் சேகரித்ததைப் பிறருக்கு அள்ளிக் கொடுக்கும் ஆர்வமும் திறமையும் வேண்டும். அப்போதுதான் கலைஞனின் சேகரிப்பை ரசிகன் அனுபவிக்க முடியும். ரஸத்துக்கு உருவம் கொடுக்கப்பட்டால்தான் ரசிகனால் ரஸத்தையும் உருவத்தையும் அனுபவிக்க முடியும்.

ரஸம் உருவத்துடன் சேரும்போது அது சுவைக்கத்தக்கதாக ஆகிறது. அப்போது அது சொல்லாகவோ, இசையாகவோ, ஓவியமாகவோ, நடனமாகவோ உருப்பெறுகிறது. 'ரஸம்' என்பது இதயரஸம். அதன் மூலப் பொருள். வாழ்க்கையாகிய யமுனையாறு. வாழ்க்கை—யமுனையின் நீர் மனித இதயத்தை அனுபவமாக நிரப்புகிறது. அப்படி நிரப்புமுன் அந்த நீர் 'ரியாலிடி'யின் ஒரு பகுதி.

ஆகவே கலையின் ஆரம்பத்தில் 'ரியாலிடி'; இடையில் 'ரியாலிடி'யின் அனுபவம்; முடிவில் அந்த அனுபவத்தின் உருவ வெளிப்பாடு.

எல்லோரும் மலரைப் பார்க்கிறுர்கள். ஆனல் எவ்வளவு பேர் வேரைப்பார்க்கிறுர்கள்? தண்டைத்தான் எவ்வளவு பேர் பார்க்கிறுர்கள்? கலையைக் கற்றுக் கொடுப்பதற்காக ஏற்பட்டிருக்கும் பள்ளிகளில் யாரும் 'ரியாலிடி' யைப்பற்றிக் கவலைப்படுவதில்லை; அவர்களுக்கு மனித இதயம் பற்றியும் தெரியாது; அவர்கள் கற்றுக் கொடுப்பதெல்லாம் கலையுருவம் பற்றிய படிப்புதான். அப்பள்ளிகளில் தேர்ச்சி பெற்று வெளிவரும். கலை நிபுணர்களுக்கு வாழ்க்கையின் ரகசியமும் இதயத்தின் ரகசியமும் வெறும் பேச்சுதான்; அவர்களைப் பொறுத்தவரையில் உருவமே சத்தியம்.

உருவம் என்பது என்ன? அதன் பின்னே என்ன இருக்கிறது? அதனுள்ளே என்ன இருக்கிறது?

சிலர் பதில் சொல்வார்கள், ''ஒன்றுமேயில்லை; இல்லாவிட்டாலும் பாதகமில்லை.' சிலர் சொல்வார்கள், ''உருவத்தில் ஒரு பொருள் இருக்கிறது. ஆனல் அது புலன்களால் அறியப்படுவது. அதற்கும் இதயத்துக்கும் என்ன உறவு என்று தெரியாது. கண்களால் பார்க்கிறேம், இதயத்தாலல்ல; காதுகளால் கேட்கிறேம், உயிராலல்ல; கைகளால் தொடுகிறேம், உணர்வாலல்ல; இதயத்தால் பார்ப்பதும், உயிரால் கேட்பதும், உணர்வால் ஸ்பரிசிப்பதும் அவசியமாகத் தோன்றவில்லை.''

வெறும் உருவ அனுபவம் ரஸ அனுபவமாக ஏன் ஆவதில்லை என்பதற்குக் காரணம் இந்தப் பதிலிலேயே அடங்கியிருக்கிறது. கலை என்று பொதுவாக அறியப்படும் பொருளில் உருவம் இருக்கிறது, ஆனல் அழகு இல்லை. இந்த அழகு மிகவும் ஆழ்ந்த நிலையைச் சேர்ந்ததாகும். மனித இதயமாகிய குடத்தை எடுத்துக்கொண்டு வாழ்க்கையாகிய யமுனைநீரின் ஆழத்தில் முழுகினல்தான் கலைஞன் அந்த அழகை அனுபவிக்க முடியும். முதலில் கலைஞன் அதை அனுபவித்தால்தான் பிறருக்கு அளிக்க முடியும். அப்போது கலைஞனின் உருவப் படைப்பு அழகுப் படைப்பு ஆகும். 'சத்தியமே சௌந்தரியம், சௌந்தரியமே சத்தியம்' என்னும் கீட்ஸின் கூற்று உண்மையாகும்.

ஆகவே கலையின் உள்ளுறை ஸாரம் வாழ்க்கையின் சத்தியம், வாழ்க்கையின் சௌந்தரியம்.

கலை சத்தியமென்ற குன்றின்மேல் நிலை பெற்றிருக்கிறது. கலையின் அஸ்திவாரம் உறுதியானது, கடினமானது. ஆனல் அந்த அஸ்திவாரம் மனித இதயமாகிய மண்ணாலும் இளம் புல்லாலும் மறைக்கப்பட்டிருக்கிறது. உண்மைக்கலை என்றும் அசத்தியமாக இருக்க முடியாது. மனிதனின் சுகதுக்கங்கள் கலையை ரஸமயமாகச் செய்கின்றன. இந்த ரஸ மயமான சத்தியம் கலைஞனின் கலைத் திறமையாகிய மந்திரக்கோலால் உருவம் பெறும் போது அது ''மாயை'' என்ற பிரமை தோன்றுகிறது. ஆனல் அது மாயையல்ல, சத்தியந்தான். சத்தியந்தான் கலையின் உள்ளுறை ஸாரம். சத்தியத்தின் பலத்தில்தான் கலை நிலைத்து நிற்கிறது. சௌந்தரியத்தின் வலிமைதான் சத்தியத்தின் பலம். நான் குறிப்பிடுவது கலைஞன் படைத்த சௌந்தரியமல்ல; அவன் பார்த்த சௌந்தரியம்.

சத்தியத்தையோ சௌந்தரியத்தையோ கலைஞன் காண்பது போலவே தன் படைப்பில் காண்பிப்பதில்லை. ஏனெனில் படைப்பாளிக்குச் சில உரிமைகள் உண்டு. அவற்றுள் ஒன்று தன் இஷ்டத்திற்கேற்றவாறு படைப்பை உருவாக்குவது; படைப்பு தன்னிஷ்டபடி உருவாகாவிட்டால் அதை உடைத்தெறிவது. உலகத்தைப் படைப்பவன் இவ்வுரிமையைப் பயன்படுத்துகிறுன். கலைஞர்களாகிய நாமும் பயன்படுத்துகிறேம். நாம் படைக்கும் ஒரு கதையோ அல்லது நாவலோ கடைசியில் எவ்வாறு உருப்பெறும் என்பதை நம்மாலேயே சொல்ல முடிவதில்லை. தெரிந்ததையும் தெரியாததையும் கலந்து, உண்மைச் சம்பவங்களுடன் கற்பனையைச் சேர்த்து, பலவற்றை ஒதுக்கி, பலவற்றை மாற்றி நாம் படைத்து முடிப்பது வாழ்க்கையில் காண்பது போலில்லாவிட்டாலும் நம் மனதுக்குப் பிடித்ததாக இருக்கும். இல்லை, சொல்லப் போனல் கலைப் படைப்பு அதற்கே ஏற்றவாறு இருக்கும். கதை அதன் போக்கில் போகிறது; தன்னைப் படைக்கும் கலைஞனின் கட்டளைக்குக் கூடப் பணிவதில்லை. கலைப் படைப்பாகிய அடங்காப்பிடாரிக் குதிரையின் மேல் சவாரி செய்யும் கலைஞனை அது பொட்டலோ, சுரங்கமோ, காடோ குகையோ எங்கே கொண்டு செல்லுமென்று சொல்ல முடியாது. படைப்பாளியின் உரிமையைப் பயன்படுத்த முயலும் கலைஞன் படைப்புக்கே ஒரு தனிப்பட்ட உரிமை இருப்பதையும் உணர்கிறுன். உலகத்தைப் படைப்பவனின் நிலையும் இப்படியே இருக்கலாம்; யார் கண்டார்கள்!

மொத்தத்தில் சொல்லப்போனல் எவ்வளவு தவறுகளோ குறைகளோ இருந்தாலும் கலைப் படைப்பின் அஸ்திவாரம் சத்தியம், சத்தியத்தின் அனுபவம். ஆகவே அது உலகப் படைப்புக்கு ஒப்பானது. அது மட்டுமல்ல, அது உலகப் படைப்பின் ஒரு பகுதி. உண்மையான நிலையைப் படைப்பவன் உலகத்தைப் படைப்பவனுக்கு ஒப்பானவன். உலகப் படைப்புக்குப் பொருளிருந்தால் கலைப் படைப்

புக்கும் பொருளுண்டு. கலைப் படைப்பில் உள்ளுறைந்திருக்கும் சத்தியந்தான் அப் பொருள். கலைஞனே சத்திய தரிசனம் பெருதவனுயிருந்தால் அது வேறு விஷயம். அப்படியானல் படைப்பின் வெறுமையை அவ ஞல் மறைக்க முடியாது. குருட்டுக் கண்களைக் கண்ணுடி போட்டு மறைக்க முடியுமா? அந்நிலை யில் படைப்பு என்பது அதன் எதிர்மறையே ஆகும்.

கலைப்படைப்பின் உண்மையான மதிப் பீடு அதன் உள்ளடக்கத்தைக் கொண்டு தான்; அதன் உருவத்தைக் கொண்டோ படைக்கப்பட்ட முறையைக் கொண்டோ அல்ல.

கலை என்பது ஒருவகை சாட்சி. அதில் சத்தியம் இல்லையென்றல் நீதிபதி அதைத் தள்ளுபடி செய்துவிடுவார். ஆனல் கலையின் சத்தியம் நீதிமன்றத்தின் சத்தியமல்ல; அது வாழ்க்கையின் சத்தியம், இதயத்தின் சத்தியம். இந்த சத்தியம் வெளிப்படும்முறை ஒரேமாதிரி யாக இருக்காது. அதன் ஒவ்வொரு உறுப்பி லும் மாயம் கலந்திருக்கும். அதனல் அது பொய்யோ என்றுகூடத் தோன்றும். கலைஞனை சமூகத்தின் சாட்சிக்கூண்டில் நிறுத்தும்போது அவன் அளிக்கும் சாட்சியம் வெறும் சத்திய மல்ல, மாயமும் ரஸமும் நிறைந்த சத்தியம். சாதாரண மக்களால் இதைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. கலைஞன் ஏதோ மனம் போனபடி கிறுக்கித் தள்ளுவதாக அவர்கள் நினைக்கிருர் கள்.

சத்தியத்தை இம்முறையில் உணர முடி யாது. இயல்பான அனுபவத்தின் மூலமே சத்தி யத்தை உணரலாம். ஒரு மணியின் தரத்தை அதன் ஒலியைக்கொண்டு உணர்கிறோம். அது போலவே சத்தியத்தையும் உணரலாம். கலைஞன் படைத்த கதை சத்தியத்தைப்போல் ஒலிக்கிறதா? அப்படியானல் அது சத்தியந் தான். ஒலிக்கவில்லையா? அப்படியானல் அது சத்தியமல்ல. உலகில் நம் கண்ணெதிரே நிகழும் பல உண்மை நிகழ்ச்சிகள் சத்தியம் போல் ஒலிப்பதில்லை; நாம் காணுத கற்பனை நிகழ்ச்சிகள் சத்தியம்போல் ஒலிப்பதுண்டு.

மனிதனின் கண்களுக்குத் தெரியாமல் எவ்வளவு நிகழ்ச்சிகள் நடக்கின்றன! பரஸ்பர இதயப் பரிவர்த்தனைகள் நிகழ்கின்றன; ஒருவர் மற்றவரைக் கவர்கிருர்; ஒருவர் மற்றவரிட மிருந்து விலகுகிருர் அல்லது மற்றவரைத் தன் னிடமிருந்து விலக்குகிருர்—இந்த நிகழ்ச்சி களின் உண்மை நாம் கண்ணுல் காணும் நிகழ்ச்சிகளின் உண்மையைவிட எவ்விதத்தில் குறைந்ததாகும்?

ஆனல் என்ன நடக்கிறது? வாசகனல் புரிந்து கொள்ள முடிவதில்லை; எழுத்தாளனல் எளிதில் புரிய வைக்கவும் முடிவதில்லை. இவ் வாறு வாசகன், எழுத்தாளன் இவர்களுடைய திறமைக் குறைவால் சத்தியத்தின்மேல் அவ நம்பிக்கை பிறக்கிறது.

சத்தியம் அனுபவிக்கப்பட வேண்டியது. எழுதுபவன் படைப்பவன் ஆக இருவருமே அதை அனுபவிக்க வேண்டும். இந்த அனுபவ மில்லாவிட்டால் அக்குறையை வேறு எதைக் கொண்டும் நிரப்ப முடியாது. இந்த அனுப வம் பெற வாழ்க்கையாகிய யமுனையில் முழுக வேண்டும். வாழ்க்கை ஒரு சிறிய வாய்க்கால் அல்ல. அதன் ஆரம்பம் எங்கே, முடிவு எங்கே என்று யாருக்கும் தெரியாது. வாழ்க் கையை அலங்காரமாக யமுனை என்று அழைக் கிறேன். இருந்தாலும் உண்மையில் வாழ்க் கையைப் பார்க்கப் பயமாக இருக்கிறது. அதில் முழுகத் துணிந்த எவ்வளவோ பேர் அதில் முழுகியே போய்விட்டார்கள். வாழ்க்கை என்பது எளிய விஷயமல்ல; அதன் ஒவ்வொரு படியிலும் துக்கம், வறுமை, முரண்பாடு. அது மட்டுமல்ல, ஒவ்வொரு படியிலும் அன்பும் கருணையுங்கூட உண்டு. இல்லாவிட்டால் மனித வாழ்க்கையின் போக்கு என்றே நின்று போயிருக்கும். ஆனல் வாழ்க்கை மனிதனேடு நின்றுவிடவில்லை. அதன் போக்கை யாரும் தடை செய்ய முடியாது. மனிதன் இல்லா விட்டாலும் வாழ்க்கை இருந்துகொண்டே இருக்கும்.

கலைஞனைப் பொறுத்த வரையில் மனிதனை விலக்கிவிட்டுச் சிந்தித்தால் துக்கம், வறுமை, அன்பு ஆகிய உணர்ச்சிகளுக்குப் பொருள் இல்லை என்று தோன்றும். ஆனல் மனித உணர்வுகளுக்கு அப்பால் உயர்ந்து நின்று சிந் தித்தால் இவற்றின் உண்மையான பொருளை அறியலாம்.

ஆனல் இந்த வேலை கலைஞனுடையதல்ல; தத்துவ ஞானியுடையது. கலைஞன் தத்துவ ஞானியாகவும் இருக்க முடியும். அவனுடைய கலைநோக்குடன் உலக நோக்கும் இணையலாம். இந்த இணக்கம் ஒரு சில பெருங்கலைஞர்கள் விஷயத்தில் ஏற்படுகிறது. உதாரணம்— தாந்தே, கெத்தே, ரவீந்திரர் ஆகியோர். ★

# ஒரு குட்டிக் கவிஞனின் சுயசரிதம்

208068

காதலி ! கவிதைக் காதலி !
கண்வழி ஏறிஎன் கனவினில் ஆடி—ஒரு
காமுகி யாகிய காதலி !

மதுக்கடை வாசலில்
மாறிய செருப்புக்கு—நான்
மனம்நொந்து போனவன் காதலி.
புதிர்வினை வஞ்சகப் பொய்யர்கள் புல்லிருட்
புவியில் நடந்தவன் காதலி !

முன்னமோர் அறிஞன்என் தெய்வதம் வந்தென்னை எங்கள்
முற்றப் புழுதிவிட்டே அழைத்து வந்தான்—இந்தச்
சின்னவன் கைகளில் ஆயிரம் தூரிகை
சிந்தனைச் சித்திரவேலை வைத்தான்—நான்

முற்றும் மலர்ந்திருந்தேன்—ஒரு
மோகக் கதைமேலே—மனம்
முதிர்ந்து முதிர்ந்திருந்தேன்—பின்
வெற்று நினைவெனும் பாழிலே—பொய்
வேஷ முகநட்பின் நாரிலே
இற்று விழுந்துவிட்டேன்—எனை
இழந்து உதிர்ந்துவிட்டேன்.

கருவளை மோதிரக் கார்குழல் கொஞ்சலும்—இரு
கண்களில் மந்திர மன்மதன் மையலும்
ஒருத்தி சுமந்தெங்கள் ஊர்ப்புறம் வந்துநின்றாள்—பின்
ஓடிய ஆண்டுகள் பலவும் வனப்புற
ஊர்வலமாக வந்தாள்.

காற்றின் மலைமகள் என்னுமோர் மணல்மேட்டிலே—மாலைக்
கவிதையென்றாகிய சூரியவீச்சிலே
ஆற்றின்கரையிலே பின்அங்கோர் தென்னந்தோப்பிலே—ஓ
ஆயிரம் பிள்ளைக் கனவுகள் அவையெலாம்.
கோயிலில் விக்ரக வாசலில் பாடுவாள்—பின்
கோடு கிழித்து நொண்டி ஆடுவாள்—இன்று
போயின போயினஅப் பொன்மகள் நினைவுகள்—ஒரு
போதைக் கவிதைக் கிறுக்கனின் பாலியக் கனவுகள்.

காதலி ! கவிதைக் காதலி !
கண்வழி ஏறிஎன் கனவினில் ஆடி—ஒரு
காமுகி யாகிய காதலி.

சித்தர்கள் ஞான சபைகளில் ஏறி—நானோர்
சித்தனாய் மாறிவிட்டேன்.
சின்னஞ் சிறுவர்கள் பிள்ளைக் களியினில்
சேர்ந்தும் நான் ஆடிவிட்டேன்—நான்

முற்றும் மலர்ந்திருந்தேன்—ஒரு
மோகக் கதைமேலே—மனம்
முதிர்ந்து முதிர்ந்திருந்தேன்—பின்
வெற்று நினைவெனும் பாழிலே—பொய்
வேஷ முகநட்பின் நாரிலே
இற்று விழுந்துவிட்டேன்—எனை
இழந்து உதிர்ந்துவிட்டேன்.



நா. காமராசன்




தமிழ் வளர்ச்சிக்கு ராஜாஜி ஆற்றிய பணி பெரிது. அல்லும் பகலும் அரசியலில் ஈடுபட்டிருந்தாலும் அது அவரை முழுமையாக ஆட்கொண்டு விடவில்லை. அவரை அடக்கிவிட அரசியலுக்கு ஆற்றல் போதியதாக இல்லை!

ஆன்மீகம்—தத்துவம் முதல் அன்றாட நிகழ்ச்சிகள் வரை, நுட்ப அறிவியல் துறைகள் தொடங்கி குழந்தைகளுக்கான எளிய கதைகள்; கட்டுரைகள் வரை ராஜாஜி எழுதியிருக்கிறார். ஏனைய மொழிக் காவியங்களையும் பிற நாட்டு நல்லறிஞர்களின் கருத்துக்களையும் இம் மூதறிஞர் தமிழில் தந்துள்ளார். அம்மட்டோ?

திருக்குறளையும் ஔவையார் பாடல்களையும் கம்ப—ராமாயணத்தின் சில பகுதிகளையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, தமிழின் பெருமையை உலகறியும்படி ராஜாஜி செய்திருக்கிறார். இந்நாளில் திருக்குறளைப் பற்றிப் பேசுவது அரசியலில் ஆதாயம் தரும்; தேர்தலில்வாக்குகள் தரும். ஆயினும்எப்பயனும் கருதாது ராஜாஜி திருக்குறளை ஐம்பது ஆண்டுகளுக்குமுன் ஆங்கிலத்தில் வெளியிட்டார். மக்கள் கைதட்ட வேண்டும் என்பதற்காக அவர் திருக்குறளை மொழி பெயர்க்கவில்லை. தமிழ் எவ்விதத்திலும் ஏற்றம் பெறாத காலத்தில் ராஜாஜி திருக்குறளைப் பரப்பினார்.

தமிழ் இசை இயக்கம் தொடங்கியபோது, அதற்கு உறுதுணையாக விளங்கியவர் ராஜாஜி. இந்த இயக்கம் அடைந்துள்ள வெற்றிக்கு ராஜாஜியின் பேராதரவு ஒரு முக்கிய காரணம் எனலாம். ராஜாஜியின் தமிழ் இசைத் தொண்டுகளைப் பாராட்டும் முறையில் அந்த இயக்கத்தைத் தொடங்கிய அண்ணாமலை அரசர், தம் வாழ்நாளின் இறுதிச் செயலாக தமிழ்ச் இசைச் சங்கத்தில் 'ராஜாஜி தம்புராப் பரிசு'த் திட்டத்தை ஏற்படுத்தினார்.

அறிவியல் நூல்களை அனைத்தையும் தமிழில் சொல்லிக் கொடுக்க முடியும் என்பதை ராஜாஜி பல ஆண்டுகளுக்கு முன்னரே உறுதிப்படுத்தியிருக்கிறார். விபுலானந்த அடிகள் தலைமையில் 40 ஆண்டுகளுக்குமுன் சென்னையில்நடைபெற்ற தமிழ் அன்பர் மாநாட்டில் அவர் முற்றிலும் ஈடுபட்டு, கலைச் சொல்லாக்கத்திற்கு மிகவும் உதவினார்.

நுனிப்புல் மேயாது எதையும் நுணுகி ஆய்ந்து, கருத்துக் கூறுவது ராஜாஜிக்கு கை வந்த கலை. அவருடைய தமிழ்த் தொண்டிலும் இந்த இயல்பைக்காண்கிறோம். தமிழ்நாடு என்ற பெயரை நமது மாநில அரசு ஆங்கிலத்தில் Tamil Nadu என்று கடைசி எழுத்தாக 'உ' சேர்த்தது. இதனால் தமிழ்நாடு என்று பிற மொழியாளர்கள் ஒலிப்பார்கள், உகரத்தை வருவித்து ஒலிக்க நேருமாதலால் அவர்கள் அல்லல்படுவார்கள். Tamil Nad என்று உகரத்தை விடுத்து எழுதுவதே சரி என்று ராஜாஜி ஒருவர் தான் சுட்டிக்காட்டினார். அவர் சொன்னதாலேயே, தமிழ்நாடு அரசு தன் கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை போலும்! அவரோடு 'டு' போட்டுவிட்டது!

தமிழ் இலக்கண மரபை ராஜாஜி நன்கு உணர்ந்திருந்தார். தம் பெயரை இராஜகோபாலாச்சாரி என்றே அவர் எழுதி வந்தார். தமிழ்ச் சொல்லின் முதல் எழுத்தாக 'ர' கரம் வராது!

'ட' கரமும் முதல் எழுத்தாக வரக்கூடாது என்பது தமிழ் மரபு. இதை ராஜாஜி எடுத்துக் கூறிய பிறகே, டில்லி தமிழ்ச் சங்கம், பெயரை தில்லி தமிழ்ச் சங்கம் ஆக்கிக்கொண்டது.

சிறைப்பட்ட காலங்களில் தம்முடன் கைதிகளாக இருந்த பிற மொழியாளர்களுக்கு ராஜாஜி தமிழ் மொழியைக் கற்பித்தார். இதுவும் அவருடைய தமிழ்த் தொண்டுகளில் குறிப்பிடத்தக்கது.

மேற்கு வங்காளக் கவர்னர் என்ற முறையில் ராஜாஜி, சாந்திநிகேதனத்துக்குச் சென்று கவியரசர் இரவீந்திரநாத தாகூர் நிறுவிய விசுவபாரதி பல்கலைக் கழகத்தைப்பார்வையிட்டார். சீனம் முதலிய நூல்களெல்லாம் அங்கே ஏற்றம் பெற்றிருப்பதை ராஜாஜி கண்டார். தமிழும் அப்பெரும் கல்விக்கூடத்தில் இடம் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

## சித்திரை திங்களுக்கு சிறப்புச் சலுகை!

**முன்னேட்டம்**
—ஜெயகாந்தன் 5 00

**வாழ்விக்க வந்த காந்தி**
ரோமெயின் ரோலந்து
தமிழில்: ஜெயகாந்தன் 5 00

**பச்சைக்கனவு**
—லா. ச. ராமாமிருதம் 4 00

**குழந்தையின் கனவு**
—தேவபாரதி 4 00

**மெல்லத் திறக்கும் மனக்கதவு**
—மலர்மன்னன் 4 00

**இதயம் ஒன்றுதான்**
—பி. சி. கணேசன் 4 00

**நூறு பூக்கள் மலரும்**
—உன்னிகிருஷ்ணன்புதூர் 15 00
(கேரள சாகித்திய அகாடமி பரிசு நாவல்)

**புயலிலே ஒரு தோணி**
—ப. சிங்காரம் 10 00

இந்த எட்டு புத்தகங்கள் வாங்குவோர்க்கு 15% கழிவு தருகின்றோம். தேவைக்கு M. O. செய்க.

**கலைஞன் பதிப்பகம்,**
**81, பாண்டி பசார்,**
**சென்னை-600017.**


உடனே ராஜா சர் அண்ணமலை செட்டியாருக்கு எழுதி அவர் வாயிலாக அந்த எண்ணத்தை நிறைவேற்றினர். இவ்வாறு உருவான தமிழ் நூல் நிலையத்தை இன்று விசுவபாரதியில் காணுகிறோம்.

பிறர் சொல்வதை வேதவாக்காக ஏற்காமல், தாமே எதையும் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவது ராஜாஜியின் தனித்தன்மை. 'வைஸ் சான்சலர்' (Vice—Chancellor) என்ற ஆங்கிலச் சொல் இப்போது 'துணை வேந்தர்' என்று தமிழில் அனைவராலும் குறிப்பிடப்படுகிறது. இதைப்பற்றி ஒருமுறை இராஜாஜி சொன்னர்.

''வைஸ் சான்சலர் என்றுதான் தமிழிலும் சொல்லி வந்தோம், 1929-ல் புதிதாக அண்ணமலை யுனிவர்சிடி ஏற்பட்டது; யுனிவர்சிடி, வைஸ்சான்சலர் என்பதற்கெல்லாம் அங்குதான் புதிய தமிழ்ச் சொற்கள் தமிழ்ப் பண்டிதர்களால் உண்டாக்கப்பட்டன. அண்ணமலை செட்டியார்க்கு ராஜா பட்டம் வந்த சமயம்; ஆகையால் ராஜா பட்டத்தை, அவருடைய பதவிப் பெயரான Pro Chancellor என்பதோடு இணைத்து, இணை வேந்தர் என்றும் அதற்கேற்றாற்போல Chancellor, Vice-Chancellor என்றசொற்களுக்கு வேந்தர், துணைவேந்தர் என்ற சொற்களும் உருவாக்கப் பெற்றன. ஆனல் Vice Chancellor என்பதற்குப் பல்கலைக் கழகத் தலைவர் என்பதுதான் சுருக்கமான பொருத்தமான தமிழ்ச்சொல்.''

பார்லிமெண்டு என்ற ஆங்கிலச் சொல் அப்படியே தமிழ்ப் பத்திரிகைகளிலும் மேடைகளிலும் ஆளப்பட்டு வந்தது. அதற்குப் பாராளுமன்றம் எனத் தமிழ் வடிவம் கொடுத்தவர் ராஜாஜி. சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் ஆட்சி பார் எங்கும் உள்ளது. அதை ஆளும் மன்றம் பாராளுமன்றம் என விளக்கம் கொடுத்தார். அதைத் தொடர்ந்து, சுதந்திர இந்தியாவின் பாராளுமன்றம், நாடாளுமன்றம் என்று பெயர் பெற்றிருக்கிறது.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வளர்ச்சியிலும், சங்கத்திற்குக் கட்டிடம் கட்ட வேண்டும் என்பதிலும் ராஜாஜி மிகவும் ஆர்வமாக இருந்தார். அந்த எண்ணம் ஈடேறவில்லை. அதை விரிக்கிற் பெருகும்.

டி. கே. சி. கல்கி ஆகியோர் தமிழ்ப்பணிகளை ஊக்குவித்துப் பாராட்டி வந்தவர் ராஜாஜி.

ராஜாஜி தலைமையில் நடந்த உப்புசத்யாக்கிரகத்தில் உருவானவரே நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

தமிழ் வளர்ச்சியில் தலைசிறந்து விளங்கும் சென்னை மாநகரைத் தமிழருக்குத் தந்தவர் ராஜாஜி. சென்னை கொண்டான் ராஜாஜியின் புகழ் வாழ்க, வளர்க! ★




இந்திரா பார்த்தசாரதி

தமிழ் நாடகத்துக்குத் தமிழ்க் கவிதையைப் போல் ஒரு நீண்ட மரபு கிடையாது. இந்த வகையில் தமிழ் நாடகம் அதிர்ஷ்டம் செய்தது என்று சொல்லலாம். என்னைக் கம்பனுடனே அல்லது இளங்கோ அடிகளோடோ ஒப்பிட்டு யாரும் குறைகூற மாட்டார்கள் என்ற துணிவே என்னை மேலும் மேலும் நாடகம் எழுதத் தூண்டுகிறது. மரபின்மையே தமிழ் நாடக வளர்ச்சிக்கு அஸ்திவாரமாக அமையக்கூடும் என்பது என் நம்பிக்கை.

நாடகத்துக்குச் சொல், காட்சியமைப்பு ஆகியவை அடிப்படை. இதன் காரணமாக நாடகம், வெறும் இலக்கியமாகவோ (படிப்பதற்கென்று) அல்லது பிரமிப்பூட்டும் ஜோடனை மாட்சியாகவோ மாறிவிடக் கூடிய ஆபத்து உண்டு. மற்றைய கலை வடிவங்களைவிட நாடகத்துக்கு யதார்த்தம் மிகத் தேவை. ஆனால் அதே சமயத்தில் தனக்கென்று அமைத்துக் கொண்டிருக்கிற சில மரபுகளை இது பின்பற்ற வேண்டிய அவசியத்தின் காரணமாக, வெறும் பொம்மலாட்டமாகவோ அல்லது குறியீட்டுக் களஞ்சியமாகவோ இது போய்விடக் கூடிய நிலையினின்றும் இதைக் காப்பாற்ற வேண்டியது முக்கியம். நாடகத்தின் தரம், அதைப் பார்க்கின்றவர்களின் வாழ்க்கை மதிப்பீட்டுக்களைப் பொறுத்ததாய் அமைகின்றது. இதன் காரணமாக ஒரு நிகழ்காலச் சமுதாயத்தை மனத்தில் கொண்டே நாடகம் எழுத வேண்டுமென்று ஒரு நாடக ஆசிரியன் நினைப்பதில் தவறுமொன்றில்லை. நிகழ்காலச் சமுதாயத்தைப் பற்றி நினைக்கும்போது, தான் எழுதும் நாடகம் ஒரு 'வெற்றி'யாக இருக்கவேண்டும் என்று அவன் கருதுவதும் இயற்கைதான். இந்த நினைவு எழும்போது, நாடகத்தின் சிருஷ்டித் தரம் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது.

ஆகவே நாடகம் எழுதுவதென்பது ஒரு சுலபமான காரியமன்று. ஆனால் நாடகம் எழுத வேண்டுமென்று ஏன் தோன்றுகிறது? நாடகம் எழுதுவதினால் ஏற்படும் பலன்கள், பிரத்யட்சமானவை. இது வெறும் பணத்தை மட்டும் பொறுத்த விஷயமல்ல. நாடக ஆசிரியன் கண் எதிரே தன் ரஸிகர்களைக் காணுகின்றான். நாவலாசிரியனின் ரஸிகர்கள் அவன் கண்ணுக்குத் தெரியாமல் எங்கெங்கோ சிதறிக் கிடக்கிறார்கள். தான் சிருஷ்டித்த கதாபாத்திரங்கள் உயிருடன் அரங்கத்தில் நடமாடும் போது, நாடக ஆசிரியனுக்கு ஒரு பிரும்மாவுக்கு உரிய செருக்கு ஏற்படுகிறது. கலைக்கும் வாழ்க்கைக்கும் வேறுபாடு அறவே மறைவது நாடகத்தில்தான்.

யார் நாடகம் பார்க்கப் போகிறார்கள்? இது மிகவும் சுவாரஸ்யமான கேள்வி. இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில், நாடகம் ஒரு புதிய அனுபவமாக மேடையேறியபோது, பெரும்பான்மையான மக்களுக்குக் களிப்பூட்டும் ஒரு சாதனமாகவே உருவாயிற்று. தமிழ்ச் சமுதாயப் பிரக்ஞையை உபதேசங்களினின்றும் பிரித்துக் காண முடியாது என்ற காரணத்தால், ரிஷிகள் நிறைந்த புராணக் கதைகள், மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டும் வண்ணம் நடித்துக் காட்டப்பட்டன. மேல் நாடுகளில் 14-ம் நூற்றாண்டில் பரவியிருந்த 'மிஸ்டிரி ப்ளேஸ்' (mystery plays)களுக்கும் இவைகளுக்கும் வித்தியாசமில்லை. பைபிள் கதைகளை நடித்துக் காட்ட வேண்டுமென்ற காரணத்துக்காகவே 'மிஸ்டரி ப்ளேஸ்' எழுந்தன என்று கூறுவார்கள். பிரபுக்களும், தொழிலாளிகளும் ரஸனை வேறுபாடு ஒன்றில்லாமல் இந்த நாடகங்களைக் கண்டுகளித்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்திலிருந்த தமிழ் நாடகங்கள் இதே வகையைச் சார்ந்தன.

இதற்குப் பிறகு சமூக நாடகங்கள் உருவாயின. தீண்டாமை, ஜாதி வேறுபாடுகள், வரதட்சிணைக் கொடுமை, விடுதலை இயக்கம் போன்ற கருத்துக்களைப் பகைப்புலனாகக் கொண்டு பல நாடகங்கள் எழுதப்பட்டன. இந்த நாடகங்களில் நன்மையையும் தீமையையும் உருவகப்படுத்திக் காட்ட, கதாநாயகனையும், வில்லனையும், அந்தந்தக் குணத்தின்

வெளியீடாக அமைப்பது வழக்கம். கதாநாயகன் கனவிலும் மற்றவர்களுக்குத் தீங்கு நினைக்கமாட்டான். தீண்டாமையை வெறுப்பவன். கீழ்ச் சாதிப் பெண்ணை மணக்க விரும்புவான். கதராடையே உடுத்தியிருப்பான். நாட்டு விடுதலைக்காகப் பாரதியார் பாடல்கள் பாடுவான். 'வில்லன்' இதற்கு மாறான மன இயல்பு உடையவன். இறுதியில் அறம் வெல்லும்; பாவம் தோற்கும். மேல் நாடுகளில் 'மிஸ்டிரி ப்ளேஸ்' காலத்தை ஒட்டிப் பிற்காலத்தில் எழுந்த 'மொராலிட்டி ப்ளேஸ்' (morality plays களுக்கும் இவைகளுக்கும் வேறுபாடு இல்லை. ஒவ்வொரு பண்பையும் குணச் சித்திரமாக மேடை ஏற்றுவது 'மொராலிட்டி' நாடகங்களின் தன்மை; நாடக ஆசிரியன் சொந்தமாகக் கதை எழுதுவது என்பது இக்காலத்தில்தான் ஏற்பட்டது.

பிறகு சரித்திர மகோன்னதங்கள் எழுந்தன. ஒரு பழைய பொற்காலத்தை (அது மானசீகமாகவும் இருக்கலாம்) நினைத்து அசை போடும் காலம். 'மொராலிட்டி' நாடகங்களுக்குப் பிறகு எலிஜபெத் காலத்தில் சரித்திர நாடகங்கள் எழுதப்பட்டதை நினைவுகூர வேண்டும். ஆனால் தமிழ் நாடக ஆசிரியர்களில் ஷேக்ஸ்பியரோ அல்லது மார்லோவோ தோன்றவில்லை என்பதுதான் முக்கியம்.

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு காலகட்டத்திலும், அந்தந்தக் காலத்திய மக்கள் விரும்பியதற்கேற்பத்தான் நாடகங்கள் உருவாயின என்பதைக் குறிப்பிட வேண்டும். சுதந்திரத்திற்குப் பிறகு, ஒரு போலி அறிவு மயக்கத்துடன் கூடிய வலுவான மத்யதர வர்க்கம் ஏற்படத் தொடங்கியதும் இதனுடைய ரஸனைக்குத் தீனி போடுவதற்கென்று நாடகங்கள் உருவாயின. திரு. மணி சாஸ்திரியை வேதனைக்குள்ளாக்கும் பெரும்பான்மையான நாடகங்கள் இவ் வகையைச் சார்ந்தவை தான்.

ஆனால் நாடக உலகில் 'பெரும்பான்மையோர் அரங்கம்', 'சிறுபான்மையோர் அரங்கம்' என்று எப்பொழுதுமே உண்டு. மேல் நாடுகளில், ப்ராட்வே, வெஸ்ட் என்ட், புலிவார்ட்ஸ் என்று கூறப்படுவனவெல்லாம் 'பெரும்பான்மையோர் அரங்கம். பல்கலைக் கழக நாடக அமைப்புகளும், 'ஆஃப் ப்ராட்வே' கொட்டகைகளும், 'சிறுபான்மையோர் அரங்கத்'துக்கு உதாரணமாக இருக்கின்றன. இதை அரசியல் மொழியில் சொல்லப் போனால், 'சிறுபான்மையோர் அரங்கம்', இடதுசாரியைச் சார்ந்தது. 'பெரும்பான்மையோர் அரங்கம்' வலதுசாரி.

வெற்றி நாடகங்கள் நடத்த விரும்புகின்றவர்கள் அனைவரும் இப்பெரும்பான்மையோர் அரங்கத்தைச் சார்ந்தவர்கள். பண முதலீடு செய்பவர்கள். போட்ட பணத்தை லாபத்துடன் எதிர்பார்ப்பவர்கள். நாடக 'வெற்றி' என்பது மக்களுடைய ரஸனையைப் பொறுத்த விஷயம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு வகையான ரஸனை உருவாகி அது ஸ்திரப்பட்டால்தான், இந்த ரஸனைக்கேற்ப நாடகத்தை உருவாக்க இம் முதலாளிகள் முயல்வார்கள். (இக்காலப் பிரபல பத்திரிகை நாவலாசிரியர்கள், வர்த்தகக் காரணங்களுக்காக 'நியூவேவ்' கதைகள் எழுதுவது போல) ஆனால் ஒரு ரஸனை உருவாகி, ஸ்திரப்படுவதற்குள், காலத்தால் குறுகிவிட்ட இவ்வுலகில், கருத்துப் புரட்சிகளும், அவற்றால் ஏற்படும் பாதிப்புக்களும், சமுதாயத்திலும், தனி மனிதன் வாழ்க்கையிலும், பல விதமான மதிப்பு வேறுபாடுகளை விளைவித்த வண்ணம் இருக்கின்றன. ஆகவே ஒரு ரஸனை உருவாகி, ஜனரஞ்சகமாக ஸ்திரப்படுவதற்குள், அது காலங்கடந்த ரஸனையாக மாறிவிடுகிறது. 'பெரும்பான்மையோர் அரங்கம்' ஸ்திரப்பட்ட இந்த ரஸனையை நம்பித்தான் முதலீடு செய்கின்றது என்ற காரணத்தால், கருத்துப் போக்காகக் காலெண்டர் கணக்கில் இந் நாடகங்கள் மிகவும் பின்தங்கியிருக்கின்றன என்ற குற்றச்சாட்டினின்றும் மீள முடியவில்லை.

'சிறுபான்மை அரங்கத்துக்கு' முதலீடு அதிகமில்லை. இதுவே பரிசோதனை செய்வதற்கான துணிவைத் தருகிறது. இந்த நாடகங்கள் மக்கள் ரஸனை ரீதியாக வெற்றியடைந்து விட்டால், 'இது பரிசோதனை நாடகந்தானா?' என்று சந்தேகப்படும் விமர்சகர்களும் உண்டு. 'சராசரி மனிதர்களுக்குப் புரியாமல் எழுதப்படுவதுதான் இலக்கியம்' என்று வாதிக்கும் இவ்விமர்சகர்களுக்கு, ஒரு சராசரி மனிதன் 'இந்த நாடகம் நன்றாக இருக்கிறது' என்று கூறிவிட்டால், இது அவர்களை அவமதிப்பது போல் அவர்களுக்குப்படுகிறது. கோபம் நாடகத்தின் மீது திரும்பி, 'இது பரிசோதனை நாடகமல்ல' என்று முடிவு கட்டுகிறார்கள். காலம் இந்த அப்பாவிகளுக்காகக் காத்திருப்பதில்லை என்பதுதான் நாடக ஆசிரியனுக்கு நம்பிக்கை தரும் விஷயம்.

இன்னொரு வகையான விமர்சகர்கள் இருக்கிறார்கள். நாடகம், இசை, நாட்டியம், இன்னும் என்னென்னவோ கலைத்துறைகளிலெல்லாம் புகுந்து விமர்சனம் செய்கிறேன் என்று குட்டைக் குழப்புகின்றவர்கள் இவர்கள் தமிழ் நாட்டுப் பிரபலப் பத்திரிகைகளில் அரசியல் கடிதங்கள் எழுதினாலும் ஆச்சரியமில்லை. தமிழ் நாடகத்தின் அவல நிலை என்று அங்கலாய்க்கும் இவர்கள், இந்த அவல நிலையை எடுத்துக்

காட்டுவதுபோல், சில சமயம் நாடகங்களை இயக்குவிப்பதுதான் ஆச்சர்யமாக இருக்கிறது.

நான் தமிழ் நாடகங்கள் அதிகம் பார்ப்பதில்லை. 'மழை' என்ற என் முதல் நாடகத்தை 'ஒரு வித்தியாசமான நாடகமாக' எழுத வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு நான் எழுதவில்லை. நான் தமிழ் நாடகங்கள் அதிகம் பார்த்தது இல்லை என்பதே, 'மழை' யைப் பார்த்தவர்களுக்கு, படித்தவர்களுக்கு 'இது ஒரு வித்தியாசமான நாடகம்' என்று தோன்றும்படியாக, ஓர் ஆக்கப்பூர்வமான விளைவை ஏற்படுத்தியிருக்கலாம் என்றால் இந் நாடகத்தை இப்படித்தான் எழுதியிருக்க முடியுமே தவிர, வேறு வழியாக எழுதியிருக்க முடியாது என்பதே இந்நாடகத்தின் நேர்மை.

'மழை' தில்லியில் ஆறு தடவை மேடை ஏறியிருக்கிறது. 'மனோதத்துவக் கருத்துக் குவியல்களின் பிரதிபிம்பங்களோ' என்னவோ, தில்லியில் இந்நாடகத்தைப் பார்த்த பலர் 'இந்த மாதிரிக் குடும்பங்கள் பல இருக்கின்றன' என்று என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இதைவிட 'ரியலிஸ'த்துக்கு வெற்றி வேறு என்ன இருக்க முடியும் என்று எனக்குப் புரியவில்லை. ஃப்ராயிடையும், ஆல்டரையும், யங்கையும் சிந்தனையில், வைத்துக் குழப்பிக் கொண்டவர்கள் 'ரியலிஸ'த்தை காணத் தவறியிருக்கக் கூடும். 'மழை'யைப் பார்க்கிறவர்கள்; எலெக்ரா காம்ப்ளெக்ஸ், எடிப்பஸ் காம்ப்ளெக்ஸ், ஆகியவற்றைப்பற்றித் தெரிந்து வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் எதிர் பார்க்கவில்லை.

என்னுடைய அடுத்த நாடகமாகிய 'போர்வை போர்த்திய உடல்களு'க்கும் தில்லித் தமிழர்களிடம் ஒரு நல்ல வரவேற்பு இருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். தமிழர்களுடைய ரஸனையைக் குறை கூறிக் கொண்டே அசட்டு நாடகங்களை மேடையேற்றுகிறவர்கள் இதைக் கவனித்தல் அவசியம்.

தமிழ்நாட்டு 'நாடக அவல நிலை', நாடகத்தை மட்டும் பொறுத்த விஷயமன்று... தமிழ் சினிமா, இலக்கிய ரஸனை, பிரபலப் பத்திரிகைகள் ஆகிய எல்லாவற்றையும் இதனோடு சேர்த்துப் பார்க்க வேண்டும். தமிழர்கள் ரஸனையில், சமுதாய ரீதியாக எப்பொழுதோ ஏதோ ஒரு தவறு நிகழ்ந்து விட்டது போலிருக்கிறது; பரதநாட்டியம், இசை, சிற்பக்கலை போன்றவற்றில் மிகவும் நாசூக்கான நளினப் பார்வையைப் பெற்ற, மக்களுடைய இன்றைய ர'ஸனை இக்கால தமிழ் நாடகங்களும், திரைப் படங்களுந்தாம் என்றால், தமிழ்ச் சமுதாய வரலாற்றையும், பிரக்ஞையும் ஆராய்கின்றவர்களுக்கு இப்பிரச்னை ஒரு சவாலாக இருக்கும் என்பது பற்றிச் சந்தேகம் இல்லை.

தமிழ் இனம் ஒரு விசித்திரமான இனம். அரசியல்— திரைப்படம்—பக்தி— இலக்கியம்— நாடகம் ஆகிய எல்லாவற்றையும் இணைத்து இவற்றை ஒரேவிதமான மனோபாவத்துடன் அணுகும் மனப்பான்மை இந்தியாவில் வேறு எந்த இனத்துக்கும் இல்லைஎன்று சொல்லலாம். தமிழினத்தின் ரஸனை பிரதிபலிப்பாக தமிழ்ப் பிரபலப்பத்திரிகைகள் இருக்கின்றன. புதிய அலைக்கதைகளும், ஸ்தல புராண மகிமைச் செய்திகளும் சேர்ந்து ஒரே பத்திரிகையில் இருப்பது என்பது வேறு எந்த மொழியிலும் இயலாத காரியம். 'பெரும்பான்மையோர் அரங்கமாக'த் தமிழ் நாடகங்கள் இச்சமுதாய மதிப்புக்களைத்தாம் படம் பிடித்துக் காட்டுகின்றன. மக்கள் எதற்குத்தகுதியானவர்களோ அந்த நாடகத்தைத்தான் பெறுகிறார்கள். ★


## எமது புதிய வெளியீடுகள்

★

| | | |
|---|---|---|
| சினிமாவுக்குப் போன சித்தாள் | —ஜெயகாந்தன் | 2 75 |
| அவர்கள் உள்ளே இருக்கிறார்கள் | —ஜெயகாந்தன் | 2 75 |
| ஒரு மனிதன்-ஒரு வீடு-ஒரு உலகம் | —ஜெயகாந்தன் | 7 50 |
| உனக்குள் இருப்பவன் நான் | —விட்டல் ராவ் | 4 50 |
| கடல்நுரை | —மகரிஷி | 3 00 |

**மீனாட்சி புத்தக நிலையம்,**
**60, மேலக் கோபுரத் தெரு,**
**மதுரை-1.**

# நான் அறிந்த ராஜாஜி

**கி. சந்திரசேகரன்**

ராஜாஜி வயதில் பெரியவர்; அறிவில் பெரியவர்; அனுபவத்தில் பெரியவர். ஆயினும் தம்மிடம் நெருங்கிப் பழகியவரிடம் துளியும் தமது உயர்வை எந்த விதத்திலும் உணர்த்திக் காட்ட முற்படமாட்டார். அவர் பேச்சிலும் நடத்தையிலும் நம்மெல்லோரையும்விட மிகவும் புத்தி கூர்மையும் அடக்கமுமானவர் என்பதை நாம் அறியலாமே தவிர, அவராக எந்தச் சமயத்திலும் தனது மதிநுட்பத்தை எண்ணிக் கொண்டோ அல்லது தமக்குரிய சாமர்த்தியத்தை விளம்பரப்படுத்தியோ அண்டியவர்களின் குறையை எடுத்துக் காட்டும் வகையில் நடந்துகொள்ளமாட்டார். அக்காரணமே சாமான்யர்களும் அவரிடம் சங்கோசமின்றித் தங்கள் கருத்துக்களைச் சொல்லியும், விளக்கியும் உரிமை பாராட்ட இயலும்.

என் நினைவில் உள்ளன பல சந்தர்ப்பங்கள். ராஜாஜியினிடம் கவலையே இல்லாது சரியான கருத்தென்று நம் உள்ளம் உணர்த்தியதை, அவருக்கு சற்றும் வித்தியாசமாகவே தோன்றுது என்ற எண்ணத்துடன் கூறியது, என் ஞாபகத்தில் இருக்கிறது. என்னிடம் அவர் குறைகளைக் காண்பவராயினும், எனக்கு எந்த விதமான பேச்சு உரிமையையும் மறுத்ததில்லை.

ஒன்றிரண்டு மறக்கவொண்ணாத செய்திகளை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். உண்மையில் அவரிடம் நான் கண்ட அதிசய குணங்களையே வெளிப்படுத்த இவைகளைக் குறிக்கின்றேன்.

1940-ம் ஆண்டில் காலஞ்சென்ற எஸ். வி. வி. (S.V.V.) என்ற அரிய எழுத்தாளருக்கு அமரர் கல்கி அவர்களும் நானும் சேர்ந்து, இதர சில முக்கிய செல்வாக்குள்ளவர்கள் கொண்ட குழாம் ஒன்றை கூட்டினோம். அதாவது, எஸ். வி. வி. அவர்களின் மணிவிழாவை யொட்டி அவருக்கொரு பணமுடிப்பை வழங்குவதென்று தீர்மானித்து, முடிந்த அளவு பணமும் திரட்டி, சிறப்பாகப் பல்கலைக் கழகப் பரீட்சை மண்டபத்தில் விழாவை ஏற்பாடு செய்தோம். அதற்குத் தலைமை தாங்க மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரை அழைத்திருந்தோம். ரசிகமணி டி. கே. சி., சத்தியமூர்த்தி, திருப்புகழ்மணி கிருஷ்ணசுவாமி ஐயர் முதலியவர்கள் அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாட ஒப்புக் கொண்டிருந்தார்கள்.

கல்கியும் நானும் ராஜாஜியையும் அதில் கலந்துகொள்ள அழைக்க அவரிடம் சென்றோம். ராஜாஜி தாம் கலந்துகொள்ள இசையாததுடன், ஓர் நல்லுபதேசத்தையும் வழங்கினார். ''மணி விழாக் கொண்டாடுவதை நான் விரும்புவதில்லை. ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு நாளும் பிறந்த நாள்தான். தனியாக ஒரு நாளை பிறந்த நாளாகக் கொண்டாடுவதில் அர்த்தமில்லை. காலையில் மனிதன் கண் விழிக்கையில் அன்றுடம் புதுப் பிறவியைப் பெறுகிறுன். தூங்கச் சென்றவனுக்கு நீடித்த தூக்கமாகவும் இருந்துவிடாமல், காலையில் விழிப்பு பெறுவதென்பது அவன் புனர்ஜன்மம் எடுப்பதை ஒத்தது. ஆகையால் நான் இம்மாதிரி விழாக்களில் கலந்து கொள்வதில்லை. மணி விழாவுடன் சேர்க்காமல் தனியாக ஓர் எழுத்தாளன் என்ற முறையில் பாராட்டும் கூட்டமாக நீங்கள் செய்வதானல் நான் வருகிறேன். இல்லையேல் நான் வருவது இயலாது'' என்று கூறிவிட்டார். அவர் இல்லாமலேயே அன்று அந்த விழா நடைபெற்றது.

பிற்பாடு வெகுநாள் கழித்து, ராஜாஜி பாரத நாடு சுதந்திரம் பெற்றபின், கவர்னர் ஜெனரலாக இருக்கையில், 1948-ஆம் ஆண்டில் சென்னையில் ராஜாஜியின் எழுபதாவது பிறந்த நாளை விமர்சையாய்க் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் காங்கிரஸ் தலைவர்களால் செயல்பட்டு வந்தன. எனக்கு ராஜாஜி அவர்களுக்கு இந்த விழாவை ஏற்பாடு செய்வதில் திருப்தி இருக்காது என்று பட்டது. மேலும் தனக்கென்று எதையும் தனிப்பட்ட முறையில் தமது கொள்கைகளுக்கு விரோதமாய் அவர் விரும்ப

மாட்டார் என்பதும் நன்கு தோன்றியது. ஆகையால் நேரில் அவருக்கொரு கடிதம் எழுதினேன். அதாவது எஸ். வி. வி. அவர்களின் மணி விழா சம்பந்தமாய் நானும் கல்கி அவர்களும் சென்ற சமயம் அவர் கூறியதை ஞாபகப்படுத்தினேன். ஒருக்கால் அவருடைய சம்மதம் தெரிந்து கொள்ளாது விழாவைத் தொடங்குகிருர்களோ என்ற சந்தேகத்தையும் நான் அடைந்திருப்பதாத் தெரிவித்தேன். அடுத்த தபாலில் அவரிடமிருந்து இரண்டு பக்கங்களில் கடிதமொன்று எனக்குக் கிடைத்தது. தமது சம்மதத்தைப் பெருதுதான் சென்னை விழா ஏற்பாடாகியிருப்பதாகவும், தெரிவித்ததற்கு எனக்கு நன்றி செலுத்திவிட்டு, விழாவையும் நிறுத்த தாம் முனைவதாக அக்கடிதம் கூறியது. ஒரு வார்த்தை அதில் அவர் சேர்த்திருந்ததை இங்கே ஞாபகப்படுத்துகிறேன். inconvenient memory அசௌகரியமானஞாபகம் உங்களிடம் இருக்கிறதே!" என்றவாறு சிறிது நகைச்சுவையையும் கலந்து எழுதியிருந்தார். பிற்பாடு அந்த விழா நடவாததற்கு நான்தான் முக்கிய காரணமோ என்றுகூட நான் கவலையடைந்தேன். பெரியவருடைய பிறந்த தினத்தைக் கொண்டாடுவதில் எனக்கும் ஆர்வம் அதிகமே. இருப்பினும் அந்த சமயம் அவரை மதிப்பிடுகிறவர்கள், தமக்கென்று ஒரு நியாயம், பிறருக்கு ஒரு தனி நியாயம் என்று கருதிவிடுவார்களோ என்ற கவலையே என்னை அம்மாதிரி கடிதம் எழுதத் தூண்டியது. ராஜாஜி என்னைத் தவருகவே கருதவில்லை.

* * *

மற்ருெரு சம்பவம். எனது தந்தையாரின் பிறந்த நூற்றுண்டு விழா சென்னையில் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது. அதற்கு குலபதி முன்ஷி அவர்கள் தலைமை தாங்கினர். அன்று பேசுபவர்களில் ராஜாஜியும் ஒருவராக ஏற்பாடாகியிருந்தது. விழாவை ஏற்பாடு செய்தவர்களில், இருவர் ராஜாஜியிடம் சென்று, எனது சிறு நூல் ஒன்று, தகப்பனரின் வாழ்க்கை வரலாறு கொண்டதாக அச்சமயம் 'கலைமகள்' வெளியீடாக உருவானதை, வெளியிடும் பணியையும் செய்ய விண்ணப்பித்துக் கொண்டார்கள். ராஜாஜி பேசுவதை ஒப்புக் கொண்டாரேஒழிய அந்தப் புத்தகத்தைத் தாம் வெளியிடுவதைக் காட்டிலும் தலைவர் செய்வதே பொருத்தம் என்று கூறிவிட்டார். இதை நேயர்கள் என்னிடம் சொன்னுர்கள். நான் உடனே ராஜாஜிக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில், அவர் மறுத்ததை மிகவும் நியாயமென்றும், அச்சமயம் விழாவில் கொண்டாடப் பட்ட பெரியாரின் ஞாபகத்தில் ராஜாஜி முழுவதுமே கவனத்தைச் செலுத்துவதை விட்டு என் சிறு நூலைப் பற்றியும் கூறத் தொடங்கினுல், எதிர்பார்க்கப்படும் உரையை வேறு விஷயங்களிலும் திருப்புவதாக விளையும். ஆகையால் அவர் அந்நூலை வெளியிட ஒப்புக் கொள்ளாததே மேல்' என்றவாறு தெரிவித்திருந்தேன். உடனே ராஜாஜியிடமிருந்து எனக்கு வந்த பதில் பின் வருமாறு: ''உங்களைப்போல் பிறர் கருத்தைச் சரியாக அறியக் கூடியவர்கள் சிலரே உள்ளனர். என் நன்றி உங்களுக்கு" இருந்தது.

மேலே கூறிய இரண்டு சம்பவங்களிலும் எனது குறி, ராஜாஜியிடம் பழகும்பொழுது அவரவர்களுக்கு இயல்பான விதம் நடந்து கொள்வதைக் கொஞ்சமும் அவமதிக்காத விதம் அவர்களுக்கு உரிமை அளித்ததையே ஞாபகப்படுத்தும் பொருட்டு. மற்றபடி என்னிடம் அவர் தனியாக பட்சபாதத்தையோ, மற்ற எவருக்கும் அளிக்காத உரிமையைக் கொடுத்ததாகவோ எடுத்துக் காட்டுவதற்காக அல்ல. ★

## புதுமைப்பித்தன் கூறியவை:

★ எழுத்தாளர்களுக்கும், பிரசுரகர்த்தர்களுக்கும் உள்ள உறவு நிலைமையைப் பற்றி ஒரு சமயம் பேச்சு எழுந்தது. அதற்குப் புதுமைப்பித்தன்: ''எந்தப் பிரசுரகர்த்தர் வந்தாலும், 'இதை உங்களுக்காகத்தான் எழுதி வைத்திருக்கிறேன்' என்று சொல்ல வேண்டும். பணத்தை யார் முதலில் கொடுக்கிருர்களோ, அவர்களிடம் ஸ்கிரிப்ட்டைத் தூக்கிக் கொடுத்துவிட வேண்டும். அதாவது எழுத்தாளன் தாசியைப் போல் இருக்க வேண்டும்'' என்ருர்.

★ பிரபலமான ஆசிரியர் ஒருவர் தினப்பத்திரிகை ஒன்று நடத்தினர். அதில் 'குளவிக்கூடு' என்ற மகுடமிட்டு கிண்டல் விஷயங்கள் எழுதப்பட்டு வந்தன. புதுமைப்பித்தனிடம் ஒரு முறை நான், '' 'குளவிக்கூடு' எப்படியிருக்கிறது?'' என்று விசாரித்தேன். அதற்கு அவர் ''பத்திரிகை மண்மூட விட்டுத்தானே குளவி கூடு கட்டும்?'' என்ருர். அந்த வாக்கு உண்மையாகிப் பத்திரிகையும் அஸ்தமித்து மண் மூடிவிட்டது.

('வேடிக்கை மனிதர் புதுமைப்பித்தன்' என்ற நூலிலிருந்து: புவிவேந்தன்)

‘அப்புக்குட்டா நீ பலே ஆளுதான் டேய். உன் வலையிலே விழாதவங்க ஆரு இருக்கா? உம். நடத்திக்கோ, நடத்திக்கோ.’

நேற்றில்லை. முந்தாநாள்தான் வேலப்பன், அப்புக்குட்டனின் முகத்தைப் பார்த்து இதைச் சொன்னான். எந்த நேரத்தில் இதைச் சொன்னானோ? அந்த நேரத்தில் பிடித்த சனியன். இது வரையில் அரைப் பட்டினியும் திண்டாட்டமுமாகத்தான் ஆயிற்று.

அப்புக்குட்டன், ஆணிப்புற்று வளர்ந்த தன் உள்ளங்கால் தோலை சின்ன, பிளேடு துண்டை வைத்து செதுக்கி செதுக்கி எடுக்கும் மும்முரத்தினிடையே, இதைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்தான்.

நெடுக, கடைத் தெரு பூராவும் பந்த்! காய் கறிக்கடை, வெற்றிலை பாக்கு கடை கூட இல்லை. தலைநாள், ஞாயிற்றுக்கிழமை ஆன தினால். ‘பந்த்’ இன் சூன்யம் இன்னும் அழுத்தமாகத்தான் விழுந்தது.

காய்கறிக்கடை ஜங்ஷனிலுள்ள, சேட் புகையிலைக் கடையின், நீண்ட திண்ணையில் அமர்ந்திருந்து, கால் தோலை சீவிக் கொண்டிருந்த அப்புக்குட்டன், கடிகாரம் கட்டிக் கொண்டு போன யாரோ ஓராளிடம்; ‘‘மணி என்ன ஆச்சு, சார்?’’ என்று கேட்டான். பதினொன்றரை.’’ என்று பதில் வந்தபோது, கை பிளேடை திண்ணையில் எறிந்துவிட்டு, கால் செருப்பை மாட்டிக்கொண்டு எழுந்து நின்றான், அப்புக்குட்டன். இனி சோப்பளாங்கியாக உட்கார்ந்திருக்கமுடியாது!

# பறிமுதல்

**ஆ. மாதவன்**

சாலைக்கடை ரோட்டுக்கு வரும் எல்லா வெளியூர் ஆசாமிகளுக்கும், நேற்று முன்தினத்திலிருந்து திடீரென்று புத்திசாலித்தனம் வந்து விட்டதோ? என்னதான், வெள்ளைக்காக்காய் தலைகுப்புற பறக்கிற காலம் வந்தாலும் சாலைக்கடைக்கு வந்து போகிற ஆசாமிகளுக்கு, அப்படி ஒரு நல்ல காலம் வரவா போகிறது? வராதுதான். வெள்ளைக் காகம், தலைகுப்புற பறக்காதுதான். பிறகு, எப்படி இந்த ரெண்டு நாளும் தன் வலையில் ஒரு ஆசாமிகூட விழாமல் இருந்து விட்டான்கள்? நினைக்க நினைக்க அவனுக்கு வயிற்றெரிச்சலாக இருந்தது. வேலப்பனின் ‘கரு நாக்கை’ மனதிற்குள் சபித்தான். ஒண்ட வந்த பிடாரியோடு ஊர்ப் பிடாரியும் சேர்ந்தது போல நேற்று ஞாயிற்றுக்கிழமை. எப்படியோ சகித்துக் கொண்டாயிற்று. விடிந்தபோது, மாபெரும் இரைச்சலோடு ஒரு ஹர்த்தால் தலைவிரி கோலமாக வந்து நிற்கிறது. யாரோ கட்சித் தலைவன் ஒருவரை, குண்டர்கள் நடுரோட்டில் குத்திக் கொலை செய்து விட்டார்களாம். யூனியன் சகாக்கள் கறுப்புக் கொடிகளும், கூச்சலுமாக வந்து, விடியற்காலையிலேயே திறந்த கடைகளை மூடச் சொல்லி விட்டார்கள். ஏதோ டீக் கடைக்காரன், தயாரித்த பலகாரங்களையெல்லாம் என்ன செய்வது என்று, கடை அடைக்க எதிர்ப்பு சொல்லியிருக்கிறான். வந்ததே வினை. அவன், அவன் கண்டிப்பெட்டியும் மேஜை-நாற்காலிகளும் எல்லாம் தவிடுபொடி. கல்லை விட்டெறிதல், மோதல், கலாட்டா... பயன் என்ன; இமைத்து மூடும் நேரத்தில்,

எங்கே போவது;

கிழக்கேபார்த்தான். ஒன்றுமில்லை. மேற்கே பார்த்தான். கண்ணெட்டிய தொலைவரை, அடைத்த கடைகள், வெறிச்சிட்ட தெருவீதி, வெள்ளை மெழுகியது மாதிரி, வெயில், கானல் ஜ்வாலை விட்டு ஒவென்று கொளுத்துகிறது. பட்டப்பகல் வேளையில் சாலைக்கடை வீதியை இப்படிக் காண்பது அபூர்வம். எலெக்டிரிக் கம்பிகளில் காக்கைகள் அங்கிங்காக அமர்ந்திருக்கின்றன. பூக்கடை ஓரத்து குப்பைக்குவியல்களில், நாலைந்து தொட்டிப் பயல்கள் எதையோ கிளறிக்கொண்டிருக்கிறார்கள். ஓடை ஓரமாக ஒரு நாய் ஓடிப் போகிறது. பிளஷர்கார் போகிறது. டிரான்ஸ் போர்ட் பஸ் ஒன்றையும் காணவில்லை. சக்கரத்திற்கு டயர் போட்ட கட்டை வண்டிகள், அங்கிங்காக வெறுமனே கிடக்கின்றன. சரக்கு இறக்க முடியாத பென்ஸ் லாரியொன்று தார்ப்பாயை மூடிக்கொண்டு வேகமாகப் போயிற்று. கப்பென்று புழுதி புகையாக இறைத்தது. அப்புக்குட்டன், தோள் துண்

டால், ஜலதோஷக்காரன்மாதிரி மூக்கைப் பொத்திக் கொண்டு மேற்காலெ நடந்தான். யாராரோ வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருந்தார்கள். எல்லாமே உள்வட்டத்து ஆட்கள். கடை திறக்க முடியாத ஏமாற்றத்தில், அங்கிங்காக நின்று பேசிக் கொண்டும் பேப்பர் படித்துக் கொண்டும் வீடு திரும்பிக் கொண்டும் இருக்கும் ஆசாமிகளைத்தவிர வரத்துக்கார மூஞ்சிகளாக—ஏமாந்த மூஞ்சிகளாக யாருமில்லை. ஒருத்தனுவது வந்தால் வாடிக்கையான 'கடையை' விரித்து விடலாம். ரெண்டு நாட்களாக தொழில் பண்ணுததால், சங்கதிகளின், சூட்சுமம்கூட மறந்து போய் விடுமோ என்று பயமாக இருந்தது. நடந்தவாக்கில், ஒருமுறை தனது தொழில் காரியத்தை மன அரங்கில் நடத்திப் பார்த்துக் கொண்டான்.

அடுக்கு கோபுரம்போல் ஓலை வட்டிகளில் கட்டிய வெஞ்சன சாமான்களுமாக ஒரு ஆசாமி வருகிறுன். அரைக்கை சட்டை, களங்காலுக்குமேல் முண்டு. தலைக்கட்டு, 'என்னை ஏமாற்றிக்கோ' என்கிற அப்பாவி முகபாவம். அப்புக்குட்டன் எதிர் வருகிறுன்.

'யாரது? பூஜப்புரை குஞ்சுபிள்ளையல்லியோ நீங்கள்?' என்று, ரொம்பநாள் பழகியவன்போல புளித்த சிரிப்பு சிரித்து, குசலம் விசாரிக்கிறுன்.

எதிராளி 'நம்மிடம்தான் கேட்கிறுனு' என்பதுமாதிரி கொஞ்சம் மலைத்து நிற்கிறுன். பிறகு, 'யாரு? என்னையா கேட்கிறீங்க?' என்று திருப்பிக் கேட்கிறுன்.

''ஆமா, குஞ்சுபிள்ளை அண்ணன் என்னை மறந்து போச்சு? ஆ... மறக்காம எப்பிடி இருக்க முடியும்? வருஷம், அஞ்செட்டு ஆயிப் போச்சே. இப்பவும் தாமசம், பூஜப்புரையிலே தானே—?'' என்று விடாமல் பிடிப்பான், அப்பு.

''பிள்ளைக்கு ஆளு மாறிப்போச்சு. நான் பூஜப்புரைகாரன் இல்லே. எனக்கு குண்டாம் பாகம்...''

''குண்டாம்பாகமோ? குண்டாம்பாகத்திலெ எங்கே?''

''குண்டாம் பாகத்திலெ பிள்ளைக்கு ஆரெத் தெரியும்—?''

''எங்க தறவாடு குண்டாம்பாகத்திற்கு அடுத்து வலிய விளை ஆக்கும். நீங்க குண்டாம் பாகத்திலே எங்கே?''

''நான் ஆற்றுக்கு அக்கரை. வலிய வீடு தெரியுமா?''

''ஆ...வலியவீடா? வலியவீட்டு கொச்சுண்ணியும் மற்றும் நாங்க பெரிய சிநேகிதம்... பேயாடு பள்ளிக்கூடத்திலெ ஒண்ணிச்சு படிச்சவங்க...''

''ஏது கொச்சுண்ணி? பிள்ளெ ஏது வலிய வீட்டைச் சொல்லுதே? பிள்ளெக்கு ஆக மாறிப்போச்சு...சரி நான் போட்டுமா? பஸ் போயிரப் போவது...'' என்று அந்த ஆசாமி நடையைக் கட்டுமுன், அப்புக்குட்டனின் முடிவுரை நடக்கப்படும்...

''அது போகட்டும். நான், பூஜைப்புரை குஞ்சு அண்ணன் ஆக்குமுனுதான் கூப்பிட்டது. காரியம் ஒண்ணும் வலுதாயிட்டு இல்லே. இங்கே, சாலைக்கு ஒரு காரியமாயிட்டு வந்தேன். பஸ்ஸுக்கு ஒரு அம்பது பைசா குறையுது... நீங்க ஆரோ ஆகட்டும். ஒரு செறிய உபகாரம் செய்தா கொள்ளாம். வேறெ யாரிட்டை யாவது சேக்க நாணம் தோணுது. நம்பளெப் போல, சொந்த நாட்டுக்காரங்களானு விஷமம் மனசிலாகும்...''

''அய்யோ பிள்ளே. இல்லியே எங்கிட்டே... பாக்கட்டும்...'' என்று பாக்கெட்டை தடவி, அசடுவழிய இருபதோ, முப்பதோ, பையில் மிஞ்சியிருக்கும் பைசாவை கொடுத்துவிட்டு, 'வரட்டுமா?' என்று விடை கேட்டுக்கொண்டு போவார்கள்.

'உலகத்திலெ எத்தனைவிதமான ஆளுகள்... அதில் இன்றைக்கு யாருமே வந்து சிக்கிக் கொள்ள வில்லையே—' என்று எண்ணியவாறு, சபாபதி கோயில் தெருவழியாக, வாணியங்குளம் ரோட்டிற்கு கிழக்கேதிரும்பி பவர்ஹவுஸ் ரோட்டில், சக்தி தியேட்டர் வழி சந்தில் நடந்தான். விடுமுறைநாள், சூன்ய நாட்களுக்கே, இயல்பான வெளிறிய வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது.

தியேட்டர் வாசலின், பகல் சந்தடியற்ற வெறுமையில், 'திரிகுத்து' விளையாட்டுக்காரர்கள், அகப்பட்டயாரையோ வளைத்து, ஏமாற்றி சூதாடிக் கொண்டிருந்தார்கள். 'இவங்களிடம் வந்து மாட்டிக் கொள்ளுரானுகளே, இவனுக கையிலெ இருக்கிற அஞ்சோபத்தோ—தயை தாட்சண்யம் பாக்காமெ தட்டிக்கிடுதானுக. கேட்டா, விளையாட்டிலே தோத்துப் போனே. திரும்பிப் பாக்காமெ ஓடு—இம்பான்...நாலணு—எட்டணு வயத்துப்பாட்டுக்கு கெடச்சா போதும்ணிருக்கிற நம்ம கிட்டெ மட்டும், கடவுளு ஆளெ

அனுப்ப மாட்டாரு...'' என்று எண்ணிவாறு தளர்நடையாக ஓவர் பிரிட்ஜ் படியேறினான், அப்புக்குட்டன்.

''சாமி, கண்ணு தெரியாத ஆத்மா சாமி. ஏதாவது போடு சாமி.'' என்று ஓவர் பிரிட்ஜ் படிக்கட்டில் அமர்ந்துகொண்டு, ஒரு அரை குருட்டு ஆசாமி 'வியாபாரம்' நடத்துகிறான். அவன்—முன்னால் விரித்திரிக்கும் அழுக்குத் துண்டில், அஞ்சு, பத்து, மூணு. பைசா நாண யங்களாக சேர்ந்திருக்கிறது. ''என்ன இருந் தாலும் பிச்சைக்காரப் பொழைப்பு என்றால் மவுசுதான். என்ன பாக்கணும்? அய்யா சாமிண்ணு கையை நீட்டினால் வந்தால் வரவு. வராவிட்டால் நட்டம் ஒண்ணுமில்லே.'' என்று நினைத்துக்கொண்டான்.

மேம்பாலத்து படியிறங்கி ஸ்ரீ குமார் தியேட்டர் வழியாக, தம்பானூர் பஸ் நிலை யம், ரயில்வே ஸ்டேஷன் பக்கமாக நடந்தான். பார்க்கில் எவனெவனோ படுத்து வெயில் அறியாமல் தூங்குகிறான். பிச்சைக்காரர் களுக்கு ஒதுக்கப்பட்ட இடம்.' என்ற பெரிய போர்டின் கீழே யாரோ பிச்சைக்காரன்தான் படுத்துக் கிடந்தான்.

ஒன்றுமே தோன்றாதவனாக, ஊரெல்லாம் சுற்றி வளைய வளைய வந்தபோது, 'சே என்ன பொழைப்பு' என்று வாழ்க்கையையே வெறுத் தது. வயிற்றினுள் பசி, காந்தலாக கவிந் திருந்தது. கண்களை இருட்டிக் கொண்டு வந் தது. தெருக் குழாய் தண்ணீரை எத்தனை தடவைதான் குடிக்க முடியும்? பட்டினி, அப் புக் குட்டனைப் பொறுத்த வரையில் புதிதல்ல என்றாலும், இன்று எதுவும், எங்கும் இல்லை என்ற நினைவின் வாதனையில் அம்போ என்று சங்கட மாக உதைத்தது. தனக்குத் தானாகவே ப்ச்சா தாபப் பட்டுக் கொண்டான். 'இனிமேல் கொண்டு, இந்த ஏமாற்றுவேலை, எத்துவாளித் தனம் எல்லாம் விட்டுவிட்டு ஒரு கப்பலாண்டி கடலை வியாபாரமாவது செய்து பிழைத்தால் மானமுண்டு' என்று நினைத்தான். அவனைப் பொறுத்த மட்டில் இந்த நினைவுகள் எல்லாம் சூடு ஏறும்போது ஆவி கிளம்புவது போல்தான். மறுநாள் விடிந்து சரியான ஏமாளியாக எவனா வது வந்து, குதித்து—அவன் கைப்பணம், தன் கைக்கு வரும்போது, கடந்த நாளின் ஞானோ தயமும் நல்ல புத்தியுமெல்லாம் மனதளவோடு மலையேறிவிடுகிறது. 'யாமா கப்பலண்டி யாவாராம்! விடிய விடிய அலைஞ்சு வந்தாலும் எட்டணா லாவம் தேறுது. வரட்டும் பாக்க லாம்' என்று கைக்காசுடன் அப்போதைய பாட் டைப் பார்க்க போவான்.

இருட்டி வெகு நேரமாகுமுன்பே, எங்கா வது ஓரிடத்தில் போய் உடம்பைப் போட வேண்டுமென்று தோன்றியது. ஆரியசாலைப் பக்கமாக நடந்து, கிழக்குப் பக்கம் பழைய சாலை தெருவிற்குத் திரும்பி இடதுபுறம் தமிழ் ஸ்கூல் சந்தில் நுழைந்தான். நல்ல வேளையாக தமிழ்ப் பள்ளிக்கூட தகர கேற்று திறந்து கிடந் தது. உள்ளே மணல் முற்றத்திற்குமேல், நீண்ட வகுப்பறைத் திண்ணை இருட்டில் அம்போ என்று கிடக்கிறது. யோசித்துக் கொண்டிருக்க நேரமில்லை. சட்டென்று திண்ணையேறிப்போய்,' தோள் துண்டை எடுத்து சிமிண்டு தரையை தட்டிவிட்டு, அதையேவிரித்து அப்பாடியென்று படுத்துக் கொண்டான்.

வயிற்றுக் காந்தலில், மனதின் விரக்தியில், அலைச்சலின் சோர்வில், கொஞ்சநேரம் தூக்கம் வராத வாதனை குமைந்தது. எண்ணிக் கொண் டிருக்க எதுவுமில்லை. குடும்பம் இல்லை. வீடு இல்லை. வகை இல்லை. செய்து முடிக்கவும் எதுவு மில்லை. அதனால் மனதில் எண்ணங்கள் இல்லை. பசி முக்யம்...வெளியே தெரிந்த ஒற்றை வானத் தில், அங்கிங்காக, நட்சத்திரங்கள் உடைந்து சிதறியிருக்கின்றன. சுவருக்கப்பால் தென்னை மரங்கள் இருட்டாக வளர்ந்து நிற்கின்றன. பக்கத்தில் எருமைக் கொட்டிலிலிருந்து. கவிந்த சாணி வாடையாக வந்து கொண்டிருந் தது. காதருகில் கொசு ரீங்காரம் பாடியது... பிறகு, எப்பொழுது தூக்கம் வந்ததோ அவ னுக்கே தெரியாது.

—காம்பவுண்டு சுவருக்கப்பால், யாரெல் லாமோ கூட்டமாக கெட்ட வார்த்தைகளால் திட்டிக்கொண்டு, அடித்துக் கொள்வதும், மோதிக் கொள்வதும் போன்ற அரவம் கேட் டது. அப்புக்குட்டனுக்கு, கொஞ்ச நேரத் திற்கு முன்னாலேயே முழிப்பு வந்திருந்தது. கால்ப்பக்கத்தில் யாரோ உட்கார்ந்திருப்பது போலவும்இருந்தது. வெளியே அடிதடி சச்சரவு வலுப்பதுபோல கேட்டதும், சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான். கால் மாட்டில் ஒரு பெண் உட்கார்ந்திருப்பது, இருட்டிலும் தெரிந்தது. அவளிடமிருந்து வாடல் பூவின், மணம் வந்துகொண்டிருந்தது.

''யாரது? பொம்பிளையா?''

''உஸ்... பய்யெப் பேசும். யாரு நீரு? பள்ளிக்கூட வாச்சரா. கொறட்டைவிட்டு ஒறங்கினீரே... அந்த சத்தம் கேட்டு முழிச் சுட்டீரா... அங்கே, என்னெக் கொண்டுவந்த நாலு கச்சடா ஆளுக அடி பிடி சண்டை போடுதா. ஆரு மொதல்ல வாறதுண்ணு தர்க்கம். அடிச்சு ஜெயிச்சுக்கிட்டுதான் வரு வானுக போல...''

அவள் ரொம்ப நிசாரமாக பேசினாள்,

A High Class Vegetarian Restaurant in the City

# Ratna Cafe

Bengali & Delhi Sweets & Savouries

A Speciality, in Our Speciality

Decorated Sweet Stall.

★
★★

425, TRIPLICANE HIGH ROAD,

PHONE: 85901.

MADRAS-5.

—Deepam, Annual Number 1973

அப்புக்குட்டனுக்கு 'பயம்' தெளியுமுன்பு காரியம் புரிந்துகொள்ள ஆரம்பித்தது.

''ஒரு பீடி இருக்கு. உம்மட்டெ தீப்பெட்டி இருக்கா, வாச்சரே?''

''தீப்பெட்டியும் இல்லே பேப்பட்டியும் இல்லே. ஆமா, நீ அரு?''

''நானு! அட்றசில்லே. கோர் ஆப் மாடத் தெரு...இந்தா பாத்தேரா இருட்டிலெ தெரியுதா? இருவத்தி ரெண்டு ரூபா, முன்பே தந்திட்டானுக. இந்த எச்சில் இலேக்கு. கடிபிடி கூடுறுனுக. ஆசாமிக ஆரு தெரியுமா? திரிகுத்து பேர்வழிக. கண்டமானிக்கு எவன், முடிச்சு அறுத்த பைசாவாவது கையிலெ வருது. தண்ணி அடி; பெண்ணு பிடி! கேக்கனுமா...? ஆமா, அவனுக, இங்கே சவுகரியமா இருக்கும்னு கூட்டிக்கிட்டு வந்தானுகளே, வாச்சரு நீரு இங்கே உள்ளது அவனுகளுக்குத் தெரியாதா?''

''என்ன எளவோ? நான் இங்கே ஏன் நிக்கேன். நான் அந்த இருட்டு வாக்கிலெ போயிருதேன். நீங்க வந்த காரியத்தை முடிச்சுட்டுப் போய்ச் சேருங்க. சரியான எடம் கண்டு பிடிச்சானுகளே...'' அப்புக்குட்டன், தனக்குள் ஏதோ முணுமுணுத்துத் தோள் துண்டை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினன். அவனுக்கு இருந்த வயிற்று நமைச்சலில் அந்தச் சூழ்நிலையே வெறுத்தது.

''வாச்சரே, நில்லும். எனக்கு ஒரு உபகாரம் செய்யணுமே. இந்த இருவத்திரண்டு ரூபாயும் உங்க கையிலெ இருக்கட்டும். தடிமாடப் பயக்கொ, செலப்போ, சங்கதி முடிஞ்சதும், என் கையிலெ உள்ளதெ புடுங்கிக்கிட்டு போயிருவானுக. அவனுக கூட நம்மளாலெ என்ன செய்ய முடியும்? நீங்க அந்த இருட்டு வாக்கிலெ அனங்காமெ இருந்தா போதும். ஒடுக்கம், வாச்சறையும் ஒரு நடை கவளிச்சுக் கிடுதேன். இந்தாரும்...''

அப்புக் குட்டனுக்கு என்ன தோன்றியதோ, சட்டென்று அவள் கை நகம் பட, அவள் நீட்டியதை வாங்கிக் கொண்டான். இருபத்திரெண்டு ரூபாய். மத்தியான வெயிலில் சக்தி தியேட்டர் சந்து வழியாக வந்து கொண்டிருந்தபோது, அந்த திரிகுத்து சூதாட்டக்காரன்கள் நடத்திக் கொண்டிருந்த கூத்து மனக்கண் முன் விரிந்தது. பணத்தைப் பறி கொடுத்த ஒரு பரிதாபப் பேர்வழியின் அழுத முகம்...அங்கே பறிமுதலான தொகை, இங்கே இந்தப் பெண்ணின் கைக்கு வந்திருக்கிறது. கடைசியில் அது தன் கையில்...''அந்த மூத்திரப் பொரை பக்கமா இரியும் வாச்சரே...'' என்று அவள் பின்னும் அடங்கிய குரலில் சொன்னுள். அப்புக் குட்டன் ஒதுங்குவதற்கு முன்பு, வாசல் கேற்றைத் தாண்டிக் குதித்து ஒருவன் உள்ளே வந்தான். ''வா வா. எங்கே நிக்கெ? எனக்கு முன்னெ அப்படி ஒருத்தன் உன்னெ பண்ணீர முடியுமா...?'' அவள் என்ன பதில் சொன்னுளோ? அப்புக்குட்டன், இருளை மிதித்துக் கொண்டு ஒதுங்கினன். ஒதுங்கினவனுக்குப் புத்தி நன்ருகத்தான் வேலை செய்தது. மேற்குபுற மதில் சுவரை ஏறித் தாண்டி, எருமைக் கொட்டாலின் ஓரத்து ஓடையையும், சாணிச் சகதியையும் சவிட்டி தேய்த்துக் கொண்டு, பழைய சாலைத் தெருவை வந்தடைந்தான்...தெருவில் தெருவிளக்குகள் பகல் போல் எரிந்துகொண்டிருந்தன. அப்புக்குட்டன், இப்போது இருபத்திரண்டு ரூபாய் பணக்காரன்!

''அப்புக்குட்டா, நீ பலே ஆளுடேய். ஒன் வலையிலே விழாதவா ஆருரிக்கா...? உம், நடத்திக்கோ...''

வேலப்பன் இதைச் சொன்னதற்கு என்ன அர்த்தம்? சவம், அந்தத் தேவிடியா மூதிக்கு ஆரு வலே விரிச்சு வச்சிருந்தா? திரிகுத்துக்காரனுக அவளெ நம்பிக் கொடுத்தான். அவ, பள்ளிக்கூட வாச்சாரெ நம்பினு. நான் என்ன வாச்சரா? நான் அப்புக்குட்டன்!''

அப்புக்குட்டன் பழையசாலைத் தெருவைத் தாண்டும்போது விடிய ஆரம்பித்திருந்தது. ★

## சோம்பேறிக் கணிதம்!

ஐன்ஸ்டைனுக்குக் கணக்கில் ஏற்பட்ட விருப்பமானது, பள்ளியில் உண்டாகவில்லை. வீட்டில்தான் உருவானது. அப்பொழுது அவருடைய மாமனுர்களில் ஒருவர் நல்ல, தரமான பொறியியலாளராக ஆக வேண்டியதாயிருந்தார். ஒருநாள், இளம் ஐன்ஸ்டைன் அவரிடம், ''அல்ஜிப்ரா என்ருல் என்ன?'' என்று கேட்டார். அதற்கு அவர் அளித்த பதில்: ''அல்ஜிப்ரா எனப்படுவது கணிதத்தில் சோம்பேறித்தனம் உண்டாகிறவர்களுக்கு உதவும் ஒரு நெம்புகோல். உனக்கு ஒரு குறிப்பிட்ட அளவு, அதன் மதிப்புத் தெரியவில்லையாளுல், x என வைத்து, தெரிந்ததைப் போல் செய். இறுதியில் உண்மை என்னவென்று நீ கண்டுபிடிப்பாய்.'' ★

# 6. துன்பத்தில் இன்பம்...




தேக்காட்டூரில் நான் வாழ்ந்தபோது நடந்த நிகழ்ச்சிகளில் முக்கியமானது ஒரு காலணா நாணயத்தை நான் விழுங்கி விட்டதாகும். வட்ட வடிவத்தில்—இப்போது உள்ள அரை ரூபாய் நாணயத்தைப் போன்று—இருந்த செப்புக் காசு அது.

காசைச் செலவு செய்ய அந்த ஊரில் கடைகள் இல்லை. எனக்கு வேண்டிய இனிப்புப் பண்டங்களையும் மிட்டாய்களையும் என் தந்தை புதுக்கோட்டையிலிருந்து வாங்கி வந்துவிடுவார். ஈச்சை, பாலை, நாவல் முதலிய பழங்களையும் அங்கே அரிசிக்குப் பதிலாகப் பண்டமாற்றுதலாய்த்தான் விற்பார்கள்.

காசை வாய்க்குள் போட்டு அடக்கிக் கொண்டிருந்தவன் எப்படியோ அதை விழுங்கி விட்டேன். செய்தியைக் கேட்டு அம்மா துடித்தார்; அப்பா பதறினார். பேதிக்குக் கொடுத்துப் பார்த்தார்கள். பயனில்லை. அப்பா என்னைப் புதுக்கோட்டையில் இருந்த பெரிய ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று பெரிய டாக்டரிடம் காட்டினார். அப்போது அங்கே 'எக்ஸ்ரே' வசதி கிடையாது. ஏதோ மருந்தைக் கொடுத்து, தன்னால் அது வந்துவிடும் என்று தைரியம் சொல்லி அனுப்பினார் டாக்டர்.

அதன் பிறகு அந்தக் காசு என்ன ஆயிற்று என்று எனக்கு இன்று வரையில் தெரியாது. ஆனால், அந்த நிகழ்ச்சி நடந்து பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தக் காசு என்னிடமிருந்து 'காசுமரம்' என்ற ஒரு சிறுகதையாக முளைத்தது. முதன் முதலாகக் 'கலைமகளில்' வெளிவந்த என் சிறுகதை 'காசுமரம்' அந்த அனுபவத்தின் விளைவுதான்.

காசை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் விழித்த காலம் போய், காசைக் கண்ணால் காண்பது கடவுளைக் காண்பதற்கு ஒப்பான காலம் வந்து விட்டது. தேக்காட்டூர் வாழ்க்கை வரையில் நான் பொருளாதார நெருக்கடி ஏதுமில்லாத 'பெரிய வீட்டுச் செல்லப்பிள்ளை'யாக வளர்ந்து விட்டேன். திடீரென்று காலம் மாறியது.

கதைகளில் அரசன் ஆண்டியாவதும், நவாப் சாஹேப் பக்கீர் சாஹேப் ஆவதும் சகஜம். கதைகளில் நடப்பது போலவே என் வாழ்க்கையிலும் நடந்து விட்டது அந்த மாற்றம்.

தரைமட்டமாகிவிட்ட எங்கள் புது வீடு, என் தந்தையின் மன வலிமையையும் உடல் வலிமையையும் ஒன்றாக நொறுக்கித் தள்ளி விட்டது.

உடலும் மனமும் நொந்து போனதோடல்லாமல் என் தந்தையின் உத்தியோகமும் அதே சமயத்தில் பறிபோய் விட்டது.

எத்தனையோ நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்து கொள்ள முடிந்த என்னால், என் தந்தை அப்போது என்ன பாடுபட்டிருப்பார் என்று நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.

'பாவை விளக்கில்'பரமசிவமாகவும், 'புது வெள்ள'த்தில் சிவப்பிரகாசமாகவும், இன்னும் என்னுடைய சிறு கதைகள் சிலவற்றில் வெவ்வேறு பெயர்களுடனும் என் தந்தை வந்து விட்டார். ஆனாலும் அவரை முற்றிலும் சித்திரித்துப் பார்க்க என்னால் முடியுமா என்பது சந்தேகமே.

தேக்காட்டூரைவிட்டு எங்கள் குடும்பம் கரூருக்கு வந்தது. என் தாயாரின் பிறந்த வீடு கரூர் என்பதை முன்பே சொல்லியிருக்கிறேன். நோய்வாய்ப்பட்ட என் தந்தையையும் பத்து வயதுச் சிறுவனான என்னையும் என்னைவிட மூன்று வயது குறைந்த என் தங்கையையும் அழைத்துக் கொண்டு என் தாயார் தம் பிறந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தார். வேறு எந்தப் புகலிடமும் எங்களுக்கு அப்போது இந்த உலகத்தில் இல்லை.

என் தாயாரின் பிறந்த வீட்டில், தாயாரின் தந்தை, தாய், இளைய சகோதரர், இளைய சகோதரி ஆகிய நால்வர் இருந்தனர். எங்களிடம் அவர்களுக்கு ஏராளமான அன்புஇருந்தது; தாராளமான பாசம் இருந்தது; உயிருக்குயி

ரான பற்றுதல் இருந்தது. ஆனால் ஒன்று மட்டும் அவர்களிடம் அடியோடு இல்லை.—கையில் காசில்லை!

அறியாமை, வறுமை, நோய் என்ற மூன்று சக்திகளும் அங்கே தங்கள் ஆட்சியை வலிமையாக நிலைநாட்டியிருந்தன. அறியாமை என்பது தனி மனிதனுக்கும் வீட்டுக்கும் நாட்டுக்கும் எவ்வளவு பெரிய பகை என்பதற்கு என் தாய் வீடே ஒரு சரியான எடுத்துக்காட்டு.

வாழும் வழியை நம்முடைய மக்களில் பெரும்பாலோர் அன்றும் தெரிந்துகொள்ளவில்லை; இன்றும் தெரிந்து கொள்ளவில்லை. இந்த அடிப்படை அறிவை அவர்களுக்குப் புகட்டாத வரையில் நாம் சரியான திசையில் வளர்ச்சி பெறமுடியாது என நான் அஞ்சுகிறேன். ஏட்டறிவாலும் எழுத்தறிவாலும் மட்டும் தீர்க்கமுடியாத பிரச்னை இது.

அறியாமையால் ஏற்பட்ட வீழ்ச்சியால் அப்போது என் தாய்வீட்டார் தவித்துக் கொண்டிருந்தார்கள். பரம்பரைச் சொத்தைப் போதுமான அளவு அவர்களுடைய முன்னோர் விட்டுப் போயிருந்தும்கூட அவர்களால் வாழ முடியவில்லை.

என் தாயாரின் தாத்தா (தந்தைக்குத் தந்தை) செங்கற் காளவாய்கள் வைத்து, செங்கல் வியாபாரம் செய்து, வசதியாக வாழ்ந்தவர் என்பதை முன்பே குறிப்பிட்டிருந்தேன். அந்தக் காலத்திலேயே, 'மச்சு வீட்டுச் சுப்பையா புள்ளை' என்று அழைக்கப்பட்டவர் அவர். திண்டுக்கல் ரோட்டை ஒட்டினாற் போல் தொடங்கும் சீனிவாசபுரம்அக்கிரகாரத்தில், ஒரு பெரும்பகுதியை, வரிசையாக இன்று ஏழெட்டு வீடுகள் உள்ள பகுதியை அவர் வளைத்துப் போட்டு வாங்கியிருந்தார். வேறு தெருக்களிலும் அவருக்கு இன்னும் சில வீடுகள் இருந்தன. தம் சொத்தை அவர் நான்கு பாகமாகப் பிரித்து நான்கு ஆண்பிள்ளைகளுக்கும் எழுதி வைத்துவிட்டுச் செத்துப் போனார். அந்த நால்வரில் இரண்டாமவர் என் தாயாரின் தந்தை.

சுப்பையாபிள்ளை என்பவர் தம் குழந்தைகளுக்குச் சொத்தைத்தான் தேடி வைத்தாரே தவிர, தம்முடைய அனுபவ அறிவையோ, அல்லது பள்ளிக்கூடக் கல்வியையோ, அல்லது தம் தொழிலறிவையோ மக்களுக்குத் தேடி வைக்கவில்லை. பரம்பரைச் சொத்துடைமையாளர் குடும்பங்களுக்குப் பகைமை பெரும்பாலும் வெளியிலிருந்து வருவதில்லை. அந்தப் பரம்பரைச் சொத்தே பகையாகி விடுகிறது. அறிவைக் கொடுக்காமல் சொத்தை மட்டும் கொடுத்துச் செல்வோர் தம்முடைய மக்களுக்குத் தீமை விளைவிக்கிறார்கள் என்பது என் எண்ணம்.

சுப்பையாபிள்ளைக்கு நான்கு ஆண்மக்கள் இருந்தும், அவர்களில் யாருக்கும் தம் தந்தையின் தொழிலைத் திறமையோடு செய்யத் தெரியவில்லை. முதற்பிள்ளை மாத்திரம் தபால்காரராக வேலை பார்த்து வந்தாராம். மற்றவர்கள் தகப்பனாரின் சொத்தைக் கரைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள் எனத் தெரிகிறது.

ஒரு நிகழ்ச்சி என்னுடைய நினைவில் பசுமையாய்ப் பதிந்திருக்கிறது.

என் தாத்தா வீட்டுக்கும் அவர் தமையனார் வீட்டுக்கும் இடையில் ஐந்தடி நீளமுள்ள ஒரு நடைபாதை இருந்தது. அந்த நடைபாதையைக் காரணமாகக் கொண்டு இருவருக்கும் சண்டை தொடங்கியது. வாய்ச்சண்டை, கைச்சண்டை, சிவில் வழக்கு, கிரிமினல் வழக்கு, கீழ்க்கோர்ட்டு, மேல்கோர்ட்டு இப்படியெல்லாம் மும்முரமாக விவகாரங்கள் நடந்தன.—பல வருஷங்களாக அங்கே பாரதப் போர்!

கோர்ட்டுக்கும் வக்கீலுக்கும் கொட்டிக் கொடுக்கப் பணம் வேண்டுமே? இருசாராரும் தத்தம் வீடுகளை அடைமானம் வைத்துக் கடன் வாங்கினார்கள். போர் நடத்தினார்கள். மீண்டும் மீண்டும் கடன் வாங்கினார்கள். வழக்காடினார்கள். பிறகு அவரவர் தத்தம் வீடுகளின் சில பகுதிகளை விற்கலானார்கள். கடைசியில் வழக்கு யார் பக்கம் சாதகமானதோ எனக்கு நினைவில்லை.

வழக்கு முடிந்தபோது, நடை பாதை மட்டுமல்ல. இரு சாராரின் வீடுகளுமே மூன்றாமவருக்குப் போய்விட்டன. இவர்களுக்காக வழக்காடிய வக்கீல்களும் புதுவீடுகள் கட்டிக் கொண்டிருப்பார்கள் என நினைக்கிறேன்.

இந்த வழக்கின் தொடக்கத்தில்தான் நாங்கள் கரூருக்குப் போய்ச் சேர்ந்தோம். அறியாமை அங்கே 'பங்காளிச் சண்டை' என்ற உருவத்தில் மட்டும் ஆட்சி செலுத்தவில்லை. என் தாயாரின் தந்தை நோய் வாய்ப்பட்டிருந்தார். அவருக்குநடந்த வைத்தியமும் மிகவும் விநோதமாக இருந்தது.

வீட்டின் பின்புறத்து அறை ஒன்று ஒரு கிழட்டு மலையாள மந்திரவாதிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அவர் வேளை தவறாது பூஜை, புனஸ்காரம், மந்திரம், தந்திரம் முதலியமுறைகளில்என்தாத்தாவின் நோயைக் கட்டுப்படுத்த அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தார். நோய்

கட்டுப்படவில்லை. ஆனால் மந்திரவாதிக்கும் குடியிருக்க வீடும் சாப்பாட்டுக்கு வசதியும் கிடைத்துக் கொண்டிருந்தன.

என் தந்தையாரும் ஒரு நோயாளியாக அங்கு போய்ச் சேர்ந்தாலும், அவர் இந்த வகையான மருத்துவங்களில் நம்பிக்கையில்லாதவர். மேலும் என் தந்தையே அரைகுறைச் சித்தவைத்தியர். பொழுதுபோக்காக வைத்தியக் கலையை அவர் கற்றுக்கொண்டிருந்தார். ஆனால், அவருடைய சொந்த நோய்க்கான அடிப்படைக் காரணம் அவருக்குத் தெரியும்.

உழைப்பதற்கு உத்தியோகமும், ஏவலுக்கு ஆட்களும், கையில் தேவையான பொருளுமாக வாழ்ந்தவர் என்தந்தை. அவருடைய நோய்க்கு மருந்து ஒன்றே ஒன்றுதான்.—அது பணம்!

கரூரில் அந்த நோய்ப்பட்டநிலையிலும் என் தந்தை உழைத்துப் பணம்தேட எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்து விட்டார். அவர் கனவிலும் நினைத்தறியாத நிலைக்கெல்லாம் இறங்கி வந்து உழைக்கப் பார்த்தார். எந்த முயற்சியிலுமே அவரால் வெற்றி பெற முடியவில்லை. பிழைப்புக்கான முயற்சிகளுக்காக மீண்டும் அவர் மட்டும் புதுக்கோட்டைக்குத் திரும்பினார்.

திரும்பியவர் புதுக்கோட்டை ஆஸ்பத்திரியில் நோய்ப்படுக்கையில் கிடப்பதாக எங்களுக்குச் செய்தி வந்தது. 'விரைவில் சரியாகிவிடும்' என்று கடிதம் எழுதினார். என் செலவுக்காக ஏதோ சில்லறைப்பணம்கூட மணியார்டரில் அனுப்பி வைத்தார்.

என் தாயார் வீட்டில் அவருடைய பெற்றோரைத் தவிர, ஒரு தம்பியும் தங்கையும் இருந்தார்கள். என் மாமாவுக்கு நிரந்தரமாக எந்த வேலையும் இல்லை. அவர் ஓர் உல்லாசப்பிரியர். சிலநாள் தையல் கடையில் உட்கார்ந்து துணி தைப்பார். பிறகு ஒரு பெட்டிக் கடையைச் சொந்தமாக வைத்துக் கொண்டு அதில் உட்காருவார். யாராவது அவருடைய நண்பர்கள் வந்து விட்டால், கடையை என்னிடம் விட்டு விட்டு அவர் கிளம்பி விடுவார். யாருக்கும் தாராளமாய்க் கடன் கொடுப்பார். பொறுப்பு உணர்ச்சியோ வியாபாரத் திறமையோ அவரிடம் இருந்ததாக நினைவில்லை. அழகான ஆண்பிள்ளை; வசீகரமானவர்; மாரியம்மன் திருவிழாவின்போது வேஷம் போட்டுக் கொள்வதில் அவருக்கு மிகுந்த ஆவல்.

இந்த நிலையில் குடும்பச்சுமை என் தாயாரைப் பெற்ற பாட்டியின் தலையிலும் என் தாயாரின் தலையிலுமே விழுந்தது. என்




## ராஜாஜி

### எழுதிய நூல்கள்

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| இராமாயணம் | ... | 5 | 00 |
| மகாபாரதம் | ... | 5 | 00 |
| ராஜாஜி கதைகள் | ... | 4 | 50 |
| ராஜாஜி கட்டுரைகள் | ... | 4 | 00 |
| திருமூலர் தவமொழி | ... | 3 | 00 |
| ஆத்மசிந்தனை | ... | 1 | 75 |
| ஸோக்ரதர் | ... | 1 | 75 |
| நிரந்தரச் செல்வம் | ... | 1 | 75 |
| ஆற்றின் மோகம் | ... | 1 | 75 |
| திண்ணை ரசாயனம் | ... | 1 | 00 |
| முதல் மூவர் | ... | அச்சில் | |
| கண்ணன் காட்டிய வழி | ... | ,, | |
| கைவிளக்கு | ... | ,, | |
| பக்திநெறி | ... | ,, | |

வானதி பதிப்பகம்
தி. நகர் . சென்னை.17.




—Deepam, Annual Number 1973

★ தென் ஆப்ரிக்காவின் மேற்கு பகுதியில் வாழும் ஷெரீரோ இனத்தவர், ஒவ்வொருவனும் கல்யாணம் செய்து கொள்ளும்போது மணப் பெண்ணையும், அவளுடைய அக்காளையும் சேர்த்து கல்யாணம் செய்துகொள்வது வழக்கம்.

தாயாரோ மத்தியதர வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டு விட்டவர். அதே சமயம், தம் பெற்றோரின் குடும்பத்துக்குத் தாமும் குழந்தைகளும் ஒரு சுமையாக இருக்கக் கூடாது என்ற வீராப்பும் என் தாயாரிடம் உண்டு. வாழ்க்கையின் பயங்கரமான அறைகூவலை ஏற்றுக்கொண்டு, வீட்டுக்குள் இருந்தவாறே அப்பளம் போடும் வேலையில் அவர் தீவிரமாக ஈடுபடலானார். உளுந்து மாவை இடித்து அவர் கரங்கள் சிவந்தன; கொப்புளங்கள் ஏற்பட்டன. ஒரு வெறியோடு—ஆவேசத்தோடு—பிடிவாதத்தோடு அவர் அதில் ஈடுபடலானார். என் பாட்டி அப்பளத்தைக் கொண்டு போய்த் தெரிந்த வீடுகளில் விற்றுக்கொண்டு வருவார்.

ஒரு ரூபாய்க்குப் பட்டணம் படியில்நான்கு படி அரிசி விற்ற காலம் அது. அந்த காலத்திலேயே வாழ்க்கைப் போராட்டம் மிகக் கடினமாக இருந்தது. என்னிடமிருந்தும் என் தங்கையிடமிருந்தும் வறுமையை மறைக்க எவ்வளவோ முயற்சிகள் செய்தார் என் தாய். ஆனால் அவர்களிடையே நிலவிய வறுமை மூடி மறைக்கக் கூடியதாக இல்லை.

அப்படிப்பட்டதொரு வாழ்க்கைக்கு, அதற்கு முன்பு பழக்கப்படாத நான், அதைக் கண்டு எனக்குள் வெகுண்டெழுந்தேன். அருவருப்படைந்தேன். வாழ்க்கையை அடியோடு வெறுத்தேன். ஆனால் என்ன செய்வதென்று தான் புரியவில்லை.

இவற்றுக்கு இடையில் என் பள்ளிப்படிப்பு தொடர்ந்தது. மூன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை நான் கரூரில் படித்தேன். உண்மையைச் சொன்னால் 'படித்தேன்' என்று சொல்வதே தவறு. படிப்புக்கான சூழ்நிலை வீட்டிலும் இல்லை; வெளியிலும் இல்லை; பள்ளிக் கூடத்துக்கு மட்டும் தவறாது போய் வந்தேன்.

ஆனால், இவ்வளவு துன்பங்களுக்கு இடையிலும், கரூரில் பொங்கிக் கொண்டிருந்த தேசியப் போராட்ட உணர்ச்சி என்னையும் தன்னிடம் ஈர்த்தது. வெளிநாட்டுத் துணிக்கடை முன் மறியல், கள்ளுக்கடை மறியல், பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் எல்லாம் அங்கு நடந்த வண்ணம் இருந்தன. ஒருமுறை நானும் என் பள்ளி மாணவர்களும் காகிதத்தில் கொடி செய்து கம்புகளில் ஒட்டிக்கொண்டு கள்ளுக் கடை மறியலுக்குக் கிளம்பி விட்டோம். கரூர் ஆற்றுப் பாலத்துக்கப்பாலிருந்தது திருசுநிலையூர் கள்ளுக்கடை. அதற்கு எதிரே கூட்டமாக நின்று, 'வந்தே மாதரம்! அல்லாஹு அக்பர்! மகாத்மா காந்திக்கு ஜே!' என்றெல்லாம் முழங்கினோம். குடிக்கப் போகிறவர்களைத் தடுக்க முயன்றோம். நாங்கள் சிறுவர்களாக இருந்ததால் எங்களை யாரும் அடிக்கவில்லை. வாயில் வந்தபடி திட்டினார்கள். பிடித்துத் தள்ளினார்கள். பயமுறுத்தினார்கள்.

நாங்கள் அதே கோஷங்களுடன் தெருவில் நடந்து, எங்கள் முனிஸிபல் பள்ளியில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஆண்டு விழாவுக்குத் திரும்பினோம். கொடியோடு ஆண்டு விழாவுக்கு மாணவர்கள் வரவேண்டுமென்று கட்டளையிட்ட பள்ளி நிர்வாகம், அதன் பலனைக்கண்டு திகைத்தது.

எனக்குக் கரூர் வாழ்க்கை நரக வாழ்க்கையாகத் தோன்றினாலும், அதற்கிடையே தேசியப் போராட்ட உணர்ச்சி என்ற ஒளியும் கிடைத்தது. அது மட்டிலுமல்லாமல் அந்த நகரத்தின் கலைவாழ்க்கை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. மாரியம்மன் திருவிழா, ஆடிப் பதினெட்டு, தீபாவளி, கார்த்திகைத்திருநாள், மார்கழி விழாக்கள், பொங்கல் பண்டிகை போகிப் பண்டிகை இப்படியெல்லாம் அங்கே கொண்டாடுவார்கள். அமராவதி ஆற்றில் அப்போதெல்லாம் எந்தப் பகுதியிலாவது தண்ணீர் வந்து கொண்டே இருக்கும். ஊரெங்கும் தென்னந் தோப்புக்கள். எங்கள் வீட்டுக்கு முன்புகூட நாலைந்து தென்னை மரங்கள் நின்றன.

அக்கம் பக்கத்தில் என் வயதை ஒத்த ஆண் பிள்ளைகள் யாருமில்லாததால் விளையாட்டுத் தோழர்கள் கிடைப்பது எனக்கு அருமையாக இருந்தது. ஆனால் பெண்கள் இருந்தார்கள். அவர்களுக்கென்று திருவிழாக்களும் மாதந்தோறும் வந்து கொண்டே இருந்தன. நானும் அந்த விழாக்களில் அவர்களோடு ஆர்வம் காட்டலானேன். மார்கழி பிறந்து விட்டால், தெருவையே அடைத்துக் கொண்டு அவர்கள் கோலம் போடுவதையும், கோலத்தில் பறங்கிப் பூக்கள் நட்டு வைப்பதையும் வேடிக்கை பார்ப்பதில் எனக்குப் பேரானந்தம். மாரியம்மனுக்குக் காப்புக்கட்டி விட்டால், திருவிழா முடியும் வரை ஒரே கொண்டாட்டந்தான்.

(தொடரும்)




பூமா அலமாரியைத் திறந்தாள். துருப் பிடித்த கீல்மீது அதன் கதவுகள் குதிரை கனைப்பதுபோல் சப்தமிட்டுக் கொண்டே திறந்தன.

என்னென்ன எடுத்துக் கொள்ள வேண்டும்? இரண்டு புடவைகள் போதாதா? ஆனால் திருச்சியில் எத்தனை நாட்கள் தங்க நேரிடுமோ? ஒரு வாரம்தான் என்று அவள் கணக்கிட்டிருந்தாலும் மன்னியின் உடல் நிலையைப் பொறுத்துத்தான் அமையும் அவள் திட்டங்கள். அண்ணா எத்தனை நம்பிக்கையோடு அவளுக்கு எழுதியிருக்கிறார்!

''உன் மன்னிக்கு இந்தத் தடவை மிகவும் கஷ்ட பிரசவமாக இருந்தது. உடம்பு ரொம்பவும் பலவீனமாயிருக்கிறதாம். கவலைப்படும்படியாய்ப் பெரிதாக ஒன்றுமில்லையென்றாலும் அவளுக்கு ஓய்வு தேவை என்று டாக்டர் சொல்கிறார். அவள் இன்னும் படுக்கையில்தான் இருக்கிறாள். அவள் எழுந்து இயல்பாக நடமாடும் வரையில் வீட்டையும் முந்தைய குழந்தைகளையும் கவனித்துக் கொள்ள நீ சில நாட்கள் வந்து இருந்துவிட்டுப் போ. நானும் இப்போது நாலைந்து நாட்களுக்கு வேலை விஷயமாய் வெளியூர் போக வேண்டியிருக்கிறது...''

'இருந்துவிட்டுப் போ'தான். 'இருக்க முடியுமா?' அல்ல. அந்தச் சுவாதீனம் அவர்களுடைய பரஸ்பர அன்பின் முத்திரை. ஜகதீசனும் ஏதும் தடை சொல்லமாட்டான். புரிந்து கொள்ளும் இயல்பு என்பது மட்டுமல்ல. அவளுடைய அண்ணாவிடம் அவளுக்கு உள்ள மதிப்பும் ஒரு காரணம். கல்யாணத்துக்கு முன்பிருந்தே அவளுடைய குடும்பத்துக்குப் பழகியவனல்லவா? அந்தப் பழக்கந்தானே அவர்கள் கல்யாணத்துக்கே முக்கிய காரணம்? பூமாவின் உடலைத் தாண்டி உள்ளத்தை அறிந்து நேசித்திராவிட்டால், அவளுடைய அண்ணாவிடம் அவன் பக்தி கலந்த மரியாதை வைத்திராவிட்டால், சந்ததியரால் கிளை பிரிய முடியாத ஒரு திருமணத்துக்கு அவன் மனமறிந்து இசைந்திருப்பானா?

பூமா நாலைந்து சேலைகள், ரவிக்கைகள், துவாலைகள், மற்றும் பாவாடை, ப்ரா போன்ற உள்ளாடைகளை எடுத்துத் தோல் பெட்டியில் அடுக்க ஆரம்பித்தாள். கைவிரல்களிடையே வர்ணங்கள் ஓடின.

அண்ணா, பாவம், கவலைப்பட்டுக்கொண்டிருப்பார். ஆனால் அவருடைய கடிதத்துக்கு அவளிடமிருந்து பதில் வராது. பதிலை எதிர்பார்க்கக் கூடிய நேரத்துக்கு அவளே போய் நிற்பாள். எனினும் அண்ணா வியப்படைய மாட்டார். அவருக்கும் மன்னிக்கும் உதவி செய்ய—இல்லை, பணி புரிய—அவள் எந்நேரமும் காத்திருக்கிறாள் என்பது அவருக்குத் தெரியும்.

அவர்களைத் தவிர, அவளுக்கு வேறு யார் இருக்கிறார்கள்? குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களை இழந்துவிட்டபின் வளர்த்து ஆளாக்கியது அண்ணாதான். அவளை அரவணைத்த பாசம் அதன்பிறகு இரு வடிவங்களாய், நான்கு கரங்களாய், மன்னி என்ற பெயரில் பெருகியது. பள்ளியிலிருந்தும் கல்லூரியிலிருந்தும் குதித்துக் கொண்டு வீடு திரும்பி இரட்டைச் சடைகள் ஆட உல்லாசத் தகவல்கள் கூறி மடியில் முகம் புதைத்துக் கொள்ளும்போது அந்த மடி அண்ணாவுடையதா மன்னியுடையதா என்ற பாகுபாடே அர்த்தமற்றுப் போயிற்று. அந்தக் கனிவு, பாசம்—ஏன், கவலையும் கூடத்தான்—அவ்விரு முகங்களிலும் ஒரே வகையாய்க் கவிந்திருந்தது. கவலை...அண்ணா எவ்வளவு கவலைப்பட்டிருந்தார்! பூமாவுக்கு அந்த உடற்கோளாறு தொடங்கியபோது ஏழெட்டு வயதுக்கு மேல் இருக்காது. படுத்த படுக்கையாய்க் கிடந்தாள். ஏதோ அபூர்வமான ரத்த நோயாம். நோய் முற்றி இரண்டு முறைகள் உயிர் மயிரிழையில் ஊசலாடிவிட்டுத் திரும்பியது. மாற்று ரத்தமும் அறுவைச் சிகிச்சையும் உயிரைக் காத்தன. ஆனால் உதிரத்தின் அந்தக் குறைபாடும் அதனால் விளையும் நோயும் ஆபத்தும் பரம்பரையாகத் தொடரக் கூடியவை என்று வைத்தியர்கள் கூறினர்.

பூமா துணிமணிகளையும் தேவையான மற்ற உடைமைகளையும் வைத்தபின் பெட்டியை மூடினாள். மிகவும் குறைவாய்ச் சாமான்கள் வைத்திருப்பதாக நினைத்திருந்துமா இப்படித் ததும்பி வழிகிறது? பெட்டி சிறியதாக இருப்பதனாலா? வாய் பிளந்த பெட்டிக்கு மேல் மூன்று அங்குலம் தூக்கிக்கொண்டு நின்ற மூடியின் மீது அவள் உட்கார்ந்து மூடியை அழுந்தப் பொருத்தி அதன் விளிம்பை உள்ளங்கையால் அமுக்கிக் கொண்டு பூட்டினாள். இளந்தொந்தியாக நடுவில் மேடிட்டிருந்த மூடியைப் 'பூட்டி

யாகிவிட்டது' என்ற திருப்தியோடு பார்த்த போது மனசில் பழங்காட்சியும் தெரிந்தது.

பதினன்கு வயதுச் சிறுமியைப் பார்த்து அண்ணு சொல்கிறர்: ''பூமா! உனக்குக் குழந்தைகள் பிறந்தால் அவாளுக்கும் இந்த உன் ரத்த வியாதி இருக்குமாம். அது தெரிஞ்சும் நாம் அப்படி ஒரு நிலே ஏற்பட விடறது நியாயமா?''

''இல்லே அண்ணு...''

''அதனல் ஒண்ணு, உனக்குக் கல்யாணமே பண்ணுமலிருக்கணும்...''

மனசில் சுரீரென்று அடி உறைக்கிறது. எனினும் வாய் 'சரி அண்ணு' என்கிறது.

''அல்லது, கல்யாணம் பண்ணிஞலும் குழந்தை பிறக்காத வழி செஞ்சுடணும்...''

மீண்டும் நெஞ்சில் சாட்டை. மீண்டும் வாயில் 'சரி அண்ணு'.

''தனிக் கட்டையாகவே ஆயுசுக்கும் வாழறது கஷ்டம். ஏன்னு அது இயற்கைக்கு முரண். அதனல் இரண்டாவதாய்ச் சொன்னதுதான் தேவலேன்னு எனக்குத் தோணறது.''

''சரி அண்ணு.''

''உன் இஷ்டம் எப்படிம்மா?''

''நீ எது சொன்னுலும் சரி அண்ணு!''

அப்படி ஒரு நம்பிக்கை, அண்ணுவின் தீர்மானங்களில். நினைவு தெரிந்த நாள் முதலாகக் கட்டிக் காத்த அன்பின் முன்னிலேயில் நம்பிக்கையை அன்றி வேறென்ன நிலவ முடியும்?

ஜகதீசனும் தெரிந்தே அவளே மணந்து கொண்டதால் வாழ்வில் கசப்பு நேரவில்லே. பிறந்தகத்தினரின் பாசத்திலோ அவளே மணமுடித்துக் கொடுத்த பிறகும் வித்தியாசம் தோன்றவில்லே. இன்று அவளுக்கு இருபத்தெட்டு வயது ஆகிவிட்டதென்ருலும் அண்ணுவையும் மன்னியையும் பொறுத்த மட்டில் அவள் இன்னமும் குழந்தைதான். நான்கு மக்களுக்குப் பெற்றேராகிவிட்டார்களென்ருலும் அவர்களுடைய முதல் குழந்தை எப்போதும் அவள்தான்.

ஆனல் இன்று குழந்தையாக அல்ல, குழந்தைகளேக் கவனித்துக் கொள்ள ஒரு பெரியவளாக அவள் செல்கிருள். அண்ணு அந்த உயர்வை இப்போது இப்போது அவளுக்கு வழங்கியுள்ளார். அவருடைய மக்களில் மூத்த பெண்ணுக்கு அந்த ஆண்டு திருமணம் செய்து கொடுத்திருந்தார். சில மாதங்களுக்கு முன்பு தான் புக்ககம் சென்றிருந்த மகளே உதவிக்காக உடனேயே மீண்டும் பிறந்தகத்துக்கு அழைத்தால் நன்ருயிருக்காது எனக் கருதி அவர் பூமாவை அழைத்திருந்தார்.

பூமாவுக்கு அவரது அந்த நம்பிக்கை பெருமையாயிருந்தாலும் அதை மீறிக் கொண்டு மன்னியின் உடம்பைப் பற்றியகவலேயும் பதற்றமும்தான் இப்போது அவளேஆக்ரமித்திருந்தன. அவள் யந்திரமாக அன்றையக் கடமைகளேக் கவனித்தாள். இரவு ரயிலேற வேண்டும். நல்ல வேளே, மாதம் பிறந்து மூன்று வாரங்களுக்குப் பிறகு நேற்று ஒரு வழியாக டி. யு. சி. எஸ்.ஸில் சர்க்கரை கொடுத்துவிட்டார்கள். இல்லேயாஞல் வீட்டில் அவளும் இல்லாத போது ஜகதீசன், பாவம், சர்க்கரைக்காக அலேய வேண்டியிருந்திருக்கும்...

அண்ணுவின் இரண்டாவது குழந்தை ஒரு பையன். பன்னிரண்டு வயது ஆகியிருந்தது. அடுத்தது பத்து வயதில் இன்னெரு மகன். இத்தோடு முடிந்தது என்று எல்லோரும் எண்ணியிருந்தபோது எதிர்பாராமல் இப்போது இன்னெரு பெண் மகவு. கஷ்ட பிரசவம் என்று அண்ணு எழுதியிருந்ததை நினேத்தால் பூமாவுக்கு வயிற்றைப் பிசைந்தது. குழந்தை பிறந்த செய்தியைத் தாங்கிய கடிதத்தைக் கண்டு பத்து நாட்கள் முன்பு குதித்துக் கொண்டு வீட்டில் பாயசம் தயாரித்தவள் இப்போது நெஞ்சில் பனிக்கட்டியாய் உறையும் கவலேயில் ஆழ்ந்திருந்தாள். மன்னியின் உடம்பு இப்போது எப்படி இருக்கிறதோ? அவள் நாளேக் காலே சென்று சேர்வதற்குள் ஏதும் விபரீதம் நிகழ்ந்து விடாதிருக்க வேண்டுமே...அவள் உடல் நடுங்கியது. கவலேக்கிடமாய் ஏதும் இல்லே என்று அண்ணு எழுதியிருந்ததை வலிய நினேவுறுத்திக் கொண்டு ஆறுதலடைந்தாள். எனினும் நெஞ்சில் பயத்தின் பிடி தளரவில்லே.

''மன்னிக்கு ஏதும் ஆகாது, இல்லேயா?'' என்ருள் கணவனிடம்.

வேலே முடிந்து மாலேயில் வீடு திரும்பியிருந்த ஜகதீசன் ஒரு நிமிஷம் கவனமின்றி ''என்ன ஆகாது?'' என்ருன்.

''ஏதும்...ஏதும்...'' கெடுதலாக என்று சொல்லக்கூட அவளுக்கு நா எழவில்லே. அந்த நினேப்பே அச்சானியமாய்த் தோன்றியது. ''உங்களுக்கு எதுவுமே புரியாது, இல்லேயா?

எல்லாத்தையும் பிட்டுப் பிட்டுச் சொல்ல ணும்னு அப்புறம் மனுஷனுக்கு மூளேன்னு ஒண்ணு எதுக்குத்தான் இருக்கு?''

''ஓ...கோச்சுக்காதே பூமா, நான் ஒரு ஜடம். அஃப்கோர்ஸ் உன் மன்னிக்கு ஏதும் ஆபத்து நேராது. அப்படிக் கலவரப்படும்படி யாய் உன் அண்ணு ஒண்ணும் எழுதலே பார்.''

''அது சரி...இருந்தாலும்......என்னமோ நினேக்கிறபோதே மனசு திக்கெங்கிறது. எனக்கு நினேவு தெரிஞ்ச நாளாய் மன்னி தலேவலின்னு ஒருநாள் கூடப் படுத்ததில்லே. இப்ப உடம்பு முடியாம கிடக்கிருள்ளு......வேங்கடாசலபதி தான் துணே இருக்கணும்...'' பூமா பூஜை அறையில் சுவாமிக்கு ஒரு ரூபாய் முடிந்து வைத்துவிட்டு ''மன்னி நல்லபடியாய்ப் பிழைச்சு எழுந்திருக்கட்டும் ஏழுமலேயானே! நான் திருப்பதிக்கு வந்து அங்கபிரதிட்சணம் பண்ணறேன்'' என்று வேண்டிக்கொண்டாள்.

''என்ன, சாமானெல்லாம் 'பாக்' பண்ணி யாச்சா?'' என்முன் ஜகதீசன்.

''எனக்கென்ன, அந்த ஒரு பெட்டிதான். அது ரெடி.''

''படுத்துக்க?''

''ஒரு தலேகாணி போதும். அண்ணு வீட் டில் படுக்கையெல்லாம் இருக்கும்.''

அவளுக்கு எப்போதுமே அண்ணு வீட்டில் ஓர் இடம் உண்டு. ''நீ எப்போ நினேச்சுண் டாலும் இங்கே தாராளமாய் வரணும், தெரி யுமா? புருஷன் வீடு உன் வீடாய் இருக்கலாம். ஆனு இதுவும் உன் வீடுதான். அதை என்னிக் கும் மறக்காதே.'' சொன்னது அண்ணுவல்ல, மன்னி. அதுதான் அதன் பிரத்யேக மதிப்பு. உடன்பிறந்தவன் அன்பாயிருப்பதில் என்ன ஆச்சரியம்? வேறிடத்தினின்று வந்த ஒருத்தி அவளுடைய தாயாகிவிட்ட அதிசயம்தான் மானிடத்தின் வெற்றி.

''பூமா, ஏன் அழறே?''

அடுத்த கணம் அவள் தலே ஜகதீசனின் மார்பில் விம்மிக்கொண்டிருந்தது. ''மன்னிக்கு ஒரு ஆபத்து வந்தால் நான் தாங்கமாட் டேன்...''

''அசடு, எதுக்கு நீயாய் ஏதேதோ நினேச் சுண்டு உன்னேயே வருத்திக்கிறே? பெரியாய் ஒண்ணுமில்லேன்னு உன் அண்ணுவே எழுதினப் புறம் என்ன கவலே? நீயே இப்படிக் குழந்தை யாட்டம் அழுதால் அங்கேயுள்ள குழந்தைகளே எப்படிப் பார்த்துப்பியாம்?'' என்று ஜகதீசன் அவள் முதுகைத் தட்டித் தைரியம் சொன் னுன். பூமா மெல்லக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''அழக் கூடாதுன்னுதான் பார்க்கறேன். ஆனு மனசு கேட்கலே. மன்னிக்கு ஒண்ணு ஆய்ட்டால் தாயில்லாக் குழந்தையாய் முதலில் நான்தான் ஆயிடுவேன்...போகட்டும், அபச குனமாட்டம் எதுக்கு அப்படியெல்லாம் நினேக் கணும்?...மன்னி எழுந்து நடமாட ஆரம்பிச்சப் புறம் அண்ணு என்னே அங்கே இன்னும் நாலு நாள் இருந்துட்டுப் போகச் சொன்னுல் நான் இருக்கலாமா?''

''என்னேக் கேட்பானேன்? உனக்கு எத் தனே நாள் வேணுமோ இருந்துட்டு வா.''

பூமா கணவனே நன்றியோடு பார்த்தாள். எவ்வளவு அன்பு அவனுக்கு அவளிடம்! சாதா ரணமாக எந்த ஆடவனும் தன்னே ஒரு மகனில் முகம் பார்த்துக் கொள்ளவே விரும்புவான். ஜகதீசன் அதற்கு விதிவிலக்கு. அது ஒன்றே அவனுடைய சுயநலமற்ற நேயத்துக்குப் போது மான எடுத்துக்காட்டு.

''போய் முகம் அலம்பிக்கோ பூமா. இன் னிக்கு ராத்திரிக்கு நீ சமைக்க வேணும். ரயி லுக்குக் கிளம்பறபோது கொஞ்சம் முன்னு லேயே கிளம்பி ஏதானும் ஹோட்டலில் சாப் பிட்டுடுவோம்.''

''சரி.''

பூமா அவனுக்குச் சிற்றுண்டியும் காப்பி யும் கொடுத்துவிட்டு முகம் கழுவக் குளிய லறைக்குச் சென்றுள். அவளுக்கு இன்று ஏதும் சாப்பிடப் பிடிக்கவில்லே. குழாயில் தண்ணீர் 'எண்ணிக் கொள்' என்று சொல்வதுபோல் துளித் துளியாகச் சொட்டியது. பொறுமை இழந்து அவள் குழாயை மூடிவிட்டு முகத்தில் சோப்பைக் குழைத்துக் கொண்டு அண்டாவில் மீதமிருந்த நீரை இரண்டு கைகளாலும் அள்ளி முகத்தில் அறைந்து கழுவினுள். வெளியே வந்து துவாலேயில் துடைத்துக்கொண்டபோது ரவிக்கை நீரில் நனேந்திருப்பது தெரிந்தது. துணி அலமாரியைத் திறந்தாள். மறுபடியும் குதிரை கனேத்தது. பிரயாணத்துக்காகப் பெட்டியில் வைத்துப் பூட்டிய சில ரவிக்கை களேத் தவிர மற்றவை அலமாரித் தட்டில் ஒன் றன் மேல் ஒன்ருக அடுக்கப்பட்டிருந்தன. ஒரு ரவிக்கை மட்டும் புடவை வரிசையின்மீது அவற்றின் அகன்ற பரப்பின் மேல் தன் சிறு வடிவம் தாலத்தில் ஏந்தப்பட்ட காணிக்கை போல் தெரிய, தனியாய்க் காணப்பட்டது. அதைப் பெட்டியிலும் வைக்காமல் தானும்

அணியாமல் தனிப் பொருளாய்க் கையில் எடுத்துச் செல்ல விரும்பி அவள் மீதம் வைத்திருந்தாள்.

பச்சை நிறத்தில் மஜெந்தாப் புட்டாக்கள் பதித்த அந்தக் குட்டைக் கை ரவிக்கையை அவள் சிறிது நேரம் பார்த்துக்கொண்டே நின்றாள். அண்ணாவும் மன்னியும் அவளுக்குத் தந்திருந்த எத்தனையோ பரிசுகளில் அவளுக்கு மிகவும் பிடித்த பொருள் அது. அதிலும் குறிப்பாக இந்தத் துணியை மன்னிதான் அழகாயிருக்கிறதென்று சொல்லித் தேர்ந்தெடுத்தாள். திடீரென்று பூமா அதைப் பற்றியெடுத்து முகத்தோடு அமுக்கிக் கொண்டாள். துணிகளின் இடையில் காகிதப் பைகளில் வைக்கப்பட்டிருந்த வாசனைத் தூளின் நறுமணம் அந்த ஒரு விநாடி மன்னியின் மணமாக மூக்கின் வழியே நெஞ்சில் இறங்கியது. அந்த ரவிக்கையை அவள் மார்புற அணைத்துக்கொண்டாள்.

அதை உடுத்திக் கொள்ளலாமா? வேண்டாம். அந்த அன்புப் பொருளைக் கைகளிடை வைத்துப் பிடித்துக் கொண்டே, பார்த்துக் கொண்டே, பயணம் செய்வதில்தான் ஆறுதலுண்டாகும்போல் தோன்றியது.

தான் எடுத்துப் போக வேண்டிய பெட்டியின் மீது அதை வைத்துவிட்டு அலமாரியிலிருந்து வேறொரு ரவிக்கையை இழுத்து உடுத்துக் கொண்டாள். நனைந்த ரவிக்கையைக் குளியலறையின் துணிக் கம்பத்தில் தூக்கிப் போட்டவாறே ''நாளைக் காலை வேலைக்காரி வரச்சே இதைத் தோய்ச்சுஉலர்த்திடச் சொல்லுங்கோ'' என்று கணவனுக்குக் குரல் கொடுத்தாள்.

ஏழு மணிக்கு இருவரும் டாக்ஸியில் கிளம்பி ஓட்டலில் சாப்பிட்ட பின் எழும்பூர் ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஜகதீசன் அவளை போட்மெயில் இரண்டாம் வகுப்புப் பெண்கள் பெட்டி ஒன்றில் ஏற்றிவிட்டான். அவனே கைக்கு ஒன்றாகத் தூக்கி வந்திருந்த தோல் பெட்டியையும் தலையணையையும் அவளருகில் வைத்தான். பூமா அந்தப் பச்சை ரவிக்கையை மட்டும் கைக்குட்டை போல் மடித்துத் தன் கையிலேயே பிடித்துக் கொண்டிருந்தாள். அந்தப் பொருளே அனைத்த உலகம். வேறெதற்கும் அவள் கைகளில் இடம் கிடையாது.

''போய்ட்டு வா பூமா. ஒண்ணும் கவலைப் படாதே. ஊருக்குப் போனதும் உன் மன்னிக்கு எப்படி இருக்குன்னு கடுதாசி போடு'' என்றான் ஜகதீசன்.

''சரி.''

''அண்ணாவோடும் மன்னியோடும் எத்தனை நாள் இருக்கணும்போல் ஆசையாயிருக்கோ இருந்துட்டு வா. அழாமல் போ, என்ன?''

''சரி.''

ஒன்பது மணி அளவில் வண்டி நழுவலாயிற்று. ஸ்டேஷனின் விழாக் கோலத்திடையே அவன் முகமும் ஆட்டும் கையும் மங்கிச் சிறுத்து மறைந்தன. பூமா தன் மடியில் அந்த ரவிக்கையைத் தளும்பாமல் ஏந்திக் கொண்டு, ஒரு குழந்தைபோல் உட்கார வைத்துக்கொண்டு, அசைவற்றிருந்தாள். கம்பார்ட்மென்ட்டில் இருந்த ஒரே ஒரு சக-பிரயாணி அவளோடு பேச்சுக் கொடுக்க முனைந்த முயற்சிகள் தோல்வியுற்றன.

''நீங்க எங்கே போறீங்க?'' என்றாள் அம்மாது.

''திருச்சி.''

''சொந்த ஊரா அது?''

''ம்...''

''அப்பா அம்மா அங்கே இருக்காங்களா?''

''ம்...''

''அண்ணா மன்னின்னு சொன்னாரே உங்களை வழியனுப்ப வந்தவர்?''

''ம்...''

''அவங்களும் அங்கேதான் இருக்காங்களா?''

''ம்...''

''இவர் யாரு?''

''ம்...''

''உங்களை ரயிலேத்திவிட்டவர் யாருன்னு கேக்கறேன்.''

''ஓ, ஸாரி. அவர் என் வீட்டுக்காரர்.''

''அவர் உங்ககூட ஏன் வரலே?''

''ம்...''

''சரியாய்ப் போச்சு. நான் சொல்றதே உங்க காதில் விழலே போலிருக்கு.''

''ம்...''

''ஏதோ கவலையில் இருக்கிறாப்போல் தெரியறீங்களே?''

அவள் எதுவும் பேசவில்லை. கண்கள் மடி மீது குனிந்திருந்தன. விரல்கள் பச்சையில் முக்குளித்து உறவாடின. மன்னிக்கு இப்போது எப்படி இருக்குமோ?

''என்னம்மா பேசாமலே இருக்கிங்க?''

கடவுளே, மன்னிக்கு ஏதும் தீங்கு நேரக் கூடாது. அவள் அன்பு மன்னிக்குக் காப்பாக இலங்க வேண்டும்......

''என்ன கவலை அப்படி?''

''ம்? ஆமாம்...ஆமாம்.''

அதற்கு மேல் உரையாடுவதில் பயனில்லை என்று மற்றவளுக்குப் புரிந்துவிடவே மௌன மாகிவிட்டாள். சிறிது நேரத்தில் தன் ஹோல்டாலை விரித்துக் கொண்டு படுத்துத் தூங்கியும் போனாள். தூக்கத்தின் குரல்போல் இலேசாகக் குறட்டையொலி எழுந்தது. குறட்டை விடுவதே அசிங்கம், அதிலும் பெண்கள் விட்டால் இரு மடங்கு அசிங்கம் என்று ஓர் எண்ணம் பூமாவின் மனசில் பதியாமல் மிதந்து ஏகியது.

அவள் வெகு நேரம் உட்கார்ந்தபடியே இருந்தாள். இரவின் இருளும் உலகின் வெளிச்சங்களுமாக கருமணி-வெண்மணி கோத்த ஒரு சரட்டில் ரயில் ஓடிக் கொண்டிருந்தது.

அவள் ஆழப் பெருமூச்சு விட்டாள். மீண்டும் ஒரு முறை ரவிக்கையை நெஞ்சில் வைத்து அணைத்துக் கொண்டாள். பிறகு ஒற்றைத் தலையணையை எடுத்துப் போட்டுப் படுத்துக் கொண்டாள். மல்லாந்த முகம் கூரையை வெறித்தபோதும் கைகள் தமதேயான ஒரு தனி உயிரோடு பச்சை ரவிக்கையை நெஞ்சுக்கு மேலாகப் பற்றி வருடிக் கொண்டிருந்தன.

பாவம், மன்னி! படுத்துக் கொண்டிருப்பாள். அந்தக் காட்சியையே நினைத்துப் பார்க்க முடியவில்லை. மன்னி எத்தனை ஆரோக்கியமானவள்! முதல் மகளும் அப்படித்தான். பையன்களில் இரண்டாமவன் சற்று நோஞ்சான். அவனுக்காகத்தான் வீட்டில் ஒரு மேற்பார்வையாளர் தேவை. யாரேனும் அழைத்துப் படைக்காவிட்டால் சாப்பிடக்கூடப் போகமாட்டான். ஆனால், துள்ளும் மனத்துக்கும் துவளும் உடலுக்குமிடையே அலையுண்டாற்போன்ற வருத்தம் இழையோடுகிற கண்களில்தான் எத்தனை ஒளி இருக்கும்! மூவரிலேயே அழகில் என்னமோ அவன்தான் முதல். மூவரிலாவது! இப்போது நாலல்லவா? இன்னொரு குழந்தை. யார் போல் இருப்பாளோ இந்தக் குழந்தை? நீண்ட இடைவெளிக்குப் பின் பிறந்த, அதுவும் பெண் பிறவியான, அக் குழந்தை அண்ணாவுக்கும் மன்னிக்கும் நிச்சயம் மிக அருமையாகத்தான் இருக்கும். செல்லக் குழந்தையாய் வளர்வாள்...கஷ்ட பிரசவமாம், பாவம், மன்னி படுத்துக் கொண்டிருப்பாள்...என்ன பெயர் வைப்பார்கள்...?

உறக்கம் பிடிக்கவில்லை. பிறகு பிரக்ஞையின் தொடர்ச்சி அவ்வப்போது அறுந்து அறுந்து சேர்ந்தது. கைக்கடியாரத்தின் ஒளி முள் ஒன்றரை மணி என்று காட்டும். ஒரு நிமிஷம் ஏதோ யோசித்து விழிப்புற்றுக் கடியாரத்தைப் பார்க்கும்போது இரண்டரையாக இருக்கும். தான் ஒரு நிமிஷ நேரம் என்று நினைத்தது ஒரு மணி நேரம் என்று புரியும்போதுதான் சற்றுக் கண்ணுறங்கியிருக்கிறோம் என்பதும் புரியும். கணவனுக்குச்சோறு படைத்துவிட்டு நெய் ஊற்றாமல் இருக்கிறோமே என்ற நினைவுடன் கண்விழித்து ரயிலின் ஓட்டத்தை உணரும்போது அந்தக் காட்சி வெறும் கனவு என்று புரிந்து கொள்வதில் கனவு கண்டதனால் தான் உறங்கியிருக்க வேண்டும் என்பதும் புரிபடும்.

கீழேயிருந்து சக்கரச் சப்தம் எழ, மேலேயிருந்து விசிறியின் சப்தம் இறங்க, இரண்டாக இருபுறமும் நசுக்கி இடையிலுள்ள தன்னை ஓர் எலியாகச் சிக்க வைத்திருப்பது போல் தோன்றியது. எதிர் ஆசனத்தின் மூச்சாகக் குறட்டையொலி இழைந்து கொண்டிருந்தது.

அவள் கைக்கடியாரத்தைப் பார்த்தாள். மூன்று பத்து. கைகளிடை வாடா மலராக மலர் பூத்திருந்த பச்சையை வயிற்றோடு அழுத்திக்கொண்டு ஒருக்களித்துப் படுத்தாள். கண்கள் இருளின் வடிவங்களை வெறித்தன. பிறகு ஏதோ உள்ளிருளில் ஆழ்ந்து போயின. தூக்கமாகவும் இல்லை, விழிப்பாகவும் இல்லை. நீர்த் தொட்டியில் குவளையை முக்கி முக்கி எடுத்தாற்போல் நினைவு மறைந்து மறைந்து எழுந்தது.

தூங்கி விட்டாளா?

இது யார்? இந்த முகத்தில் ஏன் இத்தகைய கடுமை? இப்படி ஒரு கடுமையை இதற்கு முன் பார்த்திருப்பதாகவே தெரியவில்லை. அத்தனை அரக்கத்தனமாக இருக்கிறது. முகம் மட்டும் பரிச்சயமாகத் தோன்றுகிறது. யார் இது? ஆம். அவள்தான். அவளேதான். அவள் தான் இது. இந்த முகம் அவளுடையதுதான்.

அவள் இத்தனை உக்கிரமாக ஏன் இருக்கிறாள்? யாரைப் பார்த்து அவள் கண்கள் இப்படித் தீயை உமிழ்கின்றன? எதிரே இருப்பது யார்? அண்ணாவா? அண்ணா போலத்தான் இருக்கிறது. கோப விழிப்பு அவர் மீது பதியாமல் கடந்து அவர் அருகில் சென்று நிலைக்கிறது. அவர் அருகில் மன்னி, இன்னும் உருவற்ற

ஏதேதோ... எத்தனை? நான்கு படிமங்களா? அவை மங்கிக் கரைகின்றன. மன்னியைத்தான் நிலைத்து அடையாளம் தெரிகிறது. மன்னியைப் பார்த்து அவள் கண்கள் அனலாய்க் கனல் கின்றன. பல்லைக் கடிக்கிறாள். முகம் சிவக்க மன்னியின்மேல் பாய்கிறாள். அவளுடைய தலை முடியைப் பற்றி உலுக்குகிறாள். அவளுடைய முகத்தைப் பிராண்டுகிறாள். காட்சி மங்கி மங்கித் தெளிவாகிறது. அந்த மங்கலில் அவள் முகம் மட்டும் முண்டமாய் மிதக்கிறது. ஆனால் அந்தமுகத்தில் அதே சீற்றம், ஆவேசம், மன்னி என்ன சொல்கிறாளென்றோ செய்கிறாளென்றோ பிடிபடவில்லை. எல்லாமே மப்பு மூடினாற்போல் இருக்கிறது. இருந்தாற்போலிருந்து அந்தப் பனி மப்பினூடே மன்னியின் உடலில் ஏதோ அசைவு தோன்றுகிறது. வடிவ மங்கலினின்று விடுபட்ட தனித்த தெளிவுடன் மன்னியின் கைகள் இரண்டும் நீள்வது பளிச்சென்று தெரி கிறது. அந்தக் கைகள் நீட்டுவதில் ஏதோ பச்சை நெளிகிறது. பிறகு பச்சை நிலையாகி அதனூடே மஜெந்தாப் புட்டாக்கள் தெரி கின்றன. அவள் சினம் பொங்க அந்தப் பச்சையை எதிர்க்கையினின்றும் பிடுங்குகிறாள். பல்லைக் கடித்துக்கொண்டு அதைக் கந்தல் கந்தலாகக் கிழித்துக் கீழே விட்டெறிகிறாள். தீவிர முகத்தில் வாய் மன்னியைப் பார்த்து ஏதோ உறுமுகிறது. வார்த்தைகள் ஒலிக்க வில்லை. ஆனால் கேளாத அந்தப் பேச்சின் அர்த் தம் உள்ளுணர்வின் ஆழத்தில் புலனாகிறது: 'நான் உன்னை வெறுக்கிறேன், நான் உன்னை வெறுக்கிறேன், நான் உன்னை வெறுக்கிறேன்...'

அவள் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள். உடல் முழுவதும் வேர்த்துக் கொட்டியிருந்தது. இதயம் வேகமாய்த் தெறித்துக் கொண்டிருந் தது. ஐயோ, என்ன காட்சி இது!

கனவுதான். நல்லவேளை, எல்லாம் வெறும் கனவுதான்... ஆனால் அம்மம்மா! சர்வேசுவரா! என்ன பயங்கரக்கனவு! எத்தனை கொடுமை நிறைந்த கனவு!

அவள் தலையை உலுக்கிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். உடல் முழுவதும் இன்னமும் சில்லிட்டு நடுங்கிக் கொண்டே இருந்தது. பொழுது விடிய இன்னும் அதிக நேரம் இல்லை. எதிர் வீட்டில் ஹோல்டால் மீது உறங்கிக் கொண்டிருந்த உருவத்திடமிருந்து குறட்டை ஒரே சீராக ஒலித்துக்கொண்டிருந்தது.

அவள் குளியலறைக்குச் செல்ல எழுந்து நின்றாள். முகத்தைக் கழுவிக்கொண்டு சிறிது நீர் பருகி அந்தக் கோரக் கனவின் அதிர்ச்சி யைத்துடைத்தெறிய வேண்டும்...என்ன கனவு! நினைக்கும்போதே குடலை அறுக்கிறதே!

ரயிலின் ஆட்டத்தினால் ஒரு நிமிஷம் கால் தடுமாறி ஆசனத்திலேயே பொத்தென்று விழுந்து உட்கார்ந்துவிட்டு மறுபடியும் எழுந்து கவனமாய் அடி வைத்து நடக்க முற்பட்டாள். கண்கள் தரையை நோக்கின.

சட்டென்று அவள் நின்றாள். தரையில் மொத்தையாய்ச் சற்றுத் தொலைவில் விழுந்து கிடக்கும் அது என்ன?

தன் கைகள் காலியாயிருப்பதை அவள் திடுக்கிட்டு உணர்ந்தாள். பரிசுப் பொருளான பச்சை ரவிக்கையைக் கைகளில் ஏந்தியவாறே படுத்திருந்தாளே, அது எங்கே; தூங்கும்போது கீழே விழுந்திருக்குமோ?

தான் படுத்திருந்த இருக்கையின் மீதும் அதன் கீழும் அவள் தேடினாள். பிறகு சில அடி கள் நடந்து சற்றுத் தொலைவில் தரையில் விழுந்துகிடந்த மொத்தையைக் குனிந்து எடுத் தாள். பச்சைப் பின்னணியில் மஜெந்தாப் புட்டாக்கள் மங்கலாய்த் தெரிந்தன குட்டைக் கைப் பச்சை ரவிக்கை கந்தல் கந்தலாகக் கிழிக் கப்பட்டிருந்தது.

அவள் அதிர்ச்சியில் உறைந்து போனாள். கைகள் நடுங்கின. இதயத்தில் சுரீரென்று ஓர் இறுக்கம் கௌவியது. ரவிக்கையை மார்போடு அழுத்தி அணைத்துக்கொண்டாள். இது என்ன பயங்கரம்! எப்படி நடந்தது இது? எப்படி? எப்படி? அவள் அருமையாய்ப் போற்றிக்காத்த பொக்கிஷத்துக்கு இந்தக் கதி எவ்வாறு நேர்ந் தது? அவள் அன்புடன் அணைத்துக் கொண் டல்லவோ படுத்திருந்தாள்? எதிரே உறங்கு பவள் செய்திருப்பாளோ? தன்னிடமிருந்து பிடுங்கி எடுத்துக் கிழித்திருப்பாளோ? அவள் பைத்தியக்காரியோ ஒரு வேளை? ஆமாம் அப்ப டித்தான் இருக்கவேண்டும்......

பூமா அந்தக் கிழிக்கப்பட்ட ரவிக்கையை முகத்தில் ஒற்றிக்கொண்டு வெறி பிடித்தாற் போல் அதைத் திரும்பத் திரும்ப முத்தமிட் டாள்.

மன்னி, மன்னி...இன்னும் சிறிது நேரத் தில் அவள் மன்னியைப் பார்த்து விடுவாள். ஏதும் கெடுதலாக இல்லாதிருக்கவேண்டுமே... கடவுளே, மன்னி விரைவில் குணம் பெறவேண் டும். அவளுக்கு மன்னியிடம் உள்ள அபரித மான அன்பு ஒரு கவசமாக மன்னியின் உயிரைப் பாதுகாக்கவேண்டும்...... ★

# கருகிய ம[illegible]

கூ கே. எஸ். ஸ்ரீனிவாஸன்

**அன்று** செய்தி கேட்டதும் அதிர்ச்சியால் மயக்கமாகி விழுந்தாள் காமு. தெளிய நான்கு மணி நேரம் ஆயிற்று. இன்று அசைவற்று உட்கார்ந்திருக்கிறாள். மரத்து விட்டதோ? அல்லது நினைவெனும் உருளையில் சிக்கி முன்னும் பின்னுமாய் ஓடுகிறது போலும் மனம்.

ஆயிரக்கணக்கான பேர் சைக்கிள் மீது தினமும் போகிறார்கள். இவருக்கு மட்டும் இப்படி நேர வேண்டுமா? தெருவில் ஓடும் லாரிகள் எல்லாமா யமன்கள்?

நாளை... அந்தக் கிழமையை நினைத்தாலே வேதனையாயிருக்கிறது. எதற்காக ஒரு நாளை மட்டும் புனிதமாக்கிப் பெண்ணினத்தை நோக அடிக்கிறார்கள்? பலமுறை வந்து போன கிழமை 'நாளை ஏன் வருகிறது?' என்ற நிலையில் கொண்டு வந்து விட்டதே!

ஞாயிற்றுக்கிழமை உலகத்துக்கெல்லாம் விடுமுறை. இவர் மட்டும் வேலைக்குப் போனார். என்ன இழவு பிடித்த வேலை. ரேடியோவில் செய்திகள் வாசிப்பது ஒரு வேலையா? நண்பனொருவனுடன் 'ட்யூடி' மாற்றிக்கொண்டு போனார். சைக்கிளை வைத்து விட்டு பஸ்ஸில் போங்கள்' என்று சொல்லாமல் போனேனே? காலை ஐந்து மணிக்கு கும்பிருட்டு. அவ்வளவு குளிர் இந்த சனியன் பிடித்த டில்லியில். ஒரு வேளை சரியாகக் கண் தெரியாமல் லாரி மேல் இவரே மோதினாரோ? அந்த சைக்கிளுக்கு ஒரு விளக்குக்கூடக் கிடையாது. ஆனால் இத்தனை நாள் பத்திரமாகத் திரும்பி வரவில்லையா, அன்று மட்டும்?

நாலைந்து நாட்களாக வருவோரும் போவோரும் எத்தனை பேர் ஊரிலிருந்து உறவினரும் வந்துவிட்டனர். அம்மா எப்போதும் அருகிலிருக்கிறாள். ஆனால் வந்த அன்று ஆறுதலாயிருந்தபடி இப்போது இல்லை...இந்த அம்மா சற்று பேச்சை நிறுத்த மாட்டாளா? அவளுக்கு அவள் கவலை. எவ்வளவோ கஷ்டப்பட்டு வரன் தேடினாளாம். கஷ்டம் விடிந்தது என்று நினைத்தாளாம். இப்படி நடக்குமென்று கனவிலும் நினைக்கவில்லையாம். அவள் யாருக்கும் ஒரு தீங்கும் செய்ததில்லையாம். ஓயாத பேச்சு.

வருபவரெல்லாம் துக்கம் கேட்க வருகிறார்கள். கேட்பதும் அவர்கள் கடமை. அவர்களை உட்கார வைத்து விவரம் தெரிவிப்பதும் கடமை. இதில் அம்மாவுக்கு ஒரு விதமான உற்சாகம் தோன்றுகிறதே. எப்படிச் செய்திருந்தால் விபத்தைத் தவிர்த்திருக்கலாம் என்று சொல்லுவார்கள் அறிவாளிகள். அவர்கள் எழுந்து போனதும் இன்னொரு கோஷ்டி வரும். மறுபடி அதே கதை. விவரங்கள் ஒன்று விடாமல் சொல்லுகிறாள் அம்மா. அவர்களுக்கெல்லாம் இது ஒரு கதை. எல்லாம் கதைபோல் முடிந்துவிட்டது.

கடமைக்கென்று வருபவர் சிலர். அவர்கள் மீண்டும் வரமாட்டார்கள். (இதைப் புரிந்துகொள்ளும் திறமைகூட வந்துவிட்டதே!) அடிக்கடி வருபவர் சிலர் உண்டு. இவர் நண்பன், அந்த சங்கோஜப் பிராணி வைத்தி திடீரென்று எவ்வளவு துணிவாகிவிட்டான்! நெடு நாளாக இக்குடும்பத்தில் பொறுப்புள்ளவன் போல் அம்மாவுடன் பேசி, 'மேல் நடக்க வேண்டிய' காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்து விட்டான். ரேடியோ அதிகாரிகளுடன் பேசிக் குடும்பத்துக்குச் சேர வேண்டிய பணத்தை வாங்கிக்கொடுப்பதில் கவனம் செலுத்துகிறான்.

சாமான்களையெல்லாம் பெட்டிகளில் அடைத்து ஊருக்கனுப்புவதிலும் ரயிலில் டிக்கெட் வாங்கி இடம் பிடிப்பதிலும் அக்கறை செலுத்துகிறார் சாமிநாதன். அவருக்கு செல்வாக்கு அதிகமாம். அவர் உதவியை மிகவும் மெச்சுகிறாள் அம்மா. 'இப்படி யார் செய்யப் போகிறார்கள்?' என்று அடிக்கடி சொல்லுகிறாள். டில்லி மனிதர்களே நல்லவர்கள் என்கிறாள். 'மாப்பிள்ளைக்கு நண்பர்கள் அதிகம்' என்று கூடச் சொன்னாள் நேற்று. வழக்கம் போல் பேச ஆரம்பித்துவிட்டாள்!

தினமும் வந்து, திண்ணையில் உட்கார்ந்து மாலையில் எழுந்து போகிறான் ராஜு. வருவோரையும் கவனிப்பதில்லை, வீட்டில் யாருடனும் பேசுவதில்லை. அவன் மனத்தில் என்னதான் இருக்குமோ? துக்கம் விசாரிக்காவிட்டால் பிறர் என்ன நினைப்பார்கள் என்றுகூடத் தோன்றவில்லை போலும்.

ராஜுவின் நடத்தை காமுவுக்கே சற்று

வியப்பானதாயிருந்தது. எப்போதும் சிரித்துப் பேசுபவன் எப்படி வாயடைத்துப் போய்விட்டான்! ஞாயிற்றுக்கிழமை எதிரே வந்து நின்ற போது முகத்தில் வேதனை சொட்டிற்று. கண்ணை மூடிக்கொண்டு நெடுநேரம் நின்றான். விழித்தபோது அவலமாய்க் காட்சியளித்தான். அவனுக்கல்லவோ ஆறுதல் சொல்ல வேண்டியதுபோல் தோன்றியது?

இவரோடு எவ்வளவு நட்புடன் பழகினான்? எப்போது வந்தாலும் பாலுவுடன்தான் விளையாட்டு. விதவிதமான பொம்மைகளை வாங்கி வந்து குழந்தைக்குச் சமமாகக் கொம்மாளம் போடுவான். அந்த ராஜூவா இது?

இவருடைய கட்டாயத்தின் பேரில் ஓட்டலில் அறையைக் காலி செய்துவிட்டு இங்கே வந்து நாலு மாதம் தங்கியிருந்தானே, அப்போது எவ்வளவு பண்போடு நடந்துகொண்டான்! இவர் வீட்டில் இல்லாத போதும் சகஜம். சமையல் அறையில்கூட வந்து பேச்சுக் கொடுப்பான். பாலுவுடன் விளையாடுவதை நிறுத்தி, திடீரென்று கம்பன் பாடல் ஒன்றைச் சொல்லி விளங்க வைப்பான். கேட்க வேண்டிய அவசியமே இல்லை. தனக்குத் தானே உரக்கப் பேசி ரசிப்பதுபோல் தோன்றும்.

அவன் குரலிலேயே சகஜம். பேச்சிலும் சகஜம். தன் மனைவியை 'நீ' என்று பேசுவதை இவர் துளியும் பொருட்படுத்தாத அளவுக்கு சகஜம். அதற்கென முயற்சி ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. இயற்கையாகவே வெள்ளை மனம் போலும்.

'தங்கமான பையன் நீ. கல்யாணம் செய்து கொள்' என்று இவர் சொன்னால் 'வேறு வேலையில்லை' என்பான். எப்போதும் ஒரே பதில், 'வேறு வேலையில்லை'. ஆனால் பிறர் குடும்ப விவகாரங்களில் தலையிடாமல் குடும்பத்து மனிதன் போலவே நடந்து கொள்ளும் திறமையுடையவன். ஒருநாள் இரவு சினிமாவுக்குப் போய்விட்டு வந்து எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ரஸம் சூடாக இல்லையென்று கடிந்து பேசினார் இவர். 'இந்த டிசம்பர் குளிரில் குழாய் நீரைத் தொட்டுப் பார்த்தால் சமையலறையில் வேலை செய்பவரின் நிலைமை தெரியும்' என்று பரிந்து பேசினான், நிறைந்த அனுபவம் உள்ளவன் போல்! தன்னையுமறியாமல் 'ஸாரி' என்றார் இவர். இன்று ஊமைபோல் நிற்கிறான். அந்த ராஜூவா இது?

ஊருக்கனுப்ப ஏற்பாடுகள் நடக்கின்றன. பலர் உதவி செய்கின்றனர். சடங்குகள் முடிந்ததும் ஊருக்குப் போக வேண்டியது. பிறகு... பிறகு? இந்த டில்லி, இந்தக் குளிர், இந்தப் பாழும் ரேடியோ நிலையம், எல்லாம் கதையாகி விடும். இதைவிட்டு ஒழிந்தாலே நல்லது... எது நல்லது? இனி ஏது நல்லது?

பாதியிருக்கும்போதே சிகரெட்டைக் கீழே போட்டுச் செருப்பால் மிதித்தான் ராஜூ. முணுமுணுத்துக் கொண்டே தலையை ஆட்டினான். 'சீ, இவர்களெல்லாம் மனிதர்களா' என்றான். அறைக்குள் நடந்துகொண்டே தனக்குள் பேசிக் கொண்டான். துக்கம் விசாரிப்பதாம்! பேத்தல். செத்த வீடு ஒரு செய்திச் சாவடியா, விசாரிப்பதற்கு? பேசும்போது துளியாவது உணர்ச்சி வேண்டாமா? 'இப்போது மணி என்ன?' என்று கேட்பதும் 'உன் கணவன் செத்துவிட்டானா?' என்று கேட்பதும் ஒன்றுதானே? சீ!

வாசலில் கூட்டமாக நின்று தன் குடும்பத்தில் நேர்ந்த துயரத்தையும் பெரிய 'விபத்தில்' சிக்கித் தான் பட்ட அவதியையும் விளம்பரப்படுத்த இதுவே தருணம் என்று நினைப்பவர்களை என்னவென்று சொல்வது? உறவினர் மட்டும் என்ன? முதல் நாள் கட்டிப் புரண்டு அழுதவர்கள் மறுநாள் காபிக்குச் சர்க்கரை போதவில்லை யென்று குறைகூறினர். 'டில்லியிலிருந்து வாங்கிப் போக விசேஷமாக என்ன சாமான் கிடைக்கும்?' என்று எல்லோர் முன்னிலையிலும் இரைந்து கேட்ட அந்த அத்தையைக் கழுவில் ஏற்றினால் என்ன? துக்கம்விசாரிக்க வந்தாளாம் சென்னையிலிருந்து!

'இவர்களெல்லாம் மனிதர்களா?' எழுந்து ஜன்னலருகே நின்றான். இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். வெளியே ஸ்கூட்டர் நின்றது. பாலுவுக்கு ஸ்கூட்டர் சவாரி எவ்வளவு பிடிக்கும்! அழுதுகொண்டிருந்தாலும் ஹாரன் சப்தம் கேட்டதும் 'கூடர்' என்று தாவி வருவானே! எவ்வளவு முறை 'இண்டியா கேட்'டைச் சுற்றி வருவோம். இடுப்பைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு 'வேகமா போ, மாமா. காரை ஜயிக்கலாம்' என்று தூண்டுவான். ஊருக்குப் போனால்...?

சைக்கிளைவிட ஸ்கூட்டர்தான் அபாயகரமானது என்று தினசரிப் பத்திரிகையில் வாசித்ததை நினைத்து 'சூள்' கொட்டினான். 'எந்த லாரி என்னைத் தேடி அலைகிறதோ?' என்று நினைத்தான். உதட்டைப் பிதுக்கினான். 'நான் ஒண்டிக் கட்டை. இந்தப் பாவி ஒரு பெண்ணைச் சந்தியில் விட்டுப் போனானே' என்று பெருமூச்சு விட்டான். காமுவின் முகம் கண்ணெதிரில் நின்றது. பழைய முகம். ஞாயிற்றுக்கிழமைக்கு முன் தோன்றிய முகம்.

நாணத்தை மறைக்கும் புன்சிரிப்பு. அமைதி குடிகொண்ட பார்வை. இல்லறத்தில் இன்பம் கண்ட பார்வை. அந்த முகத்தைப் பார்க்கக் கூசுவதுபோல் தலையைத் திருப்பிக் கண்ணை மூடிக் கொண்டான்.

இதற்கும் நாலைந்து நாட்களாகப் பார்க்கும் முகத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! பிரேதத்தின் முகத்தைவிட மேலான அவலம் ஏறிய முகம். நினைத்தால் வயிற்றைக் கலக்கும் முகம். 'இவன் மட்டுமல்ல, காமுவும் இறந்துவிட்டாள்' என்று முணுமுணுத்தான். அது லாரி விபத்து. இது?

எல்லாம் பேத்தல். இவள் ஊருக்குப் போய் என்ன செய்வாள்? ஒன்றும் புரியவில்லை. இதைவிட்டுப் போன பிறகு காமுவை யார் கண்டார்· ஹூம்...ஆனால் போகாமல் என்ன செய்வது? உத்தியோகம் செய்து பிழைக்கும் திறமைகூட கிடையாது. போவதுதான் சரி. அதுதான் முறை.

இன்னொரு சிகரெட். ஊதிவிடும் புகை போல எல்லாம் மறைந்து காற்றோடு கலந்துவிடும் போலும் நாளடைவில். இந்த டில்லி வாழ்க்கையெல்லாம் பொய், ஊரில் காத்திருக்கும் வாழ்கைதான் மெய்யோ? அவனுடைய நட்பு, பாலுவோடு செய்த ஸ்கூட்டர் சவாரி, அவள் கையால் படைத்த உணவு, எல்லாம் அவனுடன் எரிந்த சாம்பலாகிவிட்டனவோ?

தன்னையறியாமல் வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். கோழைபோல் அழுவதா? சுவரில் மாட்டியிருந்த படத்தைப் பார்த்து 'கடவுளாம், கடவுள்' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. உரக்கக் கூறக் கூசியது உள்ளம். காற்றில் ஆடிய படம், 'எல்லாம் நீ நினைக்கிறபடி நடக்க வேண்டுமோ?' என்று ஏசுவது போலிருந்தது.

அதையடுத்த பெற்றோரின் போட்டோவின் மேல் பார்வை விழுந்தது. ஐந்தாவது வயதில் இழந்த தாயின் முகம் தெளிவாக நினைவில்லை. அவளிறந்துபோன நாள் மாலையில் வெளியே கோலி விளையாடிக் கொண்டிருந்த போது காரணமின்றி இழுத்து வந்து மாமா ஒரு அறை வைத்தார். அது மட்டும் நினைவிலிருக்கிறது.

இந்தப் புகைப்படம்தான் மனத்தில் பதிந்திருக்கிறது. இதுதான் தாய். முருகனைப் போல் தாய். படம்தான் மனத்தில் ஊறிய உண்மை உரு.

அவள் இறந்த பின் தந்தை இப்படித்தான் துடித்தாரோ? நினைவில்லை. ஆனால் 'ஒரு நாளும் தாயைப் பற்றி என்னிடம் நாலு வார்த்தை பேசியதில்லையே?' என்று நினைத்தான். இதுவரை தானும் இதைப் பற்றியே சிந்திக்காததைக் குறித்து வியந்தான். மறுவிவாகம் செய்து கொண்ட பின் முதல் மனைவியைப் பற்றி மௌனமாயிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது போலும். 'எனக்கென்ன தெரியும்?' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.

தாய்க்குப் பதில் தந்தை இறந்திருந்தால்? படத்தை உற்று நோக்கினான். தாயின் இளமையான முகம் விகாரமடைந்து தலைவிரி கோலமாய் நிற்கும் அவலமாய்த் தோற்றமளித்தது. கண்ணை மூடிக்கொண்டு, குழம்பிய எண்ணங்களை உலுக்கி விடுபவன் போல் தலையை அசைத்தான்.

மேஜைக்கருகில் உட்கார்ந்து முகத்தைக் கையில் புதைத்துச் சிந்தனையில் ஆழ்ந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் காமுவின் முகம் கண்முன் நின்றது. 'நீ ஏன் ஒன்றுமே பேசவில்லை?' என்று கேட்பதுபோல் தோன்றிற்று.


# கடைத்தெருக் கதைகள்

திரு. ஆ. மாதவன் அவர்களுக்கு திருவனந்தபுரம் சாலைக் கம்போளக் கடைத்தெரு உலகம் பற்றி எத்தனை சொன்னாலும் தீராத அளவிற்குக் கதைகள் இருக்கின்றன. அத்தனையும் கட்டுக் கதைகள் அல்ல. எல்லாமே உண்மைகள்.

இதுவரை அவர் எழுதிய கடைத்தெரு பற்றிய பத்துக் கதைகள் ஒரு தொகுப்பாக அடுத்த மாதம் வெளிவர இருக்கிறது.

**கடைத் தெருக் கதைகள்**

ஆசிரியர் : ஆ. மாதவன்

வெளியீடு : இளங்கோ பதிப்பகம், சென்னை-17.

''பேச்சுக்கு அர்த்தமேயில்லாத நிலையில் இருக்கிறாய். என் நெஞ்சு அழுகிறது. பிறர் பேசுவதுகூட எரிச்சல் ஊட்டுகிறது!'' என்றான். நேரில் பார்ப்பவன் போல் எண்ணங்களைச் சொல்லாக்குகிறான். ''உனக்கு உதவி செய்ப வரெல்லாம் உன்னை ஊருக்கனுப்ப ஏற்பாடு செய்கிறார்களென்று நினைக்கிறாயா? உன் வாழ்வை முடிக்க ஏற்பாடு செய்கிறார்கள். வாடிய மலரைப் புறக்கடையில் போடுவது போல்...ஆனால் உன் தாயுடன் ஊருக்குப் போவதுதான் சரி. அதுதான் முறை.

ஊர்...எது ஊர்? மன்னார்குடிக்கருகில் ஏதோ ஒரு கிராமத்தில் வசிக்கிறாரே உன் தந்தை, அதுவா உன் ஊர்? 'ரிடையர்' ஆவ தற்கு முன் அவரே அந்த ஊரைப் பார்த்த தில்லையே, அங்கு உனக்கு யாரைத் தெரியும்? அவர்களுக்கு நீ யார்!

அங்குள்ளவர்களுக்கு நீ காமு அல்ல. பெண் அல்ல. குடித்தனமாக வாழ விதியில் லாத 'தோசி'. இதையெல்லாம் நினைக்க நினைக்க ஆத்திரம்தான் அதிகரிக்கிறது. யாரி டம் சொல்வது என்று தெரியாமல்தான் பேசா மலிருக்கிறேன்.'' நெஞ்சை அமுக்கும் பாரம் சிந்தனையையும் ஓடவிடாமல் தடுத்தது.

எப்படியும் அவள் ஊருக்குப் போவதற் குள் ஒரு தடவைப் பார்த்துப் பேச வேண்டு மென்று முடிவு செய்தான். மரியாதைக்காக வாவது சொல்ல வேண்டிய ஒரு வார்த்தை சொல்லாவிட்டால் அவளே மன்னிக்கமாட் டாள்.

மறுநாள் ஸ்கூட்டரில் போய்க்கொண்டே 'என்ன சொல்வது, எப்படிச் சொல்வது' என்று ஒத்திகை செய்து பார்த்தான். புரிய வில்லை. வழக்கமாய்த் தனக்குரிய இடத்தில் நின்றவாறே உள்ளே எட்டிப் பார்த்தான். காமு தனிமையிலிருப்பதாகத் தோன்றியது.

கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான். அதிக வெளிச்சமில்லாத அறை யில் துணிகள் இறைந்து கிடந்தன. அழுக் கடைந்த ஈரத் துணிகள் கிளப்பிய வாடையும் கருமம் செய்த ஓமப் புகையும் சூழ்ந்து நின்றன. மூச்சை அடைப்பது போலிருந்தது. சில பெட்டி களில் சாமான்கள் பாதி அடைபபட்டுக் கிடந் தன. சுவரிலிருந்து இறக்கப்பட்ட படங்களும் போட்டோக்களும் அருகில் இறைந்து கிடந் தன.

சாய்வு நாற்காலியில் சோர்ந்து கிடந்தாள் காமு. அருகில் மேஜைமேல் தோசை. சட்னி நீரோடியிருப்பதைப் பார்த்து நெடு நேரமாக கிடந்திருக்க வேண்டுமென்று யூகித்தான். உள்ளே ஆள் வரும் சப்தம் கேட்டுக் காமுவின் தாய் அருகில் வந்து நின்றாள் அவளுடன் உள்ளே நுழைந்த வெளிச்சத்தில் காமுவின் முகத்தை உற்று நோக்கினான். நெற்றி சூன்ய மாயிருந்ததைக் கண்டதும் 'விர்'ரென்று ரத் தம் தலைக்கேறிற்று. இருமிக்கொண்டே வெளியே போய் ஸ்கூட்டரைக் கிளப்பினான். ஐம்பது மைல் வேகத்தில் சென்று மறைந்து விட்டான்.

ரயில் கிளம்பும் வரை ராஜு வருவா னென்று எதிர்பார்த்தாள் காமு. அவள் கருத்தை உணர்ந்தவர்போல் சாமிநாதன், 'ராஜு வரவேயில்லையா? என்ன நண்பன்! எல் லாம் அவ்வளவுதான்!'' என்றார்.

ஜன்னல் வழியே வெளியே பார்த்தான். அடைபட்ட கைதி போல் தனக்குள் பேசிக் கொண்டான் ராஜு. 'இந்நேரம் ஆக்ரா போய்ச் சேர்ந்திருப்பாள்' என்று பெருமூச்சு விட்டான். 'இந்நேரம் க்வாலியர்...போபால் ...' என்று ஒவ்வொரு ஸ்டேஷனைச் சொல்லிக் கொண்டே இரவைக் கழித்தான்.

நாளடைவில் எல்லோரும் தத்தம் கவலை களில் ஈடுபட்டனர். அவர்களுக்கெல்லாம் காமு வைப் பற்றிய நினைவு இருந்ததோ என்னமோ, ஒருவரும் ராஜுவிடம் அதைப் பற்றிப் பிரஸ் தாபம் செய்ததில்லை. திடீரென்று பாலு என்ன செய்து கொண்டிருக்கிறானோ?' என்று நினைப் பான் ராஜு. 'காமு எப்படியிருக்கிறாளோ?' யார் கண்டது.

ஒருநாள் மாலை வழக்கம்போல் ஜன்னல் வெளியே பார்த்துக் கொண்டிருந்தான், காமு வின் உருவம் மனக் கண்முன் தோன்றியது. குடத்தில் நீர் சுமந்து நடந்து செல்லுகிறாள். தலை நிமிராமல் நடக்கிறாள். அதுதானே முறை? தலைவிதியை நொந்து கொண்டே அடி மேல் அடி வைத்துப் போகிறாளெனத் தோன்று கிறதே.

கசங்கிய சட்டையுடன் பித்தான் இல்லாத நிஜாரைக் கையில் பிடித்துக் கொண்டு நடந்து போகிறான் பாலு. தனிமையில் போகிறான். அவனோடு விளையாட ஒருவரும் இல்லையோ?

வீட்டுக்குள் நுழைந்ததும் காமுவின் தாய் ஏதோ சொல்லுகிறாள். 'ஏன் இத்தனை நேரம்' என்று கேட்கிறாள் போலும். கண்டிப்பில் வைத்த உடலைப் பாதுகாப்பது தாயின் பொறுப்பல்லவா? 'தீவட்டிக் கொள்ளைக்கார

ருக்கு பயந்து கும்பிடும் சிலையைப் பாழுங் கிணற்றில் போட்டு அக்கிணற்றைக் காவலிருக்கும் பேதமை! என்று உரக்கச் சொல்லிச் சிரிக்க முயன்றான். சிரிப்பு வரவில்லை.

நாலைந்து மாதங்கள் ஓடிவிட்டன. காமு டில்லிக்கு வந்திருக்கிறாள் என்று டெலிபோன் மூலம் சொன்னார் சாமிநாதன், 'காமுவா?' என்று சற்று நம்பிக்கையற்ற குரலில் கேட்டான் ராஜு.

'ஆம். செய்தி இலாகா மந்திரியைப் பார்க்கப்போகிறாள். அவள் ரேடியோவில் ஆற்றிய பணியைப் பாராட்டி நண்பர்களெல்லாம் சந்தா சேர்த்துக் கொடுக்கிறார்களாம். மந்திரியும் சர்க்கார் தரப்பில் கொஞ்சம் கொடுத்து ஒரு பண முடிப்பை அளிக்கப்போகிறாராம். ஏற்பாடுகளெல்லாம் வைத்திதான் செய்திருக்கிறார். நாளைக்கு மந்திரியுடன் பேட்டி என்றார்.

'பெரிய பிரபு. நன்கொடையளிக்கத் தன் சபைக்கு வரவழைக்கிறான் ஒரு அபலையை. சிறுமைப்படுத்தாமல் பணத்தை அனுப்பி வைத்தால் எவ்வளவு கௌரவமாயிருக்கும்? நேரில் வந்து வணக்கமாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டுமாம்!' என்று நினைத்தான். காமு எப்படியிருக்கிறாள் என்று கேட்க மறந்து விட்டான். சாமிநாதன் சுருக்கமான பேச்சும் நட்பற்ற குரலும் அதற்கிடம் கொடுக்கவில்லை. அவன் ஸ்டேஷனுக்குப் போய் வழியனுப்பாததை ஒருவரும் மறக்கவில்லை போலும்.

சாயங்கலாம் வைத்திவீட்டுக்குப் போனான். காமு ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள் அருகில் தாய் தரையில் உட்கார்ந்துகொண்டு, தன் தலையை வாரிக்கொண்டிருந்தாள். பாலு வைக்காணோம். ரயில் சிலவைக் குறைக்க அவனை ஊரிலேயே விட்டு வந்துவிட்டாள் போலும். ராஜுவைக்கண்டதும் கண்ணாடி, சீப்பு, குங்குமச்சிமிழ் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு நகர்ந்து உட்கார்ந்தாள் தாய்.

முன்பைவிட இளைத்த முகம். தலையில் நரை தோன்றிவிட்டது. கஷ்டப்பட்டு புன்சிரிப்பை வரவழைத்துக்கொள்ள முடியாமல் 'வாருங்கள்' என்று வாய்விட்டுச் சொல்ல வேண்டியிருந்தது. முகத்தில் ஒருவித உணர்ச்சியும் தோன்றவில்லை.

ஒருகணம் பேசாமல் நின்றான் ராஜு. 'மாமி கொஞ்சம் ஜலம் வேண்டும்' என்று கேட்டுத் தாயைச் சமையலறைப் பக்கம் அனுப்பினான். காமுவின் முகத்தை உற்று நோக்கினான். ஆவேசம் வந்தவன்போல் கீழே கிடந்த குங்குமச் சிமிழை எடுத்து அவள் முன் நீட்டினான். அவள் திகைத்து நிற்பதைப் பார்த்து, 'காமு, காமாக்ஷீ, அம்பா' என்று உளறிக்கொண்டே குங்குமத்தை அவள் நெற்றியில் அப்பினான். 'நீ ஊருக்குப் போக வேண்டாம்' என்றான் ஈனக்குரலில். கை நடுங்கிற்று. படபடப்பால் விகாரமடைந்த முகம், அரைமைல் ஓடி வந்தவன் போல் இறைக்கும் மூச்சு, கெஞ்சும் பாவனை. வேறு எவனோ போல் தோன்றினான் ராஜு.

விரிந்த கண்ணோடு நிமிர்ந்து பார்த்தாள் காமு. ஒருகணம் ஒளி பெற்றுத் திகழ்ந்த அவள் முகத்தில் பழைய முகத்தை அடையாளம் கண்டு கொண்டான் ராஜு.

உறைந்த பனி உருகியது. கருகிய மலர் விரிந்தது. ★

# சுயநலப் பெண்மணிகள்

பெண்களின் நினைவுகள் தான் தன்னலத்தோடு கூடியவை என எல்லா நோக்கிலும் தெரியவருகிறது. இதை முக்கியமாக அவர்களுடைய சம்பாஷணைகளிலிருந்து தெரிவதே அத்தாட்சியாகும்.

அமெரிக்காவில், சின்சின்னாட்டி பல்கலைக் கழகத்தில், பலதரப்பட்ட வயதுள்ள ஆண், பெண்களின் பழக்க வழக்கங்களையும், பல்வேறு அறிவுத் திறன் நோக்குகளில் ஆராய்ச்சி நடத்தினர். ஒவ்வொன்றின் சம்பாஷணை விஷயங்களையும் பதிவு செய்து, ஆராய்ந்தனர்.

பெரும்பாலும் பெண்களின் பேச்சுக்களை கவனிப்பின், தங்களைப்பற்றிக் குறிப்பிடும் வார்த்தைகளையே காணமுடியும்— 'எனக்கு, என்னுடையது,' ''நான் இதை விரும்பவில்லை...,'' ''நான் அதை விரும்பவில்லை...,'' ''என்னுடைய சிற்சில...'' மேலும் மற்ற பல சொற்றொடர்களை தன்னைத்தானே சுட்டிக்காட்டுவதில்தான் அவர்களுடைய பேச்சுக்கள் அமைகின்றன. எனவே ஆண்களைவிட பெண்கள்தான் சுயநலவாதிகள் என சுத்தமாகத் தெரிய வருகிறது.

# மரங்கள்...

மானுட ஆண்மைக்கு
மண்கொடுத்த சீதனங்கள்
மரங்கள்!
நாங்கள்—
சிறகுத் துடுப்புகள்
செலுத்திச் செல்கிற
படகுப் பறவைகளின்
பயணியர் விடுதிகள்!
எந்தப் பறவைக்கும்
இருக்க இடங்கொடுக்கும்
பொதுவுடைமை வீடுகள்!
அதனுல்தான்
தராதர மறியாத
தான்தோன்றிப் பறவைகள்
எங்கள்
தலைகளின் மீதே
எச்சமிட்டுச் செல்கின்றன!
நாங்கள்—
சூடு படுகின்ற
சொந்தக் காரர்களுக்காக
விரித்தே இருக்கும்
வெண்கொற்றக் குடைகள்
மனிதர்கள் வாங்கிவைக்காத
மண்ணின் விசிறிகள்
மழைக்கு ஒதுங்கும்
மர நிலையங்கள்
சரியாகப் போடாத
சல்லடைப் பந்தல்கள்
பாத சாரிகளின்
பணிமனைக் கூடங்கள்!
மானுடர் கரங்களில்
அகப்பட்டுக் கொண்ட
மண்ணின் கைதிகள்!
அதனுல்தான்
ஊருக்கு வெளியில்
உட்கார்ந் திருந்தாலும்
எங்கள்
மார்பிலும் தோளிலும்
எண்களை எழுதி
மாட்டி வைக்கிருர்கள்!
காற்று மன்னவன்
கால்நடை யாத்திரையைக்
கண்டு முரசறையும்
கட்டியங் காரர்கள்!
தரையில் நடக்கப்
பிரியப் படாதபோது
காற்று
எங்கள்
தலைகளின் மீதே
நடந்து செல்கிறது!
இரவுக் காற்றின்
ஈர உதடுகளோடு
உறவு கொள்கிறோம்.
உலராத எச்சிலைப்
பனித்துளி யென்று
நீங்கள்
பகர்கின் றீர்கள்!
தென்றலின் பார்வையில்
செல்லப் பிள்ளைகள்
நாங்கள்—
புயலின் கண்களில்
புரட்சிக் காரர்கள்!
சட்டையை மாற்றும்
சாரைப் பாம்புகளுடன்
சண்டையிட்டுக் கொண்டோம்
ஆதலால்
காலந் தோறும்
ஒரே உடையை
உடுத்தி யிருக்கிறோம்.
காலத்துக்குக் காலம்
எங்கள் உடை
கனமாகி வருகிறது.
எங்கள் உடுக்கையை
யாரேனும்
கழற்றவோ
மாற்றவோ வந்தால்
தடுக்க முடியாமல்
கண்ணீர் வடிக்கிறோம்!
வெட்டி யெடுத்தால்
விறகாவோம் வெய்யிலிலே
சுட்டு எடுத்தாலும்
சுறுசுறுப்பாய் அடுப்பெரிப்போம்!
நாங்கள்—
கல்லில் எறிந்தாலும்
கம்பில் அடித்தாலும்
பரிசு கொடுக்கின்ற
பண்பின் வார்ப்புகள்!
வானத்தில் நடக்கும்
நட்சத்திர இரவு
விளையாட்டு மேடையில்
தவறி விழுவதைத்
தாங்கிப் பிடிப்பதற்காக
மண்ணில் கட்டிய
வலை விரிப்புக்கள்!
மனிதர்கள் தூங்கிய பிறகும்
வானத்தில் விளக்கெரிவது
மரங்களுக்காகவே!

மு. மேத்தா

கடல் சூழ்ந்த தென்னிந்தியா கர்ண பரம்பரையாக வரும் இந்து சம்பிரதாயங்களைப் போற்றிப் பாதுகாப்பதோடு இந்தியக் கலாச் சாரத்தின் பெட்டகமாகவும் விளங்குகிறது.

வட எல்லையிலிருந்து யாரும் படையெடுக்க முடியாதபடி விந்திய பர்வதங்கள் அமைந்துள் ளன. தென்னகம், வடக்கத்திய நாகரிகத்தின் சாரத்தைக் கிரகித்துக் கொண்டு அதே சமயம் அகில பாரதக் கலாச்சாரமே பரிணமிக்குமாறு தனக்கென ஒரு பாணியை வகுத்துக்கொண்டு விட்டது.

தெற்கே திராவிடம், ஆரியம் என்று ஏதோ ஒருவாறு அறியப்படும் இரு தனிப் பண்பாடு கள் ஒரு உன்னதமான கூட்டுக் கலாச்சாரத்தை வழங்குகின்றன. தமிழ் இலக்கியத்தைச் சேர்ந்த தொன்மையான சங்ககால நூல்கள் இப்பண்பாட்டியலைப் படம்பிடித்துக் காட்டும். ஆங்காங்கே உணர்ச்சிப் பாடல்கள் புவியின் பகட்டாரவாரக் காட்சியையும் நாகரிக முதிர்ச்சியற்ற காலத்து அதிசயங்களையும் சித் திரிக்கும்.

புருஷர் அகஸ்தியரைப் போலவே கடல்களையும் விழுங்கிவிட்டது எனலாம்.

### வளமிக்க கற்பனையாற்றல்

நாசிக், கர்லா குகை விகாரங்களும் கண் கவர் அமராவதி ஸ்தூபியும் நாகார்ஜுன கொண்டா மடாலயமும் இக் காலச் சிறப்புக்கு உதாரணங்களாகும். தென்னிந்தியாவின் ஆதி கால பௌத்த கட்டிட நிர்மாணிப்புக் கலை நுண்ணியல் எழிலுக்கும் திறம்பட்ட கல் செதுக்குவேலைக்கும் எல்லாவற்றுக்கும் வளமிக்க மேலாக கற்பனையாற்றலுக்கும் பிரசித்தி பெற் றது.

உதாரணமாக இரண்டாவது நூற்றாண் டின் இறுதி ஆந்திரர்களால் சமைக்கப்பட்ட அமராவதி புடைப்பியல் செதுக்கோவியங்கள் இந்தியாவிலேயே மிக மேன்மையான சிருஷ்டி கள் என்று கருதப்படுகின்றன. டாக்டர் அனந்தகுமாரஸ்வாமி இதைப் பற்றிக் குறிப் பிடும்போது ''முதன் முறை சிற்பமே கலையாக மாறிவிடுகிறது'' என்று கூறுகிறார்.

# தென்னிந்திய நாகரிகப் பிரபை

நாளாவட்டத்தில் அணிநலம் செறிந்த கவிதை நடையொன்று உருவாக அடுத்து இரண்டு நூற்றாண்டுகளில் (கி.பி. 300—500) சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இருபெரும் காப்பியங்கள் பிறந்தன.

வட்டாரப் பேச்சு மொழி முக்கியமாக ஜைனர்களாலும், பௌத்த மதத்தினராலும் வளர்க்கப்பட்டது என்று தமிழ் வரலாறு கூறும். விகாரங்களிலும், சைத்திய கூடங்களி லும் அவர்கள் தங்கள் மத ஈடுபாட்டையும் மனிதாபிமானத் திறனையும் காட்டியிருக்கின்ற னர். அவை வழிபாட்டுக்குரிய இடங்களாக வும் புனிதக் கல்வி புகட்டும் கருவூலங்களாகவும் இருப்பதோடு கலைக் களஞ்சியமாகவும் விளங்கு கின்றன.

வர்த்தக சங்கங்களின் உதார குணமும் ஐசுவரியம் படைத்த வியாபாரிகளுமே இதற் குக் காரணம். சிற்பிகளின் தொழில் நுணுக் கத்தையும் திறமையையும் வியாபாரிகள் கடல் கடந்து கீழை நாடுகளுக்கு எடுத்துச் சென்ற னர். ஆக இந்தியக் கலாச்சாரம் அதன் மூல

ஏழாம் நூற்றாண்டு பிறந்ததும் சமண மத மும் புத்த சமயமும் க்ஷீணிக்கத் தலைப்பட்டன. சங்கரர் தனது வல்லமை மிக்க அத்வைத வாதத்தினால் பௌத்த சித்தாந்தத்திற்கு ஈடு கொடுத்து உபநிஷதங்களைப் பற்றிய சிந்தனை யைக் கிளறிவிட்டு வேதியல் சம்பந்தமான நம்பிக்கையை நிலைநாட்டினார்.

சைவம், வைணவம் என்ற இந்து மத இரட்டைக் கதவுகள் பழைய கலை, கட்டிடக் கலை வாயிலாக மதத்தின் பண்புக் கூறுகளைப் பிரதிபலித்தன. கோயில்களோ விகாரங் களுக்கு நேர் மரபு வழிகளாயின. சைவ

★

ஆங்கில மூலம்:

**ஏ. எஸ். ராமன்**

தமிழாக்கம்:

**ப. சுந்தரேசன்**

நாயன்மார்கள், வைஷ்ணவ ஆழ்வார்கள் வழங்கிய அருளமுதம் சமய ஆர்வம் உள்ளவர்களையெல்லாம் பல்லாயிரக்கணக்கான கோயில்கள் மூலம் பக்திப் பரவசமடையச் செய்தன.

## மறுமலர்ச்சி

பதாமி சாளுக்கியர்கள், காஞ்சி பல்லவர்கள், மதுரைப் பாண்டியர்கள் ஆகிய மூன்று ராஜ பரம்பரையினரும் மறுமலர்ச்சியடைந்த கலைச் சுவையைப் பேணி வளர்த்தார்கள்.

பல்லவ அரசர் மகேந்திர வர்மன் (கி.பி. 600—625) தெற்கே முதல் முதல் கற்கோயில்களை எழுப்பினர். தென்னிந்திய கோயில் கட்டிடக் கலையின் எழில்மிகு சிகர அமைப்பு பதாமியில் உருவானது. பல்லவர் தொழில் திட்ப நுட்பங்களை மாமல்லபுரம் ஒற்றைக் கோயில்களும், கட்டிட அமைப்பான்மைத் திறம் வாய்ந்த காஞ்சி மாநகரக் கோயில்களும் பறை சாற்றும்.

இந்த யுகம் பல்வேறு வகையில் சிறப்பெய்திய போதிலும் குறிப்பிட்ட சில சாதனைகளுக்கெனப் பாடுபட்டது. சித்தன்னவாசல் சுவர்க் கோல ஓவியங்கள் அர்ஹத்களின் தெய்வீக அருளைவிளக்குகின்றன. இக்காலத்தில்சங்கீதமும் இலக்கியமும் ஒருபுதிய தூண்டுதலைப் பெற்றன. முதல் மஹேந்திர வர்மன் ஆயிரங் காலத்துப் பயிர். அவர் புத்தம் புதிய சிற்பக் கலை பத்ததியை உருவாக்க முயன்றதோடு சமஸ்கிருதத்தில் ''மத்த விலாஸப் பிரஹஸனம்'' என்ற நையாண்டிச் சித்திரமொன்றையும் எழுதியிருக்கிறார்.

தெற்கே சோழர்களும் தட்சிணப்பிரதேசத்தில் ராஷ்டிரகூட சாளுக்கியர்களும் இந்த உயர்ந்த மரபுக்கு வழியுரிமையாளராயினர். ஒழுங்கமைவு, உருவரை வகைகளிலும் நெஞ்சை அள்ளும் சிற்ப மேம்பாட்டிலும் பிரசித்தி பெற்ற எல்லோரா குகைக் கோயிலும் சில அஜந்தா குகைகளும் ராஷ்டிரகூடர்களுடைய அழியாப் படைப்புக்களாகும். பட்டடக்கால், கல்யாணிக் கோயில்கள் சிற்பம் கட்டிட வேலையை எப்படி எழிலோங்கச் செய்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு.

## சோழர்கள் சாதனை

அரசியல் ஆதிக்கத்திலும் கலாச்சாரச் சாதனைகளிலும் சோழர்கள் மேம்பட்டு விளங்கினார்கள். தஞ்சை, கங்கைகொண்டசோழபுரம் ஆகிய இடங்களில் உள்ள வானளாவிய கோபுரங்கள் அவர்கள் பேரரசு வலிமையைக் காட்டும் நினைவுச் சின்னங்கள். கர்ப்பக் கிரகத்திலும் 'சிக்காரா'விலும் காணப்படும் எண்ணிறந்த சிற்ப வண்ண அலங்காரங்களிலிருந்து மக்களுடைய சமய ஈடுபாடுகளைப் பற்றி நாம் ஒருவாறு அறிகிறோம்.

இந்திரிய அனுபவத்தை நளினமாகத் தர வல்லதும் மனக் கிளர்ச்சியைத் தூண்டி விடுகிற குழைவியல்பும் கொண்ட உலகப் பிரசித்தி பெற்ற வெண்கலங்கள் சோழர்கள் ஆதரவில் தான் வார்க்கப்பட்டவை. சோழர்கள் சகாப்தம் ஒரு வீர சகாப்தம். அப்போது சமஸ்கிருதம் அரச ஆதரவுடன் வித்யாஸ்தானங்களில் நல்லதோர் இடத்தை வகித்தது. மேலும் இக்காலத்தில் வேதாந்த சாஸ்திர நூல்களும் சட்ட சாஸ்திர நூல்களும் எழுதப்பட்டன. மீடாக்ஷரா வான யஞ்ஞவாக்ய ஸ்மிருதியின் வியாக்கியானம் ஆறுவது சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் ஆதரவு பெற்று விக்னேஸ்வரரால் எழுதப்பட்டது. கன்னடமும் தெலுங்கும் அபிவிருத்தியடைந்தன. இக்காலத்தில் தான் பிரபல கன்னடக் கவிஞர் ரன்னாவும் கன்னட உரைநடையின் பிதாவான சமண அறிஞர் நெமிசந்திராவும் மகாபாரதத்தை ஆதியில் தெலுங்கில் எழுதிய ஆதிகவி நன்னையாவும் தோன்றினர்.

தமிழில் கவிச் சக்கரவர்த்தி கம்பன் எழுதிய இராமாயணம் இன்னொரு மகாகாவியம். சேக்கிழார் ஆக்கிய பெரிய புராணத்தோடு கம்பராமாயணத்தையும் சேர்த்து தமிழ் இலக்கிய சாதனைகளின் சிகரம் என்பர் பெரியோர். சேக்கிழார் தன் காலத்திய கரை புரண்ட சைவ மதப் பற்றுதலை, சைவக் குரவர்களின் வாழ்க்கைச் சித்திரங்களைச் சொல்வதன் மூலம் செய்யுட்களாக வடித்தார். ஆனால் இராமாயணம் நடைவளத்தில் மில்ட்டன் பாணியிலிருக்கும்படி கம்பர் அதைக் கையாண்டிருக்கிறார் என்பது தெரிந்ததே. சுருங்கச் சொல்லின் கம்பருடைய மனோதத்துவ நுண்ணறிவு ஆழத்துக்கு ஆழம். நவீனத்துக்கு நவீனம்.

மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல்—நன்னையா (11-ம் நூற்றாண்டு), திக்கானா (13-ம் நூற்றாண்டு, யர்ரப்பிரகடா (14-ம்நூற்றாண்டு) —மகாபாரதத்தை சமஸ்கிருத இலக்கியத்திலிருந்து ஆந்திர இலக்கியத்தில் பெயர்த்து உருவாக்கியது இடைநிலைக் காலத்தின் இறுதியில் ஆந்திர இலக்கியக் கலாச்சாரத்தின் மகத்தான முதல் சாதனையாகும், இந்த ஆசிரியர்கள் தமக்கென ஒரு நடையை வகுத்துக் கொண்ட போதிலும் உண்மையிலேயே அவர்கள் மூவரும் தெலுங்கு இலக்கியத்தின் முன்னோடிகள்.

முன்னோடிகளில் முன்னோடியான நன்னையா மூல சமஸ்கிருத அஸ்திவாரத்தின் மீது அழகானதோர் தெலுங்கு மேற்கட்டுமானத்தை எழுப்ப முயன்ற தீவிரவாதி.

இரண்டு நூற்றுண்டுகளுக்குப் பிறகு நன்னேயா வழிவந்த திக்காஞ 18 பர்வங்களுடைய தெலுங்கு மகாபாரதத்தில் 15 பர்வங்களை எழுதியிருக்கிருர். புதுமை மோஸ்தரில் பற்றுடைய இவர் படைக்கும் திறனிலும், இயலறிவிலும், புலனுணர்விலும் தீர்க்கதரிசி. தெலுங்கு மொழிக்கு ஐயந்திரிபற்ற ஒரு புதிய வளத்தையும் ஒழுகியல் நடையையும் தந்து உதவினவர் என்ற முறையில் அவரை ஒரு இலக்கிய கர்த்தா என்றே கூறலாம்.

ஒரு நூற்றுண்டுக்குப் பிறகு வாழ்ந்த யர்ரப் பிரகடா மகாபாரதத்தின் மூன்ருவது பர்வமாகிய ஆரண்ய பர்வத்தின் கடைசிப் பகுதியை எழுதி நன்னேயா ஆரம்பித்து வைத்த பணியைப் பூர்த்தி செய்தார். இதைக் காட்டிலும் வேறெந்த இலக்கிய முயற்சியும் அதிகத் துணிச்சலாகவோ ஆர்வம் பொங்கியதாகவோ இருக்க முடியாது. ஏனெனில், ஏற்கெனவே நன்னேயாவும் திக்காஞவும் இலக்கிய மாமலைச் சிகரத்தை நோக்கிச் சென்ற அடிச்சுவடுகளிலேயே யர்ரப் பிரகடாவும் சென்று வெற்றி வாகை சூடியிருக்கிருர். இருபெரும் இலக்கிய மேதைகளின் உத்தியையும் பயின்ற இவர் எழுத்தோவியத்தில் மேதாவிலாசம் பளிச்சிடும். சமுதாயத்துடன் பழகாது ஒதுங்கி வாழ்ந்த நன்னேயாவின் தனித்தன்மையுடன் திக்காஞவின் விடுதலை உணர்ச்சியும் சேர்ந்த ஒரு புது மார்க்கத்தை அவர் தனது காவியத்தில் குழைத்துக் கொடுத்தார்.

### பல்லவர் காலம்

சீரும் சிறப்பும் உள்ள பல்லவர் காலத்தை அடுத்த புது சகாப்தம் பாண்டிய விஜயநகர மன்னர்களின் ஆதிக்கம் நிறைந்தது. இக்காலத்தில் உயர வளர்ச்சியைக் காட்டிலும் சுற்றளவு வளர்ச்சிதான் அதிகமாயிருந்தது. ராமானுஜர், சங்கரரின் அத்வைத சித்தாந்தத்துடன் சமயப் பற்று மேலோங்கி நின்ற காலப் போக்கையும் உணர்ந்து பக்தி எனும் நடுநிலையைக் கடைப் பிடித்து கடவுள் நம்பிக்கையை வளர்த்தார்.

சடங்குகள் வளர வளர கோயில்களும் அதிகமாயின. வரலாற்றின் இடைநிலைக் காலத்தில் கோயில் என்பது பள்ளி அரங்கு, நூல் நிலையம், வைத்தியசாலை எல்லாம் தன்னகத்தே கொண்ட ஒரு இடம். உள்ளூர்வாசிகளின் எல்லா அலுவல்களும் இங்கேதான் நடக்கும். எனவே கோயிலை நல்ல முறையில் கட்டி அணி செய்ய நல்ல வாய்ப்பு இருந்தது.

பல பாண்டிய மன்னர்கள் செய்த விஸ்தரிப்புகளும் பேலூர், சோமநாதபுரம் கோயில்களும் மேலும் முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. விஜயநகர சகாப்தம் பிறந்தது. கனிந்நி உணர்ச்சிமிக்க சிற்ப வேலைகள் நயவளத்துடன் படைக்கப்பட்டன. ஹேல்பிட், தொட்டகோடவல்லி, ஸ்ரவணபேல்கோலா, ஹம்பி, பேனுகொண்டா, வேலூர் கோயில்கள் கல்லுக்குச் சிற்பிகள் உயிரூட்டிய வரலாறு பகரும்.

### கன்னடமும் தெலுங்கும்

இக்காலத்தில் படைக்கப்பட்ட கோயில் சிற்பங்கள் செம்மையான வடிவமைப்புடனும் நுட்பமான வேலைப்பாட்டுடனும் சகல விவரங்களையும் வெளிப்படுத்தக் கூடியதாய் இருந்தன. இஸ்லாமியப் பகை காரணமாக பிரம்மாண்டமான அரண்கள் தேவையாயின. மலைப்பிராந்தியமான டெக்கான் பீடபூமி இதற்கு அனுகூலமாயிருந்தது. பொதுத்துறை, கோட்டை கட்டிடக் கலையும் இக்காலத்தில் தழைத்தோங்கியது. ஆனுல் அதி சீக்கிரமே அரசர் பேருதவி நின்றுவிட்டபடியால் அவைகளை வைத்துப் பரிபாலிப்பது கடினமாயிற்று.

விஜயநகர, ஹோய்சால மன்னர்கள் அளித்த ஆதரவால் கன்னட, தெலுங்கு மொழிகள் மிகவும் சிறப்பெய்தின. விஜயநகர சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் ஒரு கவிஞர். கல்விமான். அவர் பேராதரவால் அல்லஸானி பெத்தன்ஞ, முக்குதிம்மாஞ, துர்ஜை முதலிய பலர் தெலுங்கு இலக்கியத்தை மேலும் வளமூட்டினுர்கள்.

மாத்வாசார்யருடைய சீடர்களும் வல்லபாவும் கன்னட பக்திப் பாடல்கள் மூலம் மக்களுக்கு ஞானுமிர்தம் வழங்கினர். பக்திக்கும் பிரேமைக்கும் சாதனமான நாட்டியமும் இசையும் தல்லபகா அன்னமாச்சார்யலு முதலிய காவிய கர்த்தாக்களின் தெலுங்குக் கீர்த்தனைகள் மூலம் சுடர்விட்டுப் பிரகாசித்தன.

### சிதைவு

விஜயநகர சகாப்தத்தின் இறுதியிலும் அதன் பிறகும் ஏற்பட்ட உட்பகையால் படைப்புக் கலைகளுக்கே ஊறு ஏற்பட்டது. செயல் வெற்றி காணும் ஆர்வமும் வரவர மங்கலாயிற்று. கற்றறிவாளர்கள் போற்றிப் பேணி வந்த சம்ஸ்கிருதம்தான் எப்போதும் போல் முழு ஜீவனுடன் சமய உரை ஆற்றும் சாதனமாக விளங்கியது. அத்வைத மார்க்கத்தைப் பற்றிய அதிகாரபூர்வமான கிரந்தங்களை அப்பைய, நீலகண்ட தீக்ஷிதர்கள் வழங்கினுர்கள். இதர மொழிகள் போலி இலக்கியங்களாக மருவத் தலைப்பட்டன.

இக்காலத்துத் தென்னக வறண்ட பண்

## இளைஞர்கள்

இளைஞர்கள், தீவிர இச்சையுடையவர்கள். அந்த இச்சைகளை நிறைவேற்றிக் கொள்வதில் விரைவு காட்டுகிறவர்கள். புலனடக்கமில்லாதவர்கள்; நிலையற்ற மனமுடையவர்கள்; சீக்கிரத்தில் கோபமடையக் கூடியவர்கள்; அந்தக் கோபத்தில் உக்கிரங் கொண்டுவிடக் கூடியவர்கள்; தங்கள் கோபத்தைக் கைகளினால் காட்டவும் தயாராகி விடுகிறவர்கள்; பணத்தைக் காட்டிலும் கௌரவத்தையும் வெற்றியையுமே அதிகமாக விரும்புகிறவர்கள். ஏனென்றால், பணத் தேவையை அவர்கள்; இன்னும்உணரவில்லையல்லவா? நல்ல மனம் படைத்தவர்கள்; அதிக நம்பிக்கையுடையவர்கள்; எளிதில் யாரையும் நம்பக் கூடியவர்கள்; துணிச்சலுடையவர்கள்; கூச்சமுடையவர்கள்; தாராள மனப்பான்மையுடையவர்கள்; எதிலும் சீக்கிரமாகச் சென்று அதனால் தவறுகளுக்கு ஆளாகக் கூடியவர்கள்; பிறரிடத்தில் தயை காட்டும் சுபாவமுடையவர்கள்; கேளிக்கைகளில் பிரியமுடையவர்கள்.

—அரிஸ்டாட்டில்

பாட்டுச் சூழலில் இருந்த ஒரே பாலைப் பசுந்திடல், ஆந்திர தேசத்தைச் சேர்ந்த அனந்தப்பூர் ஜில்லா லேபக்ஷி வீரபத்திரர் கோயில். ஈடு இணையற்ற இக்கோயிலில் இடைநிலை காலமேல் மணிமண்டப ஓவியங்களும் சிற்ப வேலைப்பாடுகளும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிப்பவை. 16-ம் நூற்றாண்டில் தோன்றிய இக்கலைப் பொக்கிஷங்கள் தூய்மை, நளினம், கலையுணர்வுக் கூறு எல்லாம் ஒருங்கே அமைந்தவை. லேபக்ஷிக் கலையை ஒட்டி, குறிப்பாக ஓவியக் கலை சம்பிரதாயமான கலையாகிவிட்டது.

நெஞ்சை அள்ளும் கர்நாடக சங்கீதம் அரண்மனையிலும் கோயிலிலும் தனி மகத்துவம் பெற்றுவிளங்கியது. ''சங்கீதரத்னாகரா'' என்ற பிரபல கர்நாடக சங்கீத இலக்கணம் சாரங்கதேவரால் எழுதப்பட்டது. 19—ம் நூற்றாண்டில் தியாகையா, முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி என்ற சங்கீதத் திருமூர்த்திகளாலே கர்நாடக சங்கீதம் உச்சஸ்தாயியை அடைந்தது. பிறகு திருவிதாங்கூர் சமஸ்தான மன்னர்கோன் சுவாதித்திருநாளும் அதேகாலத்திய தஞ்சை பொன்னையாப் பிள்ளையும் கர்நாடக சங்கீதத்திற்குச் செய்தசேவை மகத்தானது. அவர்கள் இசைப்பாட்டுருப்படிகளில் தென்னிந்தியாவின் சங்கீத பாரம்பர்யம் இழையோடியிருக்கும் தெய்வீகம் தாண்டவமாடும்.

ஹரிகதா காலக்ஷேபம் மக்களை மனமகிழச் செய்ய ஏற்ற சாதனமாயிருந்தது. கோபாலகிருஷ்ண பாரதியார் சிவனடித் தொண்டர் 'நந்தனார்' சரிதத்தை கீர்த்தனைகள் மூலம் அபிநயஞ்செய்தார்! தேவதாசிகளால் பாடப்பெற்ற பதங்கள், காதல் உணர்ச்சிப் பாடல்கள் பிரபுக்கள் சமூகத்திலும் உரிமையிழந்த உயர் குடிப் பெருந்தகைகள் முன்னிலையிலும் வெகுவாகப் பாராட்டப்பட்டன. தட்சிணக் கலாச்சாரம் வாழையடி வாழையாக குரு—சிஷ்ய பாரம்பர்ய ரீதியில், ஏகாந்தமான, பிரத்தியேகமான, பயபக்தியூட்டுகிற சூழ்நிலையிலேதான் வளர்ந்து வந்தது.

சமீபகாலத்தில் நாட்டியம் ஓர் நற்பயனளிக்கிற புத்தெழுச்சி இயக்கமாக மாறிவிட்டது. சமுதாயத்தில் ஒரு இனத்தவருக்கே உகந்த இழி தொழிலாகக் கருதப்பட்ட நாட்டியம் ஒரு சமயம் ஆதரவற்று அழிந்தொழியும் நிலையையும் அடைந்தது. ஆனால் ஸ்ரீமதி ருக்மிணிதேவியின் கலாக்ஷேத்திரம் (சென்னை—அடையாறு) போன்ற நிறுவனங்கள் சமய சஞ்சீவியாகத் தோன்றி நாடகக்கலைக்கே மறுமலர்ச்சி ஏற்படுத்தின. பரத நாட்டியத்துக்கு, அதுவும் குறிப்பாக தஞ்சை பாணியில் உள்ள பரத நாட்டியத்துக்கு இப்போது ஒரு புதிய மவுசு ஏற்பட்டிருக்கிறது. கேரளாவில் கவிஞர் வள்ளத்தோல் கைபட்ட கலாமண்டலம், ஆண்மையும் வண்ண ஜாலமும் பொருந்திய கதகளி நாட்டியத்திற்காகச் செய்யும் சேவை பாராட்டுக்குரியது.

ஹரிகதா

யக்ஷகானாவின் ஜீவநாடியும் பரதநாட்டியத்தின் தசையின்ப மகிழ்வும், கதகளியின் குழைவும் கொண்ட குச்சிப்புடி பாணி இன்று தென்னிந்திய சாஸ்திரீய நாட்டியத்திலே நட்சத்திரமாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. திரு. கே ஆர். கரந்த் அவர்களின் பேரார்வங் கொண்ட முயற்சியினால் யக்ஷகானா புதுப் பொலிவுடன் காணப்படுகிறது.

பொது விருப்ப இசை (Pop Music), முன்னணிக் கலை (Avant-garde art)), இழிபொருள் இலக்கியம் (trendy writing) எல்லாம் மலிந்து கிடக்கும் இக்காலத்தில் தென்னிந்தியா மேற்கத்திய பாணியைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற விரும்பினாலும், அவருடைய திராவிடப் பண்பாடு காலவெள்ளத்தில் புஜபல பராக்கிரமத்துடன் எதிர்நீச்சல் போடுகிறது. ★

காலையில் காப்பி சாப்பிட்டுவிட்டு தின சரிப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு வாசல் வராண்டாவிற்கு வந்து பிரம்பு நாற்காலியில் சாய்ந்துகொண்டு பத்திரிகையைப் பிரித்தேன்.

''ஸார், ஸார்'' என்று வாசலில் சப்தம் கேட்டது.

''யாரது'' என்று திரும்பிப் பார்த்தேன்.

''நான்தான் சுந்தரம் பிள்ளைக் கடைச் சுப்பையா.''

''என்னப்பா, காலே வேளையிலே...?''

''ரொம்ப அவசரமுங்க. நான் கம்மாக் கரைப் பக்கம் வெளிவாசலுக்குப் போகலான் னிட்டு போயிக்கிட்டிருந்தேன். போலீசு ஸ்டேஷன் ஜன்னல் வழியா ''சுப்பையா சுப்பையா''ன்னு சத்தம் வந்திச்சு. நம்ப பேரைச் சொல்லிக் கூப்பிடறது யாருன்னு கொஞ்சம்

''சரி எப்படியோ போகட்டுன்னுட்டு இங்கு ஓடியாந்தேன். நீங்க பெரிய மனசு பண்ணி உடனே கிளம்'பறிங்களா?''

''சரி. போய்ப் பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டு சட்டையையும் அங்க வஸ்திரத் தையும் மாட்டிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷன் நோக்கி நடந்தேன்.

இந்த வெள்ளைச்சாமி என் சிநேகிதன் பையன். என் சிநேகிதர் காலமாகிவிட்டார். அதிலிருந்து நல்லது கெட்டது இரண்டையும் என்னைக் கேட்காது செய்யமாட்டான். என்னி டம் மிகவும் பக்தியும் விசுவாசமும் உள்ளவன். மரியாதைக்குக் கட்டுப்பட்டவன். நாணயஸ் தன். வயது இருபத்தைந்துதானிருக்கும். ஜவுளிக் கடையில் வேலை பார்ப்பவன். கொஞ் சம் பூமியும் உண்டு. தானே சொந்தமாகக் கடை வைப்பதாக யோசனை செய்து கொண் டிருக்கிறன். பெண் விஷயத்தில் சிறிது சபல புத்தி என்ற புகார் வந்ததுண்டு.

# வெள்ளைச்சாமி வழக்கு...!

## ந. சிதம்பர சுப்பிரமணியன்

திகைப்போடு கிட்டக்கப் போனேன். நம்ப வெள்ளைச்சாமி அங்கே நின்னுக்கிட்டிருந்தான். ''அடப்பாவி, நீ எங்கேடா வந்தே. இங்கே என்னடா பண்றே''ன்னேன். ''சுப்பையா, என்னை ரிமாண்டிலே வச்சிருக்காங்க. உங்க பேரைச் சொல்லி, உடனே ஐயாவை வரச் சொல்லி என்னை ஜாமீனிலே விடுதலே செய்யச் சொல்லுன்னுன்.''

''என்னடா சமாச்சாரம். உன்னை எதுக் காக இங்கே கொண்டுவந்து வச்சிருக் காங்க? என்ன தப்புப் பண்ணினேன்''னு கேட் டேன். ''அதெல்லாம் இப்போ கேக்காதே. நீ ஐயாகிட்டே போய் நான் வரச் சொன்ன தாகச் சொல்லு. ஐயா வருவாரு.''

''ஏண்டா கொலே கிலே பண்ணிட்டு வரல் லியெ, நீ பெரிய குற்றம் பண்ணி இருந்தால் ஐயா என்னடா பண்ணுவாரு?''

''அட போ அண்ணே, கொலே செஞ்ச வன் முகத்தைப் பாத்தா தெரியாது? நீ சொன்னங்காமே ஐயா கிட்டே சொல்லி, உடனே வரச் சொல்லு. ஐயாகிட்டே விவர மாச் சொல்றேன்'' என்றுன்.

என்ன தப்புச் செய்திருப்பான், எந்த விஷ யத்தில் மாட்டிக் கொண்டான் என்று வழி நெடுக யோசனை செய்துகொண்டே சென் றேன்.

நல்ல வேளையாக இன்ஸ்பெக்டர் சுந்தர மூர்த்தியே இருந்தார். என்னைக் கண்டதும், ''வாருங்கள் சங்கர் சார். என்ன இந்த அதி காலேயிலே இப்படி வந்தீங்க? உங்களுக்கெல் லாம் போலீஸ் ஸ்டேஷனிலே என்ன வேலே? இந்தப் பக்கம்கூடத் தலே வச்சுப் படுக்க மாட் டியளே'' என்றுர்.

''வர வேண்டிய அவசியம் வந்துடுத்து. வந்திருக்கேன்.''

''என்ன செய்ய வேண்டும்?''

''வெள்ளைச்சாமின்னு ரிமாண்டிலே இருக் கானே ஒரு பையன், அவன் என்ன குற்றம் செய்தான்?''

''அவனு? சுத்தக் காலிப் பயல் சார். சதா பொம்பளேகிட்டேயே திரிஞ்சிக்கிட்டு கிடப் பான். ரொம்ப நாளாகவே கவனிச்சுக்கிட்

டிருக்கேன். நேற்று இராத்திரி, நடுரோட்டிலே, ஒரு பொம்பளையை பலாத்காரம் செய்திருக்கான். அவ குய்யோ முறையோன்னு கூச்சல் போட்டிருக்கா. சப்தத்தைக் கேட்டு, நாலைந்து பேர் ஓடிவந்து அவளை விலக்கி, இவனையும் நையப் புடைத்து இங்கே கொண்டுவந்து விட்டு கேஸ் பதிவு செய்துவிட்டுப் போனுங்க."

"அப்ப கேஸ் நடத்த வேண்டியதுதான்."

"ஆமாம், கேஸ் பதிவு செய்து விட்டேன். கேஸ் நடத்த வேண்டியது. அந்த வெறி கொண்ட பயலுக்கு ஒரு புத்தி புகட்ட வேண்டியதுதான்."

"சரி போகட்டும். அவனை ஜாமீனில் விடுதலை செய்யலாமா?"

"தக்க ஜாமீன் கொடுத்தால் செய்யலாம்."

"நான் ஜாமீனுக நிற்கிறேன்."

"ஆகா. அப்படியே செய்யலாம்." என்று குமாஸ்தாவைக் கூப்பிட்டு "இவரிட்ட ஜாமீனுக்கு வாங்க வேண்டிய பத்திரங்களில் கையெழுத்து வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார்.

நான் எழுதிக் கொடுத்துவிட்டு, வெள்ளைச் சாமியுடன் போலீஸ் ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்தேன்.

கொஞ்சதூரம் வரையில் ஒருவரும் பேசவில்லை. மௌனமாகவே நடந்து சென்றோம். வெள்ளைச்சாமிக்கு எப்படி ஆரம்பிப்பது என்பது கூச்சமாயிருந்தது போலும். கொஞ்சம் கனைத்துக் கொண்டு நான் ஆரம்பித்தேன். "இதென்னடா ரஸாபாசம். நீ எப்படி இதில் அகப்பட்டுக் கொண்டாய்? விவரமாகச் சொல்லு. உண்மையைநடந்தபடியே சொல்லு. பொய் சொன்னு நான் இதிலே தலையிடவே மாட்டேன்" என்றேன்.

"சத்தியமாச் சொல்றேனுங்க. நான் ஒண்ணும் தப்புத் தண்டா பண்ணலே. எதிர் பாராத முறையிலே மாட்டிக்கினேனுங்க. காலம் சரியில்லே. பொல்லாத வேளை. மன சறிஞ்சு ஒண்ணும் தப்புப் பண்ணல்லே."

"என்னதான் நடந்தது. சற்று விவரமாச் சொல்லு."

"ஒண்ணுமில்லிங்க. நம்ப ராமசாமி அண்ணே மக இல்லே பத்மா."

"எந்த ராமசாமி? மோட்டார் ராமசாமியா?"

"ஆமாங்க."

"ஆமாம். அந்த ராமசாமிக்கு மூத்த மக ஒண்ணு இருக்கு. வயது வந்த பொண்ணு."

"அதற்கென்ன?"

"ஆமாங்க. அது நம்ம கடையிலே துணி வாங்க வரும். வரப்போ நல்லாச் சிரிச்சுப் பேசும். கோயில் குளத்திலே கண்டாலும் நானும் சிரிப்பேன். அதுவும் சிரிக்கும்."

"அப்படி இங்கே அங்கே பேசி கொஞ்சம் நெருக்கமாப் பழகிட்டீங்க இல்லியா?"

"ஆமாங்க ஐயா. ஆனல் எனக்கும் சரி, அதுக்கும் சரி, கெட்ட எண்ணம் கிடையாதுங்க. ராமசாமிஅண்ணன்கிட்டேயேசொல்லி, கல்யாணம் செய்துக்கிடலாம்னு நினைச்சிருந்தேன். அதுக்குள்ள இந்த அவமானம்."

"கல்யாணத்திற்கு அவ அப்பன் ராமசாமி சம்மதிப்பானு?"

"அவரு சம்மதிக்காமெ இருக்கமாட்டாரு. இந்தப் பொண்ணு அவருக்கு மூத்ததாரத்து பொண்ணு. மூத்த சம்சாரம் இறந்தவுடன் இளையாளைக் கட்டிக்கிட்டாரு. இளையா அந்தப் பெண்ணைப் படுத்திக்கிட்டே வரா. அந்தப் பொண்ணுக்கு அப்பாருசொல்லவும்முடியாமே, மெல்லவும் முடியாமே திண்டாடிட்டுக் கிடக்கிருரு. எவனுவது ஒருத்தன்கிட்டே புடிச்சுக் கொடுத்தாப் போதும்னு நினைக்கிருரு. என்னை நல்லாத் தெரியும். என்கிட்டே கூடக்கொஞ்சம் அன்போடு இருப்பாரு. நான் பொண்ணு கேட்டா கொடுக்க மாட்டேன்னு சொல்ல மாட்டாரு."

"அவளுக்கு நீ மட்டமா. கொஞ்சம் பசையிருக்கு. சம்பாதிக்கிறே. உனக்கு மாட்டேன்னு சொல்ல மாட்டான்னுதான் நினைக்கிறேன். சரி. அப்புறம் விஷயத்தைச் சொல்லு."

"அவ சின்னுத்தா வீட்டிலே பலகாரம் சுட்டா ஒன்றும் கொடுக்கிறதில்லேன்னு சொல்லி ஒருநாள் என்கிட்டே வருத்தப் பட்டது. அதனலே அந்தப் பொண்ணை எங்கே யாவது வரச்சொல்லி ஹோட்டலிலிருந்து நல்ல பலகாரமா வாங்கிட்டுப்போய்க் கொடுப்பேன்; அது தின்னுப்பிட்டு சந்தோஷமாப் பேசிக்கிட்டு இருந்துவிட்டுப் போகும். ஒருத்தருக்கும் தெரியப்படாதுங்கிறதுக்காக, இரவை

யிலேதான் சந்திக்கிறது. அப்படித்தான் நேற்று இரவைக்கு ஊர் ஓரத்திலே கம்மாக்கரை யண்டே வரச் சொல்லியிருந்தேன். மைசூர் பாகு, போண்டா எல்லாம் வாங்கிக்கிட்டுப் போயிருந்தேன். காத்திருந்தேன். காத்திருந் தேன். வெகுநேரம் காத்திருந்தேன். எனக்குக் காத்துக் காத்து அலுத்துப் போயிடுத்து. ஏதா வது நிழல் தட்டினு அது வந்திடுத்தாக்கும்னு நினைப்பேன். ஏமாந்து போவேன். அப்போ யாரோ மெதுவா வரது தெரிஞ்சிச்சு. சரி அது தான் வந்திடுத்து என்கிற எண்ணத்திலே ''என்ன என்னை இவ்வளவு நேரமாக் காக்க வைக்கிறதுன்னு'' என்று கத்திக்கொண்டு, பல காரத்தைக் கொடுக்க அந்தப் பெண்ணின் கையைப் பற்றினேன். உடனே ''ஐயோ, ஐயோ படுபாவி யாரோ என்னைப் புடிச்சிழுக் கருனே'' என்ற புதுக்குரல் கேட்டு, அசந்து போயிட்டேன். அந்தக் கூக்குரல் கேட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த குடியானவர்களும், வேலையாட்களுமாக நாலைந்து பேர் என்னைச் சூழ்ந்து கொண்டு, ''என்னப்பா, இருட்டு வேளையிலே தனியா, ஒரு பொம்புளே வந்தா இப்படியா அக்ரமமாக நடந்துக்கிறது'' என்று ஆளுக்கொன்ருக அடிகொடுத்து என்னை போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துவந்து கேஸ் பதிவுசெய்து விட்டுப் போனுர்கள். இதுதான் ஐயா முருகனறிய நடந்தது.'' என்ருன்.

''சரி, அந்தப் பொம்புளே யாரு. தெரிந்ததா?''

''அதை ஏன்கேக்கறிய, ஐயாகண்ருவியை. ஊர்க்கடைசியிலே வாய்க்காலோரம் குடிசை போட்டுக்கிட்டு ஒரு கிழவி இருக்கிரு இல்லே நீங்கக்கூடப் பார்த்திருப்பீங்க. கூன்விழுந்து தலை ஆடிப்போய் 85 வயதிருக்கும் கிழவிக்கு. காட்டிலே சுள்ளி பொறுக்கிக்கிட்டு, சாணி பொறுக்கிக்கிட்டு இருக்குமே, அந்தக் கிழவி தான்.''

''நல்லவேளையாப் போச்சு. நீ தப்பிச்சுக் குவே.''

''என்னங்க.''

''நீ கவலைப்படாதே. நான் வக்கீல் சாம்ப மூர்த்திபிடம் கேஸைக் கொடுத்து நடத்தச் சொல்றேன். கவலைப்படாதே'' என்றேன்.

''சப் இன்ஸ்பெக்டருக்குக் கொஞ்சநாளா என் மேலே கோபம். இப்ப அவரு கையிலேயே மாட்டிக்கிட்டேன்.''

''பரவாயில்லே. அதனுலே ஒண்ணும் கெட்டு விடாது.''

மாஜிஸ்ட்ரேட் எனக்கு நெருங்கியநண்பர். அவரிடம் நடந்ததை உள்ளபடியே சொன் னேன். அவர் சிரித்தபடியே ''சரி பார்க்கலாம் கேஸ் வரட்டும்'' என்ருர்.

வழக்கு விசாரணைக்கு வந்தது. பிராசி கூஷன் தரப்பில், ''குற்றம் சாட்டப்பட்டு நிற்கும் இந்த வெள்ளைச்சாமி கொஞ்சம்கூட நன்னடத்தை இல்லாதவன். பெண்களிடத் தில் சபலம் கொண்டவன். பெண்களையே சுற் றிக் கொண்டிருப்பவன். அமாவாசையன்று இரவில் காத்திருந்து வழிமறித்து, ஒரு பெண் பிள்ளையிடம் தகாதபடி நடந்துகொண்டிருக் கிருன். அந்தப் பெண் கூக்குரல் போட்டு அக் கம் பக்கத்திலுள் [illegible]வர்கள் ஓடிவந்து அந்தப் பெண் பிள்ளையை [illegible]க்கி, இவனையும் அடித்து ஸ்டேஷனுக்குக் [illegible] வந்திருக்கிருர்கள். தக்க சாட்சியங்க[illegible] இந்தத் தகாத காரியத்திற்குத் த[illegible]ண்டித்தால்தான் வேறு ஒருவரும் இ[illegible]த் துணிந்து செய்யமாட்டார்கள். [illegible]சிகள் ஒவ்வொருவ ராகக் கூப்பிடுகிறேன்.

முதல் சாட்சி மு[illegible]னியம்மா வந்தாள். ''ஏனம்மா, அமாவாசையன்று இரவு என்ன நடந்தது, சொல்?'' என்ருர்.

''தினம் தினம் காட்டுக்குப் போய் சுள்ளி பொறுக்கிட்டு வருவேனுங்க. அதே போல அமாவாசையன்றும் போயிருந்தேனுங்க. திரும் பறத்துக்கு ரொம்ப நேரமாயிடுத்துங்க. நல்ல கும்மிருட்டு. அப்போ இந்தப் பிள்ளையாண் டான் என் மேலே பாய்ஞ்சுது. நான் பயந்து நடுங்கி கூச்சல் போட்டேன். அந்தக் குரலைக் கேட்டுப் பக்கத்திலே போய்க்கொண்டிருந்த வர்கள் ஓடிவந்து, இவனைச் செம்மையாக அடித் தார்கள். எல்லோரும் போலீசுக்கு வந்து மனுக் கொடுத்தோமுங்க.''

சாம்பமூர்த்தி குறுக்கு விசாரணை செய் தார்.

''ஏன் அம்மா அந்தப் பிள்ளை உன் மேல் பாய்ந்தப்போ, நீ விலகிக்கிறதுதானே?''

''கும்மிருட்டுங்க. எதிருக்கே வருது யாருன்னுகூடத் தெரியல்லே. என் மேலே விழுந்தப்போதான் தெரிஞ்சுச்சு. நான் பயந்து போய்க் கத்திட்டேன்.''

''அப்போ இந்தப் பிள்ளையாண்டான் தான் உன் மேலே விழுந்துதுன்னு எப்படித் தெரியும்?''

''அப்பத் தெரியாதுங்க. உதவிக்கு

## திறமைமிக்க நடிகர்கள்

டாக்டர் நார்மன் வின்ஸன்ட் பீல் என்பவரின் வாழ்க்கை சரிதத்தை "ஒன் மேன்ஸ் வே" என்ற திரைப்படமாக்கியிருந்தனர். அந்தப் படத்தை டாக்டர் பீல் தம் மனைவியுடன் சென்று பார்த்தார். தங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரு முக்கிய சம்பவம் திரையில் காட்டப்படுவதைக் கண்ட திருமதி பீல், "இந்த நிகழ்ச்சி எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஆனால் அது இவ்வளவு உணர்ச்சிமயமாக அப்போது இருந்ததாக என[illegible]த நினைவில்லை" என்றாள். டாக்டர் [illegible] பதில் கூறினார்: "உண்மைதா[illegible] ஒரு விஷயம் நீ கவனிக்க வே[illegible] இவர்கள் திறமைமிக்க நடிக[illegible]னாமோ வெறும் அமெச்சூர்கள்[illegible]"

[illegible]எம். சிவசுப்ரமணியன்.

வந்த ஆட்கள்ளே ஒருத்தர் விளக்குக் கொண்டு வந்தாரு. அப்புறம்தான் இந்த ஆளுன்னு தெரிஞ்சுச்சுங்க."

"இருட்டிலே நீ அந்தப் பையன் மேலே மோதியிருக்கலாமல்லவா?"

"எனக்குத் தெரியாதுங்க. என் மேலே யாரோ மோதினுங்கிறதுதான் தெரியும்."

வெள்ளைச்சாமி கூண்டிலேற்றப்பட்டு விசாரிக்கப்பட்டான்.

அவன் சொன்னான், "அமாவாசையன்று விளக்கு வைக்கும் நேரத்திலே வயிற்றிலே ஒரு சங்கடம் ஏற்பட்டது. கம்மாக்கரைப் பக்கம் போகலாமின்னுட்டுப் போனேன். வயிற்றுச் சங்கடம் தீரவில்லே. கம்மாக்கரை கடையிலே ஒரு சோடா குடித்துவிட்டு வந்தேன். கொஞ்ச நேரமாயிடிச்சு, வயிறு சரியாக. ரொம்ப இருட்டிவிட்டது. எதிரே வர ஆள் கூடத் தெரியாமே நல்ல இருட்டு. சரி. வீட்டுக்குப் போகலாமின்னிட்டு, திரும்பி வந்து கொண்டிருந்தேன். எதிர்த்தாப்போலே, சமீபத்திலே ஒரு உருவம் வந்துகொண்டிருந்திச்சு. அது மாடு மாதிரியும் இருந்திச்சு. மனுஷாள் மாதிரியும் இருந்திச்சு. அந்தப் பக்கத்திலே பேய் நடமாட்டம் உண்டு என்பது நினைவிற்கு வந்தது. எனக்குத் தூக்கிவாரிப் போட்டிச்சு. "அடி ஆத்தே, பேய் டோய்" என்று சொல்லி ஓட ஆரம்பிச்சேன். எனக்கு ஒன்றும் தோன்றவில்லே. மறு நிமிஷம் அந்த உருவத்தின் மேல் போய் மோதிக்கொண்டுவிட்டதை அறிந்தேன், அந்த உருவம்தான் அந்தப் பொம்பிளே. அந்தப் பொம்பிளே பயந்துக்கிட்டு கூச்சல் போட்டா. அந்தச் சத்தம் கேட்டு, மூணு நாலு பேர் வந்து அந்தப் பொம்பிள்ளையை பலாத்காரம் செய்ததாக நினேச்சுக்கிட்டு என்னே அடிச்சுப் போட்டாங்க."

சாம்பமூர்த்தி பிறகு எதிர்வாதத்தில் சொன்னார்: "கோர்ட்டாரவர்களே, பொம்பிளேயைப் பலாத்காரம் செய்தான் என்று குற்றம் சாட்டப்பட்டு நிற்கிறான், இந்த வெள்ளைச்சாமி. இந்தக் குற்றச்சாட்டுக்குட்பட வேண்டுமானால், வெள்ளைச்சாமி பெண்பிள்ளை என்று தெரிந்துகொண்டு, அந்த நபரை பலாத்காரம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்திருக்க வேண்டும். இந்த இரண்டுக்கும் சாத்யமில்லே. வெள்ளைச்சாமிக்கு எதிர்நோக்கி வருவது, ஆணா, பெண்ணா அல்லது பேய்தானா என்று தெரியாது. இருட்டில் மோதிக் கொண்டனர். வெள்ளைச்சாமி கிழவியின்மேல் மோதிக்கொண்டானா, கிழவிதான் வெள்ளைச்சாமிமேல் மோதினாளா என்பதும் தெரியவில்லே. இரண்டு பேரும் கூச்சலிட்டிருக்கிறார்கள். சப்தத்தைக் கேட்டு வந்தவர்கள அவர்களாகவே பலாத்காரம் செய்துவிட்டான் என்ற முடிவுக்கு வந்து போலீஸில் குற்றம்சாட்டியிருக்கிறார்கள். தவிரவும், இந்தத் தொண்டுக் கிழவியிடம் தகாத முறையில் நடந்துகொண்டிருக்கவே முடியாது. இருட்டில் ஆள் தெரியாமல் முட்டிக்கொண்டதொரு சாதாரண நிகழ்ச்சியை, பெரியதொரு குற்றமாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கோர்ட்டாரவர்கள் இவனே நிரபராதியென தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று முடித்தார். மாஜிஸ்ட்ரேட் வெள்ளைச்சாமி நிரபராதியென்று தீர்ப்பளித்துவிட்டார்.

மறுநாள் பழங்களே வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்தான். கீழே விழுந்து நமஸ்காரம் செய்தான். "என்னேக் காப்பாற்றிவிட்டீங்க. நீங்க என் தகப்பனுக்கு மேலே" என்றான்.

"வெள்ளைச்சாமி, இனிமேல் இப்படித் தகராறுலே மாட்டிக்காதே" என்றேன்.

"இல்லே ஐயா. இனிமேல் ஜாக்கிரதையாக இருக்க மாட்டேனா, இருட்டிப் போனா இன்னும்ரொம்ப ஜாக்கிரதையாக இருப்பேன்" என்றான்.

"அட பாவிப்பயலே" என்றேன் நான். ★

# சுதந்திர பாரதத்தில் இலக்கியப் போக்கு...

பேராசிரியர்
கே. ஆர் ஸ்ரீனிவாச ஐயங்கார்

## 1. பல மொழிக்குள் ஓர் இலக்கியம்

நமது நாட்டில் சாதாரண மக்களின் பேச்சே பல வண்ண மெட்டுக்கள் கலந்த இசை போன்றது. இங்கே மக்களும், ஊர்களும் பிரதேசங்களும் இரண்டு மூன்று அல்லது பல மொழிகளுக்குப் பழக்கமாகியிருப்பது சாதாரணம்.

சென்னை மெரீனா கடலோரம் நான் மாலையிலே உலவப் போனால் தமிழும் தெலுங்கும் ஆங்கிலமும் ஹிந்தியும் கன்னடமும் மலையாளமும் மராத்தியும் வங்கமும் குஜராத்தியும் என் காதிலே சர்வ சாதாரணமாக ஒலிக்கின்றன.

இனமொழிகளை அறிவைக்கொண்டு உணரலாம். ஆனால் ஆன்மாவின் தீர்க்கமான உணர்வுக்குக் கேளாத மொழியும் உண்டோ? புரியாததைப் புரிய வைப்பதுதானே மொழியின் பணி?

சிறுவனாக இருந்தபோது தென்கோடியில் ''சிக்க நரசய்யன் கிராமம்'' என்ற கிராமத்தில் வாழந்தேன். ஊரின் பெயரே அதற்கும் கன்னடத்துக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது. என் நண்பர்களும் அண்டை அயலாரும் தமிழிலும் கன்னடத்திலுமாக மாறி மாறி சஞ்சரித்து வந்தோம். ஊருக்கு அடுத்த பேட்டை 'சேரன்மகாதேவி'. இங்கே ஏழு வீதிகளில் முழுக்க முழுக்க தெலுங்கு பேசுபவர்கள் ஒரு காலத்தில் இந்தார்களாம். என் கூடப் படித்தவர்களிலே இரண்டு மராட்டியப் பிள்ளைகள் இருந்தார்கள். இவர்கள் திருநெல்வேலியில் பல தலைமுறையாகக் குடியேறிய குடும்பத்தினரின் சந்ததியினர்.

ஒருநாள் என் தாத்தாவின் புத்தகக் கட்டுக்களில் இங்கிலீஷ், த[illegible] தெலுங்கு, மலையாள, சமஸ்கிருத புத்த[illegible]ள் இருக்கக் கண்டேன். சமஸ்கிருதப் புத்[illegible]கங்கள் தேவநாகரி லிபியிலும் இருந்தன. கிரந்த எழுத்திலும் இருந்தன.

பெல்காமில் நான் முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஆசிரியராகப் பணியாற்றியபோது கன்னடம், கொங்கணி, மராத்தி எல்லாம் எனக்குப் பழக்கமாயின. இப்படியே விசாகப்பட்டினத்தில் (ஆந்திரப் பல்கலைக் கழகத்தில்) இருந்தபோது தெலுங்கும் வங்கமும் ஒரியாவும் எனக்குப் பழக்கமாயின. பின்னர் தில்லியிலே ஹிந்தியும், உருதுவும், பஞ்சாபியும்; அண்மையில் புதுவையில் ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமத்தில் இநந்தபோது தமிழும், இங்கிலீஷும், பிரெஞ்சும், வங்கமும், குஜராத்தியும், ஒரியாவும், ஹிந்தியும் என்னை பாதித்துள்ளன.

நமது நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களைப் போல நானும் பல்வேறு மொழிகளிடையே பலவகைப் பண்பாட்டுச் சூழலிடை வாழப் பழகிவிட்டேன். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கோ, சமூக வாழ்விற்கோ இது ஒரு தடையாக இருக்கவில்லை.

தமிழ்க் கவிஞரும் சித்தருமான திருமூலர் பதினைந்து நூற்றாண்டுகளுக்த முன்னரே கண்டறிந்து உபதேசித்த உண்மைதானே—இமயம் முதல் தென்கோடி வரை உள்ள மக்கள் பதினெட்டு மொழியில் பேசினாலும் அவை அனைத்திலும் ஒலிக்கும் இதயம் ஒன்று என்பது.

தென்னிந்தியாவிலுள்ள பெருங்கோவில்களில் பிரதான சந்நிதியில் உள்ள மூர்த்திக்கும் வழிபாடு உண்டு. சுற்றுப் பிரகாரத்தில் உள்ள எத்தனையோ சில்லறைத் தெய்வங்களுக்கும் ஆழ்வார் நாயன்மார் ஆசாரியர்களுக்கும் நவகிரகங்களுக்கும்கூடத்தான் வழிபாடு உண்டு.

ஒரே குன்றிலோ, மேட்டிலோ, பிரதேசத்திலோ, அடுத்தடுத்து கோயில்களும் மசூதிகளும் சர்ச்சுகளும் 'மந்திர்'களும், ஆசிரமங்களும் பஜனை மடங்களும் இருக்கக்காண்கிறோம். இவையெல்லாம் ஒருங்கே தமது பணியாற்றும் போது சகிப்பின்மைக்கு இடம் எங்கே?

இந்தச் சூழ்நிலையில் இந்தியாவில் பிறந்து வளரும் நாம், நம்மைச்சுற்றியுள்ள ரகரகமான சூழலில் பொதுவான அக்கறை காட்டவும் அறிகிறோம்; அதே நேரத்தில் அதிலே ஏதோ ஒரு சிலவற்றில் ஆழ்ந்த கவ[illegible] செலுத்தவும் கற்கிறோம்—நமது கண் பா[illegible]வயின் நுட்பமான இரட்டைத் திறமை[illegible] போல இருக்கிறது இது. மலைச் சிகர[illegible] வானவெளியையும் கண்டறிகிறது; [illegible]யே நுணுகி அச்சான கவிதையையும் [illegible] வேலைப்பாட்டையும் ரசிக்க முடிகிறது அ[illegible]வா?

மேலும் இந்த 'ஜெட்' பயண யுகத்திலே செய்தித் தாளும் வானொலியும் டெலிவிஷனும் சினிமாவும் மக்களைப் பாதிக்கும் விரைவிலே, பன்மொழி உலக சமுதாயம் ஒன்று உருவாகி வருகிறது. அதற்கு நாம் பழக்கமாகி வருகிறோம். விமான நிலையங்களில் எத்தனை மொழிகள்! டிரான்ஸிஸ்டரின் பல அலை வரிசைகளில் ஒரே நேரத்தில் எத்தனை மொழிப் பேச்சுகள், இசைகள்! எதிர்காலத்தில் இன்னும் எத்தனை புதுவெள்ளங்கள் வரப் போகின்றனவோ! அவற்றால் பாதிக்கப்படாமல் நிலையாக நிற்பது எளிதா என்ன?

ஆங்கிலமும் சம்ஸ்கிருதமும் உள்ளிட்ட இருபது மொழிகளில் படைக்கப்படும் "இந்திய இலக்கியத்"தில் அக்கறை கொண்டுள்ளது சாகித்திய அக்காதெமி. இந்திய இலக்கியம் என்பது என்ன?—இந்த இருபது மொழி இலக்கியத்தின் ஒட்டுமொத்தமா, அல்லது இந்தப் பல்வேறு மொழிகள் வாயிலாகவும் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் ஓர் அடிப்படையா? இலக்கியம் என்பது ஜீவனுள்ள ஒரு தத்துவம்; மாறிக் கொண்டே, வளர்ந்துகொண்டே இருக்கும் ஒரு விஷயம்; தேவையற்ற நைந்த வீண் பொருள்களைத் தள்ளிவிட்டு, உயரே பறக்கச் சிறகு விரிக்கிறது. பின்னர் தரையில் இறங்குகிறது—மறுபடி பறக்கத் தயார் செய்துகொள்ளத்தான். மாற்றங்களெனும் காற்றின் போக்குக்கு ஏற்ப அனுசரிக்கும் பறவை தனது லட்சியம் என்னும் திசை தவறாமலும் பார்த்துக் கொள்கிறது.

இலக்கியத்தின் எந்தச் சிறந்த படைப்பும் ஒரு பெரும் தத்துவத்தின் ஒரு பகுதியேதான். அந்த ஆசிரியரின் பல படைப்புகளில் அது ஒன்றாகும். [illegible]து, அந்தக் காலத்தில் படைக்கப்பட்ட [illegible]யப் போக்கின் ஒரு பகுதியாகலாம். [illegible]து சிரஞ்சீவி இலக்கியத்தின் ஒரு பகுதியாக விளங்கலாம் அது.

ஒரு வகையில் பார்த்தால் ஒவ்வொரு மொழியிலும், ஒவ்வொரு தலைமுறையிலும் அவர்களுக்கான தலைசிறந்த எழுத்தாளர்கள் தோன்றுகின்றனர்.

ஒரு வகையில் பார்த்தால் மிகச் சிறந்த எல்லா இலக்கியங்களும் ஒத்த காலத்தவை எனலாம். இப்படிப் பார்த்தால் ஹோமர், ஜாய்ஸுடனும் (Kazantzakis) கழன்ட் ஜாகிஸுடனும் ஒத்தவர்; வால்மீகியோ, புட்டப்பாவுடனும் விச்வநாத சத்யநாராயணவுடனும் ஒன்றாகக் கருதத் தக்கவர்; ஸ்காட்டுக்கும் பங்கிம் ச[illegible]திரர், ஹரிநாராயண ஆப்தேக்கும் அதே உற[illegible]கும்; வியாஸரோ சுப்பிரமணிய பாரதியா[illegible]னும் ஸ்ரீ அரவிந்தருடனும் சமமாகக் கருதப்பட வேண்டியவர்.

வேதாந்த விசாரணையில் அடிக்கடி பேசப்படும் 'ஒன்றா, பலவா?', 'செயலா, செய்பவனா?' 'நித்தியம், இக்கணம்' என்ற தத்துவங்களையெல்லாம் இலக்கிய விசாரணைக்கும் அர்த்தத்துடன் பயன்படுத்தலாம்.

எத்தனையோ எழுத்தாளர்கள் எத்தனையோ மொழிகளில் எழுதும் தனித் தனிப் படைப்புக்களே இலக்கிய வரலாற்றைச் சிறிது சிறிதாக உருவாக்கும் அலைகளாகும்.

இலக்கிய உலகில் மனித வளர்ச்சியும் வரலாறும் பிரதிபலிக்கின்றன. பலவற்றில் ஒற்றுமை அம்சங்களைக் காணலாம். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், ஒரே காலத்துப் படைப்புகளாக இருந்தாலும் அடிப்படையில் மாறுபட்டவையாக இருக்கும் சில; வேறு சிலவோ, வெவ்வேறு காலத்தில் படைக்கப்பட்டவையா[illegible] இருந்தாலு[illegible] அடிப்படையில் ஒரே வகையானதா[illegible] இருக்[illegible]ம்.

இவையெல்லாம் நுட்பமாகக் கவனித்தால் தான் புலனாகும். இங்கெல்லாம் "டாக்மாக்"களைக் கொ[illegible] தீர்மானித்து விட முடியாது. அடக்கத்து[illegible] அணுக வேண்டும்.

—ஆங்கிலத்திலிருந்து
தமிழாக்கம்:
தம்பி சீனிவாசன்

20868

Edited and Published by Na. Parthasarathy, from 6, Nallathambi Chetty St., Mount Road
Printed by S. Thirumalai at Deepam Achagam, Madras-2